தமிழ்நாடு அரசு

# சமூக அறிவியல்

## எட்டாம் வகுப்பு

தீண்டாமை
மனித நேயமற்ற செயல் – பெருங்குற்றம்

பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது
(விற்பனைக்கு அன்று)

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2011
(சமச்சீர்க் கல்வி பொதுப் பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)

**குழுத்தலைவர்**

**வரலாறு & குடிமையியல்**

**திரு. A.P. ஜனார்தனம்,**
முதல்வர் (ஓய்வு),
சு.சா.அரசு கலைக் கல்லூரி,
திருத்தணி, திருவள்ளூர் மாவட்டம்.

**புவியியல் & பொருளாதாரம்**

**முனைவர். மரியா அனிதா ஆனந்தி**
இணை பேராசிரியர்,
நிர்மலா மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர்–18.

**மேலாய்வாளர்**

**முனைவர். M.N. இராஜேந்திரன்,**
இணை பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை–5.

**முனைவர். R. மிரியம்**
இணை பேராசிரியர்,
நிர்மலா மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர்–18.

**திரு. R. செங்கோடன்,**
தலைமை ஆசிரியர்,
அரசு பெண்கள் மே.நி.பள்ளி,
கம்பிய நல்லூர், தர்மபுரி மாவட்டம்.

**முனைவர். M. ரகுநாதன்,**
முது நிலை விரிவுரையாளர்,
மா.ஆ.க.ப.நி. பெருந்துறை,
ஈரோடு மாவட்டம்.

**ஆசிரியர்கள்**

**திருமதி. குளோரினா ரவீந்திரகுமார்,**
PSGR கிருஷ்ணாம்பாள் மேல் நிலைப் பள்ளி,
பீளமேடு, கோயம்புத்தூர்–4.

**திருமதி. K. சோபனா,**
முதுகலை ஆசிரியர்,
என்.கே.தி. நேஷனல் பெண்கள் மே.நி.பள்ளி,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

**திருமதி. J. கீதா,**
முதுகலை ஆசிரியர்,
பிரின்ஸ் மேல் நிலைப் பள்ளி,
மடிப்பாக்கம், சென்னை–91.

**திருமதி. J. ஜாக்குலின் ஜோயல்,**
பட்டதாரி ஆசிரியர்,
அவிலா கான்வென்ட் மெட்ரிக் மே.நி.பள்ளி,
கோயம்புத்தூர்.

**திருமதி. ரமாபாய்,**
அகர்வால் வித்யாலயா மெட்ரிக்.மே.நி.பள்ளி,
வேப்பேரி, சென்னை–7.

**திருமதி. லட்சுமி பிரபா,**
புனித ஜான்ஸ் மெட்ரிக் மே.நி.பள்ளி,
மந்தைவெளி, சென்னை–28.

**திருமதி. K.வளர்மதி,**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு ஆண்கள் மே.நி.பள்ளி,
திருவலம், வேலூர் மாவட்டம்.

**திருமதி. சகாயமேரி ஃபாபிலா**
முது கலை ஆசிரியர்,
சியோன் மெட்ரிக் மே.நி.பள்ளி,
சேலையூர், தாம்பரம்–73.

**திருமதி. வி.டெய்சி மணியம்மை,**
கலிகி அரங்கநாதன் மான்போர்டு மெட்ரிக்.மே.நி.பள்ளி,
பெரம்பூர், சென்னை–11.

கணினி அச்சு : ந.செல்வமணி, எஸ். சரத்சந்திரன்
வரைகலை : ந.செல்வமணி, வ.சபாஷ்குமார்
அட்டை வடிவமைப்பு : ந.செல்வமணி
வடிவமைப்பு : ந.செல்வமணி

நூல் அச்சாக்கம்
**தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்,**
கல்லூரிச்சாலை, சென்னை–6.

விலை: ரூ.

இந்நூல் 80.ஜி.எஸ்.எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:

## பொருளடக்கம்


| அலகு | வ.எண் பாடம் | பக்க எண் |
| --- | --- | --- |
| | **வரலாறு** | |
| I | 1. மொகலாயர்கள் வருகை | 01 |
| II | 2. மராத்தியர்கள் | 19 |
| III | 3. ஐரோப்பியர்கள் வருகை | 28 |
| | 4. ஆங்கில–பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி (கர்நாடகப் போர்கள்) | 35 |
| IV | 5. இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி (கி.பி.1773–கி.பி.1857) | 44 |
| | 6. காரன்வாலிஸ் பிரபு (கி.பி.1786–கி.பி.1793) | 49 |
| | 7. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் (கி.பி.1813–கி.பி.1823) | 56 |
| | 8. வில்லியம் பெண்டிங் பிரபு (கி.பி.1828–கி.பி.1835) | 59 |
| | 9. டல்ஹௌசி பிரபு (கி.பி.1848–கி.பி.1855) | 63 |
| | 10. மாபெரும் புரட்சி (கி.பி.1857) | 67 |
| V | 11. தமிழகத்தில் நாயக்கர்கள் ஆட்சி | 74 |
| | 12. தஞ்சாவூரில் மராத்தியர்கள் ஆட்சி (கி.பி.1676–கி.பி1856) | 81 |
| VI | 13. வேலூர் புரட்சி – கி.பி.1806 | 87 |
| | **புவியியல்** | |
| I | வள ஆதாரங்கள் | |
| | 1. வள ஆதாரங்களும் அதன் வகைகளும் | 90 |
| | 2. வள ஆதாரங்களும் பொருளாதார நடவடிக்கைகளும் | 99 |
| II | முதல்நிலைத் தொழில் I | |
| | 3. முதல் நிலைத் தொழிலின் வகைகள் | 103 |
| | 4. சுரங்கத் தொழில் | 108 |
| III | முதல்நிலைத் தொழில் II | |
| | 5. வேளாண்மை | 115 |
| | 6. பயிர்கள் | 122 |

| | | |
|---|---|---|
| IV | இரண்டாம் நிலைத் தொழில் I | |
| | 7. தொழிற்சாலைகள் | 129 |
| | இரண்டாம் நிலைத் தொழில் II | |
| | 8. தொழிலகங்களின் வகைகள் | 134 |
| V | மூன்றாம் நிலைத் தொழில் I | |
| | 9. வணிகம் | 142 |
| | மூன்றாம் நிலைத் தொழில் II | |
| | 10. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள் | 146 |
| VI | மக்கள் தொகை | |
| | 11. மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் பரவல் | 153 |
| | 12. மக்கள் தொகையும் வள ஆதாரங்களும் | 159 |


## குடிமையியல்


| | | |
|---|---|---|
| I | 1. தேசிய ஒருமைப்பாடு | 164 |
| II | 2. சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் | 170 |
| III | 3. மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும் | 177 |
| IV | 4. சாலை பாதுகாப்பு – சட்டங்களும் வரைமுறைகளும் | 184 |


## பொருளாதாரம்


| | | |
|---|---|---|
| I | 1. பணம், சேமிப்பு மற்றும் முதலீடு | 192 |

# வரலாறு

## மொகலாயர்கள் வருகை

### பாபர் படையெடுப்பின் போது இந்தியாவின் நிலை

பாபர் படையெடுப்பின் போது இந்தியா பல்வேறு சிற்றரசுகளாக துண்டாக்கப்பட்டு சண்டை சச்சரவுடன் காணப்பட்டது. வடஇந்திய அரசியலில் ஒன்றுமையில்லை. டெல்லி சுல்தானிய பேரரசு வலிமை இழந்து காணப்பட்டது. டெல்லி பேரரசின் கடைசி சுல்தான் இப்ராஹிம் லோடி, பிரபுக்களை கட்டுப்படுத்த இயலவில்லை. இராஜபுத்திரர்களின் தலைவரான இராணாசங்கா அதிக வலிமை பெற்று விளங்கியதோடு டெல்லியைக் கைப்பற்றும் ஆர்வத்துடன் காணப்பட்டார். இச்சமயத்தில் பாபரை இந்தியாவின் மீது படையெடுத்து வரும்படி ஆலம்கான் லோடியிடமிருந்து ஒரு கடிதமும் பஞ்சாபின் ஆளுநர் தௌலத்கான் லோடியிடமிருந்து ஒரு கடிதமும் வந்தது.

தென்னிந்தியாவில் விசயநகரப் பேரரசும், பாமினி பேரரசும் சுதந்திர அரசுகளாக செயல்பட்டு வந்தன.



பாபர்

ஆனால் இவை தங்களிடையே சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் பாபர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்.

### பாபர்(கி.பி.1526–கி.பி.1530)

ஜாகிருதின் முகம்மது பாபர் கி.பி.1483–ம் ஆண்டு மத்திய ஆசியாவிலுள்ள பர்கானா நிலப்பகுதியை ஆட்சி செய்த உமர் ஷேக் மிர்ஷா என்பவருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். தந்தை வழியில் இவர் துருக்கியைச் சார்ந்த தைமூர் இனத்தையும், தாய் வழியில் மங்கோலிய இனத்தைச் சார்ந்த செங்கிஸ்கான் இனத்தையும் வழித்தோன்றலாக கொண்டிருந்தார். இவர் தனது தந்தை மறைவிற்குப் பிறகு தனது பதினோராம் வயதில் பர்கானாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.

### படையெடுப்புகள்
### முதல் பானிப்பட் போர் (கி.பி. 1526)

பஞ்சாபின் ஆளுநரான தௌலத் கான் லோடியின் வேண்டுகோளை ஏற்று பாபர் இந்தியாவிற்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டார். கி.பி.1526–ம் ஆண்டு ஏப்ரல் 21–ம் நாள் வரலாற்றுப் புகழ்மிக்க பானிப்பட் போர்க்களத்தில் டெல்லியை ஆட்சி செய்த இப்ராஹிம் லோடியை தோற்கடித்தார். பாபரின் பீரங்கிப் படை முக்கியப் பங்கு வகித்தது. இப்ராஹிம் லோடியைவிட குறைவான படைவீரர்களைக் கொண்டிருந்த பாபர் மிக சுலபமாக இப்போரில் வெற்றி பெற்றார். இப்ராஹிம் லோடி

கொல்லப்பட்டார். டெல்லி சுல்தானியரின் ஆட்சி முடிவுக்கு வந்தது. முகலாயப் பேரரசிற்கான அடித்தளத்தை பாபர் இந்தியாவில் உருவாக்கினார்.

பழங்கால இந்தியாவில் இருந்த பேரரசு ஒன்றினை நினைவு கூறுக.

பானிப்பட் போரில் பாபர் வெற்றி பெற்றாலும் மீவாரை ஆட்சி செய்த இராஜபுத்திர மன்னர் ராணாசங்கா பாபருக்கு பெரும் சவாலாக அமைந்தார். கி.பி. 1527–ம் ஆண்டு கான்வா போர்க்களத்தில் பாபர் அரும்பாடுபட்டு ராணாசங்காவை வெற்றி கொண்டார். பிறகு கி.பி. 1528–ம் ஆண்டு சந்தேரி போரில் மாளவத்தை ஆட்சி செய்த மெதினிராய் என்ற மன்னரை வெற்றி கொண்டார். கடைசியாக கி.பி. 1529–ம் ஆண்டு கோக்ரா போரில், முகம்மது லோடியைத் தோற்கடித்து முகலாயப் பேரரசினை இந்தியாவில் நிலைநாட்டினார். இவரது பேரரசு கிழக்கே பீகார் முதல் மேற்கே பஞ்சாப், காபூல், காந்தகார் மற்றும் பதக்ஷான் வரை பரவியிருந்தது. ஆனால் எதிர் பாராதவிதமாக தனது 47வது வயதில் கி.பி. 1530–ம் ஆண்டு தனது மகன் உமாயூனை தனது வாரிசாக நியமனம் செய்துவிட்டு நோயுற்று காலமானார்.

### வரலாற்றில் பாபர்

இடைக்கால இந்தியாவில் பாபர் மிகவும் விரும்பத்தக்கவர்களில் ஒருவராக கருதப்படுகிறார். இவர் சிறந்த போர் வீரராகவும், அறிஞராகவும், கவிஞராகவும் விளங்கினார். தன் சுயசரிதையை துருக்கிய மொழியில் எழுதியுள்ளார். இது "துசுக்–கி–பாபரி" அல்லது "பாபரின் நினைவுகள்" என்று அழைக்கப் படுகிறது. பாபரால் தோற்றுவிக்கப்பட்ட முகலாயப் பேரரசு அக்பரால் பலப்படுத்தப்பட்டது.

### உமாயூன் (கி.பி. 1530–1540, 1555–1556)

பாபரின் மரணத்திற்குப் பிறகு அவரது மூத்த மகனாகிய உமாயூன் கி.பி. 1530–ம் ஆண்டு முகலாய மன்னராக பொறுப்பேற்றார். கி.பி. 1508–ம் ஆண்டு காபூலில் பிறந்த இவர் தனது 20ஆம் வயதில் பதக்ஷானில் ஆளுனராக நியமிக்கப்பட்டார். காம்ரான், அஸ்காரி, ஹிண்டால் ஆகியவர்கள் இவரின் சகோதரர்கள் ஆவார்கள்.

பாபரின் மறைவினைத் தொடர்ந்து ஆட்சி பொறுப்பை ஏற்ற உமாயூன், அரியணை மலர்படுக்கை அல்ல என்பதை உணர்ந்தார். பாபருக்கு பேரரசை பலப்படுத்த போதிய நேரமில்லை. நாட்டில் முறையான வாரிசுரிமை சட்டமும் இல்லை. இதனால் பாபரின் மரணத்தைத் தொடர்ந்து வாரிசுரிமைப் போர் தொடங்கியது. உமாயூனின் உடன் பிறந்தவர்கள் டெல்லியின் அரியணையைக் கைப்பற்ற ஆர்வம் காட்டினார். இராஜபுத்திரர்களும் மொகலாயர்களை இந்தியாவிலிருந்து விரட்ட எண்ணினர். குஜராத்தைச் சார்ந்த பகதூர்ஷாவும் உமாயூனுக்கு அச்சுறுத்தலாக இருந்தார். வங்காளம் மற்றும் பீகாரைச் சார்ந்த ஷெர்கான் உமாயூனுக்கு மாபெரும் எதிர்ப்பாளராக விளங்கினர். இவ்வாறு உமாயூன் அனைத்து புறங்களிலும் பகைவர்களால் சூழ்ந்து காணப்பட்டார்.

கி.பி. 1539–ம் ஆண்டு சௌஷா என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஷெர்கானிடம் உமாயூன் தோல்வியுற்றார். மீண்டும் கி.பி. 1540– ம் ஆண்டு கன்னோசிப் போரிலும் தோல்வி அடைந்தார். அரியணையை இழந்து உமாயூன் பதினைந்து ஆண்டுகள் நாடோடியாக வாழ்ந்தார். இதற்கிடையில் உமாயூன் அமிதாபானு பேகத்தை திருமணம் செய்து கொண்டார்.

கி.பி.1542–ம் ஆண்டு அமரக்கோட்டை என்ற இடத்தில் அக்பர் பிறந்தார். பிறகு பாரசீக மன்னரின் துணையோடு உமாயூன் காம்ரானிடம் இருந்து காபூல், காந்தகாரை திரும்பப் பெற்றார். அதனைத் தொடர்ந்து கி.பி.1555–ம் ஆண்டு டெல்லி மற்றும் ஆக்ராவை மீண்டும் கைப்பற்றி 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அரசரானார்.

உமாயூன் என்றால் "அதிர்ஷ்டசாலி" ஆனால் இவர் "அதிர்ஷ்டமில்லா" பாபரின் மகனாக விளங்கினார். இவர் ஒரு அரசராக படுதோல்வி அடைந்தார். கீழே விழுவதற்கு ஒரு வாய்ப்பு வருமேயானால் அதை தவறவிடும் மனிதர் உமாயூன் அல்ல. வரலாற்று அறிஞர் லேன்பூலின் கூற்றுப்படி உமாயூன் வாழ்க்கை முழுவதும் தடுமாறினார். இறுதியில் கி.பி.1556ஆம் ஆண்டு உயிரிழந்தார். இறப்பதற்கு முன் தனது மகன் அக்பரை தனது வாரிசாக நியமனம் செய்தார். பைராம்கானை அக்பரின் பாதுகாப்பாளராக நியமித்தார்.

## ஷெர்ஷா சூர் (கி.பி.1540–1545)

ஷெர்ஷாவின் உண்மையான பெயர் ஃபரித் ஆகும். இவர் உஷேன் என்பவரின் மகன் ஆவார். கி.பி.1472ஆம் ஆண்டு ஃபரித் பிறந்தார். ஜோன்பூரை ஆட்சி செய்த ஆப்கானிய கவர்னர் இவருக்கு "ஷெர்கான்" என்ற பட்டத்தினை வழங்கினார். பிறகு வங்காள ஆளுநரிடம் பணிக்குச் சேர்ந்து, பின்னர் பீகாரின் அரசரானார். தன்னை ஷெர்ஷா என அழைத்துக்கொண்டார். இவரால் நிறுவப்பட்ட பேரரசு "சூர்" வம்சம் என அழைக்கப்பட்டது.

## ஷெர்ஷாவின் வெற்றிகள்

கி.பி.1539–ம் ஆண்டு "சௌசா" என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஷெர்ஷா உமாயூனை தோற்கடித்தார். இவ்வெற்றிக்குப் பிறகு டெல்லியைக் கைப்பற்ற கனவு கண்டார். தன்னை வங்காளம் மற்றும் பீகாரின் மன்னராக அறிவித்துக் கொண்டார். கி.பி.1540–ம் ஆண்டு கன்னோசிப் போரில் மீண்டும் உமாயூனை வெற்றி கொண்டு டெல்லி மற்றும் ஆக்ராவை கைப்பற்றி தன்னை அரசராக அறிவித்துக் கொண்டார். பிறகு சிந்து மற்றும் மூல்தானை கைப்பற்றினார். மாளவம், ரெய்சின் மற்றும் மார்வார் ஆகிய பகுதிகளை தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கி.பி.1545–ம் ஆண்டு பண்டேல்கண்டை ஆட்சி செய்த அரசருக்கெதிராக தனது கடைசி படையெடுப்பை மேற்கொண்டார். கலஞ்சார் கோட்டை முற்றுகையின் போது எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த வெடி விபத்தில் கி.பி.1545–ல் மரணமடைந்தார்.

## ஷெர்ஷாவின் நிர்வாகம்
### மைய நிர்வாகம்

ஷெர்ஷா தலை சிறந்த நிர்வாக முறையை ஏற்படுத்திய ஒரு சிற்பி ஆவார். இவர் வல்லாட்சியாளராக விளங்கியதோடு மட்டுமின்றி அறிவுபூர்வமானவராகவும் விளங்கினார். முஸ்லீம் மதத் தலைவர்களின் (உலோமாக்கள்) ஆலோசனைகளைக் கேட்க மறுத்தார். நிர்வாகத்தின் சிறு விவகாரங்களையும் நேரடியாகக் கவனித்தார். இவருக்கு உதவியாக அமைச்சரவைக் குழு ஒன்று செயல் பட்டது. இவரது அமைச்சரவையில் நான்கு முக்கிய அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தனர். அவர்கள்,

திவானி–இ–விசாரத்–வரவு மற்றும் செலவு பொறுப்பாளர்

திவானி–இ –ஆரிஷ்–இராணுவ பொறுப்பாளர்

திவானி– இ–இராசாலத்–

வெளியுறவு மற்றும் தூதரகப் பொறுப்பாளர்

திவானி – இ – இன்ஷா – அரசு ஆணைகள் மற்றும் கடித போக்குவரத்து பொறுப்பாளர்.

### மாநில நிர்வாகம்

ஷெர்ஷா நிர்வாகநலனைக் கருத்தில் கொண்டு பேரரசை பல சர்க்கார்களாகப் பிரித்தார். சர்க்கார்கள் பல பர்கானாக்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பர்கானாவும் பல கிராமங்களைக் கொண்டிருந்தன. கிராமமே மாநில நிர்வாகத்தின் கடைசி அங்கமாக விளங்கியது.

### வருவாய் நிர்வாகம்

ஷெர்ஷாவின் நில வருவாய் நிர்வாகத்தில் முக்கியமான இடத்தைப் பெற்று விளங்கியது. நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு நிலத்தின் தரத்திற்கேற்ப வரி நிர்ணயம் செய்யப்பட்டது. நிலவரி முக்கிய வருவாயாக இருந்தது. ஷெர்ஷா இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினார். விவசாயிகளுக்கு "நில உரிமை" குறித்து பட்டா வழங்கப்பட்டது. அரசின் பங்கு விளைச்சலில் மூன்றில் ஒரு பகுதியாக (1/3) நிர்ணயம் செய்யப்பட்டது. ஷெர்ஷாவின் நில சீர்திருத்தத்தை மாமன்னர் அக்பர் பிற்காலத்தில் பின்பற்றினார். எனவே ஷெர்ஷா "அக்பரின் முன்னோடி" என அழைக்கப்படுகிறார்.

### இராணுவ நிர்வாகம்

ஷெர்ஷா ஒரு சிறந்த போர் வீரராக மட்டுமின்றி சிறந்த இராணுவ தளபதியாகவும் விளங்கினார். இவர் அலாவுதின்கில்ஜி பின்பற்றிய இராணுவ முறையின் முக்கிய அம்சங்களை பின்பற்றினார். இவர் தலைசிறந்த இராணுவத்தைப் பெற்றிருந்தார். இவரது இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, பீரங்கிப்படை மற்றும் யானைப்படையைக் கொண்டிருந்தது. ஆனால் குதிரைப் படை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப் பட்டது. ஆப்கானிய போர் வீரர்களை உயர் பதவிகளில் அமர்த்தினர். குதிரைப் படையில் குதிரைக்கு சூடு போடும் (தாக்) முறையான அறிமுகப்படுத்தினார். காலாட்படையில் வீரர்கள் பற்றிய பதிவேட்டினை பராமரித்தார். இவற்றின் மூலம் இராணுவத்தில் தவறுகள் நிகழ்வது அகற்றப்பட்டன.

### நீதி நிர்வாகம்

ஷெர்ஷா நீதியின் ஊற்றாக விளங்கினார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். இவர் மேல் முறையீட்டு நீதிமன்றமாக விளங்கினார். அனைத்து மேல் முறையீட்டு வழக்குகளையும் விசாரித்தார். ஷெர்ஷாவிற்கு நீதி நிர்வாகத்தில் தலைமைக் காசி உதவி புரிந்தார். குற்றம் புரிந்தவர் யாராயினும் எந்தப் பதவி வகித்தாலும் தண்டனைகளிலிருந்து தப்ப முடியாது.

### பிற சீர்திருத்தங்கள்

#### ஒற்றர்படை

ஷெர்ஷாவின் ஆட்சி காலத்தில் ஒற்றர் முறை திருத்தி அமைக்கப்பட்டது. பேரரசின் அனைத்து பகுதிகளிலும் இரகசிய ஒற்றர்கள் நியமனம் செய்யப்பட்டு அனைத்து செய்திகளும் அரசுக்குமுறையாக தெரிவிக்கப்பட்டது.

#### சாலைகள்

ஷெர்ஷா பழைய சாலைகளை புதுப்பித்து, புது சாலைகளை அமைப்பதில் தனி கவனம் செலுத்தினார். இவரது ஆட்சி காலத்தில்

நான்கு முக்கியமான சாலைகள் நாட்டின் எல்லைகளில் இருந்து பேரரசுடன் இணைக்கப்பட்டன. சாலைகளின் இருபுறங்களிலும் நிழல் தரும் மரங்களை நட்டு போக்குவரத்தை மேம்படுத்தினார். ஆங்காங்கே இளைப்பாறும் விடுதிகளையும் அமைத்தார். இவர் செய்தித்தொடர்பு முறையினை மேம்படுத்தினார்.

### நாணயச் சீர்திருத்தம்

ஷெர்ஷா புழக்கத்திலிருந்த பழைய உலோக நாணயங்களை ரத்து செய்தார். வெள்ளி மற்றும் செப்பு நாணயங்களுக்கு ஒப்பீட்டு விகிதாசாரத்தை நிர்ணயம் செய்தார். தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை வெளியிட்டார். நாணயங்களில் தனது பெயரினை தேவநாகிரி எழுத்தில் பொறிக்கச் செய்தார். இவரது நாணயச் சீர்திருத்தம் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்தியது. எனவே ஷெர்ஷா "நவீன நாணய முறையின் தந்தை" என்றழைக்கப்படுகிறார். இவரின் ஆட்சி காலத்தில் பொருளாதார நிலை மேம்பாடடைந்தது.

### மதிப்பீடு

ஷெர்ஷா ஒரு மாபெரும் பேரரசை உருவாக்கியவராகவும் சிறந்த நிர்வாகியாகவும் கருதப்படுகிறார். இவர் கலை, கட்டடக்கலையிலும் சிறந்து விளங்கினார். பீகாரிலுள்ள "சசாரம்" நகரில் தனது கல்லறையை இந்திய–இஸ்லாமிய கட்டடக்கலைப் பாணியில் உருவாக்கினார். டெல்லியில் புகழ் பெற்ற "புராணாகிலா" என்ற சிறந்த கட்டடத்தை உருவாக்கினார். ஷெர்ஷா மேலும் பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தால் மொகலாயர்கள் தங்கள் ஆட்சியை மீண்டும் இந்தியாவில் ஏற்படுத்திருக்க முடியாது.



அக்பர்

### மாமன்னர் அக்பர் (கி.பி 1556–கி.பி.1605)


அக்பர் இந்தியாவை ஆட்சி புரிந்த மன்னர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

ஜலாலுதின் முகம்மது அக்பர் கி.பி.1542–ம் ஆண்டு நவம்பர், 23–ஆம் நாள் அமரக்கோட்டையில் பிறந்தார். தனது பதினான்காவது வயதில் கி.பி.1556–ம் ஆண்டு பேரரசராக முடிசூடப்பட்டார். பைராம்கான் அக்பரின் பாதுகாப்பாளராக உமாயூனால் நியமிக்கப்பட்டார்.

### அக்பரின் வெற்றிகள்
### இரண்டாம் பானிப்பட் போர் (கி.பி. 1556)

அக்பர் இக்கட்டான சூழலில் அரியணை ஏறினார். வங்காளத்தை ஆண்ட முகம்மது ஷாவிடம் பிரதம மந்திரியாக இருந்த ஹெமு அக்பரை தோற்கடித்து டெல்லியைக் கைப்பற்ற எண்ணினார். இவர் முகலாயர் படையை வரலாற்றுப் புகழ்மிக்க பானிப்பட் போர்க்களத்தில் கி.பி.1556–ல் எதிர்கொண்டார். இப்போரில் ஹெமு அக்பரால் தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் முகலாயரின் ஆட்சி டெல்லி மற்றும் ஆக்ராவில் மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

# அக்பர் பேரரசு



காபூல்
கந்தகார்
காஷ்மீர்
லாகூர்
முல்தான்
டெல்லி
அஜ்மீர்
ஆக்ரா
சிந்து
அயோத்தி
ஜம்பூர்
பீகார்
சித்தூர்
அலகாபாத்
காலிங்கர்
மாளவம்
வங்காளம்
டையூ
அகமதுநகர்
பீடார்
கோல்கொண்டா
கோவா
பிஜப்பூர்
அரபிக்கடல்
மசூலிப்பட்டினம்
வங்காள விரிகுடா
பழவேற்காடு
கொச்சி
ஸ்ரீ லங்கா
இந்தியப் பெருங்கடல்

சுமார் நான்காண்டுகள் பைரம்கானின் ஆட்சி நடைபெற்றது. அக்பர் உண்மையான ஆட்சியாளராக விரும்பினார். எனவே பைராம்கான் ஆட்சியை முடிவுகட்ட அவரை புனித யாத்திரைக்கு அனுப்பினார். செல்லும் வழியில் பைராம்கான் கொல்லப்பட்டார். அக்பரின் வளர்ப்புத்தாய் மாகம்அனகா இரண்டு ஆண்டுகள் நிர்வாகத்தை கட்டுப்படுத்தினார். இக்காலம் "அந்தப்புர அரசாங்க காலம்" என்றழைக்கப்படுகிறது. மாகம்அனாகா தனது மகன் ஆதம்கானை அரசராக்க நினைத்ததால் அக்பர் அவரை கொலை செய்தார். இதனால் மாகம் அனாகா மனம் வருந்தி உயிர் துறந்தார். பிறகு அக்பர் உண்மையான நிர்வாகியாக மாறினார்.

## மற்ற வெற்றிகள்

அக்பரின் மேலாண்மையை ஜெய்ப்பூரை ஆண்ட பிகாரிமால் ஏற்றுக் கொண்டு தனது மகளை பேரரசருக்கு மணம் முடித்து வைத்தார். இம்மணஉறவின் மூலம் ஜகாங்கீர் பிறந்தார். பின்னர் அக்பர் மாளவம் மற்றும் சூனாரை இணைத்துக் கொண்டார். இராசபுத்திர ஆளுமைக்குட்பட்ட கோண்டுவானா பேரரசி இராணி துர்காவதியைத் தோற்கடித்து கைப்பற்றினார். பின்னர் பிக்கனீர், ஜெய்சல்மார் மற்றும் ஜோத்பூரை வெற்றி கொண்டார். அக்பரின் பேரரசு மேற்கே ஆப்கானிஸ்தானம் முதல் கிழக்கே வங்காளம் வரையிலும் வடக்கே இமாலயம் முதல் தெற்கே கோல்கொண்டா வரை பரவியிருந்தது.

## அக்பரின் இராஜபுத்திரக் கொள்கை

வீரத்திற்கும், நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக இருந்த இராஜபுத்திரர்களோடு அக்பர் நட்பு பாராட்டினார். ஜெய்ப்பூர் இளவரசி ஜோத்பாயை மணந்தார். மேலும் பிக்கனீர் மற்றும் ஜெய்சல்மார் இளவரசிகளையும் மணந்து கொண்டார். இராஜபுத்திர அறிஞர்களை அரசின் உயர் பதவியில் நியமனம் செய்தார். இராஜமான்சிங், இராஜபகவான் தாஸ், இராஜதோடர்மால் மற்றும் பீர்பால் போன்றவர்களை உயர்பதவியில் அமர்த்தினார். அக்பர் முஸ்லீம்கள் அல்லாதவர்களிடம் நல்லாதரவைப் பெற, ஒற்றுமையை வளர்க்க "ஜிசியா" மற்றும் "புனிதப் பயண" வரியினை ரத்து செய்தார்.

## தக்காண கொள்கை

தக்காணத்தில் தனது பேரரசை விரிவுபடுத்தவும், போர்ச்சுகீசியரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தவும் அக்பர் தக்காணத்திற்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டார். அகமது நகரை ஆண்ட சாந்த்பீபீயைத் தோற்கடித்து அந்நகரை பேரரசுடன் இணைத்துக்கொண்டார். மேலும் பீரார், காந்தேஷ் ஆகிய இடங்களையும் கைப்பற்றினார்.

## இலக்கியப்பணி

அக்பர் கல்வி அறிவு முறையாக பெறாதவராக இருந்தபோதிலும் சிறந்த அறிஞர்களை ஆதரித்தார். இவரின் அவையில் இராஜாதோடர்மால், பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிப்பெயர்த்தார். அபுல்பாசல் மற்றும் அவரின் சகோதரர் அபுல் பைசி பல வடமொழி நூல்களை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தனர். "அபுல்பாசல்" "அயினி அக்பரி" மற்றும் "அக்பர் நாமா" என்ற வரலாற்று புகழ்மிக்க நூல்களை எழுதினார்.

அபுல்பைசி இதிகாச நூல்களாகிய இராமாயணம் மற்றும் மகாபாரதத்தை பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்.

சிறந்த இசை ஞானியான "தான்சென்" அக்பரின் அவையை அலங்கரித்தார்.

## சமயக்கொள்கை (தீன்–இலாஹி)

அக்பர் மதசகிப்புத் தன்மை கொண்ட சிறந்த இஸ்லாமிய மன்னராவார். அக்பரின் தந்தை இஸ்லாமின் சன்னி மதப் பிரிவைச் சார்ந்தவர். ஆனால் தாயார் ஷியாப் பிரிவைச் சார்ந்தவர். அக்பரின் பாதுகாப்பாளர் பைரம்கான் ஷியா பிரிவைச் சார்ந்தவர். அக்பரின் ஆசிரியர் ஷேக்முபாரக் ஒரு மிதவாதி அவரும் ஷியாப் பிரிவைச் சார்ந்தவர். இவையாவும் அக்பர் சமயத்தில் மிதவாதியாகத் திகழ முக்கிய காரணங்களாக அமைந்தன. கி.பி.1575ம் ஆண்டு அக்பர் "இபாதத் கானா" என்ற தொழுகை இல்லத்தைக் கட்டி பல்வேறு மதத்தலைவர்களை அழைத்து சமயத்தின் நற்கூறுகளை ஆய்வு செய்தார். அதனடிப்படையில் அக்பர் "தவறுபடா ஆணையினை" பிரகடப்படுத்தினார். இதன்படி அக்பர் தன்னை சமயத் தலைவராகவும், அரசராகவும் அறிவித்துக்கொண்டார். கி.பி.1582–ல் அக்பர் "தீன்–இலாஹி" அல்லது தெய்வீக மதத்தினை வெளியிட்டார். இச்சமயத்தின் முக்கிய கோட்பாடு பூரண சகிப்புத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட தேசிய சமயத்தை உருவாக்குவதாகும். இச்சமயம் அனைத்து சமயங்களிலும் உள்ள முக்கிய கோட்பாட்டுகளை உள்ளடக்கியதாக அமைந்தது. அக்பர் தான் தோற்றுவித்த சமயத்தை எல்லோரும் பின்பற்ற வேண்டுமென கட்டாயப்படுத்தவில்லை. எனவே அக்பர் மறைந்த போது இச்சமயமும் மறைந்தது.

> தீன்–இலாஹி–அக்பருடைய மத சகிப்புத் தன்மையின் வெளிப்பாடு.

## அக்பரின் நிலவரி சீர்திருத்தம்

நிலவரி சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை அக்பர் ஷெர்ஷாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றினார். இராஜதோடர்மால் அக்பரின் வருவாய் துறை அமைச்சராக செயல்பட்டார். நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு விளைச்சலில் 1/3 பகுதி வரியாக வசூலிக்கப்பட்டது. விவசாயிகள் பணமாகவோ அல்லது தானியமாகவோ வரியை செலுத்தலாம். விவசாயத்தை பெருக்க கடனுதவி வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு நில உரிமைக்கான பட்டா வழங்கப்பட்டது. விவசாயிகளும் அரசாங்கமும் நில வரி தொடர்பான ஒப்பந்தத்தை செய்து கொண்டனர் (குபிலியாத்).

## மன்சப்தாரி முறை

மான்சப்தாரி முறை முகலாயரின் இராணுவம் மற்றும் பொது நிர்வாக முறைக்கு அடிப்படையாக அமைந்தது. பாரசீக நாட்டில் பின்பற்றபட்ட இம்முறையை அக்பர் தனது ஆட்சியில் அறிமுகப்படுதினார். மன்சப் என்றால் "தரம்" அல்லது "தகுதி" என்று பொருள்படும். மன்சப்தார்கள் பேரரசிற்கு உதவிட தாங்களே போர்வீரர்களை தெரிவு செய்து கொண்டனர். இம்முறை அக்பரின் ஆட்சி காலத்தில் சிறப்புற செயல்பட்டது. கால ஓட்டத்தில் இம்முறை சிதைவுற்றது.

## கலை–கட்டடக்கலை

அக்பர் காலத்தில் கலை கட்டடக்கலை சிறப்புற வளர்ச்சியடைந்தது. அக்பர் பதேப்பூர் சிக்ரியை, குஜராத் வெற்றியின் நினைவாக கட்டினார். புலந்–தார்வாசா என்ற நுழைவு வாயில் மிகச் சிறந்த ஒன்றாகும். அக்பர் அக்பரி–மஹால், ஜகாங்கிரி மஹால், பஞ்ச் மஹால்,

ஜோத்பாய் அரண்மனை போன்றவைகளை அழகுற சிவப்பு பளிங்கு கற்களால் கட்டிமுடித்தார்.

### மதிப்பீடு

சுமார் 50–ஆண்டுகாலம் சிறப்புற ஆட்சி செய்த அக்பர் கி.பி.1605–ம் ஆண்டு தனது 50–வது வயதில் மறைந்தார். இந்திய வரலாற்றில் பன்முக சிறப்புற்ற பேரரசாக அக்பர் தனக்கென ஓர் சிறந்த இடத்தை பெற்றுள்ளார். முகலாய பேரரசை உண்மையாக நிலைநாட்டியவராக இவர் கருதப்படுகிறார்.

### ஜஹாங்கீர் (கி.பி.1605–கி.பி.1627)

அக்பரின் மறைவைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் சலீம், ஜஹாங்கீர் அல்லது "உலகினை வெல்பவர்" என்ற சிறப்புப் பெயருடன் கி.பி.1605–ஆம் ஆண்டு அரியணை ஏறினார். ஜஹாங்கீர் பதவி ஏற்று ஒரு சில மாதங்களிலேயே இவரின் மூத்த மகன் இளவரசர் குஸ்ரு தந்தைக்கு எதிராக கிளர்ச்சி செய்தார். ஐந்தாவது சீக்கிய குரு அர்சுன்தேவ் இவருக்கு ஆதரவு வழங்கினார். ஆனால் ஜஹாங்கீரினால் தோற்கடிக்கப்பட்டு குஸ்ரு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் குருடாக்கப் பட்டு கொல்லப்பட்டார். சீக்கிய குரு அர்சுன்தேவும் கொல்லப்பட்டார். இச்செயல் சீக்கியர்களுக்கும் முகலாயர்களுக்கும் இடையே பெரும் பிளவினை ஏற்படுத்தி விரோதத்தை வளர்த்தது.

### ஆங்கிலேய பயணிகள் வருகை

ஜஹாங்கீர் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டிலிருந்து ஆங்கில வணிகக் குழு சார்பாக தளபதி "வில்லியம் ஹாக்கின்ஸ்" மற்றும் "சர் தாமஸ் ரோ" ஆகியோர்கள் முகலாய அரசவைக்கு வருகை புரிந்தனர். கி.பி.1615–ம் ஆண்டு சூரத் நகரில் வணிகம் செய்ய சர் தாமஸ் ரோ ஜஹாங்கீரிடம் அனுமதி பெற்றார்.

> இந்தியாவிற்கு பல்வேறு காலங்களில் வருகை புரிந்த சில பயணிகளின் பெயர்களை நினைவு கூறுக.

### இலக்கியப்பணி

ஜஹாங்கீர் தலைசிறந்த அறிஞர் ஆவார். தன்னுடைய சுய சரிதையை துசுக்–இ–ஜஹாங்கிரி என்ற பெயரில் எழுதியுள்ளார். இந்நூல் அவரது ஆட்சி காலத்தினை பற்றி அறிய உதவுகிறது. இவர் கலை மற்றும் கவிதையிலும் பெரும் நாட்டம் கொண்டு இருந்தார்.

### நீதி

ஜஹாங்கீர் நீதித்துறையில் சிறந்து விளங்கினார். ஜஹாங்கீர் பதவி ஏற்கும் போது "நீதிச்சங்கிலி மணி" என்ற ஒரு புதிய நீதி வழங்கும் முறையினை அறிமுகப்படுத்தினார். நீதி மணி "ஷபர்ஜ்" அரண்மனையில் ஒரு முனையில் கட்டப்பட்டு மறுமுனை யமுனை ஆற்றங்கரையில் அமைக்கப்பட்டிருந்த கல் தூணில் இணைக்கப்பட்டிருந்தது. நீதி வேண்டுபவர்கள் அந்த நீதி மணியினை ஒலிக்கச் செய்வதின் மூலம் அரசரின் கவனத்தை ஈர்த்து நீதியை பெற்றனர்.

> பண்டைய தமிழகத்தில் எந்த மன்னர் நீதிச்சங்கிலி முறையைக் கொண்டு வந்தார் ?

### நூர்ஜஹான்

நூர்ஜஹான் முகலாய வரலாற்றில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்று விளங்கினார். மிர்சா கியாஸ் பெக்கின் மகளான மெகருன்னிஷா இளமையிலே மிகவும் அழகானவர். இளம் பருவத்தில் ஷெர் ஆப்கன் என்பவரை மணந்து ஒரு பெண் குழந்தைக்கு தாயானார். கணவனின் மறைவிற்கு பிறகு

கி.பி.1611-ம் ஆண்டு பேரரசர் ஜஹாங்கீரை மணந்தார். மெகருக்னிஷா "நூர் மஹால்" (அரண்மனையின் ஒளி) என்ற சிறப்புப் பெயரினைப் பெற்றார். பிறகு இவர் நூர்ஜஹான் அல்லது "உலகின் ஒளி" என்ற சிறப்புப் பெயரினையும் பெற்றார். நூர்ஜஹான் கல்வி, பண்பாடு, இரக்க குணம் கொண்ட பெண்மணி ஆவார். ஜஹாங்கீர் பேரரசராக இருந்த போதிலும் உண்மையான அதிகாரம் நூர்ஜஹானிடமே இருந்தது. கி.பி.1611 முதல் கி.பி.1626 வரையிலான காலத்தினை முகலாய வரலாற்றில் "நூர்ஜஹானின் காலம்" என்றழைக்கப்பட்டது. இருந்த போதிலும் ஜஹாங்கீர் மறைவிற்கு பிறகு நூர்ஜஹான் தனது முக்கியத்துவத்தை இழந்து கி.பி.1645-ம் ஆண்டு மறைந்தார்.

இடைக்கால இந்தியாவை ஆட்சி செய்த முதல் பெண்ணரசி யார் ?

## மதிப்பீடு

பேரரசர் ஜஹாங்கீர் தர்ம சிந்தனையுள்ள ஒரு சிறந்த அரசராவார். ஸ்ரீநகரில் ஷாலிமர் மற்றும் நிஷாத் பூந்தோட்டங்களை உருவாக்கினார். சிக்கந்தராவில் தன் தந்தை அக்பரின் கல்லறையை அழகுடன் கட்டி முடித்தார். மேலும் நூர்ஜஹானின் தந்தை இதி-மத்-தெளலாவின் கல்லறையை ஆக்ராவிற்கு அருகிலும், லாகூரில் பெரும் மசூதி ஒன்றினையும் நிறுவினார். ஜஹாங்கீரின் கலை மற்றும் கட்டிடக்கலை ஈடுபாட்டிற்கு இவைகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன.

## ஷாஜஹான் (கி.பி.1628-கி.பி.1658)

ஜஹாங்கீரின் மகனான குர்ரம் வரலாற்றில் ஷாஜஹான் என்று அழைக்கப்படுகிறார். இவர் கி.பி.1592-ம் ஆண்டு லாகூரில் பிறந்தார். இவரின் தாயார் இந்து சமயத்தைச் சார்ந்தவர். ஜஹாங்கீரின் மறைவிற்குப் பிறகு நூர்ஜஹான் தனது மருமகன் ஷாரியாரை அரியணையில் அமர்த்த எண்ணினார். ஆனால் இளவரசர் குர்ரமின் மாமனராகிய ஆசப்கான் ஒரு பெரும் படையினை நூர்ஜஹான் மற்றும் ஷாரியாருக்கு எதிராக அனுப்பி அவர்களை தோற்கடித்து தனது மருமகனை முகலாய அரியணையில் அமரச் செய்தார். குர்ரம் "உலகின் அரசன்" - "ஷாஜஹான்" என அழைக்கப்பட்டார்.

## வெற்றிகள்

ஷாஜஹான் போர்ச்சுகீசியர்களுக்கு எதிராக போரிட்டார். தளபதி மகபத்கானின் தலைமையில் பேரரசுப் படையினை அகமது நகருக்கு எதிராக அனுப்பி கி.பி.1636-ம் ஆண்டு அகமது நகரினை கைப்பற்றி பேரரசோடு இணைத்துக்கொண்டார். காந்தஹார் நிலப்பகுதியை மீண்டும் கைப்பற்ற மூன்று முறை படையெடுப்பை நடத்தி தோல்வி அடைந்தார். இத் தோல்வி மொகலாயர்களின் இராணுவ பலவீனத்தை வெளிப்படுத்தியது. மேலும் ஷாஜஹான் பீஜப்பூர் கோல் கொண்டாவையும் வெற்றி கொண்டார். தக்காணத்தின் ஆளுனராக தனது மூன்றாவது மகன் ஔரங்கசீப்பினை நியமனம் செய்து திறம்பட நிர்வாகம் செய்தார்.

## முகலாயர் காலம் "பொற்காலம்"

பேரரசர் ஷாஜஹானின் ஆட்சிக் காலம் "மொகலாயர்களின் பொற்காலம்" என்றழைக்கப்படுகிறது. முகலாய பேரரசு ஷாஜஹானின் ஆட்சியில் புகழின் உச்சியை அடைந்தது. கட்டடக் கலையின் விந்தைகள் இப்பேரரசின் பொருளாதார

செழிப்பினை பறைசாற்றுகிறது இருப்பினும் இவர் ஆட்சி காலத்தில் வறுமையும் காணப்பட்டதாக அயல்நாட்டு அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

> பண்டைக்கால இந்திய வரலாற்றில் யாருடைய ஆட்சிக் காலம் பொற்காலம் எனக் கருதப்பட்டது.

## கட்டடக்கலையின் இளவரசர்

பேரரசர் ஷாஜஹான் கட்டடக்கலையின் "இளவரசர்" என்றும் "பொறியாளர் பேரரசர்" என்றும் சிறப்புடன் அழைக்கப்படுகிறார்.


ஷாஜஹான் தான் கட்டிய மாளிகைகளுக்கு சிவப்பு கற்களுக்கு பதிலாக வெள்ளை பளிங்கு கற்களை பயன்படுத்தினார். "ஷாஜஹானாபாத்" என்ற புதிய அழகிய தலைநகரை உருவாக்கினார். டில்லியில் கண்ணைக் கவரக்கூடிய செங்கோட்டையை உருவாக்கினார். அக்கோட்டையிலுள்ள அழகான ரங் மகால், மோதி மகால், முத்து மகால், திவான்–இ–ஆம் மற்றும் திவான் – இ – காஸ் ஆகிய மாளிகைகளைக் கட்டி முடித்தார். பேரரசின் பெருமைகளை உலகறியச் செய்தார். மண்ணுலகில் கண்டவர் வியக்கும் வண்ணம் ஓர் விண்ணுலகை உருவாக்கிப் புகழ் பெற்றார்.

## ஜும்மா மசூதி

ஷாஜஹான் புகழ்மிக்க பெருமை வாய்ந்த "ஜும்மா மசூதியை" வெள்ளை பளிங்கு கற்களால் கட்டினார். இது உலகிலேயே மிகப் பெரிய பள்ளிசாவல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

## தாஜ்மஹால்

உலக அதிசயங்களுள் ஒன்றாக விளங்குகின்ற வரலாற்று புகழ்மிக்க தாஜ்மஹாலைக் கட்டி முடித்தப் பெருமை பேரரசர் ஷாஜஹானையேச் சாரும். இந்த நினைவுச் சின்னம் யமுனை ஆற்றங்கரையில் ஆக்ரா நகரில் தனது அன்பு மனைவி மும்தாஜின் நினைவாக கட்டப்பட்டதாகும். ஏழு உலக அதிசயங்களில் தாஜ்மஹால் ஒன்றாக கருதப் படுகிறது. இம்மாளிகை பளிங்கு கற்களின் கனவுலகமாகக் கருதப்படுகிறது. "உஸ்தாத் இஷா" என்ற தலைமை சிற்பியின் மேற்பார்வையில் இம் மாளிகை கட்டப்பட்டதாக அறியப்படுகிறது. சுமார் 22 ஆண்டுகளின் கடின உழைப்பில் சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் இந்த அழகு மாளிகை கட்டப்பட்டதாக



தாஜ்மஹால்

அறியப்படுகிறது. இப்பேரரசர் முத்து மசூதி என்று அழைக்கப்டுகின்ற மோதி பள்ளிவாசலை ஆக்ராவில் கட்டிமுடித்தார். பேரரசர் ஜஹாங்கீரின் கல்லறையையும் அழகு மிளிரக் கட்டி முடித்தார். விலை மதிப்பற்ற, அரிய வகையான கற்களை நாட்டின் பல பகுதியிலிருந்து சேகரித்து, அவற்றைப் பயன்படுத்தி உலக மக்களே வியக்கக் கூடிய வகையில் "மயிலாசனத்தை உருவாக்கினார்" புகழ் பெற்ற கோஹினூர் வைரத்தை அதில் பதிக்கச் செய்தார். பேரரசரின் நினைவினை இக்கட்டடங்கள் இன்றும், என்றும் மக்களின் மனதில் பசுமையாக வைத்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமில்லை.

இம்மயிலாசனம் முகலாயர்களின் கலைநுணுக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இதனை பாரசீக படையெடுப்பாளர் நாதிர்ஷா கி.பி.1739–ஆம் ஆண்டு எடுத்துச் சென்றார்.

தற்பொழுது மயிலாசனம் எங்குள்ளது என உனக்கு தெரியுமா ?

ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் இசை, ஓவியம், மற்றும் இலக்கியம் உயர்நிலையை அடைந்தன. பேரரசர் கற்றறிந்த அறிஞர்களை பெரிதும் போற்றினார். இவ்வாறு மொகலாயப் பேரரசை அனைத்து நிலைகளிலும் உயர்நிலையை அடையச் செய்தார். பேரரசர் ஷாஜஹான் கி.பி.1657–ல் நோயுற்றார். இச்செய்தியை அறிந்த அவரது நான்கு புதல்வர்களும் உறவினை மறந்து வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டனர். ஷாஜஹானின் மூன்றாவது மகனாகிய ஔரங்கசீப் கி.பி.1658–ஆம் ஆண்டு தன் தந்தையைக் கைது செய்து அரண்மனைக் காவலில் வைத்தார். கி.பி.1666–ஆம் ஆண்டு வரை ஷாஜஹான் வீட்டுக் காவலில் இருந்து விடுதலைப் பெறாமலேயே மரணமடைந்தார்.

## மதிப்பீடு

இந்திய வரலாற்றில் ஷாஜஹான் மிகச் சிறந்த அரசராக சந்தேகத்திற்கு இடமின்றி கருதப்படுகிறார். இவரது ஆட்சியின் போது இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வந்த பெர்னியர், டிராவர்னியர் மற்றும் மனுசி என்ற இத்தாலியரும் ஷாஜஹானைப் பற்றி மிகச் சிறந்த வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளனர்.

## ஔரங்கசீப் (கி.பி.1658–கி.பி.1707)



ஔரங்கசீப்


பேரரசர் ஷாஜஹானின் மூன்றாவது மகனாகிய ஔரங்கசீப் முகலாய வம்சத்தின் கடைசி, வலிமை வாய்ந்த மன்னராகக் கருதப்படுகிறார். ஷாஜஹான் கி.பி.1657–ஆம் ஆண்டு நோயுற்றபோது அவரது நான்கு புதல்வர்களான தாராசுகோ, ஷாஷுஜா, ஔரங்கசீப் மற்றும் முரத் வாரிசுரிமைப் போரில் ஈடுபட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தனர்.

தக்காணத்தில் ஆளுநராக இருந்த ஔரங்கசீப் பெரும் படையோடு டெல்லிக்கு விரைந்து தனது மூன்று சகோதரர்களையும் கொலை செய்துவிட்டு தந்தையை அரண்மனை காவலில் வைத்துவிட்டு முகலாய அரியணையில் அமர்ந்து, "ஆலம்கீர்" என்ற சிறப்பு பட்டத்தினைச் சூட்டிக் கொண்டார்.

## சமயக் கொள்கை

ஔரங்கசீப் சமயப் பற்றுமிக்க ஒரு பேரரசராவார். இவர் "சன்னி" முஸ்லீம் பிரிவைச் சார்ந்தவர். இஸ்லாமின் புனித நூலான "குரானை" தவறாமல் தினந்தோறும் படித்து வந்தார். சன்னி பிரிவு அல்லாதவர்களை முற்றிலும் வெறுத்தார். முஸ்லீம் அல்லாதவர்கள் மீது "ஜெசியா" மற்றும் "புனிதப் பயண வரியினை" மீண்டும் விதித்தார். இந்துக்களை அரசப் பதவியிலிருந்து அகற்றினார். இக்குறுகிய மனப்பான்மையினால் இராசபுத்திரர்கள், ஜாட்டு இனத்தவர்கள், சட்னாமியர்கள்,

## ஔரங்கசீப் பேரரசு


காபூல
பொஷாவர்
கந்தகார்
ஜீலம்
லாகூர்
பட்டான்
பானிபட்
டெல்லி
ஆக்ரா
ஜமுனா
கோமதி
காக்ரா
கங்கை
ராஜபுத்திரர்கள்
கோவா
துங்கபத்ரா
காவேரி
மதராஸ்
பாண்டிச்சேரி
கோழிக்கோடு
தரங்கம்பாடி
கொச்சின்
பாளையக்காரர்கள்
ஸ்ரீ லங்கா

சீக்கியர்கள் மற்றும் மராத்தியர்கள் ஔரங்கசீப்பிற்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அக்பர்–ஔரங்கசீப் ஆகியோர்களின் சமயக் கொள்கைகளை ஒப்பிட்டு, அறிக.

### ஔரங்கசீப்பும் சீக்கியர்களும்

பேரரரசர் ஜஹாங்கீரின் ஆட்சிக் காலத்திற்குப்பின் முகலாயர்கள் சீக்கியர்களோடு கொண்டிருந்த உறவு சிதைவுற்றது. ஔரங்கசீப் பேரரசரானபோது ஒன்பதாவது சீக்கிய குருவான தேஜ்பகதூர் முகலாய மன்னரின் இந்து மத எதிர்ப்புக் கொள்கையை வெறுத்தார். அவர் இந்துக்களை பாதுகாக்க முயன்றார். இதை அறிந்த ஔரங்கசீப் சீக்கிய குருவை டெல்லிக்கு அழைத்து வந்து மத மாற்றம் செய்ய முனைந்தார். சீக்கிய குரு இச் செயலுக்கு உடன் படாததால் கொல்லப்பட்டார். இதன் பிறகு பத்தாவது சீக்கிய குருவாக பொறுப்பேற்ற குரு கோவிந்த் சிங் தனது தந்தையின் கொலைக்கு காரணமான முகலாயர்களை பழிவாங்க சீக்கியர்களை முகமதிய எதிர்ப்பு சமூகமாக மாற்றினார். “கால்சா” என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தார்.

சீக்கிய மதத்தை தோற்றுவித்தவர் யார் ?

கல்சா அமைப்பில் உள்ள 5 'K' யினை அறிந்துகொள்

### ஔரங்கசீப்பும் மராத்தியர்களும்

மராத்திய தலைவர் சிவாஜியை அழிக்க தக்காணத்தின் ஆளுநரான “செயிஷ்டகானை” ஔரங்கசீப் அனுப்பினார். செயிஷ்டகான் பூனாவில் முகாமிட்டிருந்தபோது சிவாஜி 400 படை வீரர்களோடு பூனாவினுள் நுழைந்து மொகலாயப் படையைத் தாக்கினார். அப்போது செயிஷ்டகான் தன் விரல்களில் ஒன்றை இழந்து பூனாவிலிருந்து தப்பி ஓடினார். பிறகு இராசபுத்திர தலைவர் ஜெய்சிங்கை சிவாஜிக்கு எதிராக அனுப்பினார். இதனால் மராத்தியருடன் அமைதி ஏற்பட்டது. பின்பு சிவாஜி மொகலாய மன்னரின் அரசவைக்கு விஜயம் செய்தார். அங்கு சிவாஜி முறையாக நடத்தப்படவில்லை. சிவாஜி கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். ஆனால் சிவாஜி தந்திரமாக சிறையிலிருந்து தப்பித்து இறுதிவரை முகலாயர்களை எதிர்த்தார்.

### தக்காண கொள்கை

ஔரங்கசீப் சுமார் 25 ஆண்டுகள் தக்காண படையெடுப்பில் காலத்தை வீணாக்கினார். இதனால் பேரரசை இவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

பேரரசு சிதைவதை அவர் தன் கண்காளாலேயே காண வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானார். தொடர்ச்சியான போர்களினால் கருவூலம் காலியானது. தக்காண புற்றுநோய் ஔரங்கசீப்பை அழித்தது. கி.பி.1707–ஆம் ஆண்டு பேரரசர் ஔரங்கசீப் இயற்கை எய்தினார்.

### மதிப்பீடு

ஔரங்கசீப்பின் தீவிர சமயக்கொள்கை, அகன்ற பேரரசு, யார்மீதும் நம்பிக்கையில்லாத்தன்மை, தக்காணத்தில் நீண்ட காலம் போரில் ஈடுபட்டது, தன்னை அழித்ததோடு மட்டுமல்லாமல், பாபரால் உருவாக்கப்பட்ட வலிமை மிகுந்த மொகலாயப் பேரரசையே வீழ்ச்சியடையச் செய்தது. மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஔரங்கசீப்பின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். சிறந்த

முஸ்லீமாக விளங்கிய ஔரங்கசீப் நல்ல மன்னராக செயல்படாததினால் தோல்வியைத் தழுவினார்.

### மொகலாயர்களின் ஆட்சி முறை
### மைய நிர்வாகம்

மொகலாயர்களின் ஆட்சிமுறை ராணுவம் சார்ந்த வல்லாட்சியாகும், பேரரசர் அனைத்து அதிகாரங்களையும் கொண்டு வல்லாட்சி நடத்தினார். பேரரசர் இறைவனின் நிழலாக பூமியில் கருதப்பட்டார். பேரரசருக்கு உதவிட அமைச்சரவை இருந்தது. வசீர் (அ) தலைமை அமைச்சர் முக்கிய மானவராகக் கருதப்பட்டார்.

### மாகாண நிர்வாகம்

நிர்வாக வசதியைக் கருதி பேரரசு பல்வேறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அவைகளை "சுபா" என்று அழைத்தனர். சுபாவினை நிர்வாகம் செய்தவர் "சுபேதார்" என்று அழைக்கப்பட்டார். அக்பரின் காலத்தில் பேரரசு 15–சுபாக்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. சுபேதார் சிவில் மற்றும் ராணுவ அதிகாரங்களைப் பெற்று இருந்தார். சுபாக்கள் பல்வேறு சர்க்கார்கள் (அ) மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. பவுஜ்தார், சர்க்காரின் ஆட்சியாளர் ஆவார். சர்க்கார்கள் பர்க்கானாக்களாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. கிராமங்கள், நிர்வாகத்தின் கடைசி பிரிவாக இருந்தது. கிராமினி கிராமத்தின் நிர்வாக அதிகாரியாக இருந்தார்.

அரசு – மாகானங்கள் – சுபா – சர்க்கார்–பர்கானாக்கள்–கிராமங்கள்

### வருவாய் நிர்வாகம்

பேரரசிற்கான முக்கிய வருவாய் நிலவரியாகும். இராஜதோடர்மால் வருவாய்த்துறை அமைச்சராக பணியாற்றினார். இவர் ஷெர்ஷாவின் ஆட்சி காலத்தில் இத்துறையில் பணியாற்றினார். ஷெர்ஷாவின் அடிச்சுவட்டை அக்பர் பின்பற்றினார். அக்பர் "ஐப்தி" முறையை அறிமுகப்படுத்தினார். நிலம் முறையாக அளவீடு செய்யப்பட்டு நிலவரி நிர்ணயம் செய்யப்பட்டது.

"ஷெர்ஷா அக்பரின் முன்னோடி" என்று கருதப்படுகிறார். நிலத்தின் வளத்தினை அடிப்படையாக வைத்து நிலம் மூன்று வகையாகப் பாகுபாடு செய்யப்பட்டது. மொத்த வருவாயில் 1/3 பங்கு நிலவரியாக பெறப்பட்டது. விவசாயிகள் பணமாகவோ (அ) பொருளாகவோ வரியைச் செலுத்தினர். அசாதாரணமான சூழ்நிலையில் நிலவரி ரத்து செய்யப்பட்டது. விவசாயிகளிடம் அரசு அதிகாரிகள் பொறுப்போடும், கனிவோடும் நடந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டனர்.

### இராணுவ நிர்வாகம்

மொகலாய பேரரசில் இராணுவம் தரைப்படை, குதிரைப்படை, யானைப் படை மற்றும் பீரங்கிப்படையினை உள்ளடக்கி இருந்தது. இவற்றில் குதிரைப் படை முக்கிய பங்கு வகித்தது. அக்பர் மன்சப்தாரி முறையை அறிமுகப்படுத்தினார். மன்சப் என்றால் தரம் (அ) இடம் என்பது பொருளாகும். மன்சப்கள் தாங்கள் வைத்து இருக்கும் குதிரைப்படையை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் தரம் நிர்ணயிக்கப்பட்டது. மன்சப்தார்கள் 10–முதல் 10,000–குதிரைகள் வரை வைத்து இருந்தனர். இவர்கள் காலட் படையையும் வைத்து இருந்தனர். பேரரசருக்கு உதவுவது இவர்கள் முக்கிய கடைமையாகும். பேரரசிடமிருந்து இவர்கள் ஊதியமும் பெற்றார்கள்.

### நீதி நிர்வாகம்

பேரரசர் நீதியின் ஊற்றாகக் கருதப்பட்டார். தலைமைக்காசி பேரரசருக்கு நீதி பரிபாலனம் செய்ய உதவினார். புனித நூலான குரானின் உதவி கொண்டு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. குற்றங்கள் குறையவேண்டும் என்ற நோக்கில் தண்டனைகள் கடுமையாக இருந்தன. கை, கால் போன்ற உறுப்புகள் வெட்டப்படுதல் சாதாரண தண்டனையாகக் கருதப்பட்டது.

### மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுறக் காரணங்கள்

மொகலாயப் பேரரசர்கள் பெரும் வெற்றி வீரர்களாகத் திகழ்ந்ததினால் பேரரசின் எல்லைகள் விரிந்து காணப்பட்டது. தலைநகர் டெல்லியிலிருந்து நாட்டினைக் கட்டுப்படுத்துவது கடினமான செயலாகவே இருந்தது. கிளர்ச்சிகளை மன்னர்களால் கட்டுப் படுத்தப்பட முடியவில்லை. இதனால் பேரரசு சிதையத் தொடங்கியது.

பேரரசில் முறையாக வாரிசுரிமைக் கொள்கை இல்லாத காரணத்தால் இளவரசர்களிடையே வாரிசுரிமைப் போர் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. இதனால் நாட்டில் அமைதியின்மையும் நிச்சயமற்ற தன்மையும் நிலவியது.

பேரரசர் ஔரங்கசீப் காலத்தில் மொகலாயப் பேரரசு பரந்து இருந்தது. ஆனால் ஔரங்கசீப்பின் மறைவிற்குப்பின் அப்பேரரசை ஆளக்கூடிய வலிமையுள்ள புதல்வர்கள் தோன்ற வில்லை. ஏனவே பேரரசு சிதைவடையத் தொடங்கியது.

பலம் பொருந்திய மொகலாய இராணுவம் காலப்போக்கில் பலவீனத்தின் சின்னமாகியது. போர் வீரர்கள் நாட்டினைப் பற்றி சிறிதேனும் கவலை கொள்ளாமல் சுயநலத்தில் கவனம் கொண்டு செயல்பட்டதில் பேரரசு சிதைந்தது.

போர்க்குணம் நிறைந்த மராத்தியர்கள் சிவாஜியின் தலைமையில் மொகலாயர்களை எதிர்க்கத் தலைப்பட்டனர். ஔரங்கசீப்பின் மதக் கொள்கை அவர்களை ஒன்று படுத்தியது. மராத்தியர்களின் எழுச்சி முகலாயர்களின் சரிவினை துரிதப்படுத்தியது.

### ஐரோப்பியர்களின் வருகை

வாணிகத்திற்காக இந்தியாவிற்கு வந்த ஐரோப்பியர்கள் அரசியலில் காலூன்றி, அரசியல் ஆதாயம் பெற்று குடியேற்றங்களை உருவாக்கித் தங்கள் ஆட்சியை இந்தியாவில் நிலைப்படுத்தியது, மொகலாயர்களின் வீழ்ச்சியை துரிதப்படுத்தியது.

ஔரங்கசீப்பின் சமயக் கொள்கை முகலாய பேரரசு வீழ்ச்சியடைய முக்கிய காரணமாக அமைந்தது. இது இந்துக்களையும், சீக்கியர்களையும் முகலாயர்களின் எதிரிகளாக உருவாக்கின.

### நாதிர்ஷா–அகம்துஷா அப்தாலி படையெடுப்பு

தடுமாறிக் கொண்டிருந்த மொகலாயப் பேரரசினை முற்றிலுமாக அழிவுறச் செய்தது நாதிர்ஷா மற்றும் அகமதுஷா அப்தாலியின் படையெடுப்புகளாகும், பாபரால் உருவாக்கப்பட்டு அக்பரால் நிலைநிறுத்தப்பட்ட மொகலாயப் பேரரசு ஔரங்கசீப் ஆட்சியின் போது நிலைக்குலைந்து முடிவுற்றது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. முதல் பானிப்பட் போர் நடைபெற்ற ஆண்டு __________ ஆகும்.

   அ) கி.பி.1536 ஆ) கி.பி.1526 இ) கி.பி.1506

2. ஷெர்ஷா __________ ன் முன்னோடி என அழைக்கப்படுகிறார்.

   அ) அக்பர் ஆ) உமாயூன் இ) ஷாஜஹான்

3. __________ அரசரின் அரண்மனையில் நீதிச் சங்கிலி கட்டப்பட்டிருந்தது.

   அ) ஔரங்கசீப் ஆ) ஜஹாங்கீர் இ) பாபர்

4. குரு அர்சுன் தேவ் __________ சீக்கிய குரு ஆவார்.

   அ) ஐந்தாவது ஆ) ஒன்பதாவது இ) பத்தாவது

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. உமாயூன் என்றால் __________.
2. இரண்டாம் பானிப்பட் போரில் அக்பரால் தோற்கடிக்கப்பட்டவர் __________.
3. __________ஆட்சி காலம் முகலாயர் ஆட்சியின் பொற்காலம் என்றழைக்கப்படுகிறது.
4. தான்சேன் __________ அவையில் இருந்தார்

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. இராணாசங்கா | 1582 |
| 2. தீன்–இலாஹி | வருவாய் முறை |
| 3. இரண்டாம் பானிபட்டுப் போர் | மீவார் நாட்டு அரசர் |
| 4. இராஜாதோடர்மால் | 1556 |

### IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. கன்வா போர் எப்போது நடைபெற்றது ?
2. ஜஹாங்கீரின் சுயசரிதை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?
3. அக்பரின் பாதுகாவலர் யார் ?
4. "உலகின் ஒளி" என அழைக்கப்படுபவர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. பாபர் இந்தியாவில் எவ்வாறு முகலாயப் பேரரசை நிறுவினார் ?
2. ஜஹாங்கீர் ஆட்சியில் நூர்ஜஹானின் பங்கினை வரைக.
3. ஷெர்ஷாவின் நாணய சீர்திருத்தம் பற்றி குறிப்பு எழுதுக.
4. முகலாயப் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களில் ஏதேனும் நான்கு கூறுக.

## VI) விரிவான விடையளி.

1. யாருடைய காலம் "முகலாயர்களின் பொற்காலம்" என அழைக்கப்படுகிறது ? ஏன் ?
2. மொகலாயர்களின் ஆட்சி முறையை விளக்குக ?

## VII) செயல்பாடுகள்.

1. மொகலாயர்களுக்கு தொடர்புடைய வரலாற்று சிறப்புமிக்க முக்கிய இடங்களை பார்வையிடுக.
2. மொகலாயர் கால கலை, கட்டடக்கலை, படங்களை சேகரித்து படத்தொகுப்பு தயார் செய்.

## VIII) வரைபடம்.

1. இந்திய வரைபடத்தில் அக்பர் பேரரசின் எல்லையினைக் குறிப்பிட்டு அவர் கைப்பற்றிய இடங்களைக் குறிப்பிடுக.
2. இந்திய வரைபடத்தில் ஔரங்கசீப்பின் பேரரசு மற்றும் அவர் கைப்பற்றிய இடங்களைக் குறிப்பிடுக.

# மராத்தியர்கள்

தக்காணம் மற்றும் மஹாராஷ்டிரா மலைப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் "மராத்தியர்கள்" என்று அழைக்கப் பட்டனர். மராத்திய மாநிலத்தின் இயற்கை அமைப்பு அப்பகுதியில் வாழ்ந்த மக்களிடையே சிறப்புத் தன்மைகளை உருவாக்கியது. தக்காணத்தை ஆட்சி புரிந்த ஷியா பிரிவைச் சேர்ந்த அரசர்களிடம் மராத்தியர்கள் பணியாற்றி வந்தனர். அப்பகுதியில் காணப்பட்ட கோட்டைகள் மற்றும் மலைப் பகுதிகள், பகைவர்களிடம் இருந்து தகுந்தபாதுகாப்பை மராத்தியர்களுக்கு வழங்கின. "கொரில்லா" என்ற போர் முறையை மராத்தியர்கள்நன்கு அறிந்திருந்தனர்.

"கொரில்லா" போர் முறை என்பது "முறைசாரா போர்முறை" ஆகும். மராத்தியர்கள் மலைகளுக்கிடையே ஒளிந்து கொண்டு திடீரென்று எதிரிகளை தாக்கும் முறையாகும்.

முஸ்லீம்களின் செயல்பாடுகளால் ஏற்பட்ட வெறுப்பு மற்றும் பக்தி இயக்கம் மராத்தியர்களிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்கியது. பக்தி இயக்கத் தலைவர்களான துக்காராம், ராம்தாஸ், ஏக்நாத் மற்றும் வாமன்பண்டித் போன்றவர்கள், கடவுள் பக்தியையும் மற்றும் ஒரு வலிமையான தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற உணர்வையும் தோற்றுவித்தனர். இத்தகைய சூழ்நிலையில் சிவாஜி ஒரு மாபெரும் தலைவராகத் தோன்றினார். இவரது தலைமையில் மராத்தியர்கள் வலிமை மிக்கவர்களாகத் தோன்றி முகலாயர்களை எதிர்க்க முனைந்தார்.

## சிவாஜி (கி.பி.1627–கி.பி.1680)

பூனாவிற்கு அருகில் உள்ள சிவனேரி கோட்டையில் கி.பி.1627–ஆம் ஆண்டு



சிவாஜி பிறந்தார். பீஜப்பூர் சுல்தானிடம் பணியாற்றி வந்த ஷாஜி பான்ஸ்லே இவரது தந்தையாவார். இவரது தாய் ஜிஜாபாய். ஷாஜி பான்ஸ்லே துக்காபாய் என்பவரை இரண்டாவது மணம் புரிந்து கொண்டதால், முதல் மனைவி ஜிஜாபாய் மற்றும் மகன் சிவாஜியைப் புறக்கணித்தார். இருப்பினும், தாதாஜி கொண்டதேவ் சிவாஜியின் காப்பாளர் ஆனார். இவர் சிவாஜியை போற்றி பராமரித்தார். சிவாஜி, சிறு வயது முதற்கொண்டு இராமாயணம் மற்றும் மகாபாரதக் கதைகள் மற்றும் புராணங்களைத் தனது தாய் மூலம் கற்று உணர்ந்தார். பக்தி பெண்மணியாக விளங்கிய இவரது தாய், சிவாஜியை நல்வழிப் படுத்தினார். இவருடைய குரு குதிரைப் பயிற்சி மற்றும் நிர்வாகப் பயிற்சிகளை பயிற்றுவித்தார்.

### படையெடுப்புகள்

சிவாஜி, முஸ்லீம்களின் கீழ் பணியாற்ற வெறுப்பு கொண்டார். எனவே, சுதந்திரமான பேரரசு ஒன்றினை தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டார். புரந்தர், ரெய்கார், தோர்னா மற்றும் கல்யாண் ஆகிய கோட்டைகளை பிஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி. 1646–ல் கைப்பற்றினார்.

### சிவாஜியும் பீஜப்பூர் சுல்தானும்

சிவாஜியை அடக்க பீஜப்பூர் சுல்தான், அப்சல்கான் என்பவரை சிவாஜியை உயிருடனோ அல்லது சாகடித்தோ கொண்டு வரும்படி கி.பி.1659–ஆம் ஆண்டு அனுப்பினார். அப்சல்கானின் சூழ்ச்சியை சிவாஜி தெரிந்து கொண்டு, அவரை சந்திக்க தகுந்த பாதுகாப்புடன் சென்றார். சிவாஜியும்–அப்சல்கானும் ஒருவரை ஒருவர் சந்தித்து தழுவிக் கொண்டனர். அச்சமயத்தில் அப்சல்கான் சிவாஜியின் கழுத்தை நெறித்து கொலை செய்யும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் சிவாஜி தனது உடையில் மறைத்திருந்த புலிநகத்தால் அப்சல்கானைக் கிழித்துக் கொலை செய்தார். இதனால் சிவாஜியின் பெருமையும், புகழும் மேலும் அதிகரித்தது.

### சிவாஜியும் முகலாயர்களும்

முகலாய மன்னராக பொறுப்பேற்ற ஔரங்கசீப், தனது தக்காண ஆளுநர் செயிஷ்டகானை சிவாஜியை அடக்க 1660–ஆம் ஆண்டு அனுப்பினார். செயிஸ்டகான், பூனா என்ற இடத்தில் முகாமிட்டிருந்தார். இதனை அறிந்த சிவாஜி அவரை சந்திக்க திருமண கோஷ்டியினர் போன்று மாறுவேடம் பூண்டு செயிஸ்டகான் தங்கி இருந்த இடத்தை அடைந்தார். அப்போது செயிஸ்டகான் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். சிவாஜி அவரைத் தாக்க முற்பட்டார். ஆனால் செயிஸ்டகான் அங்கிருந்து உயிர் தப்பினார். அவரது கட்டை விரல் துண்டிக்கப்பட்டது.

ஔரங்கசீப், சிவாஜியை அடக்க இரண்டாவது முறையாக ராஜா ஜெய்சிங் என்பவரை அனுப்பினார். முகலாயபடை சிவாஜியை சூழ்ந்துகொண்ட சூழ்நிலையில், சிவாஜி வேறு வழியின்றி அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட தயாரானார். இவரது முயற்சியால் கி.பி.1665–ஆம் ஆண்டு புரந்தர் உடன்படிக்கை ஏற்பட்டது. இதன்படி சிவாஜி ஔரங்கசீப்பை சந்திக்க ஒப்புக்கொண்டார். தனது மகன் சாம்பாஜியுடன் ஔரங்கசீப்பை சந்திக்க கி.பி.1666–ஆம் ஆண்டு ஆக்ரா சென்றார். அங்கு சிவாஜி அவமானப் படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப் பட்டார். பழக்கூடை ஒன்றின் மூலம், சிறையிலிருந்து சிவாஜி உயிர் தப்பினார். ஔரங்கசீப்பால் சிவாஜியை மீண்டும் கைது செய்ய இயலவில்லை. சிவாஜியை "மலை எலி" என்றும் "தக்காண புற்றுநோய்" என்றும் அழைத்தார். சிவாஜி–முகலாயர்களின் தீவிர எதிரியானார். இதன்பிறகு, சிவாஜி பல்வேறு கோட்டைகளைக் கைப்பற்றி, மராத்திய பேரரசை பலப்படுத்தினார்.

கி.பி.1674–ஆம் ஆண்டு ரெய்கார் கோட்டையில் சிவாஜியின் முடிசூட்டு விழா நடைபெற்றது. சிவாஜி "சத்ரபதி" என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். இந்த முடிசூட்டு விழாவின் மூலம் புதிய பேரரசு (மராத்திய பேரரசு) தோன்றியது. முடிசூட்டு விழாவிற்குப் பிறகு ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் கர்நாடக படையெடுப்பை மேற்கொண்டார். செஞ்சி, வேலூர் மற்றும் பல்வேறு கோட்டைகளைக் கைப்பற்றினார். இவரது பேரரசு மைசூர், கொங்கன்

மற்றும் மஹாராஷ்டிரா வரை பரவியிருந்தது. கி.பி.1680–ஆம் ஆண்டு சிவாஜி ரெய்காரில் உயிர் துறந்தார்.

### சிவாஜியின் நிர்வாகம்

சிவாஜி ஒரு சிறந்த நிர்வாகி. மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயல்பட்டார். நிர்வாகத்தில் தனக்கு உதவி செய்ய 8 பேர்களைக் கொண்ட அமைச்சரவை ஒன்றை அமைத்தார். இது "அஷ்டப்பிரதான்" என்று அழைக்கப்பட்டது.

யாருடைய அரசவையில் அஷ்டதிக்கஜங்கள்–நவரத்தினங்கள் இருந்தனர்

ஒவ்வொரு அமைச்சரும் ஒரு துறைக்கு பொறுப்பாவார். பேரரசு பல மாநிலங்களாக அல்லது பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. இவை மேலும் பர்கானாக்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. சிவாஜியின் பேரரசு "சுயராஜ்யம்" என்று அழைக்கப்பட்டது.

1. பிஷ்வா (பிரதம அமைச்சர்)
2. மந்திரி (காலமுறை அமைச்சர்)
3. சச்சிவா (உள்துறை அமைச்சர்)
4. சுமந்த் (வெளியுறவு அமைச்சர்)
5. சேனாதிபதி – (இராணுவ அமைச்சர்)
6. அமத்தியா (நிதி அமைச்சர்)
7. பண்டிட்ராவ் (சமயத் தலைவர்)
8. நியாயதீஷ் (நீதி துறை)

### வருவாய்த்துறை நிர்வாகம்

சிவாஜி ஜமின்தாரி முறையை ஒழித்தார். விவசாயிகளிடம் நேரிடையான தொடர்பை ஏற்படுத்தினார். நிலங்கள் கவனமாக அளக்கப்பட்டு நிலத்தீர்வை மேற்கொள்ளப்பட்டது. விளைச்சலில் (2/5) ஐந்தில் இரண்டு பகுதி அரசின் பங்காக நிர்ணயிக்கப்பட்டது. இதைப் பணமாகவோ, தானியமாகவோ செலுத்தலாம். பஞ்சம் மற்றும் அவசர காலங்களில் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டது. நிலவரித்திட்டம் அக்பர் காலத்தில் ராஜாதோடர்மால் பின்பற்றிய முறையை ஒட்டி அமைந்திருந்தது. இதுதவிர சுங்கத் தீர்வை, தொழில்வரி வசூலிக்கப்பட்டன. சவுத், சர்தேஷ்முகி என்ற இரண்டு முக்கிய வரிகள் வசூலிக்கப்பட்டன.

அரசுக்கு நாம் செலுத்தும் சில வரிகளைப் பட்டியலிடுக.

### நீதித்துறை நிர்வாகம்

சிவாஜி ஆட்சிகாலத்தில் இந்துமதச்சட்டங்களின் அடிப்படையில் நீதி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. கிராமங்களில் வழக்குகளை கிராமப் பஞ்சாயத்துசபை தீர்த்து வைத்தது. பட்டேல் என்ற அதிகாரி குற்றவியல் வழக்குகளை விசாரித்தார். அனைத்து உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் மேல் முறையீட்டினை நியாயதீஷ் என்ற அதிகாரி விசாரணை செய்தார். இவர் அமைச்சரவையில் ஓர் உறுப்பினராவார்.

### இராணுவ நிர்வாகம்

சிவாஜி ஒரு சிறந்த வீரராகவும், இராணுவத் தளபதியாகவும் விளங்கினார். இவர் கட்டுப்பாடான நிரந்தர இராணுவத்தைப் பராமரித்தார். இவரது இராணுவத்தில் காலாட்படை, குதிரைப் படை, பீரங்கிப் படை, யானைப்படை, ஒட்டகப்படை மற்றும் கப்பற்படை இடம் பெற்றிருந்தன. குதிரைப்படை முக்கிய படைப் பிரிவாக கருதப்பட்டது. இராணுவ நிர்வாகத்தில் கோட்டைகள் முக்கிய அங்கம் வகித்தன. மராட்டியர்கள் கோட்டைகளைத் தாயாகக்கருதினர்.

வீரரர்களுக்கு சம்பளமாக பணம் வழங்கப்பட்டது. வீரரர்கள் இறந்த பிறகு அவரது குடும்பத்தினரும் பராமரிக்கப்பட்டனர். இராணுவ முகாமில் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. ராணுவம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்லும் போது விளைச்சலுக்கு எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தக் கூடாது என ஆணையிடப் பட்டிருந்தது. வீரர்கள், பெண்கள், குழந்தைகள்மற்றும் வயதானவர்களைக் கொடுமைப் படுத்தக்கூடாது என வீரர்களுக்கு கட்டளையிடப்பட்டது.

## மதிப்பீடு

சிவாஜி முறையான படிப்பறிவு அற்றவராக இருப்பினும், நாட்டின் முக்கியமான பிரச்சனைகளை எளிதாக புரிந்து கொண்டு திறமையாக அவற்றிற்கு தீர்வு கண்டார். வலிமையான மராத்திய பேரரசை உருவாக்கியது இவரது மாபெரும் சாதனையாகும். இவரது ஆட்சி முகலாயர்களுக்குப் பெரும்சவாலாக இருந்து, தனது தந்திரமான நடவடிக்கைகளின் மூலம் மராட்டியப் பேரரசை புகழின் உச்சநிலைக்கு கொண்டு சென்றார்.

## சிவாஜியின் வழித்தோன்றல்கள்

சிவாஜியின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மூத்த மகன் சாம்பாஜி பேரரசராகப் பொறுப்பேற்றார்–இவர் தந்தைகேற்ற தலைமையனாக இருக்க வில்லை. ஔரங்கசீப் பீஜப்பூர் மற்றும் கோல்கொண்டாவை கைப்பற்றிய பிறகு சாம்பாஜி மற்றும் அவருடைய மகன் ஷாகுவை கைது செய்தார். சாம்பாஜி சிறையிலேயே கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து சிவாஜியின் மற்றொரு மகனான ராஜாராம் மராத்திய பேரரசராகப் பொறுப்பேற்றார். கி.பி.1700–ம் ஆண்டு ராஜாராமின் மரணத்தைத் தொடர்ந்து அவரது மனைவி தாராபாய் தனது சிறுவயது மகனான இரண்டாம் சிவாஜியை மன்னராக்கி நிர்வாகத்தை தானே மேற்கொண்டார். முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் மரணத்திற்குப் பிறகு முதலாம் பகதுர்ஷா பொறுப்பேற்றார். இவர் சிறையில் இருந்த ஷாகுவை விடுதலை செய்தார். இதனால் மாராத்திய பேரரசில் ஷாகு மற்றும் தாராபாய் இடையே உள்நாட்டுப் போர் தோன்றியது. இதில் தாராபாய் தோற்கடிக்கப்பட்டு, ஷாகு மாராத்திய பேரரசராக கி.பி.1708–ஆம் ஆண்டு பொறுப்பேற்றார். இதற்கு பாலாஜி விஸ்வநாத் என்பவர் மூலகாரணமாக விளங்கினார். எனவே அவரை "பிஷ்வா" அல்லது "பிரதம அமைச்சராக" ஷாகு நியமனம் செய்தார். சிவாஜியின் வழித்தோன்றல்கள் திறமை குறைந்தவர் களாக காணப்பட்டதால் பீஷ்வா மாராத்திய பேரரசின் ஆட்சியாளரானார். இவர்கள் உண்மையான ஆட்சியாளர்களாகவும் திறமையான நிர்வாகிகளாகவும் திகழ்ந்தனர்.

## பீஷ்வாக்கள்

மராத்திய பேரரசில் "பிரதம அமைச்சர்கள்" பீஷ்வாக்கள் என்றழைக்கப்பட்டனர். கி.பி.1713 ஆம் ஆண்டு பீஷ்வாக்களின் ஆட்சி தொடங்கியது.

## பீஷ்வா பாலாஜி விஸ்வநாத் (கி.பி.1713–கி.பி.1720)

மராத்திய மன்னர் ஷாகுவின் ஆட்சிக்குப்பின் முதல் பீஷ்வாவாக பாலாஜி விஸ்வநாத் பொறுப்பேற்றார். இவர் பீஷ்வா பதவியை பரம்பரையாக்கினார். சௌத், சர்தேஷ்முகி போன்ற வரிகளை வசூல் செய்ய நிலமானிய பிரபுக்களை நியமனம் செய்தார். மராத்திய பேரரசின்

பெருமையை மீண்டும் புதுப்பித்தார். கி.பி.1720 ஆம் ஆண்டு இவர் மரணமடைந்தார்.

### பீஷ்வா பாஜிராவ் (கி.பி.1720–கி.பி.1740)

பாலாஜி விஸ்வநாத்தின் மரணத்திற்கு பிறகு அவரது மகன் பாஜிராவ் பீஷ்வாவாக பொறுப்பேற்றார். இவர் திறமையானவர். இதனால் இவர் பீஷ்வாக்களில் தலைசிறந்தவராக போற்றப்படுகிறார். மராத்திய பேரரசை வடக்கு பகுதியில் விரிவுபடுத்த விரும்பினார். எனவே "முற்போக்கு கொள்கையை" கடைப்பிடித்தார். ஹைதராபாத் நிஜாமைஅமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடும்படி செய்தார். போர்ச்சுகீசியர்களிடமிருந்து பஸ்சின், தானா மற்றும் சால்செட் போன்ற இடங்களை கைப்பற்றினார். இவர் கி.பி.1770–ஆம் ஆண்டு இறந்தார். இவரது காலத்தில் மராத்திய பேரரசு வலிமை மிக்கதாக விளங்கியது.

### பீஷ்வா பாலாஜி பாஜிராவ் (கி.பி.1740–கி.பி.1761)

இவர் மூன்றாவது பீஷ்வா ஆவார். தனது உறவினரான சதாசிவராவ் என்பவரின் வழிகாட்டுதலின் பேரில் கி.பி.1758–ல் மராத்திய பேரரசின் பெருமையையும், புகழையும் உச்சநிலைக்கு கொண்டு சென்றார். பஞ்சாபைக் கைப்பற்றி அட்டாக் கோட்டையில் மராத்தியக் கொடியை பறக்கவிட்டார். கி.பி.1761–ல் மராத்திய பேரரசு புகழின் உச்ச நிலையை அடைந்தது. ஆனால் அப்பேரரசு அகமதுஷாஅப்தாலியின் படையெடுப்பினால் சீர்குலைந்தது.

### மூன்றாவது பானிப்பட் போர் (கி.பி.1761)

மராத்தியர்கள் பஞ்சாபைக் கைப்பற்றிய செயல் ஆப்கானிய அரசரான அகமதுஷாஅப்தாலியுடன் மோதலை உருவாக்கியது. ரோஹில்கண்டு அரசர் நாஜிப்–உத்–தௌலா மற்றும் அயோத்தி நவாப் ஷுஜா உத்தௌலா ஆகியோரின் உதவியோடு இந்தியாவின் மீது அகமதுஷாஅப்தாலி படையெடுப்பை மேற்கொண்டார். வரலாற்றுப் புகழ்மிக்க பானிப்பட் சமவெளியில் கி.பி.1761–ல் சதாசிவராவ் தலைமையிலான மராத்தியப் படைகளை சந்தித்தார். இது வரலாற்றில் மூன்றாம் பானிப்பட் போர் என்று அழைக்கப்படுகிறது. சதாசிவராவ் தனது பீரங்கிப்படையின் வலிமையின் மீது அதிக நம்பிக்கை கொண்டு போரில் ஈடுபட்டார். ஆனால் அகமதுஷாஅப்தாலி மராத்தியர்களுக்கு இடையிலான அனைத்து தொடர்பையும் துண்டித்தார். ஆரம்பத்தில் போர் மராத்தியர்களுக்கு அனுகூலமாக இருந்த போதிலும், இறுதியில் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். இப்போர் மராத்தியர்களின் விதியை நிர்ணயம் செய்தது. மேலும் இப்போரின் முடிவு ஆங்கிலேயர்களின் எழுச்சிக்கு வழிவகுத்தது.

### மராத்தியர்களின் தோல்விக்கான காரணங்கள்

மராத்தியர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கை மற்றும் கொள்ளையடித்தல் கொள்கை தோல்விக்கு வழிவகுத்தது.

மராத்தியர்கள் தங்கள் இனத்தவர்களின் ஆதரவை இழந்தனர், இராஜபுத்திர்கள் ஜாட்டுகள் மற்றும் சீக்கியர்கள் மராத்தியர்களை வெறுத்தனர். மராத்தியர்களின் இராணுத்தை விட, அகமதுஷாஅப்தாலியின் இராணுவம் சிறந்த பயிற்சி பெற்று கட்டுப்பாட்டுடன் விளங்கியது, மராத்தியர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைக்கவில்லை.

மராத்தியர்களின் தலைவர்கள் அகமதுஷா அப்தாலிக்கு எந்த விதத்திலும் இணையானவர்கள் அல்ல.

மூன்றாம் பானிப்பட் போருக்குப் பிறகு மாராத்திய பேரரசை திறமையற்ற பீஷ்வாக்கள் ஆட்சி செய்தனர். இது மராத்தியர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்ததோடு மட்டுமின்றி இந்தியாவில் அவர்களின் செல்வாக்கு சரியவும் வழிவகுத்தது.

## நாதிர்ஷா படையெடுப்பு (கி.பி.1739)

பாரசீகத்தில் தோன்றி தலைசிறந்த போர்வீரராக நாதிர்ஷா விளங்கினார். சாதாரணக் கால்நடைகளை பராமரிப்பவராக விளங்கிய நாதிர்ஷா தனது திறமைகள் மூலமாக உயர்நிலையை அடைந்தார். கி.பி.1739ஆம் ஆண்டு இந்தியா மீது படையெடுப்பை மேற்கொண்டார். இதற்கு முக்கிய காரணங்கள், நாதிர்ஷா இந்தியாவின் இயற்கை செல்வத்தை கொள்ளையடிக்க எண்ணினார். பெரும் வெற்றி வீரனாகத் திகழ வேண்டும் என்றும் கருதினார். இந்தியாவை ஆட்சி செய்து வந்த முகமது ஷா நாட்டினை ஆளும் திறமையற்றவர் என்பதை உணர்ந்து இந்தியாவின் மீது படையெடுக்க முடிவெடுத்தார்.

## போரின் நிகழ்வுகள்

இந்தியாவை ஆட்சி செய்து வந்த முகமதுஷாவை, ஆப்கானிய வீரர்களுக்கு புகலிடம் அளிக்க கூடாது என வேண்டுகோள் விடுத்தார். ஆனால் இதனை முகமதுஷா ஏற்க மறுத்ததால் அவரை தண்டிக்க கி.பி.1739–ம் ஆண்டு நாதிர்ஷா இந்தியா மீது படையெடுத்தார். பெஷாவரைக் கைப்பற்றி முகலாயர்களை கர்ணல் என்ற இடத்தில் எதிர்த்துப் போரிட்டார். முகலாயப் பேரரசரை தண்டிக்க டெல்லி நோக்கி படையெடுத்துச் சென்றார். முகலாயப் பேரரசர் 20 கோடி ரூபாயை போர் இழப்பீட்டாக கொடுத்து தன்னை காப்பாற்றிக் கொண்டார். இத்தொகையைப் பெற்ற நாதிர்ஷா டெல்லியில் 15 நாட்கள் தங்கி தனது மனம் போனபடி டெல்லியை சூறையாடினார். இதில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். முகலாய மன்னரும் கொல்லப்பட்டார்.

நாதிர்ஷா கோஹினூர் வைரம் மற்றும் மயிலாசனத்தையும் விட்டுவைக்க வில்லை. சுமார் இரண்டு மாதங்களுக்கு பிறகு மாபெரும் கொள்ளை பொருட்களுடன் தனது நாட்டுக்கு திரும்பினார். இருப்பினும் இவர் தனது படைவீரரர்களாலேயே கி.பி.1747–ல் கொல்லப்பட்டார்.


## விளைவுகள்

நாதிர்ஷா படையெடுப்பு முகலாயப் பேரரசிற்கு சாவு மணி அடித்தது. அதன் வீழ்ச்சியை துரிதப்படுத்தியது. முகலாயப் பேரரசு அவமானப்படுத்தப்பட்டு அதன் திறமையின்மை உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது. முகலாயர்களின் திறமையின்மை, மராத்தியர்கள், ஜாட்டுகள், சீக்கியர்கள், ரோஹிலர்கள் போன்றோர்கள் வளர்ச்சியடைய வழிவகுத்தது. இந்தியாவின் செல்வவளம் சூறையாடப்பட்டது. சுருங்கக்கூறின் நாதிர்ஷாவின் படையெடுப்பு, இந்தியாவை “இரத்த பூமியாக” மாற்றியது.

## அகமதுஷா அப்தாலி படையெடுப்பு (கி.பி.1761)

ஆப்கானிஸ்தானில் வாழ்ந்து வந்த, அப்தாலி இனப் பிரிவின் தலைவர், அகமதுஷா அப்தாலி ஆவார். நாதிர்ஷாவின் மரணத்தைத் தொடர்ந்து அகமதுஷா அப்தாலி, ஆப்கானிஸ்தானத்தின் ஆட்சியாளரானார்.

## மராத்தியப் பேரரசு


மராத்தியர்கள்
பீஜப்பூர்
சூரத்
பம்பாய்
பல்லாரி
கோவா
வேலூர்
செஞ்சி
சென்னை
தஞ்சாவூர்
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இலங்கை
இந்தியப் பெருங்கடல்

கி.பி.1748–முதல் கி.பி.1767–வரையிலான காலத்தில் இந்தியாவின் மீது பல முறை படையெடுப்புகளை மேற்கொண்டார்.

### காரணங்கள்

நாதிர்ஷாவைப் போன்று இந்தியாவின் பெரும் செல்வத்தைச் சூறையாடுவதை நோக்கமாகக் கொண்டு படையெடுத்தார். படையெடுப்புகளின் மூலம் தனக்கு பெயரும், புகழும் கிடைக்க விரும்பினார்.

### போர் நிகழ்வுகள்

கி.பி. 1761–ஆம் ஆண்டு மூன்றாவது பானிப்பட் போரில் மராத்தியர்களை சந்திப்பதற்கு முன்பாக, அகமதுஷா அப்தாலி நான்கு முறை இந்தியாவின் மீது போர்தொடுத்தார். பஞ்சாபை கைப்பற்றி, டெல்லியை அடைந்து அந்நகரை சூறையாடினார். மதுரா, ஆக்ரா மற்றும் பல்வேறு இடங்களில் கொள்ளையடித்தார். கி.பி.1761–ஆம் ஆண்டு மராத்தியர்களை பானிப்பட் என்ற இடத்தில் சந்தித்து, அவர்களைத் தோற்கடித்து மராத்தியர்களை சீர்குலைத்தார். இது மூன்றாவது பானிப்பட் போர் என்று அழைக்கப் படுகிறது. கி.பி.1767–ம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிராக பஞ்சாப் மீது படையெடுப்பை மேற்கொண்டார். ஆனால் இவரால் அதனை மேற்கொள்ள முடியாமல், ஆப்கானிஸ்தானத்திற்கு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

### விளைவுகள்

அகமதுஷா அப்தாலின் படையெடுப்பு மராத்திய பேரரசின் வீழ்ச்சிக்கு சாவுமணி அடித்தது. இந்தியாவின் செல்வம் சூறையாடப்பட்டது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப் பட்டனர். இவரது படையெடுப்பு பஞ்சாப் முழுவதும் குழப்பத்தை ஏற்படுத்தியது. இது சீக்கியர்கள் ஒன்றுபட்டு வலிமை பெற ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அகமதுஷா அப்தாலின் படையெடுப்பு மராத்திய மற்றும் முகலாயர்களின் ஆட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தியதால் ஆங்கிலேயர்கள் தங்கள் இறை யாண்மையை இந்தியாவில் நிலை நாட்டினர்.

## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. சிவாஜியின் காப்பாளர்__________ ஆவார்.

   அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) ஷாஜிபான்ஸ்லே இ) பாஜிராவ்

2. சிவாஜியின் அமைச்சரவைக் குழுவான அஷ்டப்பிதானில் இடம் பெற்றிருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை__________.

   அ) 7 ஆ) 8 இ) 9

3. முதல் பீஷ்வா __________ ஆவார்.

   அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) பாலாஜி பாஜிராவ் இ) பாஜிராவ்

4. புரந்தர் உடன்படிக்கை__________என்பவருக்கும் சிவாஜிக்கும் இடையே ஏற்பட்டது.

   அ) ராஜாஜெய்சிங் ஆ) அப்சல்கான் இ) செயிஸ்டகான்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மராத்தியர்கள்____________போர் முறையை பின்பற்றினார்கள்
2. பீஜப்பூர் சுல்தான் சிவாஜியை அடக்க____________என்பவரை அனுப்பினார்.
3. மராத்தியப் பேரரசில் பிரதம அமைச்சர்____________என்றழைக்கப்பட்டார்.
4. ஔரங்கசீப்பின் மரணத்திற்கு பிறகு____________முகலாய மன்னரானார்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. பாஜிராவ் | பாரசீகம் |
| 2. நாதிர்ஷா | அஷ்டப்பிரதான் |
| 3. நியாயதீஷ் | ஆப்கானிய அரசர் |
| 4. அகமதுஷா அப்தாலி | முற்போக்கு கொள்கை |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. மூன்றாவது பானிப்பட் போர் எந்த ஆண்டு நடைபெற்றது ?
2. இந்தியா மீது நாதிர்ஷா எந்த வருடம் படையெடுத்தார் ?
3. புரந்தர் உடன்படிக்கை எந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது ?
4. "மலைஎலி" என்றழைக்கப்பட்டவர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. சிவாஜிக்கும் அப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற (சண்டை) மோதலைப் பற்றி சுருக்கமாக விளக்கு.
2. சிவாஜி செயிஸ்டகானை எவ்வாறு எதிர்த்தார் ?
3. மூன்றாம் பானிப்பட் போரில் மராத்தியர்கள் தோல்வியுற காரணங்கள் யாவை ?
4. நாதிர்ஷாவின் இந்தியபடையெடுப்பு பற்றி குறிப்பு எழுக.

## VI) விரிவான விடையளி.

1. சிவாஜியின் வாழ்க்கை மற்றும் சாதனைகள் பற்றி விவரி.
2. பீஷ்வாக்களின் கீழ் மராத்தியர்களின் பேரரசு பற்றி எழுதுக.

# ஐரோப்பியர்கள் வருகை

இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே மிகப் பழங்காலந்தொட்டு வாணிபத் தொடர்பு காணப்பட்டது. இத்தொடர்பு அலெக்ஸாண்டர் வருகையால் மேலும் வலுவடைந்தது. இந்தியப் பொருள்களான பட்டு, நறுமணப் பொருட்கள் மற்றும் மஸ்லின் கைத்தறி ஆடைகளுக்கு ஐரோப்பிய நாடுகளில் நல்ல தேவை காணப்பட்டது. இந்தியாவிலிருந்து மிளகு, மிளகாய், பட்டை, இஞ்சி, தேங்காய், சர்க்கரை, சாயப் பொருட்கள் போன்றவை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயின. இவை முக்கிய மூன்று வழித்தடங்கள் மூலம் நடைபெற்றது அவையாவன.

ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியா மற்றும் காஸ்பியன் கடல்வழியாக கருங்கடல், தரைப்பகுதி வரையிலும், பாரசீகம் மற்றும் சிரியா வழியாக மத்திய தரைக்கடல் பகுதியில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா வரையிலும், அரபிக்கடல், பாரசீக வளைகுடா மற்றும் செங்கடல் வழியாக கடல்மார்க்கம் ஆகிய மூன்று வழித்தடங்கள் வாயிலாக வியாபாரம் நடைபெற்றது.

கி.பி.1453–ஆம் ஆண்டு ஆட்டோமானிய துருக்கியர்கள் காண்ஸ்டாண்டிநோபிள் நகரத்தைக் கைப்பற்றி ஐரோப்பிய வணிகர்களுக்கு இடையூறு தந்தனர், வாணிபத்திற்கு தடைவிதித்தனர். ஆப்கானிஸ்தான் வழியாக நடைபெற்ற வாணிபதிற்கும் தடைவிதித்தினர். அராபியர்கள் படையெடுப்பின் விளைவாக மற்ற இரண்டு வழித்தடங்களும் கி.பி.8ஆம் நூற்றாண்டில் தடைபட்டன. எனவே ஐரோப்பியர்கள் இந்தியப் பொருட்களின்றி அவதியுற்றனர். எப்படியாவது இந்தியப் பொருட்களை பெறவேண்டும் என்று பெரும் முயற்சியில் ஈடுபட்டனர். இதன் விளைவாக இந்தியாவிற்கு புதிய கடல்வழி காணும் முயற்சியில் இறங்கினர்.

## போர்ச்சுகீசியர்கள்

இந்தியாவிற்கு புதிய கடல் வழி கண்டுபிடிக்கும் முயற்சியில் முதலில் இறங்கியவர்கள் போர்ச்சுகீசியர்கள் ஆவர். போர்ச்சுகீசிய மன்னரான இளவரசர் ஹென்றி மாலுமிகளுக்கு பயிற்சி அளிக்க அறிவியல் முறையில் அமைந்த பள்ளி ஒன்றைத் தொடங்கினார். இவருக்கு கடல் பயணத்தின் மீது இருந்த ஆர்வத்தின் காரணமாக "மாலுமி ஹென்றி" என்று போற்றப்பட்டார்.

## பார்த்தலோமியோ டயஸ்

போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த பார்த்தலோமியோ டயஸ் என்பவர் கி.பி.1487–ம் ஆண்டு முதன்முதலில் கடல் பயணத்தினை மேற்கொண்டார். இவர் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனையை வந்தடைந்தார். அச்சமயத்தில் அங்கு புயல் அதிகமாக வீசியதால் ஆப்பிரிக்காவின் தென்கோடி முனைக்கு "புயல் முனை" என்று பெயரிட்டார். இதனை கடந்து சென்றால் புதிய பகுதிகளை காணலாம் என நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இதனால் புயல்முனை, "நன்னம்பிக்கைமுனை" என அழைக்கப்பட்டது.

## வாஸ்கோடகாமா

போர்ச்சுகீசிய மாலுமியான வாஸ்கோடகாமா நன்னம்பிக்கை முனையை கடந்து, மே–27,1498–ஆம்

ஆண்டு இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கோழிக்கோடு (கள்ளிக்கோட்டை) வந்தடைந்தார். கள்ளிக்கோட்டை மன்னர் சாமொரின் அவரை வரவேற்று உபசரித்தார். மேலும் போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் நடத்த அனுமதி வழங்கினார். இதனைத் தொடர்ந்து போர்ச்சுகீசியர்கள் இந்தியாவுடன் வாணிபம் செய்ய தொடங்கினார். இந்தியாவின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள கள்ளிக்கோட்டை, கொச்சின், கண்ணனூர் ஆகிய இடங்களில் வாணிபத்தளங்களை அமைத்து வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

### பிரான்சிஸ் கோ–டி–அல்மெய்டா (கி.பி.1505–கி.பி.1509)

இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் வாணிபத்தை கவனிக்க பிரான்சிஸ்கோ–டி–அல்மெய்டா என்பவர் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் அரேபிய வியாரிகளைத் தோற்கடித்து போர்ச்சுகீசியரின் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். கப்பற்படையை வலிமை பெறச் செய்து இந்தியப் பெருங்கடல் பகுதியில் போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கை உறுதி செய்தார். இக்கொள்கை "நீலநீர்க் கொள்கை" ஆகும். இதன் மூலம் குடியேற்ற பகுதிகளை முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். கி.பி.1509–ஆம் ஆண்டு அல்மெய்டா எகிப்தியர்களால் கொல்லப்பட்டார்.

### அல்போன்ஸே–டி–அல்புகர்க்

போர்ச்சுகீசியரின் இரண்டாவது ஆளுநராக அல்புகர்க் பதவியேற்றார். இவர் மாபெரும் வெற்றியாளராகத் திகழ்ந்தார். பீஜப்பூர் சுல்தானிடமிருந்து கி.பி.1510–ம் ஆண்டு கோவாவைக் கைப்பற்றி அதனை தலைநகரமாக மாற்றினார். விஜயநகர பேரரசுடன் தனது உறவை பலப்படுத்திக் கொண்டார். தூரக்கிழக்கு பகுதியில் அமைந்திருந்த மலாக்கா தீவை கைப்பற்றினார். பாரசீக வளைகுடாவில் ஆர்மஸ் என்ற இடத்தில் துறைமுகம் ஒன்றினைக் கட்டினார். இந்தியாவில் போர்ச்சுகீசிய ஆதிக்கத்தை உண்மையாக நிலைநாட்டியவர் என்று இவர் போற்றப்படுகிறார். இவர் ஒரு சிறந்த நிர்வாகி. இந்துக்களோடு சுமூகமான உறவை ஏற்படுத்தினார். கல்வி வளர்ச்சிக்காக பல பள்ளிகளை திறந்தார். போர்ச்சுகீசியர்கள் இந்தியப் பெண்களை திருமணம் செய்வதை ஊக்குவித்தார். இவரது சமயக் கொள்கை முஸ்லீம்களுக்கு எதிரானது. இதனால் முஸ்லீம்களின் செல்வாக்கை இவர் இழக்கத் தொடங்கினார். இவர் கி.பி.1515–ஆம் ஆண்டு கோவாவில் காலமானார். இவரது மறைவிற்கு பிறகு போர்ச்சுசீசியர்கள் டையூ, டாமன், பம்பாய், இலங்கை, சால்செட், பஸின், ஹூக்ளி போன்ற பகுதிகளை கைப்பற்றினர். சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு இவர்களின் ஆதிக்கம் படிப்படியாக இந்தியாவில் வீழ்ச்சியடையத் தொடங்கியது.

### போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

அல்புகர்க்குப் பின் வந்தவர்கள் திறமையற்றவர்கள் இவர்களால் போர்ச்சுகீசியர்களின் செல்வாக்கைக் கட்டிக்காக்க முடியவில்லை. போர்ச்சுகீசியர்கள் வலுக்கட்டாயமாக மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு ஏராளமான இந்தியர்களை கிறித்துவ மதத்திற்கு மாற்றினர். முஸ்லீம்களுக்கு எதிரான கொள்கை பகைமையை ஏற்படுத்தியது. போர்ச்சுகீசியர்கள், விஜயநகரப் பேரரசுடன் மட்டுமே உறவு கொண்டிருந்தனர். ஆனால் விஜய நகர பேரரசு கி.பி.1565–ம் ஆண்டு

நடைபெற்ற தலைக்கோட்டைபோருக்குப் பின் வீழ்ச்சியுறத் தொடங்கியது. இது போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. கி.பி.1580–ம் ஆண்டு போர்ச்சுக்கல், ஸ்பெயின் கட்டுப்பாட்டில் வந்தது. எனவே இவர்களால் குடியேற்றாங்கள் மீது கவனம் செலுத்த முடியவில்லை. டச்சு மற்றும் ஆங்கிலேயர்களின் வருகை போர்ச்சுகீசியரின் செல்வாக்கு இந்தியாவில் வீழ்ச்சி அடைய வழிவகுத்தது.

### டச்சுக்காரர்கள்

போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு டச்சுக்காரர்கள் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். கி.பி.1602–ஆம் ஆண்டு ஹாலந்து நாட்டைச் சார்ந்த மக்கள் ஒன்று சேர்ந்து டச்சு கிழக்கிந்திய கம்பெனி என்ற நிறுவனத்தை தோற்றுவித்தனர். இவர்கள் கீழை நாடுகளுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களுக்கு இந்தியாவின் மீது அதிக ஆர்வம் இல்லை. நறுமணத் தீவுகளின் மீது இவர்கள் அதிக நாட்டம் செலுத்தினர். இருப்பினும் இவர்கள் இந்தியாவில் சின்சுரா, நாகப்பட்டினம், சூரத் மற்றும் மசூலிப்பட்டினத்தில் தங்கள் வாணிப மையங்களை நிறுவினர். கி.பி.1610–ஆம் ஆண்டு "புலிகட்" என அழைக்கப்படும் பழவேற்காட்டில் தங்கள் வாணிப தலத்தை நிறுவி அங்கு கோட்டை ஒன்றை கட்டினர். இது டச்சுக்காரர்களின் தலைமை இடமாகத் திகழ்ந்தது. சூரத், பரோச், காம்பே, அகமதாபாத், பாட்னா, காசிம்பஜார் போன்ற இடங்களில் வாணிப தலங்களை நிறுவினர்.

### அம்பாய்னா படுகொலை

இதற்கிடையில் ஆங்கிலேயர்கள் இந்தோனேசியாவில் வியாபாரம் செய்ய வியாபாரிகளை அனுப்பினர். இதனை டச்சுக்காரர்கள் ஏற்கவில்லை. எனவே கி.பி.1623–ஆம் ஆண்டு அம்பாய்னா என்ற இடத்தில் ஆங்கில வியாபாரிகளைக் கொன்றனர். இது "அம்பாய்னா" படுகொலை என்றழைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி ஆங்கிலேயர்கள், மற்றும் டச்சுக்காரர்கள் இடையே பகையை உருவாக்கியது. இதன் பிறகு ஆங்கிலேயர்கள் நறுமணத் தீவுகளை விட்டு வெளியேறி இந்தியா மீது முழு கவனத்தை செலுத்தினர்.

ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களுக்குப் போட்டியாக இந்தியாவில் வாணிப நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவர்களுடன் போட்டிபோட முடியாமல் டச்சுக்காரர்கள், தங்கள் வாணிப மையங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு இந்தியாவை விட்டு வெளியேறினர்.

### ஆங்கிலேயர்கள்

கி.பி.1588–ஆம் ஆண்டு உலகின் மிகப் பெரிய போர்க்கப்பலான "ஸ்பானிய ஆர்மடா" என்ற கப்பலை ஆங்கிலேயர்கள் தோற்கடித்து, ஐரோப்பாவில் அதிக கடல் வலிமை பெற்ற நாடாக இங்கிலாந்து விளங்கியது. இதனைத் தொடர்ந்து கீழ்த்திசை நாடுகளுடன் வாணிப நடவடிக்கையில் இறங்கினர். நூறு லண்டன் நகர வியாபாரிகள் ஒன்று சேர்ந்து ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை தோற்றுவித்தனர். இக்கம்பெனிக்கு டிசம்பர்–31, 1600–ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசி முதலாம் எலிசபெத், வியாபாரம் செய்வதற்கான அனுமதியை வழங்கினார். கி.பி.1608ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் கொடுத்த வியாபாரம் செய்ய கோரிய அனுமதி கடிதத்துடன் வில்லியம் ஹாக்கின்ஸ்

என்ற ஆங்கில மாலுமி, ஜஹாங்கீரின் அரசவைக்கு வருகை புரிந்தார். ஆனால் தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து கி.பி.1615–ஆம் ஆண்டு சர்தாமஸ் ரோ என்ற மற்றொரு ஆங்கில வியாபாரி ஜஹாங்கீர் அரசவைக்கு வருகை புரிந்தார். இவர் இந்தியாவுடன் வியாபாரம் செய்வதற்கான அனுமதியை பெற்றார். இதனை தொடர்ந்து ஆங்கிலேயர்கள் சூரத், ஆக்ரா, பரோச், அகமதாபாத் ஆகிய இடங்களில் வாணிப மையங்களை ஏற்படுத்தி இந்தியாவுடன் வாணிபத்தை மேற்கொண்டனர்.

கி.பி.1639–ஆம் ஆண்டு "பிரான்ஸிஸ் டே" என்ற ஆங்கில அதிகாரி சந்திரகிரி அரசரிடமிருந்து ஒரு நிலப்பகுதியை விலைக்கு வாங்கி தற்கால சென்னை நகரை நிறுவினார். இங்கு கி.பி.1640–ஆம் ஆண்டு புனித ஜார்ஜ்கோட்டை கட்டப்பட்டது. இங்கிலாந்து அரசர் இரண்டாம் சார்லஸ், போர்ச்சுகல் நாட்டு இளவரசி காத்தரின் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவருக்கு சீர்வரிசையாக பம்பாய் கொடுக்கப்பட்டது. இதனை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆண்டொன்றுக்கு 10–பவுண்டு வாடகைக்கு விட்டார். கி.பி.1699–ஆம் ஆண்டு முகலாயர் மன்னர் ஔரங்கசீபின் அனுமதி பெற்று கல்கத்தாவில் மற்றொரு வாணிப மையத்தை ஏற்படுத்தினார். இங்கு இங்கிலாந்து மன்னர் மூன்றாம் வில்லியத்தின் நினைவாக வில்லியம் கோட்டை கட்டப்பட்டது.

ஆங்கிலேயர்கள் இந்தியாவில் மேலும் பல வாணிப மையங்களை ஏற்படுத்தி இந்தியாவுடன் தீவிரமாக வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். இவ்வாறு கிழக்கிந்திய கம்பெனியின் ஆதிக்கம், செல்வாக்கு கி.பி.1858–ஆம் ஆண்டு வரை இந்தியாவில் விரிவுபடுத்தப்பட்டது.


### டேனியர்கள்

டென்மார்க் நாட்டைச் சார்ந்த மக்கள் டேனியர்கள் என்றழைக்கப்பட்டனர். இவர்களும் இந்தியாவிற்கு வருகை புரிந்தனர். கி.பி.1620–ஆம் ஆண்டு தரங்கம்பாடியிலும், 1676–ஆம் ஆண்டு வங்காளத்திலுள்ள சீராம்பூர் என்ற இடத்திலும் வாணிப மையங்களை ஏற்படுத்தினர். ஆனால் இவர்கள் தங்கள் வாணிபத்தலங்களை ஆங்கிலேயர்களுக்கு விற்றுவிட்டு, இந்தியாவை விட்டு வெளியேறினர்.

### பிரெஞ்சுக்காரர்கள்

மற்ற ஐரோப்பிய நாடுகளைப் போன்று பிரான்சும், இந்தியாவுடனான வியாபாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட்டது. பிரான்ஸ் மன்னர் பதினான்காம் லூயியின் அமைச்சரான கால்பர்ட் என்பவரின் முயற்சியால், பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி கி.பி.1664–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள் இந்தியாவுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டனர். கி.பி.1668–ஆம் ஆண்டு சூரத்திலும், கி.பி.1669–ஆம் ஆண்டு மசூலிப்பட்டினத்திலும் வாணிபத் தலங்களை நிறுவினர். கி.பி.1674–ஆம் ஆண்டு தஞ் சாவூர் மன்னரிடமிருந்து சென்னைக்கு தெற்கே ஒரு நிலப்பகுதியை பெற்று பாண்டிச்சேரியை நிறுவினர். இது பிரெஞ்சுக்காரர்களின் தலைமை இடமாக மாறியது. கி.பி.1690ஆம் ஆண்டு சந்திரநாகூரில் மற்றொரு வாணிப தலத்தையும் நிறுவினர். கி.பி.1725–ஆம் ஆண்டு மாஹியையும், கி.பி.1739–ஆம் ஆண்டு

# இந்தியாவில் ஐரோப்பிய குடியேற்றங்கள் போர்ச்சுகீசியர்கள், டச்சுகாரார்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள்



காரைக்காலையும் பெற்றனர். கி.பி.1742–ஆம் ஆண்டு டியூப்ளே பிரெஞ்சு கவர்னராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் பிரெஞ்சு ஆதிக்கம் மேலும் வளர்ச்சி அடைந்தது. இதற்கிடையில் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் ஆதிக்கப் போட்டி தொடங்கியது. இது இந்தியாவில் கர்நாடக போர்களாக பிரதிபலித்தது. இதன் இறுதியில் ஆங்கிலேயர்கள் வெற்றி பெற்று. இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டினர். பிரெஞ்சுகாரர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறினர்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடு.

1. மாபெரும் வாணிப மையமான ___________ ஆட்டோமானிய துரக்கியர்களால் கி.பி.1453–ல் கைப்பற்றப்பட்டது.

   அ) ஆப்கானிஸ்தான் ஆ) கான்ஸ்டாண்டிநோபிள்
   இ) பலுசிஸ்தான்

2. ___________ முதல் போர்ச்சுகீசியர் ஆளுநராவார்.

   அ) பிரான்ஸிஸ்கோ–டி–அல்மெய்டா ஆ) அல்போன்ஸோ–டி–அல்புகர்க்
   இ) பார்த்லோமியோ டயஸ்

3. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி தொடங்கப்பட்ட ஆண்டு ___________ ஆகும்.

   அ) கி.பி.1600 ஆ) கி.பி.1644 இ) கி.பி.1664

4. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் தலைமையிடமாக ___________ விளங்கியது.

   அ) சந்திர நாகூர் ஆ) பாண்டிச்சேரி இ) மாஹி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. போர்ச்சுகீசியர்கள் கோவாவை ___________ சுல்தானிடமிருந்து கைப்பற்றினர்
2. வில்லியம் ஹாக்கின்ஸ் பயணம் மேற்கொண்டபோது இந்தியாவின் முகலாய மன்னர் ___________ ஆவார்.
3. கி.பி ___________ ஆண்டு சர்தாமஸ்ரோ இந்தியாவிற்கு வந்தார்.
4. கி.பி.1742–ஆம் ஆண்டு ___________ என்பவர் பிரெஞ்சு கவர்னராக பொறுப்பேற்றார்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. வாஸ்கோடகாமா | இங்கிலாந்து |
| 2. மாஹி | பிரெஞ்சுக் குடியேற்றம் |
| 3. நறுமணத் தீவுகள் | போர்ச்சுக்கீசிய மாலுமி |
| 4. முதலாம் ஜேம்ஸ் | கிழக்கிந்தியத் தீவு |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனி எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?
2. பிரான்ஸிஸ்டே என்பவர் யார் ?
3. புனித ஜார்ஜ்கோட்டை எந்த நகரில் எங்கு அமைந்துள்ளது ?
4. நன்னம்பிக்கை முனை எந்த கண்டத்தில் அமைந்துள்ளது ?

## V) குறுகிய விடையளி.

1. போர்ச்சுகீசியர்களின் ஆதிக்கம் இந்தியாவில் வீழ்ச்சி அடைய மூன்று காரணங்களை எழுது.
2. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி எவ்வாறு பம்பாயைப் பெற்றது ?
3. இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் வாணிப மையங்களை குறிப்பிடுக.
4. அல்புகர்க்கு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

## VI) விரிவான விடையளி.

1. இந்தியாவில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வளர்ச்சி பற்றி விவரி.
2. டச்சுக்காரர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் ஏற்படுத்திய வாணிப மையங்களை பற்றி எழுது.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. இந்திய நதிகள் வரைபடத்தில் போர்ச்சுக்கீசியர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், டேனியர்கள் மற்றும் பிரெஞ்சுக்காரர்கள் வாணிபத் தலங்களை குறிப்பிடுக.
2. புனித ஜார்ஜ்கோட்டைக்குப் பயணம் செய்து அதைப்பற்றி தெரிந்துகொள்க.

# ஆங்கில–பிரெஞ்சு ஆதிக்கப் போட்டி (கர்நாடகப் போர்கள்)

ஆங்கில மற்றும் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனிகள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டன. நாளடைவில் இவர்களிடையே போட்டி தோன்றி இந்தியாவில் யார் இருக்க வேண்டும் என்ற மோதலை ஏற்படுத்தியது. வாணிப நோக்கம் அரசிய லாகப் பிரதிபலித்தது. ஆங்கிலேயர்களும்,பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட போட்டி சூழ்நிலையை ஏற்படுத்தினர். கி.பி.1740–கி.பி.1763 இடைப்பட்ட காலங்களில் ஆங்கிலேய பிரெஞ்சுக் காரர்களிடையே மூன்று போர்கள் நடைபெற்றன. இந்தப் போர்கள் கர்நாடகப் பகுதியில் நடைபெற்றதால் இவை கர்நாடகப் போர்கள் என அழைக்கப்பட்டன. கர்நாடகம், முகலாயர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக நிஜாமின் கட்டுப்பாட்டில் இருந்தது. கர்நாடக நவாப்பான அன்வாருதீன் இப்பகுதியில் தன்னை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார். ஆற்காடு கர்நாடகத்தின் தலைநகர். ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தங்களை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டனர். போட்டி தவிர்க்க முடியாத ஒன்றாகியது. இறுதியில் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவைவிட்டு வெளியேற்றப்பட்டனர். கர்நாடகம் ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

## முதல் கர்நாடகப் போர் (கி.பி.1746–கி.பி.1748)

### காரணங்கள்

முதல் கர்நாடகப் போர் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் பிரதிபலிப்பாகும். இப்போரில் ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் எதிர் எதிர் அணிகளாக போரில் இறங்கினர். இதுவே இந்தியாவில் முதல் கர்நாடகப் போராக பிரதிபலித்தது. பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக் கவர்னராக இருந்த டியூப்ளே இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தார். இது போருக்கு வித்திட்டது.

### போரின் நிகழ்வுகள்

டியூப்ளே தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட விரும்பினார். இதற்கிடையில் ஐரோப்பாவில் போர் ஏற்பட்டது. பிரெஞ்சு கவர்னரான டியூப்ளேயும் மொரிஸியஸ் கவர்னரான லாபோர்டொனாய்ஸ் உடன் சேர்ந்து சென்னையை முற்றுகையிட்டு கைப்பற்றினார். இதனை கர்நாடக நவாப் அன்வாருதீன் விரும்பவில்லை. சென்னையை தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டார். ஆனால் டியூப்ளே மறுத்தார். எனவே தனது படைகளை பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராக அனுப்பி சென்னை அடையாறு போரில் பிரெஞ்சுக்காரர்களை எதிர்த்தார். ஆனால் தோல்வி அடைந்தார். இதனைத் தொடர்ந்து டியூப்ளே ஆங்கிலேயருக்குச் சொந்தமான கடலூரில் அமைந்துள்ள புனிதடேவிட் கோட்டையை கைப்பற்ற முயற்சி செய்தார். இதற்கிடையில் ஐரோப்பாவில் நடைபெற்று வந்த ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் கி.பி.1748–ஆம் ஆண்டு முடிவுற்றது.

### விளைவுகள்

முதல் கர்நாடகப் போர் அய்லா ஷபேல் உடன்படிக்கையின்படி முடிவடைந்தது (1748). இதன்படி

ஆங்கிலேயருக்கு மீண்டும் சென்னை கிடைத்தது.

### இரண்டாவது கர்நாடகப் போர் (கி.பி.1748–கி.பி.1754)

#### காரணங்கள்

ஹைதராபாத்திலும், கர்நாடகத்திலும் ஏற்பட்ட வாரிசுரிமைப் போர் இரண்டாவது கர்நாடகப் போராக பிரதிபலித்தது. ஹைதராபாத் நிஷாம் அஷப்ஜா 1748–ல் காலமானார். இதனால் அவரது மகன் நாசிர் ஜங் மற்றும் பேரன் முஷபர் ஜங்கிற்கு இடையே போட்டி ஏற்பட்டது. இதே சமயத்தில் கர்நாடக நவாப் தோஸ்த் அலி காலமானார். இதனால் அவரது மகன் அன்வாருதினுக்கும் அவரது மருமகன் சந்தா சாகிப்பிற்கும் இடையே ஆற்காட்டு அரியணைக்கு போட்டி ஏற்பட்டது. முஷபர் ஜங் மற்றும் சந்தா சாகிப்பை பிரெஞ்சுக்காரர்கள் ஆதரித்தனர். நாசிர் ஜங்கும், அன்வாருதினும் ஆங்கிலேயரின் உதவியைக் கோரினர். போர் தவிர்க்க முடியாத ஒன்றாகி கி.பி.1748–ஆம் ஆண்டு இரண்டாவது கர்நாடகப் போர் ஆரம்பமாகியது.

#### போரின் போக்கு


பிரெஞ்சுக்காரர்களின் உதவியோடு முஷாபர் ஜங் மற்றும் சந்தா சாஹிப் 1749–ஆம் ஆண்டு ஆம்பூரில் நடைபெற்ற போரில் அன்வாருதீனை தோற்கடித்துக் கொன்றனர். அன்வாருதீனின் மகன் முகமதுஅலி திருச்சி மலைக்கோட்டையில் அடைக்கலம் புகுந்தார். சந்தாசாகிப் கர்நாடக நவாப்பானார். ஹைதராபாத்தில் நடைபெற்ற போட்டியில் நாசர் ஜங் மற்றும் முஷபர் ஜங் இருவரும் கொல்லப்பட்டனர். இதனால் பிரெஞ்சு தளபதி புஸ்ஸி, சலபெத் ஜங்கினை ஹைதராபாத்தின் நிஜாமாக நியமனம் செய்தார். தளபதி புஸ்ஸி செய்த உதவிக்கு பிரதிபலனாக வடக்கு மாநிலங்களை பிரெஞ்சுக்காரர்களுக்கு சலபத் ஜங் வழங்கினார்.

இத்தருணத்தில் ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் நிலை மிகவும் சிக்கலாக காணப்பட்டது. ராபர்ட் கிளைவ் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் சிக்கலை தீர்த்து அதற்குப் புத்துயிர் அளித்தார். ராபர்ட் கிளைவ் கர்நாடகத்தின் தலைநகராகிய ஆற்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றினார். அவர் சந்தா சாஹிப்பை தோற்கடித்து, முகமது அலியை ஆற்காட்டின் நவாப்பாக்கினார். எனவே ராபர்ட் கிளைவ் “ஆற்காட்டின் வீரர்” எனப்பெருமையோடு அழைக்கப்பட்டார். இத்தோல்வியனால் கி.பி.1754–ஆம் ஆண்டு டியூப்ளே பிரான்ஸிற்கு திரும்ப அழைக்கப்பட்டார். தளபதி கோத்யூ பிரஞ்சுத் தளபதியாக இந்தியாவில் நியமனம் செய்யப்பட்டார். இரண்டாவது கர்நாடகப் போர் ஆங்கிலேயர்களுக்கு பெரும் வெற்றியையும் பிரஞ்சுக்காரர்களுக்கு சரிவையும் ஏற்படுத்தியது.

#### போரின் விளைவுகள்

இரண்டாவது கர்நாடகப் போர் கி.பி.1755–ஆம் ஆண்டு, பாண்டிச்சேரி உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது. இதன்படி ஆங்கிலேர்களுக்கும், பிரஞ்சுக்காரர்களும் இந்திய சுதேசி சாம்ராஜ்யங்களின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்றும், போரின் போது இரு நாடுகளும் கைப்பற்றிய நிலப்பகுதிகளை திரும்ப அந்தந்த நாடுகளுக்கு அளித்துவிடுவது என்றும் ஒப்புக் கொண்டனர். முகமது அலியை ஆற்காட்டின் நவாப்பாக ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் அங்கீகரித்தனர்.

# கர்நாடகப் போர்கள்



அரபிக் கடல்
வங்காள விரிகுடா
ஆற்காடு
மதராஸ்
வேலூர்
செஞ்சி
பாண்டிச்சேரி
காரைக்கால்
தரங்கம்பாடி
நாகப்பட்டினம்
ஸ்ரீரங்கம்
திருச்சிராப்பள்ளி
தஞ்சாவூர்
இந்தியப் பெருங்கடல்

### மூன்றாவது கர்நாடகப் போர் (கி.பி.1756–கி.பி.1763)

#### காரணங்கள்

கி.பி.1756–ஆம் ஆண்டு ஐரோப்பாவில் ஏற்பட்ட ஏழாண்டுப் போரின் எதிரொலியாக இந்தியாவில் மூன்றாம் கர்நாடகப் போர் நடைபெற்றது.

#### போரின் நிகழ்வுகள்

பிரெஞ்சு தளபதி கவுண்ட்–டி–லாலி, ஆங்கிலேயரின் புனித டேவிட் கோட்டையை கைப்பற்றினார். சென்னை நகரத்தின் மீது படையெடுக்க தளபதி புஸ்ஸியை அறிவுறுத்தினார். தளபதி புஸ்ஸி ஹைதராபாத்தை விட்டு சென்னைக்கு வந்தபோது ஆங்கிலேயர்கள் ஹைதராபாத்தை கைப்பற்றினர். புஸ்ஸி மற்றும் கவுண்டிலாலி இருவரும் இணைந்து சென்னையைத் தாக்கினர். ஆனால் ஆங்கில தளபதி சர்அயர்கூட் பிரெஞ்சுப் படையை கி.பி.1760–ஆம் ஆண்டு வந்தவாசி போர்களத்தில் தோற்கடித்தார். இத்தோல்வி பிரெஞ்சுக்காரர்களுக்கு பெரும் சரிவை ஏற்படுத்தியது. கி.பி.1761–ஆம்ஆண்டு பிரெஞ்சுத் தளபதி கவுண்டிலாலி பாண்டிச்சேரியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கம் சரிவடைந்தது, ஆங்கிலேயர்கள் உயர்வடைந்தனர்.

#### விளைவுகள்

மூன்றாம் கர்நாடகப் போர் கி.பி.1763–ஆம் ஆண்டு பாரிஸ் சமாதான உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது. பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திர நாகூர் மற்றும் மாஹி ஆகிய நிலப்பகுதிகளை திரும்பப்பெற்றனர். ஆனால் அவர்கள் அங்குக் கோட்டைகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்வில்லை. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்களின் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் ஒரு சேர இழந்துவிட்டனர் ஆங்கிலேயர்கள் வலிமையடைந்தனர்.

#### கர்நாடகப் போரில் ஆங்கிலேயர்களின் வெற்றிக்கான காரணங்கள்

ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனம் தாய்நாட்டின் ஆதரவினையும், பொருளாதார உயர் நிலையையும் பெற்றிருந்தது வெற்றிக்கான ஒரு காரணமாகும். ஆங்கிலேயரின் கடற்படை வலிமை அவர்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது. ஆங்கிலேய நிறுவனத்தின் உயர் அதிகாரிகளின் ஒற்றுமை உணர்வும் அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தது. பிரெஞ்சுத் தளபதி புஸ்ஸி மற்றும் கவுண்டிலாலி சென்னையைக் கைப்பற்ற படையெடுத்தது பெரும் தவறாக முடிந்தது. இறுதியாக பிரான்ஸ் முழுமனதோடு இப்போரில் ஈடுபட முடியவில்லை. ஏனெனில் ஐரோப்பாவில் பிரான்ஸ் தொடர்ந்து பல போர்களில் ஈடுபட்டது. ஆனால் முழுமனதோடு எந்த வகை சிதறலுமின்றி கர்நாடகப் போரில் ஈடுபட்டதினால் இங்கிலாந்து முழுமையான வெற்றியைப் பெற்றது. இதுவே இந்திய வரலாற்றின் போக்கை மாற்றியது. இந்தியாவை ஆளும் சக்தியாக இங்கிலாந்து வலுப்பெற்றது.

#### வங்காளத்தில் ஆங்கில ஆதிக்கம் நிலைநாட்டப்படுதல்

முகலாயப் பேரரசில் வளமான நிலப்பகுதியாக இருந்த வங்காளம் அலிவர்திகான் தலைமையில் சுதந்திரமான பேரரசாக உருவானது. அவரின் மறைவுக்குப் பிறகு அவரின் பேரன் சிராஜ்உத்–தௌலா வங்காளத்தில் நவாப்பானார். கி.பி.1757ம் ஆண்டு

ஆங்கிலேயர்களுக்கும், சிராஜ்உத்–தௌலாவிற்கும் ஏற்பட்ட மனவேறுபாடு பிளாசிப் போரில் முடிந்தது.

### பிளாசிப் போர் (கி.பி.1757)
### காரணங்கள்

வங்காளத்தில் இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நிறுவனங்கள் தங்கள் நிலப்பகுதிகளில் கோட்டைகளைக் கட்டி வலிமைபடுத்திக் கொண்டன. ஆனால் வங்காள நவாப் சிராஜ்–உத்–தௌலா ஐரோப்பிய நாடுகள் தனது அனுமதியின்றிக் கோட்டைகளைக் கட்டுவதோ–புதுப்பிப்பதோ கூடாது என்று கூறினார். நவாப்பின் ஆணையை பிரான்ஸ் ஏற்றுக் கொண்டது. ஆனால் இங்கிலாந்து ஏற்க மறுத்தது. மேலும் ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனம் தனக்கு அளிக்கப்பட்டிருந்த வியாபார சலுகைகளை தவறாக பயன்படுத்தியது. இது சிராஜ்–உத்–தௌலாவின் ஆத்திரத்தை தூண்டியது.

இதனால் சிராஜ்–உத்–தௌலா பெரும்படையுடன் சென்று கல்கத்தாவை கைப்பற்றி ஆங்கிலேய போர் வீரர்கள் 146 பேர்களை போர்க் கைதியாகளாகப் பிடித்து சிறையில் அடைத்துவிட்டார். அடுத்த நாள் அவர்களில் 23 பேரே உயிருடன் இருந்தனர். மீதமுள்ளவர்கள் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். இந்நிகழ்வு வரலாற்றில் கல்கத்தா இருட்டறை துயரச் சம்பவ நிகழ்ச்சி என அழைக்கப்படுகிறது. இச்செய்தியை கேள்விப்பட்ட ஆங்கில நிர்வாகம் தளபதி வாட்சன் மற்றும் இராபர்ட் கிளைவ் ஆகியோர்களை வங்காளத்திற்கு அனுப்பியது. அவர்கள் கல்கத்தாவைக் திரும்ப கைப்பற்றினர்.

### நிகழ்வுகள்

கி.பி.1757–ஆம் ஆண்டு ஜூன்,23–ஆம் நாள் சிராஜ்உத் தௌலா, ராபர்ட் கிளைவ் ஆகியோரின் படைகள் கல்கத்தாவிற்கு அருகே உள்ள பிளாசி என்ற இடத்தில் போரிட்டது. ஒரு சில மணி நேரங்கள் நடைபெற்ற இப்போரில் சிராஜ்–உத்தௌலா தோற்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

மீர்ஜாபரை வங்களாத்தின் நிர்வாகியாக ஆங்கிலேயர்கள் நியமித்தனர். மீர்ஜாபர் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தின் பொம்மையாக வங்காளத்தில் செயல்பட்டார். பிறகு ஆங்கில நிர்வாகம் மீர்ஜாபரை பதவியிலிருந்து அகற்றிவிட்டு அவரின் மருமகன் மீர்காசிம்மை வங்காளத்தின் நவாப்பாக அறிவித்தது.

### பக்ஸார் போர் (கி.பி.1764)
### காரணங்கள்

மீர்காசிம் வங்காள நவாப் ஆனபிறகு இந்திய வியாபாரிகளுக்கு உதவிடும் நோக்கில் அவர்கள் செலுத்தி வந்த சுங்க வரியை ரத்து செய்தார். இச்செயல் ஆங்கிலேயர்களுக்கு வெறுப்பினையும், கோபத்தினையும் உருவாக்கியது. ஆங்கிலேயப்படை மீர்காசிம்மை தோற்கடித்தது. தோற்கடிக்கப்பட்ட மீர்காசிம் அயோத்தியை ஆட்சி செய்த நவாப் ஷூஜா உத்தௌலாவிடம் அடைக்கலமானார். முகலாய பேரரசர் இரண்டாம் ஷாஆலம் அவர்களுக்கு உதவினார். இரண்டாம் ஷாஆலம், ஷூஜா உத்தௌலா மற்றும் மீர்காசிம் ஆகிய மூன்று மன்னர்களும் ஒன்று சேர்ந்து ஆங்கிலேயர்களின் ஆட்சியை இந்தியாவில் முடிவுக்கு கொண்டுவர போரிடத் தயாரானார்கள்.

### நிகழ்வுகள்

மீர்காசிம், ஷூஜா உத்தௌலா, இரண்டாம் ஷாஆலம் ஆகியோர்களின் கூட்டுப்படை கி.பி.1764–ஆம் ஆண்டு அக்டோபர் 22–ம் நாள் பக்ஸார் என்ற

இடத்தில் ஆங்கிலேயப் படையை எதிர் கொண்டன. இந்தியமன்னர்களின் கூட்டுப்படை ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டது. மீர்காசிம் போர்க்களத்தைவிட்டு தப்பி ஓடினார். ஷூஜா உத்தெளலாவும், இரண்டாம் ஷா ஆலமும் ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர். ஆங்கிலேயர்கள் பிளாசியில் பெற்ற வெற்றி பக்ஸாரில் நிலைபடுத்தப்பட்டது.

### விளைவுகள்

கி.பி.1765–ஆம் ஆண்டு பக்ஸார் போரின் முடிவில் அலகாபாத் உடன்படிக்கை ஆங்கிலேயர்களுக்கும், இரண்டாம் ஷா ஆலம் மற்றும் ஷூஜா உத் தெளலாவிற்கும் இடையே கையெழுத்திடப்பட்டது. இவ்வுடன் படிக்கையின்படி.

1. ஷூஜா உத்தெளலா போர் இழப்பீட்டுத் தொகையாக 50 இலட்சம் ரூபாயை ஆங்கிலேயர்களுக்கு வழங்கவும் மற்றும் காரா, அலகாபாத் ஆகிய நிலப்பகுதிகளை வழங்கவும் ஒத்துக் கொண்டார்.

2. முகலாயப் பேரரசருக்கு ஆண்டு தோறும் 26 லட்சம் ரூபாய் ஒய்வூதியம் வழங்க ஆங்கில அரசாங்கம் ஒத்துக் கொண்டது.

3. முகலாயப் பேரரசர் வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா ஆகிய மாநிலங்களில் வரிவசூல் செய்யக்கூடிய உரிமையை ஆங்கிலேயர்களுக்கு வழங்கினார்.

4. கர்நாடக நிலப்பகுதி, வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா ஆகிய பகுதிகள் ஆங்கிலேயர்களின் ஆளுகையின் கீழ் வந்தது.

5. பக்ஸார் போர் ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் உயர் அதிகாரம் படைத்த ஒரு நிறுவனமாக உயர்த்தியது.

பக்சார் போருக்கு பிறகு ராபர்ட் கிளைவ் வங்காள கவர்னராக 1765–ல் நியமிக்கப்பட்டார்.

## முதலாவது ஆங்கில–மைசூர் போர் (கி.பி.1767–கி.பி.1769)

### காரணங்கள்

இராபர்ட் கிளைவ் வங்காளத்தின் நிர்வாகியாக இருந்த போது மைசூரில் ஹைதர்அலி வலிமை மிகுந்த ஒரு பேரரசை உருவாக்கி இருந்தார். ஹைதர் அலியின் வலிமையும், அதிகார வளர்ச்சியும் பிரான்ஸ் நாட்டோடு அவர் கொண்டிருந்த நல்லுறவும் ஆங்கிலேய நிர்வாகத்தின் கண்களை உறுத்தச் செய்தன. இது முதலாவது ஆங்கில–மைசூர் போருக்கு வழி வகுத்தது.

### நிகழ்வுகள்

கி.பி.1766–ஆம் ஆண்டு ஹைதர் அலிக்கு எதிராக இங்கிலாந்து மராத்தியரோடும், ஹைதராபாத்தை ஆட்சி செய்த நிஜாமோடும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. ஆனால் ஹைதர்அலி தன் மதி நுட்பத்தினாலும் கையூட்டின் மூலமாகவும் மராட்டியர்களையும், ஹைதராபாத் நிஜாமையும் நண்பர்களாக்கிக் கொண்டார். ஆனால் கி.பி.1767–ஆம் ஆண்டு ஹைதர்அலி மற்றும் நிஜாமை ஆங்கிலேயர்கள் சங்கமா என்ற இடத்தில் தோற்கடித்தனர். இருந்த போதிலும் ஹைதர் அலி, ஆம்பூர், மங்களூர் ஆகிய இடங்களைக் கைப்பற்றி தன் நிர்வாகத்தை அங்கு ஏற்படுத்தினார். மேலும் ஹைதர்அலி கரூர், தஞ்சாவூர், கடலூர், பாராமஹால் ஆகிய இடங்களை கைப்பற்றினர். மேலும் இவர் சென்னையை முற்றுகையிட்டார்.

இச்செயல் ஆங்கிலேயர்களுக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது. ஆங்கிலேயர்கள் கி.பி.1769–ஆம் ஆண்டு ஹைதர் அலியோடு மதராஸ் (சென்னை) அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

### விளைவுகள்

கி.பி.1769–ஆம் ஆண்டு சென்னை உடன்படிக்கையின்படி இரு நாடுகளும் தாங்கள் கைப்பற்றிய இடங்களை திரும்ப அளிக்க ஒத்துக் கொண்டன. முதலாவது ஆங்கில–மைசூர் போர் ஹைதர் அலியின் புகழினை உயர்த்தியது.



ஹைதர் அலி

### ஹைதர் அலி

ஹைதர் அலி சாதாரண ஒரு ஏழைக்குடும்பத்தில் கி.பி.1722–ஆம் ஆண்டு பிறந்தார். தன் கடின உழைப்பினால் படை வீரர் நிலையிலிருந்து உயர்ந்து இராணுவத்தின் தலைவரானார்.

மைசூரில் உள்நாட்டுப் போர் நடைபெற்ற போது அரசருக்கு உதவுவதற்காக மைசூர் அரசியலில் நுழைந்து, மன்னரை அகற்றிவிட்டு தானே அரியணை ஏறி மன்னரானார். தான் கல்வியறிவு அற்றவராக இருந்த போதிலும் நுண்ணறிவு பெற்றவராக திகழ்ந்தார். இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் சமமாக கருதினார். நீதி பிறழாது அரசாட்சி நடத்தினார்.

### இராபர்ட் கிளைவ்

கி.பி.1765–ஆம் ஆண்டு வங்காளத்தின் கவர்னராக, இராபர்ட் கிளைவ் பொறுப்பேற்றார். தனது முதலாவது ஆட்சிக் காலத்தில் பெரும் வெற்றி வீரராகவும், இரண்டாவது ஆட்சிக் காலத்தில் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார்.

### நிர்வாகச் சீர்திருத்தம்

ஆங்கிலக்கிழக்கிந்திய கம்பெனி ஊழியர்கள் எவ்விதத்திலும் இந்தியர்களிடமிருந்து அன்பளிப்பு பெறக்கூடாது எனக் கூறினார். ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்யக்கூடாது என்றார். ஊழியர்கள் திறம்பட செயல்பட மாத ஊதியத்தை உயர்த்தினார். அமைதி காலத்தில் இராணுவ அதிகாரிகளுக்கு இரட்டை ஊக்கத் தொகையை அளித்தார்.

கம்பெனி ஊழியர்கள் மற்றும் அவர்களின் விதவைகளுக்கு உதவ “கிளைவின் நிதி” ஒன்றை உருவாக்கினார். முகலாயப் பேரரசர் இரண்டாம் ஷா ஆலமிடமிருந்து வங்காளத்தின் உரிமையியல் மற்றும் குற்றவியல் உரிமைகளை பெற்ற பிறகு இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப் படுத்தினார். இதன்படி ஆங்கிலேயர்கள் அந்நிலப்பகுதியில் அனைத்து அதிகாரத்தையும் பெற்றனர். ஆனால் எந்தவித பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை. நவாப் எல்லா பொறுப் பையும் ஏற்றுக்கொண்டார். ஆனால் எந்த அதிகாரத்தையும் பெற்றிருக்கவில்லை. இரட்டை

ஆட்சியின்படி ஆங்கில அரசாங்கமோ அல்லது நவாப்போ மக்களின் நலனில் அக்கறை காட்டவில்லை, எனவே இம்முறை கி.பி.1772–ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டது. வங்காளம் ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. கர்நாடகப் போர்கள் ___________ ஆண்டுகளுக்கு இடையே நடைபெற்றது.

அ) 1736–1740 ஆ) 1740–1744 இ) 1746–1763

2. பிளாசிப் போர் ___________ ஆண்டு நடைபெற்றது

அ) 1764 ஆ) 1757 இ) 1765

3. ஆங்கிலப் பேரரசை இந்தியாவில் தோற்றுவித்தவர்___________ ஆவார்

அ) இராபர்ட் கிளைவ் ஆ) டியூப்ளே இ) மீர்ஜாபர்

4. சர் ஐயர்கூட் ___________ போரில் கவுண்–டி–லாலியை தோற்கடித்தார்.

அ) மெட்ராஸ் ஆ) செயின்ட் தாமஸ் இ) வந்தவாசி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கர்நாடகத்தின் தலைநகரம் ___________ ஆகும்.
2. ஆற்காட்டின் வீரர் என ___________ அழைக்கப்பட்டார்.
3. ___________ போர் ஆங்கிலக்கிழக்கிந்திய கம்பெனியை இந்தியாவில் உயர் அதிகார நிறுவனமாக ஏற்படுத்தியது.
4. லா போர்டொனாய்ஸ் ___________ பிரஞ்சு ஆளுநர் ஆவார்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. முதலாவது கர்நாடகப் போர் | அலகாபாத் ஒப்பந்தம் |
| 2. மூன்றாவது கர்நாடகப் போர் | கல்கத்தா அருகில் உள்ள கிராமம் |
| 3. பிளாசி | அய்–லா– சாப்பேல் |
| 4. பக்ஸார் போர் | பாரிஸ் உடன்படிக்கை |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. முதல் ஆங்கிலே–மைசூர் போர் எந்த உடன்படிக்கையின்படி முடிவடைந்தது ?
2. பிளாசிப் போருக்குப் பிறகு வங்காளத்தின் நவாப் யார் ?
3. பக்ஸார் போர் எந்த ஆண்டு நடைபெற்றது ?

## V) கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.

1. இருட்டறை துயரச் சம்பவம் என்றால் என்ன ?
2. ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வெற்றி பெற்றதற்கான மூன்று காரணங்களை கூறுக.
3. இராபர்ட் கிளைவ் அறிமுகப்படுத்திய இரட்டை ஆட்சி முறையைப் பற்றி நீ அறிவது யாது ?
4. முதலாவது ஆங்கிலேய–மைசூர் போருக்கான காரணங்கள் யாவை ?

## VI) விரிவான விடையளி.

இரண்டாவது மற்றும் முன்றாவது கர்நாடகப் போர்களுக்கான காரணங்களையும், நிகழ்வுகள் மற்றும் விளைவுகளையும் கூறுக.

அலகு IV
பாடம் 5

# இந்தியாவில் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சி (கி.பி.1773–கி.பி.1857)

## வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு (கி.பி.1772–கி.பி.1785)

கி.பி.1772–ல் வங்காள கவர்னராக வாரன் ஹேஸ்டிங்ஸ் நியமிக்கப்பட்டார். பிறகு வங்காளத்தின் தலைமை ஆளுநரானார். இவர் ஆட்சியின்போது கி.பி.1772–ல் வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால் மக்கள் பெரும் துயரத்திற்கு உள்ளானார்கள். இரட்டை ஆட்சி வங்காளத்தில் பொருளாதார நிலையை சீர்குலையச் செய்தது. விவசாயிகளும், கலைஞர்களும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆங்கில கிழக்கு இந்திய கம்பெனி அதிகாரிகள் தங்களுடைய உரிமையை தவறாக பயன்டுத்தி நிறைய சொத்து சேர்த்துக் கொண்டனர். கம்பெனியின் நிர்வாகம் சீர்குலைந்தது. இந்நிலையில் கம்பெனி ஆங்கில அரசிடம் பெரும் தொகையை கடனாகக் கேட்டது. இச்சமயத்தில், ஆங்கில அரசு, கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தில் நேரிடையாக தலையிட வேண்டிய தாயிற்று. எனவே ஆங்கில பாரளுமன்றம் கி.பி.1773ல் ஒழுங்கு முறைச் சட்டத்தை கொண்டு வந்தது. இந்த சட்டமானது இந்திய அரசியல் அமைப்பின் வளர்ச்சிக்கு முதல் படியாக அமைந்தது.

## ஒழுங்குமுறைச் சட்டத்தின் சரத்துகள்

வங்காள ஆளுநர் வங்காளத்தின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஹேஸ்டிங்ஸ் முதல் தலைமை ஆளுநர் ஆனார். தலைமை ஆளுநருக்கு உதவிபுரிய, நான்கு உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. பம்பாய் மற்றும் மெட்ராஸ் ஆளுநர்கள், வங்காள தலைமை ஆளுநருக்கு கட்டுப்பட்டவர்கள் ஆனார்கள். கி.பி.1774–ல் கல்கத்தாவில் உச்சநீதி மன்றம் அமைக்கப்பட்டது. சர் எலிஜா இம்பே முதல் தலைமை நீதிபதியாகவும் மற்றும் மூன்று நீதிபதிகளும் நியமிக்கப்பட்டனர்.

## ஒழுங்குமுறை சட்டத்தின் குறைகள்

உச்சநீதி மன்றம், தலைமை ஆளுநர் மற்றும் அவரது நிர்வாகக் குழு உறுப்பினர்களது அதிகார எல்லை இச்சட்டத்தால் வரைமுறை செய்யப்படவில்லை. தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழு உறுப்பினர்களிடையே பூசல் அடிக்கடி ஏற்பட்டது. பம்பாய், மெட்ராஸ் ஆளுநர்கள், வங்காள தலைமை ஆளுநரது ஆணைகளுக்கு கட்டுப்படவில்லை. இந்த சட்டம் தலைமை ஆளுநரது நிலையை மோசமடையச் செய்தது. இந்த சட்டத்தின் குறைகளைப் போக்குவதற்காக, கி.பி.1784–ஆம் ஆண்டு, ஆங்கில பிரதமர் இளைய பிட் என்பவர், பிட் இந்திய சட்டத்தைக் கொண்டு வந்தார்.

## பிட் இந்திய சட்டத்தின் சரத்துகள்

இங்கிலாந்து அரசின் பரிந்துறையின்படி, தலைமை ஆளுநர் நியமிக்கப்படுவார் எனக் கூறப்பட்டது. நிர்வாகக் குழு உறுப்பினர் எண்ணிக்கை, நான்கில் இருந்து முன்றாகக் குறைக்கப்பட்டது. நிர்வாக வளர்ச்சிக் காக, ஆறு பேர் கொண்ட கட்டுப்பாட்டுக் குழு உருவாக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள ஆங்கிலேய படை வீரர்களுக்கு, படைத் தளபதியாக தலைமை ஆளுநர் செயல்படுவார்

என்றும், ஆங்கில அரசின் கீழ், கம்பெனியின் நிர்வாகம் செயல்படவும் இச்சட்டம் வழிவகுத்தது.

**வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள்**
**நிர்வாகச் சீர்திருத்தம்**

இராபர்ட் கிளைவ் வங்காளத்தில் ஏற்படுத்திய இரட்டை ஆட்சி முறையை ஒழித்தார். மாகாணங்களின் நிர்வாகத்தை, ஆங்கில கிழக்கு இந்திய கம்பெனி ஏற்றுக் கொண்டது. அரசின் கருவூலம் மூர்ஷிதாபாத்தில் இருந்து கல்கத்தாவிற்கு மாற்றப்பட்டது.

**நீதித்துறை சீர்திருத்தம்**

கல்கத்தாவில் சாதர் திவானி அதாலத் (சிவில்), சாதர் நிஸாமி அதாலத் (கிரிமினல்) என்ற இரு நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும், சிவில் மற்றும் கிரிமினல் நீதி மன்றங்கள் உருவாக்கப்பட்டன. இந்து, முஸ்லீம் சட்ட தொகுப்பு உருவாக்கப் பட்டது.

**வணிகச் சீர்திருத்தங்கள்**

கம்பெனி தரமான பொருட்களை வாங்க, ஒரு வணிகக்குழு ஏற்படுத்தப்பட்டது. கம்பெனி ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டது. இந்திய வாணிகத்தை ஊக்குவிக்க வியாபாரிகளுக்கு சுங்க வரியில் 2.5% தள்ளுபடி அளித்தார். பிற சுங்கச் சாவடிகளை ஒழித்து கல்கத்தா, டாக்கா, ஹூக்ளி, பாட்னா, முர்ஷிதாபாத் ஆகிய ஐந்து இடங்களில் சுங்கச் சாவடிகளை ஏற்படுத்தினார்.

**வருவாய் சீர்திருத்தம்**

வருவாய்த்துறையினை மேம் படுத்த,கல்கத்தாவில் வருவாய்த்துறைக் கழகம் நிறுவப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆங்கில கலெக்டர் நியமிக்கப்பட்டார். நிலம் குத்தகை அடிப்படையில் அதிக தொகைக்கு ஏலம் எடுப்பவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர் அந்த நிலத்தில் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நிலவரியை பெற்று அரசுக்கு செலுத்த வேண்டும்.

**கல்விச் சீர்திருத்தம்**

வாரன் ஹேஸ்டிங்ஸ் கல்வியை மிகவும் ஆதரித்தார். இஸ்லாமிய கல்வி வளர்ச்சிக்காக, கி.பி.1781–ல் கல்கத்தாவில் மதரஸா கல்வி நிறுவனத்தை துவக்கினார்.

**ரோஹில்லா போர் (கி.பி.1774)**

ரோஹில்லர்கள் ஆப்கானிய மக்கள் ஆவார். இவர்கள் மராத்தியர்களின் தாக்குதலுக்கு ஆளாயினர். அதனால் அவர்கள் அயோத்தியின் நவாப் ஷூஜா–உத்–தௌலாவின் உதவியை நாடினார். இதற்காக 40 இலட்சம் ரூபாய் கொடுக்க ஒப்புக்கொண்டனர். கி.பி.1773–ல் மராத்தியர்கள், ரோஹல்கண்ட் மீது படையெடுத்த போது அயோத்தி நவாபின் படைகள் ரோஹில்லர்களுக்கு பக்கபலமாக இருந்தன. அதனால் மராத்தியர்கள் போரிடாமல் திரும்பி சென்றனர். ஆனால் ஒப்பந்தப்படி ஷூஜா–உத்–தௌலா, 40 இலட்சம் கேட்கவே ரோஹில்லர்கள் போர் ஏதும் நிகழாததால் அப்பணத்தை தர மறுத்தனர். உடனே அயோத்தி நவாப் ஆங்கிலேயர்களின் உதவியை நாடினார். அவ்வாறு ஆங்கிலேயர்கள் உதவினால் தான் 40 இலட்சம் அவர்களுக்கு தருவதாக ஒப்புக்கொண்டார். எனவே வாரன் ஹேஸ்டிங்டிஸ் தனது படையை அனுப்பி ரோஹில்லர்களை தோற்கடித்தார். ரோஹில்கண்ட் அயோத்தியுடன் இணைக்கப்பட்டது.

## இரண்டாவது ஆங்கில–மைசூர் போர் (கி.பி.1780–கி.பி.1784)

கி.பி.1769–ல் மதராஸ் உடன்படிக்கை ஹைதர் அலிக்கும், ஆங்கிலேயருக்கும் இடையே ஏற்பட்டது. இதன்படி ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்வது என்று முடிவாயிற்று. ஆனால் கி.பி.1771–ல் மராத்தியர்கள், மைசூர் மீது படையெடுத்தபோது ஆங்கிலேயர்கள் ஹைதர் அலிக்கு உதவ முன்வரவில்லை. மேலும் ஹைதர் அலிக்கு முக்கிய பகுதியாக விளங்கிய பிரெஞ்சுக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்த மாஹியை ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். இச்செயலை ஹைதர் அலி எதிர்த்தார். ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போர் தொடங்கினார்.

ஹைதர் அலி கி.பி.1780–ல் ஆங்கிலேயருக்கு எதிராக போர் தொடுத்தார். கி.பி.1781–ல் போர்ட்டோ நோவோ என்ற இடத்தில் ஆங்கிலேய படைத் தளபதியான சர் அயர் கூட், ஹைதர் அலியைத் தோற்கடித்தார். கி.பி.1782–ஆம் ஆண்டு ஆரணி என்ற இடத்திலும் மீண்டும் ஹைதர்அலி தோற்கடிக்கப்பட்டார். இதற்கிடையே ஹைதர் அலி புற்று நோயால் இறந்தார். எனவே அவரது மகன் திப்பு சுல்தான் போரைத் தொடர்ந்தார். போரை விரும்பாத திப்பு சுல்தான் கி.பி.1784–ல் மங்களூர் உடன்படிக்கையின்படி போரினை முடிவுக்கு கொண்டு வந்தார். அதன்படி இரு சாராரும் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை திரும்ப அளிக்க ஒப்புக் கொண்டனர்.

## முதலாம் ஆங்கில–மராத்தியப் போர் கி.பி.1775–கி.பி.1782

வாரன்ஹேஸ்டிங்ஸ் மராத்தியர்களுக்கு எதிராக கி.பி.1775–ல் போர் தொடுத்தார். கி.பி.1782–ல் சால்பை உடன்படிக்கை மூலம் போர் முடிவடைந்தது. இதன்படி மாதவராவ் பீஷ்வாவாக பொறுப்பேற்றார்.

## வாரன்ஹேஸ்டிங்ஸின் குற்ற விசாரணை

முதலாவது ஆங்கிலேய மராத்திய போருக்குப் பின் ஆங்கிலேயர்களுக்கு பெரும் நிதி நெருக்கடி ஏற்பட்டது. எனவே வாரன் ஹேஸ்டிங்ஸ் பனாரசை ஆண்ட மன்னர் செயித்சிங்கிடம் அதிக வரிப்பணம் கோரினார். அம்மன்னர் பணம் கொடுக்க மறுத்தார். எனவே வாரன்ஹேஸ்டிங்ஸ் அவரை பதவியிலிருந்து நீக்கினார். மேலும் அயோத்தி பேகங்களின் செல்வத்தினையும் வாரன்ஹேஸ்டிங்ஸ் கைப்பற்றினார். பொய் கையெழுத்துப் போட்ட விவகாரத்தில் நந்தகுமார் கொலை செய்யப்பட்டார். இச்செயல்களுக்காக வாரன் ஹேஸ்டிங்ஸ் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்டார். குற்ற விசாரணையின் முடிவில் அவர் குற்றமற்றவர் என கருதி பாராளுமன்றம் அவரை விடுவித்தது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் வங்காள கவர்னராக நியமிக்கப்பட்ட ஆண்டு____________ஆகும்.

   அ) 1772 ஆ) 1773 இ) 1774

2. பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் தலைமை நீதிபதியாக இருந்தவர் ____________ ஆவார்.

   அ) சர் தாமஸ் ஆ) சர் எலிஜா இம்பே இ) சர் மோர்ஸ்

3. ஒழுங்கு முறைச் சட்டத்தின்படி உச்ச நீதிமன்றம் அமைக்கப்பட்ட இடம் ____________ ஆகும்.

   அ) கல்கத்தா ஆ) மதராஸ் இ) பம்பாய்

4. ஹைதர் அலியின் மகன் ____________ ஆவார்.

   அ) தோஸ்து அலி ஆ) மீர் காசிம் இ) திப்பு சுல்தான்

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. கி.பி.1770–ஆம் ஆண்டு இந்தியாவில் கடுமையான பஞ்சம் தாக்கிய பகுதி ____________ ஆகும்.
2. ஆங்கில பிரதமர் ____________ என்பவரால் கி.பி.1784–ஆம் ஆண்டு பிட் இந்தியச் சட்டம் கொண்டுவரப்பட்டது.
3. வாரன் ஹேஸ்டிங்ஸ்சால் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இரட்டை ஆட்சியை நிறுவியவர் ____________.
4. இரண்டாம் ஆங்கில–மைசூர் போர்____________உடன்படிக்கையின்படி முடிவுக்கு வந்தது.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அயோத்தி நவாப் | சிவில் நீதிமன்றம் |
| 2. ஹைதர் அலி | பனாரஸ் மன்னர் |
| 3. சதார் திவானி அதாலத் | மைசூர் அரசர் |
| 4. இராஜா செயித் சிங் | ஷூஜா–உத்–தௌலா |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. கி.பி.1773–ல் ஆங்கிலேய பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் பெயரினை கூறுக.
2. ஒழுங்கு முறைச் சட்டத்தின் குறைகளைப் போக்கிய சட்டம் எது ?
3. தரமான பொருட்களை வாங்க, ஆங்கிலேயகிழக்கிந்திய கம்பெனி எவ்வமைப்பினை ஏற்படுத்தியது ?

## V) குறுகிய விடையளி.

1. ஒழுங்குமுறைச் சட்டத்தின் குறைகள் யாவை ?
2. கி.பி.1780–ஆம் ஆண்டு ஹைதர் அலி ஆங்கிலேயர் மீது ஏன் படையெடுத்தார் ?
3. வாரன் ஹேஸ்டிங்ஸ் மீதான குற்ற விசாரணை பற்றி கூறு.
4. “ரோஹில்லாப் போர்” குறிப்பு வரைக.

## VI) விரிவான விடையளி.

1. வாரன் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்களை விவரி ?
2. ஒழுங்குமுறை சட்டம், பிட் இந்திய சட்டம் பற்றி ஒரு கட்டுரை வரைக.

# காரன்வாலிஸ் பிரபு (கி.பி. 1786–கி.பி.1793)

காரன்வாலிஸ் பிரபு கி.பி.1786–ஆம் ஆண்டு இந்தியாவின் தலைமை ஆளுநராக நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் இருந்த சுதேசி சாம்ராஜ்யத்தில் தலையிடாக் கொள்கையை பின்பற்ற முயன்றார்.

இவருடைய சீர்திருத்தங்களில் குறிப்பிடத் தகுந்தது வங்காளத்தில் அறிமுகப்படுத்திய நிலையான நிலவரித் திட்டமாகும். வாரன்ஹேஸ்டிங்ஸ் காலத்தில் நிலம் அதிக வரி செலுத்துபவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால் இத்திட்டம் வெற்றிபெறவில்லை. எனவே காரன்வாலிஸ் நிலையான நிலவரித் திட்டத்தை கி.பி.1793–ஆம் ஆண்டு வங்காளத்திலும், பீகாரிலும் அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின்படி ஜமின்தார்கள் 10 ஆண்டுகளுக்கு நிலத்தின் சொந்தக்காரர்கள் ஆனார்கள். விவசாயிகள் குத்தகைக்காரர்களானார்கள். ஒவ்வொரு ஆண்டும் ஜமின்தார்கள் குறிப்பிட்ட தொகையை ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு நிலவரியாகக் கட்டவேண்டும். அப்படி கட்டத் தவறினால் நிலம் அந்த ஜமின்தாரரிடமிருந்து எடுத்து வேறு ஜமின்தாரரிடம் வழங்கப்படும்.

## நன்மைகள்

இத்திட்டம் ஜமின்தாரர்களுக்கு பெரும் நன்மையை அளித்தது. ஜமின்தாரர்கள் நிலத்தின் சொந்தக்காரர்கள் ஆனார்கள். இதனால் ஆங்கில ஆட்சிக்கு விசுவாசிகளானார்கள். ஜமின்தாரர்கள் அதிக நிலங்களை விவசாயத்திற்கு பயன்படும்படியாக கொண்டு வந்தனர். ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு நிலையான வருமானம் ஆண்டுதோறும் கிடைத்தது. நிலையான வருமானம் கிடைத்ததால் சீரான நிர்வாகம் நடைபெற்றது. ஆண்டுதோறும் நடைபெறுகின்ற வரி நிர்ணய முறையினால் வரக்கூடிய தீமைகள் அகற்றப்பட்டன.

## தீமைகள்

ஜமின்தார்கள் அதிக இலாபம் அடைந்தனர். விவசாயிகள் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள் ஜமின்தார்களின் கருணைப் பார்வையில் அவர்கள் வாழவேண்டியவர்களானார்கள். ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையை நிலவரியாக பெற்றதனால் அதிகரித்து வருகின்ற அரசின் செலவினை கட்டுப்படுத்த முடியவில்லை. அரசாங்கம் மக்களோடு கொண்டிருந்த நேரடித் தொடர்பை இழந்தது.

## நிர்வாக சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் பிரபு இந்தியாவில் குடிமைப் பணியினர் மூலம் ஆங்கிலேயர்களுக்கு சொந்தமான நிலப்பகுதிகளை ஆட்சி செய்யும் முறையினை அறிமுகப்படுத்தினார். அலுவலர்களின் ஊதியத்தை உயர்த்தி தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கினார். கம்பெனி ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்வதை தடைசெய்தார். எல்லா உயர்பதவிகளும் ஆங்கிலேயர் களுக்கே ஒதுக்கப்பட்டது. இந்தியர்கள் துணை நிலை அலுவலர்கள் பதவி களுக்கு மட்டுமே தேர்வு செய்யப் பட்டனர்.

### காவல் துறை சீர்திருத்தம்

காரன்வாலிஸ் இந்தியாவில் நிலையான காவல்துறையை உருவாக்கினார். கி.பி.1791–ஆம் ஆண்டு கல்கத்தாவில் காவல்துறை ஆணையர் நியமனம் உருவாக்கப்பட்டது. மாவட்டங்கள் பல்வேறு தானாக்களாக பிரிக்கப்பட்டது. அவைகள் தரோகா என்ற அதிகாரியினால் நிர்வகிக்கப்பட்டன. காவல் துறையில்கூட இந்தியர்கள் உயர்பதவியில் நியமிக்கப்பட வில்லை.

### நீதித்துறை சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் பிரபு நீதித்துறையில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்தார். மாவட்ட ஆட்சியர், நீதிப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். வருவாய்த்துறை பொறுப்பு மட்டுமே அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொது மற்றும் கிரிமினல் நீதிமன்றங்கள் மாவட்டம் தோறும் உருவாக்கப்பட்டன. நான்கு மாகாண நீதி மன்றங்கள் முறையே டாக்கா, கல்கத்தா, முர்ஷிதாபாத் மற்றும் பாட்னாவில் ஏற்படுத்தப்பட்டன. நீதிபதிகளிடையே கையூட்டினை அகற்ற மாத சம்பளத்தினை அதிகப்படுத்தினார். நீதிமன்றங்களுக்கு கட்டவேண்டிய கட்டணங்களை ரத்து செய்தார். கி.பி.1793–ஆம் ஆண்டு "காரன் வாலிஸ் சட்டத் தொகுப்பினை" சர் ஜார்ஜ் பார்லோ என்பவர் தொகுத்து வெளியிட்டார்.

### வருவாய் சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் வருவாய்துறையை திருத்தி அமைத்தார். கி.பி.1787–ல் வங்காளம் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு ஆட்சியரின்கீழ் நிர்வகிக்கப்பட்டது. காரன்வாலிஸ் வருவாய்த்துறையை உருவாக்கி, ஆட்சியர்களின் செயல்பாட்டினை மேற்பார்வையிடச் செய்தார்.

### வணிக சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் ஆங்கிலேயர்கள் இந்திய வியாபாரிகளோடு நேரிடையாக பொருள் வாங்கும் அல்லது விற்கும் முறையினை மீண்டும் அறிமுகப்படுத்தினார். இதன் மூலம் ஆங்கிலக் கிழக்கிந்திய நிறுவனத்தின் வியாபாரத்தினை பெருக்கினார்.

### வெளிநாட்டுக் கொள்கை

### மூன்றாவது ஆங்கில–மைசூர் போர் (கி.பி.1790–கி.பி.1792)

இரண்டாவது ஆங்கிலேய மைசூர் போரின் முடிவில் திப்பு சுல்தானும், ஆங்கிலேயர்களும் தங்களுடைய அரசியல் ஆதிக்கத்தை தக்காணத்தில் நிலை நிறுத்த முயன்றனர். திப்பு சுல்தான் தன்னை பலப்படுத்திக் கொண்டு பிரான்சு மற்றும் துருக்கியின் உதவியோடு ஆங்கிலேயர்களை இந்தியாவிலிருந்து வெளியேற்ற எண்ணினார். இதனை அறிந்த காரன்வாலிஸ் ஹைதராபாத் நிஜாம் மற்றும் மராத்தியரின் துணையோடு திப்புவை எதிர்க்க திட்டமிட்டார். இந்நிலையில் திப்பு சுல்தான் ஆங்கிலேயரின் நட்பு நாடான திருவாங்கூரை தாக்கினார். எனவே, கி.பி.1790–ஆம் ஆண்டு காரன்வாலிஸ்



திப்பு சுல்தான்

திப்பு சுல்தானுக்கு எதிராகப் போர் தொடுத்தார். ஆங்கிலப்படை பெங்களூரைக் கைப்பற்றி சீரங்கப்பட்டினத்திற்கு அருகே திப்பு சுல்தானை தோற்கடித்தது.

கி.பி.1792–ஆம் ஆண்டு கையொப்பமான "சீரங்கப்பட்டின அமைதி ஒப்பந்தம்" மூன்றாவது மைசூர் போரினை முடிவுக்கு கொண்டு வந்தது.

### திப்பு சுல்தான்

திப்பு சுல்தான், ஹைதர் அலியின் மகனாக கி.பி.1753–ஆம் ஆண்டு மைசூர் அருகே பிறந்தார். தந்தையை போன்ற சிறந்த நிர்வாகியாகவும், போர் வீரராகவும் விளங்கினார். ஆங்கிலேயர்கள் இந்தியாவில் ஆட்சி செய்வதை கடுமையாக எதிர்த்தார். நாட்டினை பாதுகாக்க வலிமை மிகுந்த கோட்டைகளை உருவாக்கினார். நீலகிரியிலுள்ள தூர்க் கோட்டை அவரின் புகழ் பெற்ற கோட்டை ஆகும். திப்பு சுல்தான் "மைசூரின் புலி" எனப் பெருமையோடு அழைக்கப்படுகிறார். புலி திப்புவின் அன்பிற்குரிய மிருகமாகும். அவரின் அரியணையிலும், இராணுவ சீருடையிலும் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. தந்தையைப் போன்று இவரும் இறந்தபின் சீரங்கப்பட்டினத்தில் அடக்கம் செய்யப்பட்டார்.

### வெல்லெஸ்லி பிரபு (கி.பி.1796–கி.பி.1805)

காரன்வாலிஸ் பிரபுவைத் தொடர்ந்து சர் ஜான்ஷோர் வங்காளத்தின் கவர்னர் ஜெனரலாக பதவியேற்று தலையீடாக் கொள்கையைப் பின்பற்றி ஆட்சி செய்தார். இவரைத் தொடர்ந்து வெல்லெஸ்லி பிரபு கவர்னர் ஜெனரலாக பதவியேற்றார். இவர் இந்தியாவில் ஆங்கிலப் பேரரசை உருவாக்க, பேரரசுக் கொள்கையை பின்பற்றினார். துணைப்படைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி ஆங்கிலப் பேரரசை நிலை பெறச் செய்தார்.


### துணைப் படைத்திட்டம்

வெல்லெஸ்லி துணைப்படைத் திட்டத்தின் முலம் இந்தியாவில் ஆட்சி செய்து வந்த சுதேச சாம்ராஜ்யங்களை ஆங்கில அரசாட்சியின் கீழ் கொண்டுவர எண்ணினார்.

### முக்கிய கூறுகள்

இந்திய சுதேசி மன்னர்கள் தங்களின் பாதுகாப்பிற்கு ஓர் ஆங்கில படையை வைத்துக் கொள்ள வேண்டும். துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக் கொள்கின்ற இந்திய அரசுகள் ஆங்கிலப் படையின் நிர்வாகச் செலவிற்காக பணம் அல்லது நிலத்தினை ஆங்கில அரசாங்கத்திற்கு கொடுத்திட வேண்டும் எனக் கூறப்பட்டது.துணைப் படைத்திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் இந்திய அரசுகள் ஆங்கிலக் கிழக் கிந்திய கம்பெனியின் அனுமதியின்றி எந்த ஒரு நாட்டோடும் போரிடவோ அல்லது அமைதி ஒப்பந்தத்திலோ கையொப்பமிடக் கூடாது எனவும் கூறப்பட்டது. துணைபடைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் இந்திய அரசுகள் ஆங்கிலேயர்களைத் தவிர மற்ற ஐரோப்பியர்களை பணியில் வைத்துக் கொள்ளக்கூடாது எனக் கூறப்பட்டது. துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் இந்திய அரசுகள் ஆங்கிலப் பிரதிநிதி ஒருவரை நிலையாக தனது தலைநகரில் வைத்துக்கொள்ள வேண்டும் எனக் கூறப்பட்டது. துணை படைத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் இந்திய அரசுகள் எந்த ஒரு பிரச்சனையிலும் ஆங்கில அரசாங்கத்தின் இறுதி முடிவினை

## வெல்லெஸ்லி பிரபுவின் கீழ் ஆங்கிலப் பேரரசு



ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளும் இந்திய அரசுகள் பாதுகாப்பிற்கு ஆங்கில அரசாங்கம் உத்திரவாதம் அளித்தது.

### நன்மைகள்

இந்திய சுதேசி அரசுகளின் பணப்பயன்பாட்டின் அடிப்படையில் ஆங்கில அரசு தனது பெரும் படையினை பராமரித்தது. ஆங்கில அரசின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டதால் அந்நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கையை இங்கிலாந்து கட்டுப்படுத்தியது. பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கம் இந்தியாவிலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட்டது. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு விரிவுபடுத்தப்பட்டது.

### தீமைகள்

சுதேசி மன்னர்கள் தங்களுடைய அதிகாரத்தையும், கவுரவத்தையும் இழந்தனர். சுதேசி மன்னர்களும், ஆங்கிலேயர்களும் மக்களின் நலனை புறக்கணித்தனர்.

### துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள்

வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டத்தை ஏற்றுக்கொண்ட முதல் இந்திய மன்னர் ஹைதராபாத் நிஜாம் ஆவார். இவர் பெல்லாரி, கடப்பா, அனந்தபூர் மற்றும் கர்னூல் ஆகிய நிலப்பகுதிகளை ஆங்கிலேயருக்கு அளித்தார். அயோத்தியை ஆண்ட நவாப்பை வெல்லெஸ்லி கட்டாயப்படுத்தி துணைப்படைத் திட்டத்தை ஏற்கச் செய்தார். ரோஹில்கண்ட், கோரக்பூர் மற்றும் கங்கை யமுனை நதி களுக்கு இடையே உள்ள நிலப்பகுதிகளை ஆங்கில அரசிடம் அளித்தார். பேஷ்வா இரண்டாவது பாஜிராவ் துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக் கொண்டார். பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டபோதிலும் மைசூரை ஆண்ட திப்புசுல்தான் துணைப் படைத்திட்டத்தை ஏற்க மறுத்தார்.

### நான்காவது ஆங்கில–மைசூர் போர் (கி.பி.1799)

துணைப்படைத்திட்டத்தை திப்பு சுல்தான் ஏற்க மறுத்து, ஆங்கிலேயர்களை பழி வாங்க எண்ணினார். மேலும் தான் இழந்த நிலப் பகுதிகளை திரும்ப பெறவும் எண்ணினார்.

திப்பு சுல்தான் பிரான்சு, காபூல், கான்ஸ்டான்டிநோபிள் அரேபியா ஆகிய நாடுகளின் உதவி பெற்று, ஆங்கிலேயர்களை எதிர்க்க அந்நாடுகளுக்கு தூதுவர்களை அனுப்பினார். எனவே போர் தவிர்க்க முடியாத ஒன்றாகியது.

கி.பி.1799–ஆம் ஆண்டு மாளவள்ளி போரில் திப்பு சுல்தான் தோற்கடிக்கப்பட்டார். சீரங்கப்பட்டினக் கோட்டையை திப்பு காக்க முயன்றபோது மே–4–ம் நாள் கி.பி.1799–ஆம் ஆண்டு கொல்லப்பட்டார், இவரின் மறைவோடு போர் முடிந்தது.

### விளைவுகள்

இப்போரின் முடிவில் ஆங்கிலேயர்கள் சீரங்கப்பட்டினம், கோயமுத்தூர், கனரா போன்ற நிலப்பகுதிகளை இணைத்துக் கொண்டனர். மைசூர் அரசு பழைய இந்து வம்ச மன்னர் குடும்பத்தில் பிறந்த கிருஷ்ணா என்பவரிடம் திரும்ப அளிக்கப்பட்டது. திப்புவின் குடும்பத்தினர் வேலூருக்கு கைதிகளாக அனுப்பப்பட்டனர். தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்கள் வலிமை வாய்ந்த சக்தியாக உருவானார்கள்.

**இரண்டாவது ஆங்கிலேய மராத்தியப் போர் (கி.பி.1803)**

இரண்டாம் பாஜிராவ் ஆங்கிலேயரின் துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு பஸ்ஸின் உடன்படிக்கையில் கையொப்பமிட்டார். ஆனால் மராத்திய தேசத் தலைவர்கள் சிந்தியாவும், பான்ஸ்லேயும் இந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்தனர். ஆங்கிலேயர்களை எதிர்க்க முனைந்தனர். இது இரண்டாம் ஆங்கிலேய–மராத்திய போருக்கு முக்கிய காரணமாகும். தளபதி ஆர்தர் வெல்லெஸ்லி கி.பி.1803–ல் அசே மற்றும் ஆரிகான் ஆகிய இடங்களில் மராத்தியர்களை தோற்கடித்தார்.

**விளைவுகள்**

சிறந்த தளபதியான வெல்லெஸ்லி வணிக நிறுவனமாக விளங்கிய ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தை இந்தியாவில் வலிமை மிகுந்த ஓர் அரசியல் சக்தியாக மாற்றியமைத்தார்.

## பயிற்சி

**I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.**

1. காரன்வாலிஸ் பிரபு __________ ஆம் ஆண்டு வங்காளத்தின் கவர்னர்–ஜெனரல் ஆனார்.

   அ) 1786 ஆ) 1787 இ) 1788

2. மூன்றாவது ஆங்கிலேய–மைசூர் போரின் போது திப்பு சுல்தான் தென்னிந்தியாவிலிருந்த __________ நாட்டைச் சார்ந்த இந்து அரசரைத் தாக்கினார்.

   அ) அயோத்தி ஆ) திருவாங்கூர் இ) கர்நாடகம்

3. இந்திய பொது குடிமையியல் பணியின் தந்தை என __________ என்பவரை அழைக்கப்படுகிறார்.

   அ) ஜான்ஷோர் ஆ) காரன்வாலிஸ் இ) வெல்லெஸ்லி

4. நான்காம் ஆங்கிலேய–மைசூர் போர் __________ ஆம் ஆண்டு நடைபெற்றது.

   அ) 1779 ஆ) 1789 இ) 1799

**II) பொருத்துக.**

| | |
|---|---|
| 1. நிலையான நிலவரித்திட்டம் | வெல்லெஸ்லி பிரபு |
| 2. துணைபடைத்திட்டம் | சீரங்கப்பட்டின உடன்படிக்கை |
| 3. சார் ஜான் ஷோர் | காரன்வாலிஸ் பிரபு |
| 4. மூன்றாம் ஆங்கிலேய–மைசூர் போர் | தலையிடாக் கொள்கை |

## III) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நிலையான நிலவரித்திட்டம் __________ ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
2. நிலையான காவலர் துறையை உருவாக்கியவர் __________ ஆவார்.
3. காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பைத் தொகுத்தவர் __________ ஆவார்.
4. வெல்லெஸ்லி பிரபு __________ ஆண்டு தலைமை ஆளுநர் ஆனார்.

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. நிலையான நிலவரித்திட்டத்தினால் அதிக பாதிப்பிற்குள்ளானவர்கள் யார் ?
2. வெல்லெஸ்லி பின்பற்றிய கொள்கை யாது ?
3. துணைப்படைத்திட்டத்தை ஏற்றுக் கொண்ட முதல் இந்திய மன்னர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. காரன்வாலிஸ் பிரபு நீதித்துறையை எவ்வாறு முறைபடுத்தினார் ?
2. நான்காம் ஆங்கிலேய–மைசூர் போரின் விளைவுகள் யாவை ?
3. காரன்வாலிஸ் 1791–ஆம் ஆண்டு மைசூருக்கு எதிராக ஏன் போர் தொடுத்தார் ?

## VI) விரிவான விடையளி.

1. காரன்வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களை விவரி.
2. நிலையான நிலவரித்திட்டம் பற்றி குறிப்பு வரைக.
3. வெல்லெஸ்லி பிரபுவின் துணைப் படைத்திட்டத்தை விளக்கி அதன் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரி.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. காரன்வாலிஸ் பிரபு மற்றும் வெல்லெஸ்லி பிரபுவின் சிர்திருத்தங்கள் பற்றி அட்டவணை தயார் செய்க.
2. இந்திய வரைபடத்தில் வெல்லெஸ்லி பிரபு ஆட்சியின் போது இருந்த ஆங்கில பேரரசின் எல்லையினை குறிப்பிடுக.

# மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் (கி.பி.1813–கி.பி.1823)

வெல்லெஸ்லி பிரபுவைத் தொடர்ந்து ஹேஸ்டிங்ஸ் பிரபு என்றழைக்கப்பட்ட மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் வங்காளத்தின் தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். வெல்லெஸ்லியின் பணியினை இவர் நிறைவு செய்தார். இவர் காலத்தில் நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கர் இனத்தவர், பிண்டாரி இனத்தவர்கள் மற்றும் மராத்திய தலைவர்கள் ஆங்கிலப் பேரரசை அகற்ற எண்ணினார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அனைத்து சவால்களையும் ஹேஸ்டிங்ஸ் திறமையுடன் சமாளித்து ஆங்கில அரசாட்சியை இந்தியாவில் நிலைபெறச் செய்தார்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் 1813–ஆம் ஆண்டின் பட்டயச் சட்டம் ஆங்கில அரசால் நிறைவேற்றப்பட்டது.

## 1813–ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் வியாபார உரிமம் 20 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இந்தியாவுடனான வாணிப உறவு ஆங்கிலேய வியாபாரிகளுக்கு திறந்து விடப்பட்டது. கிழக்கிந்திய நிறுவனத்தின் வாணிக தனி உரிமை இரத்தானது. இந்தியர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆண்டு தோறும் ரூபாய் ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டது. இந்தியாவில் வாழும் ஐரோப்பியர் சமய நலன் காக்க கிறித்துவ பேராயர்கள் நியமிக்கப்பட்டனர். ஆங்கில நாட்டு வியாபாரிகளுக்கும், மத போதகர்களும் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதியோடு இந்தியாவில் வசிக்க அனுமதிக்கப்பட்டனர்.

## பட்டயச் சட்டத்தின் முக்கியத்துவம்

ஆங்கில கிழக்கிந்திய நிறுவனத்தின் வியாபார தனி உரிமை முடிவுக்கு வந்தது. கிறித்துவ சமய போதகர்கள், தங்கள் சமயத்தைப் பரப்புவதற்கு அனுமதி பெற்றனர்.

## கூர்க்கர்களுடன் போர் (கி.பி.1814–கி.பி.1816)

நேபாளத்தைச் சார்ந்த கூர்க்கர் இனத்தவர்கள் ஆங்கிலேயர்களுக்கு பெரும் சவாலாக விளங்கினர்கள். இவர்கள் 1814–இல் ஷெரோஜ்மற்றும் பத்வால் பகுதிகளை கைப்பற்றினார். ஆங்கிலேயர் இதனை சவாலாக ஏற்றுக்கொண்டு கூர்க்கர் இனத்தலைவர் அமர்சிங்கைத் தோற்கடித்தனர். கி.பி.1816–ஆம் ஆண்டு கூர்க்கர்கள் ஆங்கிலேயர்களோடு சிகௌலி அமைதி உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

## பிண்டாரிகளுடன் போர் (கி.பி.1816–கி.பி.1818)

பிண்டாரிகள் மத்திய இந்தியாவில் வாழ்ந்த கொள்ளைக் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அமிர்கான், வாசில் முகமது, கரிம்கான் மற்றும் சேட்டு போன்றவர்கள் பிண்டாரிகளின் தலைவர்கள் ஆவார்கள். தலைமை ஆளுநர் ஹேஸ்டிங்ஸ் ஒரு பெரும் ஆங்கிலப் படையை பிண்டாரிகளுக்கு எதிராக அனுப்பி அவர்களைத் தோற்கடித்தார். இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பிண்டாரிகளின் கொடுஞ் செயலை அழித்து மத்திய இந்தியாவில் வாழும் மக்களைக் காப்பாற்றினார்.

## நான்காம் ஆங்கிலேய–மராத்தியப் போர் (கி.பி.1817–கி.பி.1818)

ஆங்கிலேயர்களின் அதிகார வளர்ச்சி மராத்தியர்களுக்கு பொறாமையாக அமைந்தது. எனவே பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் மராத்திய தளபதிகளை ஒன்றிணைத்து ஓர் அரசியல் கூட்டமைப்பை ஆங்கிலேயர்களுக்கு எதிராக அமைத்தார். பீஷ்வா இரண்டாம் பாஜிராவ் கி.பி.1817–ஆம் ஆண்டின் இறுதியில் பூனாவிலிருந்த ஆங்கிலப் பிரதிநிதியைக் கொலை செய்தார். இது நான்காவது ஆங்கிலேய மராத்திய போருக்கு வழி வகுத்தது. இறுதியில் ஆங்கிலேயர்கள் முழு வெற்றியைப் பெற்றனர்.

## முடிவு

இப்போருக்குபின் பீஷ்வா பதவி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாஜிராவிற்கு ஆண்டிற்கு ரூபாய் 8 லட்சம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. மராத்திய நிலப் பகுதியில் சதாரா என்ற சிற்றரசை உருவாக்கி சத்ரபதி சிவாஜியின் வாரிசான பிரதாப் சிங்கை அரசராக ஆங்கில அரசு பிரகடனப் படுத்தியது. வலிமை மிகுந்த மராத்தியப் பேரரசு தனது அதிகாரத்தை இழந்தது. ஆங்கில அரசு இந்தியாவில் தனது வலிமை மிகுந்த பேரரசினை உருவாக்கியது.

## ஹேஸ்டிங்ஸ் பிரபுவின் சீர்திருத்தங்கள்

ஹேஸ்டிங்ஸ் கி.பி. 1822–ஆம் ஆண்டு வங்காள குத்தகைச் சட்டத்தை நிறைவேற்றி விவசாயிகளின் நலனை பாதுகாத்தார். இந்திய மக்களின் ஆங்கில கல்வி வளர்ச்சிக்காக கி.பி.1817–ஆம் ஆண்டு கல்கத்தாவில் ஒரு கல்லூரியை நிறுவினார். வட்டார மொழி பத்திரிக்கை தடை சட்டத்தை நீக்கி, "சமாச்சார் பத்திரிக்கை" என்ற செய்தித்தாள் வெளிவர காரணமாக இருந்தார். இந்தியர்கள் நிர்வாகத்தில் உயர் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

இவரின் ஆட்சிக்காலத்தில் சென்னை மாகாணத்தில் "இராயத்து வாரி" முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் விவசாயிகள் நிலவரியை முறையாக அரசாங்கத்திற்கு செலுத்தினால் அவர்கள் நிலத்தின் சொந்தக்காரர்களாகக் கருதப்பட்டனர்.

இவ்வாறு ஹேஸ்டிங்ஸ் பிரபு மக்கள் நலனில் அக்கறை காட்டி பல சீர் திருத்தங்களை நிறைவேற்றி நல்லாட்சி நடத்தினார்.

## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ___________ பிரபு துவக்கிய பணியை ஹேஸ்டிங்ஸ் முடித்து வைத்தார்.

   அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) வெல்லெஸ்லி இ) முதலாம் மிண்டோ

2. பட்டயச்சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ___________.

   அ) 1813 ஆ) 1814 இ) 1815

3. நான்காம் ஆங்கிலேய–மராத்தியர் போர் ____________ ஆண்டு நடைபெற்றது.

அ) 1817 ஆ) 1819 இ) 1870

4. ஹேஸ்டிங்ஸ் பிரபு ____________ முறையை வருவாய்த்துறையில் அறிமுகப்படுத்தினார்.

அ) மகல்வாரி ஆ) இராயத்துவாரி இ) நிலையான நிலவரி திட்டம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வங்காள குத்தகைச் சட்டத்தைக் கொண்ட வந்தவர் ____________ ஆவார்.
2. ஆங்கிலேய–கூர்க்கர் போரினை முடிவுக்கு கொண்டு வந்த அமைதி ஒப்பந்தம் ____________ஆகும்.
3. 1813–ஆம் ஆண்டு பட்டயச்சட்டம் சமய போதகர்களை ____________சமயத்தை இந்தியாவில் பரப்ப அனுமதித்தது.
4. கூர்க்கர் இனத்தவர் ____________ நிலப்பகுதியில் வாழ்ந்தவர்கள்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அமர்சிங் | பிண்டாரிகளின் தலைவர் |
| 2. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் | நேபாளம் |
| 3. அமிர்கான் | கூர்க்கர் தலைவர் |
| 4. காத்மாண்டு | தலைமை ஆளுநர் |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. சதாரா அரசு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது ?
2. ஹேஸ்டிங்ஸ் பிரபு காலத்தில் வெளி வந்த வட்டார மொழி செய்தித்தாளின் பெயரென்ன ?
3. எந்த சட்டம் ஆங்கில கிருத்துவ போதகர்களை இந்தியாவில் குடியேர அனுமதித்தது ?

## V) குறுகிய விடையளி.

1. கூர்க்கர் போருக்கான காரணங்கள் யாவை ?
2. நான்காம் ஆங்கிலேய–மராத்தியப் போரின் விளைவுகள் யாவை ?
3. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸின் சீர்திருத்தங்கள் பற்றி குறிப்பு வரைக.

## VI) விரிவான விடையளி.

1. 1813–ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் பற்றி குறிப்பு தருக.
2. மார்குவிஸ் ஹேஸ்டிங்ஸ் நடத்திய போர்கள் பற்றி விவரி

# வில்லியம் பெண்டிங் பிரபு (கி.பி.1828–கி.பி.1835)

ஹேஸ்டிங்ஸ் பிரபுவிற்கு பிறகு ஆர்ம்ஹர்ஸ்ட் பிரபு தலைமை ஆளுநராகப் பொறுப்பேற்றார். இவருடைய காலத்தில் பர்மியர்கள் அசாமைக் கைப்பற்ற முயற்சித்தனர். ஆகையால் ஆர்ம்ஹஸ்ட் பிரபு கி.பி.1824–ஆம் ஆண்டில் பர்மியர்கள் மீது போர் தொடுத்தார். இது முதலாம் பர்மியப்போர்என்று அழைக்கப்படுகிறது. இப்போரில் ஆங்கிலேயர்கள் பர்மியர்களை வென்றனர். இப்போர் கி.பி.1826–ஆம் ஆண்டு யாண்டபூ உடன்படிக்கையின்படி முடிவடைந்தது. ஆங்கிலேயர்கள் அரக்கான் மற்றும் டெனாசரிம் பகுதிகளை கைப்பற்றினார்.

இவருக்குப் பிறகு வில்லியம் பெண்டிங் பிரபு பொறுப்பேற்றார். இவர் இந்திய சுதேச அரசர்களிடம் தலையிடாக் கொள்கையை பின்பற்றினார். இவர் பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்களைப் புகுத்தினார். எனவே இந்திய கவர்னர் ஜெனரல்களில் தலைசிறந்தவராக கருதப்படுகிறார். இவருடைய சீர்திருத்தங்கள் பின்வருமாறு.

## நிதித்துறை சீர்திருத்தங்கள்

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் நிதி நிலைமையை மேம்படுத்த குடிமை ஊழியர்களின் ஊதியத்தை குறைத்தார். குறைந்த ஊதியத்தில் இந்தியர்களை பதவியில் அமர்த்தினார். அபினி வியாபாரத்தை முறைப்படுத்தி கம்பெனியின் வருவாயைப் பெருக்கினார். இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த பாட்டா (அ) ஊதியத்தைக் குறைத்தார்.

## நீதித்துறை சீர்திருத்தங்கள்

மாநில மேல்முறையீட்டு நீதிமன்றங்களை கலைத்தார். சிவில் வழக்குகளுக்காக சாதர் திவானி அதாலத் மற்றும் கிரிமினல் (குற்றவியல்) வழக்குகளுக்காக சாதர் நிஜாமத்–அதாலத் என்ற மேல் முறையீட்டு நீதிமன்றங்களை அலகாபாத்தில் நிறுவினார்.

## நிர்வாக சீர்திருத்தங்கள்

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாஜிஸ்ட்ரேட் (Magistrates) பதவிகளை ஒன்றிணைத்தார். இராணுவத்தின் தலைமை பொறுப்பை இவரே ஏற்றுக்கொண்டு பல சீர் திருத்தங்களைப் புகுத்தினார். இந்திய நீதிமன்றங்களில் பயன்பட்டு வந்த பாரசீக மொழிக்கு பதிலாக வட்டார மொழிகளைப் புகுத்தினார். தலைமை ஆளுநரின் நிர்வாகக் குழுவில் புதியதாக சட்ட நிபுணர் ஒருவரை நியமனம்செய்தார். அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட முதல் சட்ட உறுப்பினர் மெக்காலே பிரபு ஆவார்.

## சமூக சீர்திருத்தம்

வில்லியம் பெண்டிங் பிரபிவிற்கு பெரும் புகழைத் தேடித்தந்தது அவருடைய சமூக சீர்திருத்தங்கள் ஆகும்.

## சதி ஒழிப்பு

இந்திய சமுதாயத்தில் பல்வேறு தீமைகள் மலிந்து கிடந்தன. அவற்றுள் மிக கொடுமையானது 'சதி' என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கமாகும். சதி என்பது கணவன் இறந்துவிட்டால் அவருடைய மனைவி கணவருடைய பிணத்தீயில் விழுந்து தனது உயிரைப் போக்கிக் கொள்ளும் முறையாகும். இப்பழக்கம் ஆரம்பத்தில் கணவரை இழந்த பெண்கள் தாமாகவே முன்வந்து

இதனை மேற்கொண்டனர். ஆனால் நாளடைவில் இது உறவினர்களால் கட்டாயப்படுத்தப்பட்டது. இக்கொடிய பழக்கம் இராஜபுத்திரர்களிடையே காணப்பட்டது. வில்லியம் பெண்டிங் பிரபு இதை வன்மையாகக் கண்டித்தார். சமூக சீர்திருத்தவாதியான இராஜாராம் மோகன்ராயின் உதவியோடு கி.பி.1829 ஆம் ஆண்டு சதி ஒழிப்பு சட்டத்தை வில்லியம் பெண்டிங் பிரபு கொண்டு வந்தார். இதன்படி சதியில் ஈடுபட்டாலோ அல்லது அதற்கு துணை நின்றாலோ அது பெருங்குற்றமாக கருதப்பட்டது. அதில் ஈடுபடுவோர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.

### பெண்சிசு கொலை ஒழிப்பு

கத்தியவார் மற்றும் இராஜஸ்தானில் வாழ்ந்த மக்களிடையே காணப்பட்ட மற்றொரு கொடிய பழக்கம் பெண்சிசு கொலையாகும். இது பெண்குழந்தை பிறந்தவுடனே, அதை கொலை செய்யும் பழக்கமாகும். பெண்குழந்தை பிறந்தால் அது பெரும் பொருளாதார சுமையாக கருதப்பட்டது. எனவே, பெண் குழந்தை பிறந்தவுடன் அக்குழந்தையை கொன்று வந்தனர். வில்லியம் பெண்டிங் பிரபு இக்கொடிய வழக்கத்தை ஒழித்ததோடு மட்டுமின்றி அதை மாபெரும் குற்றமாகவும் அறிவித்தார்.

### நரபலி ஒழிப்பு

ஒரிசாவில் வாழ்ந்து வந்த மலைவாழ் இனமக்களிடையே காணப்பட்ட ஒரு கொடிய வழக்கம் நரபலியிடுதலாகும். இவர்கள் தங்கள் கடவுளை திருப்திபடுத்த நரபலி கொடுத்து வந்தனர். வில்லியம் பெண்டிங் பிரபு இக்கொடிய வழக்கத்தை தடை செய்தார். இதில் ஈடுபட்டோர் குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டிக்கப்பட்டனர்.

### தக்கர்களை அடக்குதல்

மத்திய இந்தியாவில் வாழ்ந்து வந்த ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் தக்கர்கள் ஆவார்கள். இவர்கள் கொள்ளையடிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் அப்பாவி மக்கள் மற்றும் பயணிகளை கொள்ளையடித்து கொன்று வந்தனர். வில்லியம் பெண்டிங் பிரபு இவர்களின் நடவடிக்கைகளை தடுக்க, மேஜர் ஸ்லீமென் தலைமையில் தனியாக ஒரு துறை தோற்றுவித்து இவர்களின் நடவடிக்கைகளை முற்றிலுமாக ஒழித்தார்.

### கல்விச் சீர்திருத்தம்

கி.பி.1813–ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம், ஆங்கில மொழி மூலமாக மேலை நாட்டு கல்வியை வளர்க்க பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் இந்தியாவில் ஆங்கில மொழி போதனா மொழியாக மாறியது. மேலும் இவருடைய காலத்தில் கல்கத்தாவில் ஒரு மருத்துவ கல்லூரியும், பம்பாயில் எல்பின்ஸ்டன் கல்லூரியும் நிறுவப்பட்டது.

### 1833–ஆம் ஆண்டு பட்டயச் சட்டம்

வில்லியம் பெண்டிங் பிரபு ஆட்சிக் காலத்தில் 1833–ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி, கம்பெனியின் தனி உரிமை ஒழிக்கப்பட்டது. வங்காள கவர்னர் ஜெனரல்–இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாக பொறுப்பேற்றார். கவர்னர்–ஜெனரல் நிர்வாகக் குழுவில் சட்ட உறுப்பினர் ஒருவர் இடம் பெற்றார். சென்னை, பம்பாய், கல்கத்தாவில் கிறித்துவர்களின் நலனுக்காக பிஷப்புகள் நியமனம் செய்யப்பட்டனர்.

### மதிப்பீடு

வில்லியம் பெண்டிங் பிரபு சமுதாயம், நிர்வாகம், நிதி மற்றும் நீதித்துறையில் பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வந்தார். இவர் இந்தியர்கள் மீது அதிக அக்கறை கொண்டு செயல்பட்டதால், இவர் ரிப்பன் பிரபுவுடன் ஒப்பிடப்படுகிறார். இவர் இந்தியாவில் ஆங்கிலக் கல்வியை வளர்ச்சி பெறச் செய்து இந்தியர்களின் நலன் மேம்பட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஆர்மஹஸ்ட் பிரபுவிற்கு பிறகு ___________ என்பவர் இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாகப் பொறுப்பேற்றார்.

   அ) வில்லியம் பெண்டிங் ஆ) ஹேஸ்டிங்ஸ் பிரபு இ) கர்சன்பிரபு

2. வில்லியம் பெண்டிங் பிரபு ___________ மூலம் புகழ் பெற்றார்.

   அ) தோற்றம் ஆ) போர்கள் இ) சீர்திருத்தங்கள்

3. நீதிமன்ற மொழியாக பயன்படுத்தப்பட்டு வந்த ___________ மொழி ஒழிக்கப்பட்டது.

   அ) ஆங்கிலம் ஆ) பாரசீகம் இ) சமஸ்கிருதம்

4. நரபலி முறையை ___________ பின்பற்றினார்கள்.

   அ) ஒரிசாவில் வாழ்ந்த மலைவாழ் இனத்தவர் ஆ) இராஜபுத்திரர்கள்
   இ) மத்திய இந்தியாவில் வாழ்ந்த மக்கள்

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதல் பர்மியப் போர் கி.பி.1826–ஆம் ஆண்டு ___________. உடன்படிக்கையின்படி முடிவடைந்தது.
2. ___________ இந்திய கவர்ன ஜெனரல்களில் முக்கியமானவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார்.
3. ___________ இந்திய கவர்னர்–ஜெனரலின் நிர்வாகக் குழுவின் முதல் சட்ட உறுப்பினர் ஆவார்.
4. இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட மிகக் கொடிய பழக்கம் ___________ஆகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. சதி ஒழிப்பு | ஆங்கில கல்வி |
| 2. மேஜர் ஸ்லீமென் | 1829 |
| 3. இராஜாராம் மோகன்ராய் | தக்கர்கள் ஒழிப்பு |
| 4. மெக்காலே | சமூக சீர்திருத்தம் |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. வில்லியம் பெண்டிங் பிரபு எப்பொழுது இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆனார் ?
2. எல்பின்ஸ்டன் கல்லூரி எங்கு நிறுவப்பட்டது ?
3. இராணுவ வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பேட்டாவினைக் குறைத்தவர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. முதல் பர்மியர் போரைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.
2. வில்லியம் பெண்டிங் பிரபுவின் கல்விச் சீர்திருத்தங்களை கூறுக.
3. வில்லியம் பெண்டிங் பிரபுவின் நிர்வாக சீர்திருத்தங்கள் பற்றி நீவீர் அறிவது என்ன ?

## VI) விரிவான விடையளி.

1. வில்லியம் பெண்டிங் பிரபுவின் சமூக சீர்திருத்தங்களைப் பற்றி குறிப்பு வரைக.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. இந்திய சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு கொடுமைகள் பற்றியும் அவைகள் எவ்வாறு களையப்பட்டன என்பதைப் பற்றி நாடகமாக நடித்துக் காட்டுக.

## டல்ஹௌசி பிரபு (கி.பி.1848–கி.பி.1855)

டல்ஹௌசி பிரபு கி.பி.1848–ஆம் ஆண்டு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக பொறுப்பேற்றார். ஆங்கில ஆதிக்கத்தை விரிவுபடுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆங்கில ஆதிக்கத்தைப் பெருக்க மூன்று வகை கொள்கைகளை கடை பிடித்தார்.

அ) வாரிசு இழப்புக் கொள்கை மூலம் சுதேசி நாடுகளை இணைத்தல்

ஆ) போர்கள் மூலம் சுதேசி நாடுகளை இணைத்தல்

இ) நல்லாட்சியற்ற நாடுகள் என்று கூறி சுதேசி நாடுகளை இணைத்தல்

### வாரிசு இழப்புக் கொள்கை மூலம் இணைத்தல்

டல்ஹௌசி பிரபு ஆங்கிலப் பேரரசை விரிவுபடுத்த புதிய கொள்கை ஒன்றை கடைபிடித்தார். இது வாரிசு இழப்புக் கொள்கை என்றழைக்கப்படுகிறது. இதன்படி ஆங்கிலேயர்களை சார்ந்துள்ள இந்திய அரசர்கள், நேரடியாக ஆண் வாரிசு இன்றி இறந்தால் அவருடைய தத்துப்பிள்ளை அரசராக முடியாது. அப்பகுதி ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்படும். தத்துப்பிள்ளை சொத்துக்களுக்கு மட்டுமே வாரிசாக முடியும்.

இக்கொள்கையின் அடிப்படையில் டல்ஹௌசி பிரபு சதாரா, ஜெய்பூர், சாம்பல்பூர், உதய்பூர், ஜான்சி மற்றும் நாகபுரி ஆகிய மாநிலங்களை ஆங்கில அரசுடன் இணைத்துக் கொண்டார். இக்கொள்கை இந்தியர்களிடையே கடும் எதிர்ப்பை தோற்றுவித்து 1857–ஆம் ஆண்டு நடந்த மாபெரும் புரட்சிக்கு இது முக்கிய காரணமாக அமைந்தது.

### போர்கள் மூலம் இணைத்தல்

### இரண்டாம் ஆங்கில–சீக்கியப் போர் (கி.பி.1848–கி.பி.1849)

இரண்டாம் ஆங்கில–சீக்கியப் போர் டல்ஹௌசி பிரபு காலத்தில் நடைபெற்றது. முதலாம் சீக்கியப் போரில் சீக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டாலும், அவர்களின் ஆதிக்கம் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை.

சீக்கியர்கள் மூல்ராஜ் என்பவரின் தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். எனவே டல்ஹௌசி சீக்கியர்களுக்கு எதிராகப் கி.பி.1848–ம் ஆண்டு போரை அறிவித்தார். சீக்கியர்கள் தோற்கடிக்கப்பட்டனர். பிறகு டல்ஹௌசி பிரபு பஞ்சாபை கி.பி.1849 ஆம் ஆண்டு ஆங்கில அரசுடன் இணைத்துக் கொண்டார்.

### இரண்டாம் பர்மியப் போர் (கி.பி.1852)

முதல் பர்மியப்போருக்கு பிறகு ஆங்கில வியாபாரிகள் பர்மாவுடன் வியாபாரம் செய்யவும், பர்மாவில் குடியேறவும் அனுமதிக்கப்பட்டனர். ஆனால் ஆங்கில வியாபாரிகள் அங்கு கேவலப்படுத்தப்பட்டனர். இவர்கள் டல்ஹௌசியின் உதவியை நாடினர். எனவே டல்ஹௌசி பர்மாவைக் தாக்க ஆங்கிலப் படையை அனுப்பினார். இது இரண்டாம் பர்மியப் போராக உருவாகியது. பர்மியர்கள் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டனர். இப்போரின் மூலம் கீழ் பர்மா முழுவதும் ஆங்கிலேயரின் கட்டுப் பாட்டில் வந்தது.

### நல்லாட்சியற்ற நாடுகளை இணைத்தல்

டல்ஹௌசி பிரபு 1856–ஆம் ஆண்டு நல்லாட்சி நடைபெறவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில்

அயோத்தி நவாப் வாசித் அலி ஷாவை பதவியிறக்கம் செய்து அயோத்தியை ஆங்கிலப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். தஞ்சாவூரும் ஆங்கில பேரரசோடு இணைத்துக் கொள்ளப்பட்டது.

### டல்ஹௌசியின் சீர்திருத்தங்கள்

டல்ஹௌசி ஒரு சிறந்த வெற்றியாளராக மட்டுமின்றி, ஒரு சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். இவர் பல்வேறு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்.

### நிர்வாக சிர்திருத்தங்கள்

இவரது ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் கவர்னர்–ஜெனரல், வங்காளத்தின் கவர்னராகவும் செயல்பட்டுவந்தார். இதனால் நிர்வாகத்தை திறமையாக மேற்கொள்ள முடியவில்லை. எனவே வங்காள நிர்வாகத்தை கவனிக்க துணை கவர்னர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

ஒவ்வொரு மாநிலமும் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு துணை ஆணையரிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

சிம்லா கோடைக்கால தலைநகரமாகவும், கல்கத்தா குளிர்கால தலை நகரமாகவும் செயல்பட்டது.

டல்ஹௌசி பிரபு சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மூன்று மாநிலங்களிலும் ஒரே மாதிரியான ஆட்சி முறையை அறிமுகப்படுத்தினார்.

### இருப்புப்பாதை அறிமுகம்

இந்தியாவில் முதன் முதலில் இருப்புப்பாதையை அறிமுகப்படுத்திய பெருமை டல்ஹௌசியைச் சாரும். முதல் இருப்புப்பாதை 1853–ஆம் ஆண்டு பம்பாய்–தானாவிற்கு இடையேயும் 1854–ஆம் ஆண்டு ஹௌரா ராணிகஞ்ச் இடையேயும், 1856ஆம் ஆண்டு சென்னை–அரக்கோணம் இடையேயும் இரயில் பாதை அமைக்கப்பட்டன. இரயில் பாதை அமைக்கப்பட்டதால், வாணிபம் அதிகரித்தது. ஆங்கிலேயர்கள் படைகள், பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களை இரயில் பாதை போடப்பட்டதால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாக கொண்டு செல்ல முடிந்தது.

டல்ஹௌசி பிரபு "இருப்புப்பாதையின் தந்தை" என அழைக்கப்படுகிறார்.

### தபால் மற்றும் தந்தி

நாடு முழுவதும் தபால் மற்றும் தந்தி அலுவலகங்கள் நிறுவப்பட்டன. அனைத்து மாநிலங்களிலும் உள்ள தபால் அலுவக பணியினை மேற்பார்வை செய்ய தலைமை இயக்குநர் நியமிக்கப்பட்டார். நாடு முழுவதும் ஒரே மாதிரியான கடித கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. முதன் முதலில் அஞ்சல் வில்லை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. டல்ஹௌசி அரையணா (3 பைசா) அஞ்சல் முறையை அறிமுகப்படுத்தினார். நாடு முழுவதும் தந்திக் கம்பிகள் மூலம் இணைக்கப்பட்டன. இவ்வாறு போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு டல்ஹௌசி காலத்தில் அதிக முக்கியத்துவம் பெற்றன.

### வாணிப சீர்திருத்தங்கள்

டல்ஹௌசி பிரபு தடையில்லா வாணிபத்தை அறிமுகப்படுத்தினார். சென்னை, பம்பாய், கல்கத்தா துறைமுகங்கள் மேம்படுத்தப்பட்டன. நாடு முழுவதும் பல்வேறு துறைமுகங்கள் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டன. இங்கிலாந்து மற்றும் இந்தியாவிற்குமிடையே வாணிபத் தொடர்பு மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

## சமுகச் சீர்திருத்தங்கள்

டல்ஹௌசி பிரபு சதி என்ற உடன்கட்டை வழக்கத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டார். தக்கர்களையும் அடக்கினார். கி.பி.1856–ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் கொண்டு வர மூலக்காரணமாக விளங்கினார். விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவு கொடுத்தார். ஒருவர் மதம் மாறினாலும் மூதாதையர்களின் சொத்தில் பங்கு உண்டு என அறிவித்தார்.

## பொதுப்பணித்துறை

டல்ஹௌசி பிரபு பொதுப் பணித்துறையை தனித்துறையாக ஏற்படுத்தினார். பல்வேறு கால்வாய்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் பல்வேறு பொது நலப் பணிகள் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. பெஷாவர் மற்றும் கல்கத்தாவை இணைக்கும் பெருவழிச்சாலை புதுப்பிக்கப்பட்டது. கங்கை கால்வாய் இவர் காலத்தில் வெட்டப்பட்டது.

## கல்விச் சீர்திருத்தங்கள்

டல்ஹௌசி பிரபு காலத்தில் 1854ஆம் ஆண்டு சர் சார்லஸ் உட்ஸ் தலைமையில் கல்விக்குழு அமைக்கப்பட்டது. இது இந்தியாவின் கல்வி முறையில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தது. ஒவ்வொரு மாகாணத்திலும் கல்வித்துறை தனியாக ஏற்படுத்தப்பட்டது. ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக் கழக கல்வி வரை பல்வேறு கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டன. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நாடு முழுவதும் தோற்றுவிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இலண்டன் பல்கலைக் கழகத்தை மாதிரியாகக் கொண்டு சென்னை, பம்பாய், கல்கத்தா பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. ரூர்கி என்ற இடத்தில் பொறியியல் கல்லூரி ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு அரசால் நிதி உதவி வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

## இராணுவ சீர்திருத்தங்கள்

இந்திய இராணுவத்தில் கூர்க்கர்களைக் அதிகம் சேர்த்துக் கொண்டார். இராணுவத்தின் தலைமையிடத்தை கல்கத்தாவிலிருந்து சிம்லாவுக்கு மாற்றினார். பீரங்கி படையின் தலைமையிடத்தை கல்கத்தாவிலிருந்து மீரட்டிற்கு மாற்றினார்.

## மதிப்பீடு

இந்திய கவர்னர்–ஜெனரல்களில் மிகவும் இளமையானவர் டல்ஹௌசி பிரபு ஆவார். இவர் அறிமுகப்படுத்திய இருப்புப்பாதை, தபால், தந்தி போன்றவற்றால் இந்தியர்களால் எப்பொழுதும் நினைவுக் கூறப்படுகிறார். எனவே டல்ஹௌசி பிரபு “நவீன இந்தியாவை உருவாக்கியவர்” என்று புகழ் பெற்றார்.

## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. வாரிசு இழப்புக் கொள்கை ____________ ஆல் அறிமுகப்படுத்தப்பட்டது.

அ) டல்ஹௌசி பிரபு  ஆ) ஆம்ஹர்ஸ்ட் பிரபு  இ) ஹேஸ்டிங்ஸ் பிரபு

2. __________ டல்ஹௌசியால் நல்லாட்சியற்றதாக ஆங்கிலப் பேரரசுடன் இணைக்கப்பட்டது.

அ) சதாரா    ஆ) ஜான்சி    இ) அயோத்தி

3. இந்து விதவைகள் மறுமண சட்டம் __________ ஆண்டு நிறைவேற்றப்பட்டது

அ) 1853    ஆ) 1855    இ) 1856

4. முதல் இருப்புப் பாதை பம்பாய் முதல் __________ வரை போடப்பட்டது.

அ) சென்னை    ஆ) தானா    இ) பூனா

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. டல்ஹௌசி பிரபு இந்தியாவின் கவர்னர்–ஜெனரலாக பதவியேற்று ஆண்டு __________.
2. வாரிசு இழப்புக் கொள்கையின் கீழ் ஆங்கில பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட முதல் பேரரசு __________.
3. கங்கை கால்வாய் __________ என்பவரது ஆட்சிக்காலத்தில் வெட்டப்பட்டது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. முதல் இருப்புப்பாதை | இரண்டாவது பாஜிராவின் தத்துப் பிள்ளை |
| 2. ஊட்ஸ் கல்விக் குழு | அயோத்தி நவாப் |
| 3. நானா சாகிப் | 1853 |
| 4. வாஜித் அலி ஷா | 1854 |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. இரண்டாம் ஆங்கில சீக்கியப் போர் எந்த ஆண்டு நடைபெற்றது ?
2. பொதுப் பணித்துறையை ஏற்படுத்தியவர் யார் ?
3. டல்ஹௌசி பிரபு காலத்தில் அமைக்கப்பட்ட பல்கலைக் கழகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

## V) குறுகிய விடையளி.

1. வாரிசு இழப்புக் கொள்கை என்றால் என்ன ?
2. இந்தியாவில் ஆங்கிலப் பேரரசு விரிவடைய டல்ஹௌசி பிரபு கடைபிடித்த கொள்கைகள் யாவை ?
3. வாரிசு இழப்புக் கொள்கையின் மூலம் டல்ஹௌசி பிரபு இணைத்துக் கொண்ட நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
4. “இந்திய இருப்புப் பாதையின் தந்தை என டல்ஹௌசி” அழைக்கப்படுகிறார்– ஏன் ?

## VI) விரிவான விடையளி.

1. டல்ஹௌசி பிரபு அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களை விவரி ?

## VII) செயல்பாடு.

1. இந்திய புறவரி நில வரைபடத்தில் டல்ஹௌசி பிரபுவின்கீழ் ஆங்கில பேரரசின் எல்லையைக் குறிக்கவும்.

# மாபெரும் புரட்சி கி.பி.1857

கி.பி.1857–ஆம் ஆண்டு ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஒரு மாபெரும் சோதனை ஏற்பட்டது. கி.பி.1857–ஆம் ஆண்டு தோன்றியப் புரட்சி, இராணுவ வீரர்களிடையே முதலில் தோன்றியது. பிறகு சமுதாயத்தில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். இது திடீரென்று தோன்றியது அல்ல. ஆங்கில ஆட்சிக்கு எதிராக இந்தியர்கள் பெற்ற தொடர் துயரங்களின் வெளிப்பாடாகும். கானிங் பிரபு கவர்னர் ஜெனரலாக இருந்தபோது இப்புரட்சி தோன்றியது. வரலாற்று அறிஞர்களிடையே இப்புரட்சியின் தன்மை குறித்து பலவிதமான கருத்துகள் நிலவுகின்றன. ஆங்கில வரலாற்று அறிஞர்கள் இப்புரட்சியை **“சிப்பாய் கலகம்”** என்று கருதுகின்றனர். ஏனெனில் இது இராணுவ வீரர்களின் தன்னலத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. இந்திய வரலாற்று அறிஞர்கள் இதனை **“முதல் இந்திய சுதந்திரப் போர்”** என்று அழைக்கின்றனர்.

## 1857–ஆம் ஆண்டு புரட்சிக்கான காரணங்கள்

### அரசியல் காரணங்கள்

ஆங்கிலேயரின் நாடு பிடிக்கும் கொள்கை மற்றும் பேரரசை விரிவாக்கம் செய்யும் நடவடிக்கைகள் மக்கள் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தியது. வெல்லெஸ்லியின் துணைப்படைத் திட்டமும், டல்ஹௌசியின் நாடிழக்கும் கொள்கையையும் பல்வேறு இந்திய மன்னர்களை ஆங்கிலேயரின் எதிரிகளாக மாற்றியது.

### பொருளாதாரக் காரணங்கள்

ஆங்கில ஆட்சியின் கீழ் மக்களின் பொருளாதார நிலை வேகமாக சீரழிந்துக்கொண்டே சென்றது. வியாபார, வர்த்தகம் அனைத்தும் ஆங்கிலேயரின்வசம் சென்றது. பொருட்களை உற்பத்தி செய்ய இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதால் உள்நாட்டுத் குடிசை தொழில்கள் அழிந்தன. இதனால் நூற்றுக் கணக்கானோர் வேலை வாய்ப்பிழந்தனர். அனைத்து உயர் பதவிகளும் ஆங்கிலேயர்களுக்கு அளிக்கப்பட்டன. இச்செயல் இந்தியர்களின் மனதில் ஆங்கிலேயர்களுக்கு எதிரான எண்ணத்தை உருவாக்கியது.

### சமுதாய மற்றும் சமயக் காரணங்கள்

இரயில்பாதை அறிமுகம், தபால், தந்தி மற்றும் மேலை நாட்டுக் கல்வி இந்தியர்கள் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தியது. இவைகளை அறிமுகப்படுத்தியதின் மூலம் ஆங்கிலேயர்கள் தங்களை கிறித்துவ மதத்திற்கு மதமாற்றம் செய்யவே என இந்தியர்கள் கருதினர். கிறித்துவ மத பரப்புக்குழுக்கள் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை வேகமாக மதமாற்றம் செய்யத் தொடங்கியது. ஆங்கிலேயர்கள் சதி என்ற உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். குழந்தைகள் மணமுறையைத் தடுத்தது, விதவைகள் மறுமணத்தை ஊக்குவித்தது போன்ற நடவடிக்கைகள் இந்துக்கள் தங்களது சமய விவகாரங்களில் ஆங்கிலேயர்கள் தலையிடுவதாக கருதினார்கள்.

இந்துக்கள் மதம் மாறினாலும் சொத்தில் பங்கு உண்டு என்ற இந்து மத சொத்துரிமை சட்ட திருத்தம்,

இந்துக்களை கிறித்துவ மதத்திற்கு மதமாற்றம் செய்யும் நோக்கோடு கொண்டுவரப்பட்டது என கருதினர்.

### இராணுவக் காரணங்கள்

இந்திய இராணுவ வீரர்கள் பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருந்தனர். தங்களுக்கு நல்ல ஊதியமும் மற்றும் திருப்திகரமாகவும் நடத்தப்பட வேண்டும் என்றும் ஆங்கில அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டனர். கானிங் பிரபு காலத்தில் 1856–ஆம் ஆண்டு "பொதுப்பணி படைச்சட்டம்" கொண்டு வரப்பட்டு இந்திய வீரர்கள் ஆங்கிலேயர்களுக்காக கடல் கடந்து சென்று போர் புரிய வேண்டும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு வீரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இராணுவ வீரர்கள் நன்கு சீரான தோற்றத்துடன் விளங்க அவர்களை தாடி, மீசைகளை ஒழுங்குப்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது. சமயக்குறிகளை நெற்றியில் இடக்கூடாது என்றும், தோலினால் ஆன தலைப்பாகை அணிய வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது. இந்துக்கள் மற்றும் முஸ்லீம்கள் இது தங்கள் மதத்திற்கு எதிரானது என்று கருதினர். சீக்கியர்கள் தாடி, மீசையை வெட்ட மறுத்தனர். இது ஆங்கிலேயர்களுக்கு எதிரான எண்ணத்தை ஏற்படுத்தியது.

### உடனடிக் காரணம்

1857–ஆம் ஆண்டு புரட்சிக்கு உடனடிக் காரணமாக புதிய என்பீல்டு வகைத் துப்பாக்கிக்கு அறிமுகப் படுத்தப்பட்ட கொழுப்புத் தடவிய தோட்டாக்கள் ஆகும். இந்தப் புதிய தோட்டாக்ளை வீரர்கள் வாயில் கடித்து துப்பாக்கியில் செருக வேண்டும். இந்தத் தோட்டாக்களில் பசு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருப்பதாக வதந்தி பரவியது. இவை தங்கள் மதத்திற்கு எதிரானவை எனக் கருதி இந்துக்களும் முஸ்லீம்களும் இந்த தோட்டாக்களை தொட மறுத்தனர். இந்துக்கள் பசுவை புனிதமாகதாகவும், முஸ்லீம்கள் பன்றியை வெறுத்ததாலும், புதிய வகைத் தோட்டாக்களை தொட மறுத்தனர். மங்கல் பாண்டே என்ற பிராமண வீரர் முதன் முதலில் கொழுப்புத் தடவிய தோட்டாவை தொட மறுத்து எதிர்ப்புத் தெரிவித்தார். இவர் வங்காளத்தில் உள்ள பராக்பூர் என்ற இடத்தில் இருந்த 34–வது காலாட்படைப் பிரிவைச் சார்ந்தவர். இவர் தோட்டாக்களை தொடமறுத்ததோடு அங்கிருந்த ஆங்கில அதிகாரிகளை ஏப்ரல் 18, 1857ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றார். உடனே அவர் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.

### முக்கிய நிகழ்வுகள்

கி.பி.1857ஆம் ஆண்டு மே,9–ம் நாள் மீரட்டில் முதல் புரட்சி தொடங்கியது. இதனைத் தொடர்ந்து மே,10–ம் நாள் வீரர்கள் வெளிப் படையாகக் புரட்சியில் ஈடுபட்டனர். அங்கிருந்த அதிகாரிகளை சுட்டுத் தள்ளி, கைதிகளை விடுதலை செய்து ஆங்கிலேயர்களின் வீடுகளுக்கு தீ வைத்தனர். டெல்லியை நோக்கி அணி வகுத்துச் சென்றனர்.

### டெல்லி

இவர்கள் டெல்லியை அடைந்தவுடன், டெல்லியிலிருந்த இராணுவ வீரர்கள் இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். ஏராளமான ஆங்கிலேயர்களை கொன்றுகுவித்து, டெல்லியை கைப்பற்றி, முகலாய மன்னரான இரண்டாம் பகதூர்ஷாவை டெல்லியின் மன்னராக பிரகடனப்படுத்தி அரியணையில் அமர்த்தினர். சர் ஜான் நிக்கல்சன் தலைமையிலான ஆங்கிலப்

படை நான்கு மாத முற்றுகைக்குப் பிறகு செப்டம்பர் 1857–ல் டெல்லியை மீண்டும் கைப்பற்றியது. ஏராளமான இந்தியர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். முகலாய மன்னர் இரண்டாம் பகதூர்ஷாவைத் சிறைப்பிடித்து, குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு ஆயுள் கைதியாக ரங்கூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அவர் 1862–ம் ஆண்டு அங்கு காலமானார். இவரது மரணத்துடன் மாபெரும் முகலாயப் பேரரசு முடிவுக்கு வந்தது.

## கான்பூர்

பீஷ்வா இரண்டாம் பாஜிராவின் வளர்ப்பு மகன் நானா சாகிப் கான்பூர் புரட்சிக்கு தலைமை ஏற்று நடத்தினார். இவர் தனது படைத் தளபதி தாந்தியா தோப்பின் உதவியுடன் கான்பூர் கோட்டையைக் கைப்பற்றி தன்னை பீஷ்வாவாக அறிவித்துக் கொண்டார். கர்னல் ஹாவ்லாக் மற்றும் கர்னல் ஒநெயில் ஆகியோர் தலைமையிலான ஆங்கிலப் படை கான்பூரில் நுழைந்து புரட்சியாளர்களைத் தோற்கடித்தது. இறுதியாக படைத் தளபதியாக ஹாவ்லாக், நானா சாகிப்பை தோற்கடித்து கான்பூரை ஜூலை 17,1857–ல் மீண்டும் கைப்பற்றினார். ஆனால் நானா சாகிப் அங்கிருந்து தப்பி நேபாளம் சென்று சிறிது காலம் கழித்து மரணமடைந்தார்.

## லக்னோ

அயோத்தி நவாப், வாஜித் அலியின் மனைவி பேகம் ஹஷரத்மகால் லக்னோவில் புரட்சியை தலைமையேற்று நடத்தினார். தனது மகன்பிர்ஜிஸ் காதர் என்பவரை அயோத்தி நவாப்பாக பிரகடனப்படுத்தினார். புரட்சியாளர்கள் சர்.ஹென்றிலாரன்சை கொன்றனர். பிறகு படைத் தளபதி ஆட்ராம் மற்றும் ஹாவ்லாக் பிற இராணுவத்தின் உதவியோடு லக்னோ விரைந்தனர். லக்னோ மீண்டும் ஆங்கிலேயர்களால் மார்ச்–1858–ல் கைப்பற்றப்பட்டது.


## மத்திய இந்தியா

மத்திய இந்தியாவில் நானா சாகிப்பின் படைத்தளபதியான தந்தியா தோப்பும், ஜான்சிராணி லஷ்மிபாயும் புரட்சியை நடத்தினர். ஆங்கிலேயருக்கு எதிராக பெண்கள் போரிடுவதை இவர் ஊக்குவித்தார். தந்தியா தோப், ஜான்சிராணி ஆகிய இரு போராட்ட வீரர்களும் ஆங்கிலேயருக்கு கடும் எதிர்ப்பைக் கொடுத்தனர். சர் ஹக்ரோஸ் தலைமையிலான ஆங்கிலப்படை ஜான்சிக் கோட்டையை முற்றுகையிட்டபோது லஷ்மிபாய் வீரமுடன் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டார். ஆனாலும் கோட்டையைக் காக்க முடியவில்லை. கல்பிக்கு தப்பி ஓடினார். தந்தியா தோப் இவருக்கு பெரும் உதவி செய்தார். இருவரும் ஒன்று சேர்ந்து குவாலியர் கோட்டையைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர்கள் இவர்களுக்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டனர். ஜான்ஸிராணி ஆங்கிலேயர்களை சாகும்வரை கடுமையாக எதிர்த்துப்



லஷ்மி பாய்

# 1857–ஆம் ஆண்டு புரட்சி மையங்கள்



போரிட்டு வீரமரணம் அடைந்தார். தந்தியா தோப் அங்கிருந்து தப்பினார். ஆனால் கைது செய்யப்பட்டு அவரும் கொல்லப்பட்டார். அவரது மரணத்துடன் சிப்பாய் புரட்சி முடிவுக்கு வந்தது. 1857–ஆம் ஆண்டு புரட்சி தோழ்வியுற்றாலும், இது இந்திய சுந்திர போருக்கு வித்திட்டது.

### 1857–ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சி தோல்வியடையக் காரணங்கள்

1857–ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சி பல்வேறு காரணங்களால் தோல்வியடைந்தது. இந்தியர்களிடையே ஒற்றுமையில்லை, தேசிய உணர்வு மக்களிடைய வளரவில்லை. இப்புரட்சி இந்திய நாடு முழுவதும் பரவவில்லை. ஆங்கிலேயர்களை எதிர்க்க போதுமான படைபலமோ, பணபலமோ இல்லாததால் புரட்சியாளர்கள் வெற்றி பெற முடியவில்லை.

தபால் தந்தி முறை ஆங்கிலேயர்களுக்கு செய்திகளை உடனடியாக அனுப்புவதற்கு பெரிதும் உதவியாக இருந்தது மற்றும் இரயில் போக்குவரத்து படை வீரர்களை வேகமாக அனுப்ப உதவியது. சீக்கியர்கள், ராஜபுத்திரர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆங்கிலேயருக்கு விசுவாசமானவர்களாக நடந்து கொண்டனர். இது புரட்சியாளர்களை வெகுவாக பாதித்தது. ஆங்கிலப் படையில் திறமையான தளபதிகளாக சர் ஜான் லாரன்ஸ், ஹேவ்லுக் மற்றும் நிகோல்சன் போன்றவர்கள் இருந்தனர். இவர்களுக்கு இணையாக இந்தியத் தலைவர்கள் காணப்படவில்லை. ஆங்கிலேயர்கள் கடல் ஆதிக்கமிக்கவர்களாக விளங்கினர். இதனால் இங்கிலாந்திடமிருந்து தேவையான பணம் மற்றும் படை உதவிகளை எளிதில் பெற முடிந்தது. இதுவே புரட்சி தோல்வி அடைய வழி வகுத்தது.

### 1857–ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகள்

1857–ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சி இந்தியாவில், ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது. இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை இங்கிலந்தின் அரசி எடுத்துக் கொண்டார். விக்டோரியா மகாராணியின் பேரறிக்கை நவம்பர்,1 1858–ல் வெளியிடப்பட்டது. கட்டுப் பாட்டுக்குழு மற்றும் நிர்வாகக்குழு கலைக்கப்பட்டது. இந்திய செயலர் மற்றும் இந்திய கவுன்சில் சபை உருவாக்கப்பட்டது. இந்திய கவர்னர் ஜெனரல், இந்திய அரசப் பிரதிநிதி என்ற பெயரில் அழைக்கப்பட்டார். இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்டது. இந்தியர்களின் முழு சமய சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்டது. நாடுபிடிக்கும் கொள்கையை ஆங்கிலேயர்கள் கைவிட்டனர். மேலும் இந்திய அரசர்களுக்கு, ஆங்கிலேயர்கள் இனி எந்த ஒரு பகுதியும் இணைத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற உறுதி மொழி வழங்கப்பட்டது.

### மகாராணி பேறிக்கை 1858

1858, நவம்பர்,1 ம் நாள் அலகாபாத் நகரில் மாபெரும் பேரவை கூட்டப்பட்டது. அங்கு மகாராணியின் பேரறிக்கை வெளியிடப்பட்டது. இதனை இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும், முதல் அரசப் பிரதிநிதியுமான கானிங் பிரபு வாசித்தார்.

### அம்சங்கள்

இந்தியா இனி இங்கிலாந்து அரசியின் பெயரால் நிர்வகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

கட்டுப்பாட்டுக்குழு மற்றும் நிர்வாகக்குழு கலைக்கப் பட்டன. இந்தியச்செயலாளர் பதவியும்அவருக்கு உதவி செய்ய 15 பேர் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டு இந்திய நிர்வாகத்தை மேற்கொண்டது. நாடு இழக்கும் கொள்கை கைவிடப்பட்டது. கொலைக் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தவிர மற்ற அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடு.

1. கி.பி.1857–ஆம் ஆண்டு புரட்சி ____________ என்பவர் காலத்தில் தோன்றியது.

   அ) பெண்டிங் ஆ) கானிங் இ) டல்ஹௌசி

2. சிப்பாய் புரட்சி முதலில் தோன்றிய இடம் ____________.

   அ) பராக்பூர் ஆ) டெல்லி இ) கான்பூர்

3. கொழுப்பு தடவிய தோட்டாவை தொட மறுத்த முதல் வீரர் ____________.

   அ) மங்கள் பாண்டே ஆ) நானா சாகிப் இ) பகதூர்ஷா

4. 1857–ஆம் ஆண்டு சிப்பாய் புரட்சிக்கு ____________ முக்கியமான அரசியல் காரணம் ஆகும்.

   அ) அதிக வரிகள் ஆ) இரட்டை ஆட்சி முறை

   இ)நாடு இழக்கும் கொள்கை

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஆங்கில ஆட்சிக்கு எதிராக இந்திய மக்கள் அனுபவித்த கொடுமைகளின் வெளிப்பாடு ____________.
2. 1857–ஆம் ஆண்டு தோன்றிய மாபெரும் புரட்சி ____________ என்றும் அழைக்கப்படுகிறது.
3. ____________ அறிமுகப்படுத்தியது 1857–ஆம் ஆண்டு புரட்சிக்கு உடனடிக் காரணமாகும்.
4. சர் ஜான் நிக்கல்சன் தலைமையிலான ஆங்கிலப்படை____________ஐ கைப்பற்றியது

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. மங்கள்பாண்டே | மத்திய இந்தியா |
| 2. தாந்தியா தோப் | பராக்பூர் |
| 3. கானிங் பிரபு | நானா சாஹிப்பின் படைத் தளபதி |
| 4. இராணி லஷ்மிபாய் | முதல் இந்திய அரசப் பிரதிநிதி |

## IV) ஒரு வார்த்தையில் விடையளி.

1. 1857–ஆம் ஆண்டு புரட்சி முதன் முதலில் யாரால் எங்கு தொடங்கப்பட்டது ?
2. நல்லாட்சி நடைபெறவில்லை என்ற அடிப்படையில் எந்த நாடு இணைத்துக் கொள்ளப்பட்டது ?
3. 1857–ஆம் ஆண்டு புரட்சியின் போது இராணி லக்ஷ்மிபாயுடன் சேர்ந்து போரிட்டவர் யார் ?
4. 1857–ஆம் ஆண்டு மாபெரும் புரட்சிக்கு பிறகு இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் யார் ?

## V) குறுகிய விடையளி.

1. மங்கல் பாண்டே ஆங்கிலேயர்களால் ஏன் தூக்கிலிடப்பாட்டார் ?
2. 1857–ஆம் ஆண்டு மாபெரும் புரட்சியின் தன்மையைப் பற்றி சுருக்கமாக எழுதுக ?
3. ஜான்சிராணி லஷ்மிபாயைப் பற்றி நீவிர் குறிப்பு எழுதுக.

## VI) விரிவான விடையளி.

1. 1857–ஆம் ஆண்டு ஏற்பட்ட மாபெரும் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.
2. 1857–ஆம் ஆண்டு மாபெரும் புரட்சி தோல்வி அடைந்ததற்கான காரணங்கள் யாவை ?
3. 1857–ஆம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் மற்றும் மகாராணி பேரறிக்கை பற்றி விவாதிக்க.

## VI) செய்முறைப் பயிற்சி.

1. இந்திய புறவரி வரைபடத்தில் சிப்பாய்க் கலகம் நடைபெற்ற முக்கிய இடங்களை குறிக்கவும்.

# தமிழகத்தில் நாயக்கர்கள் ஆட்சி

விஜயநகர பேரரசின் விரிவாக்கம் இறுதியில் நாயக்கர்கள் ஆட்சியை தமிழ்நாட்டில் தோற்றுவித்தது. “நாயக்” என்ற வார்த்தைக்கு “தலைவர்” அல்லது “தளபதி” என்று பொருள். விஜயநகர அரசர்களின் கீழ் முகவர்களாக தங்களுக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதிகளை ஆட்சிப் புரிந்தவர்கள் நாயக்கர்கள் ஆவார். இவர்கள் தங்களை அரசவழித் தோன்றலாக கருதிக் கொண்டனர். இவர்களது ஆட்சியை தமிழ்நாட்டில் நாயக்கர்கள் ஆட்சி என்று அழைக்கிறோம். மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகியவற்றை தலைநகராக கொண்டு இவர்கள் ஆட்சிப்புரிந்தனர்.

## மதுரை நாயக்கர்கள்

விஜயநகர பேரரசின் கீழ் தெற்கு மண்டலமாக மதுரை விளங்கியது. கி.பி.1529–ஆம் ஆண்டு மதுரையின் பிரதிநிதியாக விஸ்வநாத நாயக்கர் என்பவர் கிருஷ்ணதேவராயரால் நியமனம் செய்யப்பட்டார். இதுவே மதுரை நாயக்கர் ஆட்சியின் தொடக்கமாக கருதப்படுகிறது.

## விஸ்வநாத நாயக்கர்

இவர் கிருஷ்ணதேவராயரின் நெருங்கிய தளபதியாவார். மதுரையில் கலகம் தோன்றிய சமயத்தில் அதனை சரி செய்ய விஸ்வநாத நாயக்கர் அனுப்பி வைக்கப்பட்டார். இவர் கலகத்தை அடக்கி மதுரையை தனது முழு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.

விஸ்வநாத நாயக்கர் தனது திறமையான ஆட்சியின் மூலம் நல்ல நிர்வாகத்தை ஏற்படுத்தினார். தமது அமைச்சர் ஆரியநாதர் உதவியோடு புதிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினார். இது “பாளையக்காரர் முறை” என்று அழைக்கப்படுகிறது. தனது பேரரசில் அமைதி, பாதுகாப்பை பராமரிக்க பாளையக்காரர்களை நியமனம் செய்தார். இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் இராணுவம், காவல் மற்றும் வருவாய் நிர்வாகத்தை மேற்கொண்டனர். காவல் பணி முக்கியமானதாக கருதப்பட்டது. மக்கள் “காவல் பிச்சை” என்ற வரியினை பாளையக்காரர்களுக்கு செலுத்தினர்.

விஸ்வநாத நாயக்கருக்கு பிறகு பல்வேறு அரசர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களின் மிக முக்கியமான அரசராக திருமலை நாயக்கர் கருதப்படுகிறார்.

## திருமலை நாயக்கர்

மதுரை நாயக்கர் வரலாற்றில் திருமலை நாயக்கரின் ஆட்சி காலம் ஒரு புது சகாப்தமாக கருதப்படுகிறது. அவருக்கு முன்பு ஆறு அரசர்களும், இவருக்குப் பிறகு ஆறு அரசர்களும் மதுரையை ஆட்சி புரிந்தனர்.

## வெற்றிகள்

திருமலை நாயக்கர் ஆட்சி பொறுப்பை ஏற்றவுடன் மைசூர் இராணுவம், மதுரை வழியாக படையெடுத்து சென்றது. இவர்களை திருமலை நாயக்கர் திண்டுக்கலில் தோற்கடித்தார். திருவாங்கூர் அரசர் உன்னி கேரள வர்மன் செலுத்தி வந்த வரித் தொகையை நிறுத்திக் கொண்டார். எனவே திருமலை நாயக்கர் அவருக்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டு, அவரை தோற்கடித்து முறையாக வரி செலுத்தச் செய்தார்.

திருமலை நாயக்கர் முஸ்லீம்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுக்க மூலக் காரணமானார். விஜயநகர பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கன் மதுரைக்கு எதிராக படையெடுத்த போது இதனை சமாளிக்க திருமலை நாயக்கர் செஞ்சி மற்றும் தஞ்சாவூர் நாயக்கர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால் தஞ்சை நாயக்கர்கள் முறையாக உதவிசெய்யாததால், திருமலை நாயக்கர் கோல்கொண்டா சுல்தானின் உதவியை நாடி வேலூர் மீது படையெடுக்கும்படி கேட்டுக்கொண்டார். இதனை தொடர்ந்து முஸ்லீம்கள் வேலூரை கைப்பற்றினர். பின்னர் மதுரையை கைப்பற்ற மிரட்டல் விடுத்தனர். தனது தவறை உணர்ந்த திருமலை நாயக்கர், மைசூரின் உதவியை நாடினார். மைசூரின் படைகள் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற போரில் வெற்றி பெற்று திண்டுக்கல்லை அடைந்தன. இந்த போரில் மைசூர் படையினர் தனது எதிரிகளின் மூக்கை, உதடுகளோடு சேர்த்து துண்டித்தனர். இந்த காட்டுமிராண்டி செயல்களைக் கண்டு மதுரை மக்கள் துயறுற்றனர். பிறகு திருமலை நாயக்கர் மைசூர் படையினை தோற்கடித்து எதிரிகளின் மூக்கினை துண்டித்தார். இந்த விநோதமான போர் "மூக்கறுப்புப் போர்" என்று வரலாற்றில் அழைக்கப்படுகிறது.

## பிற சாதனைகள்

திருமலை நாயக்கர் ஒரு திறமையான நிர்வாகி. பேரரசில் அமைதியை ஒழுங்கை நிலை நாட்டினார். போர்ச்சுகீசியர் மற்றும் டச்சுக்காரர்களை சுதந்திரமாக தமிழகத்தில் அனுமதித்தார். தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார். பல்வேறு கோயில்களை புதுப்பித்தார். கோவில் நிர்வாகத்தை தனது நேரடி நிர்வாகத்தில் கொண்டுவந்தார். கோவில்களை பராமரிக்க பல கிராமங்களை தானமாக வழங்கினார். புது மண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம், திருமலை நாயக்கர் மஹால் போன்றவை இவர் காலத்தில் கட்டப்பட்டவைகளாகும். சமஸ்கிருத மேதையான புகழ்பெற்ற நீலகண்ட தீக்ஷிதரை இவர் போற்றி ஆதரித்தார்.

## இராணி மங்கம்மாள்

திருமலை நாயக்கருக்கு பிறகு ஆட்சி செய்த சிறந்த அரசி மங்கம்மாள் ஆவார். இராணி மங்கம்மாள், சொக்கநாத நாயக்கரின் மனைவியாவார். தமது மூன்று வயது பேரனான விஜயரங்க சொக்கநாதரின் பாதுகாவலராக (பகர ஆளுநர்) ஆட்சி பொறுப்பேற்றார்.



திருமலை நாயக்கர் மஹால்

இவரது ஆட்சிக்காலம் மதுரை நாயக்கர் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அரசியல் தந்திரமிக்கவராக விளங்கி மதுரை நாயக்கர் ஆட்சிக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை திறமையாக சமாளித்து பேரரசை காப்பாற்றினார். கிறித்துவ மத பரப்பு குழுவினரை பெரிதும் ஆதரித்தார். புனித ஸ்தலங்களில் எல்லா வசதிகளை செய்து மக்களுக்கு உதவினார். சாலை போக்குவரத்தைப் பாதுகாப்பானதாக

மாற்றினார். சாலைகளில் நிழல் தரும் மரங்களை நட்டார். ஆங்காங்கே இளைப்பாறும் விடுதிகள் மற்றும், இலவச உணவு சாலைகளை அமைத்து புனித பயணம் மேற்கொள்பவருக்கு பல்வேறு உதவிகளை புரிந்தார். கோவில்களுக்கு தானங்களை வாரி வழங்கினார். நீர்ப்பாசன திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். "உய்யக்கொண்டான்–கால்வாய்" இன்றும் இவரது பெருமைகளை எடுத்து உரைக்கிறது.

### மீனாட்சி

விஜயரங்க நாயக்கர் ஆண் வாரிசு இன்றி இறக்கவே, அவரது மனைவி மீனாட்சி மதுரை ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். விஜயக்குமார நாயக்கர் என்பவரை தத்து எடுத்து அவருடைய பாதுகாவலராக தனது ஆட்சியை தொடங்கினார். தனது வளர்ப்பு மகனின் தந்தை பங்காரு இவருக்கு எதிராக சதி திட்டத்தில் ஈடுபட்டு அரசாட்சியை கைப்பற்ற முனைந்தார். இதனை அறிந்த மீனாட்சி, ஆற்காட்டில் இருந்த சந்தாசாகிப்பின் உதவியை நாடினார். இதற்காக ஒரு கோடி ரூபாயை தருவதாக ஒப்புக்கொண்டார். சந்தாசாகிப் மீனாட்சிக்கு எதிரான சதி திட்டத்தை முறியடித்தார். ஆனால் தனது உறுதி மொழியை மீறி, மதுரையை கைப்பற்றும் நோக்கில் மீனாட்சியை கைது செய்து அவரது சொந்த அரண்மனையிலேயே சிறைப்படுத்தினார். இதனால் மனமுடைந்த மீனாட்சி சிறையில் விஷம் அருந்தி உயிர் துறந்தார். சந்தா சாகிப் மதுரையை தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இவ்வாறு மதுரை நாயக்கர் ஆட்சி 1736–ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

## தஞ்சை நாயக்கர்கள்
### சேவப்ப நாயக்கர்

தஞ்சாவூர், விஜயநகர பேரரசின் ஒரு பகுதியாக விளங்கியது. திம்மப்ப நாயக்கர் தஞ்சாவூரின் பொறுப்பாளராக செயல்பட்டார். இவருக்குப்பின் இவரது மகன் சேவப்ப நாயக்கர் பொறுப்பேற்றார், இவர் தஞ்சாவூரில் நாயக்கர் ஆட்சியை தோற்றுவித்தார். இந்து கோவில்கள் மீது தனி கவனம் செலுத்தினார். போர்ச்சுகீசியர்கள் நாகப்பட்டினத்தில் குடியேற அனுமதி வழங்கினார். மூவாலூர் கோவிலுக்கு பத்து வேலி நிலங்களை தானமாக வழங்கினார். சிவகங்கா ஏரியை புதுப்பித்தார். அது சேவப்பனேரி என பிறகு அழைக்கப்பட்டது. திருவண்ணாமலை மற்றும் விருதாச்சலம் கோவில்களுக்கு நன்கொடைகளை வழங்கினார்.

### அச்சுதப்ப நாயக்கர்

இவருக்குப் பிறகு இவரது மகன் அச்சுதப்ப நாயக்கர் ஆட்சிப் பொறுப்பேற்றார். விஜயநகர பேரரசுடன் சுமூகமான உறவை ஏற்படுத்திக் கொண்டார். தலைக்கோட்டை போரில் விஜயநகர பேரரசுக்கு பெரும் உதவிபுரிந்தார். ஸ்ரீரங்கத்திலுள்ள இரங்கநாத சுவாமிக்கு வைர சிம்மாசனம் வழங்கினார். திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயிலை கட்டி முடித்தார். காவிரி ஆற்றின் இரு கரைகளையும் வலிமைப்படுத்தி, காவிரி ஆற்றின் நீரினை வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படும்படி செய்தார்.

### ரகுநாத நாயக்கர்

அச்சுதப்ப நாயக்கருக்குப் பிறகு அவரது இளைய மகன் இரகுநாத நாயக்கர் பொறுப்பேற்றார். இவரது ஆட்சிக்காலம் தஞ்சை நாயக்கர் வரலாற்றில் மிக முக்கியத்துவம்


வாய்ந்ததாகும். செஞ்சி, மதுரை நாயக்கர்கள் மற்றும் யாழ்ப்பாணர் போர்கீசியர்களை வென்று, அவர்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார். இவர் கலைகளைப் போற்றினார். அறிஞர்களை ஆதரித்தார். தானே ஒரு சிறந்த கவிஞராக விளங்கினார். ருக்மணி பரிநயம், பாரி ஜாதம், புஷ்பகர்ணம், இராமாயணம் போன்ற நூல்களை தெலுங்கு மொழியில் எழுதியுள்ளார்.

### விஜயராகவ நாயக்கர்

இவருக்குப்பிறகு இவரது மகன் விஜயராகவ நாயக்கர் பொறுப்பேற்றார். இவர் திறமையற்றவர். அதனால் பேரரசை அழிவிலிருந்து காக்க முடிய வில்லை. தஞ்சை நாயக்கர் வம்சத்தின் கடைசி அரசராக இவர் கருதப்படுகிறார். மதுரை சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூர் மீது படையெடுத்து விஜயராக நாயக்கரை தோற்கடித்து கொலை செய்து தஞ்சாவூரை தனது பேரரசுடன் இணைத்துக் கொண்டார். இதனால் தஞ்சையில் நாயக்கர் ஆட்சி 1673–ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

### செஞ்சி நாயக்கர்

பாலாற்றிற்கும் கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியான “செஞ்சி” நாயக்கர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. செஞ்சி நாயக்கர்கள், விஜய நகர அரச குடும்பத்தின் உறவினர்கள் ஆவர். இவர்களின் பூர்வீகம் வட



செஞ்சிக் கோட்டை

இந்தியாவில் உள்ள மணிநாகபுரமாகும். இவர்கள் தென் இந்தியாவிற்கு குடி பெயர்ந்து இப்பகுதியில் குடியேறினர். கிருஷ்ணதேவராயர் வையப்ப நாயக்கர் என்பவரை செஞ்சியின் பொறுப்பாளராக நியமனம் செய்தார். இவருக்குப்பிறகு, இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சியின் ஆட்சி பொறுப்பை ஏற்றார். இவரே செஞ்சியில் நாயக்கர் ஆட்சியை ஏற்படுத்தியவர் ஆவார்.

### இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் தொண்டுகள்

இவர் தனது பேரரசை பல்வேறு பகுதிகளாக பிரித்தார். மக்கள் வசிப்பதற்காக புதிய நகரங்களை ஏற்படுத்தினார். வேளாண்மையை மேம்படுத்தினார். வலிமையான இராணுவத்தைப் பராமரித்தார். வெல்லாற்றின் கரையில் கிருஷ்ணப் பட்டினம் என்ற நகரை நிறுவினார். மத சகிப்புத் தன்மை கொண்டவராக விளங்கினார். கிறித்துவர்கள் திருச்சபைகளைக் கட்டிக்கொள்ள அனுமதித்தார். சித்தாமூரில் சமணர்களும், திண்டிவனத்தில் சைவ மதத்தினரும் கோவில்களை கட்டிக்கொள்ள அனு மதித்தார். சிதம்பரத்தில் கோவிந்தராஜர் சிலையைப் புதுப்பித்து அமைத்தார். இவருடைய தளபதி வேங்கடா, சென்னை சாகரம் என்ற ஏரியை வெட்டிவித்து விவசாயத்தை வளரச் செய்தார்.

கிருஷ்ணப்பநாயக்கருக்குப் பிறகு செஞ்சியின் பொறுப்பை ஏற்றவர்கள் திறமையற்றவர்கள். பீஜப்பூர் சுல்தான் கி.பி.1648–ஆம் ஆண்டு செஞ்சியை கைப்பற்ற தனது படை தளபதி மீர்சும்லா என்பவரை அனுப்பினார். இவர் செஞ்சியை கைப்பற்றி நாசிர்கான் என்பவரை பொறுப்பாளராக நியமனம் செய்தார். கி.பி.1678–ஆம் ஆண்டு

சத்ரபதி சிவாஜி செஞ்சியை கைப்பற்றினார். சிவாஜிக்குப் பிறகு இராஜபுத்திர படை தளபதியான சொரூப்சிங் கட்டுப்பாட்டில் செஞ்சி இருந்தது. இவருக்குப்பிறகு இவரது மகன் இராஜா தேசிங்கு செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஆற்காட்டு நவாப் சாதக்துல்லாக்கான் செஞ்சி மீது படையெடுத்து ராஜாதேசிங்கை தோற்கடித்து கொன்றார். செஞ்சி ஆற்காட்டுடன் இணைக்கப்பட்டது. இராஜா தேசிங்கின் மனைவி "சதி" மேற்கொண்டு உயிர் துறந்தார். அவரது நினைவாக "இராணிப்பேட்டை" நகரம் உருவாக்கப்பட்டது. இவ்வாறு செஞ்சியில் நாயக்கர் ஆட்சி முடிவுக்கு வந்தது.

### நாயக்கர்கள் கீழ் தமிழகம் ஆட்சி முறை

நாயக்கர்கள் தமிழகத்தில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய நகரங்களை தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இதுவே நாயக்கர் காலம் என அழைக்கப்படுகின்றது. நாயக்கர்களின் கீழ் தமிழகம் பல்வேறு துறைகளில் வளர்ச்சி கண்டது. நாயக்கர்கள் சிறந்த நிர்வாக முறையை ஏற்படுத்தினர். நாட்டின் தலைவராக அரசர் கருதப்பட்டார். அவருக்கு உதவியாக அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டனர். பேரரசு பல மாநிலங்களாகவும், மண்டலங்களாகவும், சீமைகளாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. "பாளையப்பட்டு முறை" நடைமுறையில் இருந்தது. அரசின் முக்கிய வருவாய் நிலவரி ஆகும்.

### சமுதாய, பொருளாதார நிலை

நாயக்கர் ஆட்சியின் கீழ் வர்ணாஸ்ரம அடிப்படையிலான சமுதாய முறை காணப்பட்டது. ஜாதி முறை கடுமையாக காணப்பட்டது. பிராமணர்கள் உயர்நிலை பெற்றிருந்தனர். வலங்கை, இடங்கை போராட்டம் தொடர்ந்து காணப்பட்டது. கிராம மக்கள் அறியாமை மற்றும் வறுமையில் காணப்பட்டனர். வைகை தாமிர பரணி ஆற்றுப்படுகை தவிர பிற பகுதிகள் வளம் குறைந்த வறட்சிப்பகுதியாக இருந்தன. பொருளாதாரம், வேளாண்மையை மையமாகக் கொண்டிருந்தது. வேளாண்மை, பருவ மழையை நம்பி இருந்தது. ஏரிகள், கிணறுகள், கால்வாய்கள், ஆறுகள் போன்றவை நீர் பாசனத்திற்கு உதவின.

### கலை–கட்டடக்கலை

நாயக்கர்கள், கலை, கட்டடக்கலை பிரியர்களாக விளங்கினர். கலை, கட்டடக்கலையை போற்றி வளர்த்தனர். மதுரை நாயக்கர்கள் திருநெல்வேலியில் அமைந்துள்ள கிருஷ்ணாபுரம் கோவில் மற்றும் நெல்லையப்பர் கோவில், தென்காசியில் உள்ள காசி விஸ்வநாதர் கோவில், இராமேஸ்வரத்திலுள்ள இராமநாத சாமி கோவில் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம் ஆகியவை மதுரை நாயக்கர்களின் கலை ஆர்வத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கிருஷ்ணப்ப நாயக்கர் மதுரை வெள்ளியம்பலம், வடக்கு மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், மூர்த்தி அம்மன் மண்டபம், சூரிய மண்டபம், வீரப்ப மண்டபம் ஆகியவற்றை புதுப்பித்தார். மதுரை மீனாட்சி கோவில் மண்டபத்திற்கு பொன்னாலான தகடுகளைப் பதித்தார். திருமலை நாயக்கர் மதுரையில் புது மண்டபம், மாரியம்மன் தெப்பக்குளம், நாயக்கர் மஹால் ஆகியவற்றை கட்டினார். திருமலை நாயக்கர் மகால் இத்தாலிய சிற்பியின் மேற்பார்வையில் கட்டப்பட்டது. திராவிட, இஸ்லாமிய மற்றும் ஐரோப்பிய கலை அம்சங்களை

கொண்டுள்ளது. இராணி மங்கம்மாள் , மங்கம்மாள் சத்திரத்தை கட்டியுள்ளார்.

### தஞ்சாவூர் நாயக்கர்

சேவப்ப நாயக்கர் தனது ஆட்சிக் காலத்தில் பல்வேறு கோவில்களை புதுப்பித்தார். தஞ்சாவூரில் உள்ள சிவகங்கை கோட்டை இவரால் கட்டப்பட்டது. திருவண்ணாமலை மண்டபம், விருதாச்சல கோவில் மண்டபம் போன்றவை இவரால் கட்டப்பட்டது ஆகும். அச்சுதப்ப நாயக்கர் ஸ்ரீரங்கத்திலுள்ள இரங்கநாதர் கோவிலுக்கும், இராமேஸ்வரம் கோவிலுக்கும் ஏராளமான நன்கொடைகளை வழங்கினார். திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் கோவிலின் கோபுரத்தையும் கட்டிமுடித்தார்.

### செஞ்சி நாயக்கர்

செஞ்சியை ஆட்சி புரிந்த அச்சுத இராமபத்ர நாயக்கர் திருவண்ணாமலை கோவிலுக்கு சுற்றுசுவர்களையும், மாபெரும் கோபுரத்தையும் கட்டி முடித்தார். திண்டிவனத்தில் விஷ்ணு கோவிலையும் கட்டியுள்ளார். வெங்கடப்ப நாயக்கர் திருவண்ணாமலை மாபெரும் கோபுரத்தை கட்டிமுடித்தார். மேலும் இவர் சித்தாமூரில் சமணர்கள் கோவில்களைக் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கினார்.

### இலக்கியம்

இலக்கிய வளர்ச்சிக்கு நாயக்கர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். திருமலை நாயக்கரின் சிதம்பர புராணம், பரஞ்ஜோதியாரின் சிதம்பர பட்டியல், ஹரிதாசரின் இருசமய விளக்கம், உமறுப்புலவரின் சீறாப்புராணம், குமரகுருபரின் கந்தர் கலிவெண்பா, திருவேங்கடம் எழுதிய மெய்ஞான விளக்கம் ஆகியவை இவர்களின் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட சிறந்த நூல்கள் ஆகும். இவ்வாறு நாயக்கர்களின் காலம் தமிழக வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தினைப் பெற்றுள்ளது.

## பயிற்சி

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பாளையக்காரர் முறையை புகுத்தியவர் ________ ஆவார்.

   அ) விஸ்வநாத நாயக்கர் ஆ) இராணி மங்கம்மாள் இ) ரகுநாத நாயக்கர்

2. அருணாச்சலேஸ்வர ஆலய கோபுரத்தை கட்டி முடித்தவர்________ ஆவார்.

   அ) திருமலை நாயக்கர் ஆ) அச்சுதப்பர் இ) விஜயராகவா

3. மூக்கறுப்புப் போர்________ காலத்தில் நடந்தது.

   அ) கிருஷ்ணப்ப நாயக்கர் ஆ) இராணி மீனாட்சி இ) திருமலை நாயக்கர்

4. உமறுப்புலவர் எழுதிய நூல்________ ஆகும்.

   அ) கந்தர் கலிவெண்பா ஆ) இருசமய விளக்கம் இ) சீறாப்புராணம்

## II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. விஸ்வநாத நாயக்கர் புகுத்திய வரி ________ ஆகும்.
2. மூன்று வயது விஜயரங்க சொக்கநாதரின் பாதுகாப்பாளர் ________ஆவார்
3. இராணி மீனாட்சியை திருச்சி அரண்மனையில் சிறை வைத்தவர் ________ ஆவார்.
4. விஜயநகர பேரரசருக்கு தலைக்கோட்டை போரில் உதவியவர்________ஆவார்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. திருமலை நாயக்கர் | மெய்ஞான விளக்கம் |
| 2. பரஞ்ஜோதியார் | சீறாப்புராணம் |
| 3. திருவேங்கடா | சிதம்பர புராணம் |
| 4. உமறு புலவர் | சிதம்பர பட்டியல் |

## IV) குறுகிய விடையளி.

1. இராணி மங்கம்மாள் பற்றி சிறு குறிப்பு வரைக
2. இராணி மீனாட்சிக்கும், சந்தா சாகிப்பிற்கும் இடையே ஏற்பட்ட பூசல் பற்றி ஓரிரு வரிகளில் விடையளி.
3. இராணிப்பேட்டை எவ்வாறு உருவாகியது ?

## V) விரிவான விடையளி.

1. திருமலை நாயக்கரின் ஆட்சி பற்றி விவரிக்கவும்.
2. கலை, கட்டிடக்கலை மற்றும் இலக்கியத்துறைகளில் நாயக்கர்களின் கொடையினை விளக்குக.

# தஞ்சாவூரில் மராத்தியர்கள் ஆட்சி (கி.பி.1676–கி.பி.1856)

மதுரையை ஆட்சி செய்த சொக்கநாத நாயக்கர் தஞ்சாவூர் மீது படையெடுத்து அதனைக் கைப்பற்றினார். தனது ஒன்றுவிட்ட சகோதரர் அழகிரி என்பவரை தஞ்சாவூரின் ஆளுநராக நியமனம் செய்தார். ஆனால் இவர் சொக்கநாதருடன் கருத்து வேறுபாடு கொண்டு செங்கமலதாஸ் என்பவரை தஞ்சாவூர் நாயக்கராக நியமனம் செய்யும்படி பிஜப்பூர் சுல்தானின் உதவியைக் கோரினார். எனவே பிஜப்பூர் சுல்தான் வெங்கோஜி என்பவரை தஞ்சாவூரைக் கைப்பற்ற அனுப்பினார். இவர் தஞ்சாவூரைக் கைப்பற்றி மராத்தியர்கள் ஆட்சியை ஏற்படுத்தினார். கி.பி.1676 முதல் கி.பி.1856 ஆம் ஆண்டு வரை தஞ்சாவூரை மராத்தியர்கள் ஆட்சிபுரிந்தனர்.

## வெங்கோஜி

ஷாஜி பான்ஸ்லே மற்றும் துக்காபாயின் மகன் வெங்கோஜி இவர் எக்கோஜி என்றும் அழைக்கப்பட்டார். தென்னிந்தியாவின் செல்வத்தை கொள்ளையடிக்கவும், இந்து மதத்தை தென்னிந்தியாவில் பரப்பவும் சிவாஜி கர்நாடகப் பகுதி மீது படையெடுப்பை மேற்கொண்டார். கோல்கொண்டா மற்றும் செஞ்சியைக் கைப்பற்றி தஞ்சாவூரை நோக்கிப் படையெடுத்து சென்றார். வெங்கோஜியிடம் தனக்கு உரிய பங்கினை அளிக்கும்படி கோரினார். ஆனால் அக்கோரிக்கை மறுக்கப்பட்டது. எனவே சிவாஜி கொள்ளிடத்தைக் கைப்பற்றினார். சாந்தாஜி என்பவரை பிரதிநிதியாக நியமனம் செய்தார். பிறகு வெங்கோஜி இழந்த பகுதிகளை திரும்பப் பெற்று தஞ்சாவூரை ஆட்சிபுரிந்தார்.

## இரண்டாம் ஷாஜி

வெங்கோஜியின் மகன் இரண்டாம் ஷாஜி திறமையான அரசராவார். மதுரையைப் பேரரசுடன் இணைத்துக் கொண்டார். கவிஞர்களைப் போற்றி ஆதரித்தார். மருத்துவமனைகளை நிறுவி ஹைதராபாத் மற்றும் அரேபியாவிலிருந்து மருத்துவர்களை வரவழைத்து மக்கள் நலன் காத்தார். கிறித்துவர்களுக்கு எதிராக செயல்பட்டார். இவருக்குப் பிறகு இவரது சகோதரர் முதலாம் சரபோஜியும் அவரைத் தொடர்ந்து துக்காஜி என்பவரும் தஞ்சாவூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். துக்காஜி வாரிசின்றி இறந்தார் எனவே அவரது மரணத்திற்கு பிறகு வாரிசுரிமைப் போர் ஏற்பட்டது. இப்போரில் கர்நாடக நவாப் ஆதரவோடு பிரதாப்சிங் என்பவர் தஞ்சாவூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவர் தஞ்சாவூரில் அமைதி மற்றும் ஒற்றுமையை நிலை நாட்டினார்.

கி.பி.1763–ஆம் ஆண்டு துல்ஜாஜி என்பவர் தஞ்சாவூரின் ஆட்சியாளராகப் பொறுப்பேற்றார். இவரது ஆட்சிக் காலத்தில் தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுத்திற்கு இடையே எல்லைத் தகராறு ஏற்பட்டது. இராமநாதபுர மன்னர் ஆற்காட்டு நவாப்பின் உதவியை நாடினார். இதனால் ஆற்காட்டு நவாப் தஞ்சாவூர் மீது படையெடுத்தார். தஞ்சாவூர் ஆற்காட்டு நவாப்பின் கட்டுப்பாட்டில் வந்தது. இது ஆங்கிலக்

கிழக்கிந்திய கம்பெனியின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. கம்பெனி நிர்வாகிகள் தஞ்சாவூரின் ஆட்சியாளராக துல்ஜாஜியை அமர்த்தும்படி சென்னை கவர்னருக்கு ஆணையிட்டனர். துல்ஜாஜி மீண்டும் கம்பெனியின் ஆதரவோடு தஞ்சாவூரின் ஆட்சியாளரானார். அங்கு ஆங்கிலப் படை ஒன்று அமைதி காக்க நிறுத்தப்பட்டது.

### அமர்சிங் மற்றும் இரண்டாம் சரபோஜி

இரண்டாம் சரபோஜி துல்ஜாஜியின் தத்துப் பிள்ளையாவார். 1787–ஆம் ஆண்டு தஞ்சாவூரின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அமர்சிங் இவரது பாதுகாப்பாளர் ஆனார். தத்துப் பிள்ளையான இரண்டாம் சரபோஜி சட்டப்படி அரசராக முடியாது என்று அமர்சிங் அரியணைக்கு உரிமை கோரினார். ஆங்கிலேயர்கள் இவருக்கு ஆதரவு கொடுத்தனர். இதனால் அமர்சிங் அரசரானார். இவர் சர்வாதிகார முறையில் ஆட்சி புரிந்தார். எனவே கவர்னர் ஜெனரல் காரன்வாலிஸ் அமர்சிங்கைப் பதவி நீக்கம் செய்து விட்டு மீண்டும் இரண்டாம் சரபோஜியை அரசராக்கினார். வெல்லெஸ்லி பிரபு காலத்தில் இரண்டாம் சரபோஜி ஆங்கிலேயரிடம் ஓய்வூதியம் பெற்றார். தஞ்சாவூரின் விவகாரங்களை ஆங்கிலேயர்கள் கட்டுப்படுத்தினார்.

இரண்டாம் சர்போஜியின் மகன் இரண்டாம் சிவாஜி 1799–ஆம் ஆண்டு தஞ்சாவூரின் ஆட்சிப் பொறுப்பை பெற்றார். இவரது ஆட்சி 1855–வரை நீடித்தது. இவருக்கு ஆண் வாரிசு கிடையாது, எனவே நாடு இழக்கும் கொள்கையின்படி தஞ்சாவூர் 1856–ஆம் ஆண்டு ஆங்கிலேயப் பேரரசுடன் இணைக்கப்பட்டது. இதனால் தஞ்சாவூரில் மராத்தியர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

### மராத்தியர்கள்கீழ் தமிழகம்

கி.பி.1676 முதல் கி.பி.1856 வரை தஞ்சாவூரில் மராத்தியர்களின் ஆட்சி நடைபெற்றது. தமிழகத்தில் வளமான நிலப்பகுதியைக் கொண்டது தஞ்சாவூர். மக்களின் நலனில் அக்கரை கொண்டு மராத்தியர்கள் ஆட்சி புரிந்தனர். நிர்வாகத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தனர். வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்ததது. நிர்வாகத்தில் புரோகிதர்கள் உயர்வான இடத்தை பெற்றுத் திகழ்ந்தனர். மராத்திய மன்னர்கள் அறிஞர்களைப் போற்றி ஆதரித்தனர். ராம்பத்ர தீட்சிதர், பாஸ்கர தீட்சிதர் போன்றோர் சிறந்த சமஸ்கிருத கவிஞர்கள் வாழ்ந்து வந்தனர். ஆந்திர காளிதாசர் என்று போற்றப்பட்ட அளுரிக் குப்பனா சிறந்த தெலுங்கு கவிஞராக விளங்கினார். துல்ஜாஜி என்பவர் இவரைப் போற்றி ஆதரித்தார். துல்ஜாஜி ஓவியம், இசை, தத்துவம், வானவியல் மற்றும் நடனத்தில் அதிக ஆர்வம் காட்டினார். இரண்டாம் சரபோஜி என்பவரால் தஞ்சாவூரில் சரஸ்வதி மஹால் கட்டப்பட்டது. இது உயர்க்கல்வி மற்றும் ஆய்வுமையமாகத் திகழ்கிறது. தென்னிந்தியாவில் மிகப்பெரிய நூலகமாக விளங்குகிறது. இங்கு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளின் சிறந்த நூல்களும் மற்றும் ஓலைச்சுவடிகளும் ஏராளமாக உள்ளன. இவ்வாறு மராத்தியர்கள் ஆட்சி காலத்தில் தஞ்சாவூர் பல வகைகளில் சிறப்புற்று விளங்கியது.

### பாளையக்காரர் புரட்சி (கி.பி.1799)

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மொகலாயர்கள் தென்னிந்

தியாவில் தங்களுடைய மேலாண்மையை ஏற்படுத்தினர். ஆற்காட்டை ஆண்ட நவாப் மொகலாயர்களின் பிரதிநியாகச் செயல்பட்டார். பாளையக்காரகளிடமிருந்து வரி வசூல் செய்யும் உரிமையையும் பெற்றிருந்தார். ஆனால் பாளையக்காரர்களிடம் முறையாக வரி வசூல் செய்ய முடியாததினால் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியிடம் கடன் பெற்றார். கி.பி.1792–ஆம் ஆண்டு ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் ஆற்காட்டு நவாப்போடு ஓர் உடன்படிக்கையை செய்து கொண்டது. அதன்படி பாளையக்காரர்களிடம் வரி வசூல் செய்யும் உரிமையை ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் பெற்றது. பாளையக்காரர்கள் இதனை கடுமையாக எதிர்த்தனர். கட்டபொம்மன் ஆஙகிலேயரின் அடக்கு முறையை எதிர்த்தார். ஆங்கிலேயர்களுக்கும் கட்டபொம்பனுக்கும் விரோதம் வளர்ந்தது.

## வீரபாண்டிய கட்டபொம்மன்

கட்டபொம்மனின் முன்னோர்கள் ஆந்திராவிலிருந்து குடி பெயர்ந்து பதினோராம் நூற்றாண்டில் தமிழகத்தில் குடியேறினார்கள். பாண்டிய பேரரசின்கீழ் ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன், நிலமானியதாரராக வீரபாண்டிய புரத்தை ஆட்சி செய்தார். பாஞ்சாலங் குறிச்சி அதன் தலைநகராக விளங்கியது. நாயக்கர் காலத்தில் இவர் பாளையக்காரராக செயல்பட்டார். இவரின் மறைவிற்குப் பிறகு அவர் மகன் வீரபாண்டிய கட்டபொம்மன் பாளையக்காரர் ஆனார்.

கி.பி.1761–ஆம் ஆண்டு பிறந்த வீரபாண்டிய கட்டபொம்மன் கி.பி.1790–ஆம் ஆண்டு பாளையக்காரர் ஆனார். இவரின் சகோதரர் ஊமைத்துரை மனைவி ஜெக்கம்மாள் ஆவார்கள்.



வீரபாண்டிய கட்டபொம்மன்

வீரபாண்டிய கட்டபொம்மன் முறையாக வரி செலுத்தாததால், பெரும் தொகை பாக்கி விழுந்தது. எனவே இராமநாதபுரத்தை ஆட்சி செய்த ஆங்கில ஆட்சியர் ஜாக்சன், தன்னை நேரில் சந்தித்து வரி பாக்கியை கட்டுமாறு கட்ட பொம்மனுக்கு கடிதம் எழுதினார். கட்டபொம்மன் அதனை ஏற்க மறுத்து "வானம், பொழிகிறது; பூமி விளைகிறது" நாங்கள் ஏன் ஆங்கிலேயர்களுக்கு வரி கட்ட வேண்டும் என்றார். இக்கூற்று ஆங்கில ஆட்சியர் ஜாக்சனை கோபமுறச் செய்தது. பிறகு கட்ட பொம்மன் ஆங்கில ஆட்சியரை சந்திக்க எண்ணியபோது திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்த ஆங்கில ஆட்சியர் கட்டபொம்மனை சந்திக்க மறுத்தார். பிறகு 23 நாட்கள் பொறுமைக் காத்த கட்டபொம்மனை அவமதித்ததோடு மட்டுமல்லாமல் கைது செய்யவும் முயன்றார். ஆனால் கட்டபொம்மன் தன் தம்பியின் உதவியோடு தப்பிச் சென்றார்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஆங்கில நிர்வாகத்தை அகற்ற சிவகங்கையை ஆண்ட மருதுபாண்டியர்களோடும்

மற்றும் பல பாளையக்காரர்களோடும் சேர்ந்து கட்டபொம்மன் ஒரு கூட்டமைப்பினை ஏற்படுத்தினார். இச்செயல் ஆங்கிலேயர்களை அதிர்ச்சியுறச் செய்தது. எனவே, ஆங்கிலேயர்கள் கட்டபொம்மனுக்கு எதிராக போர் தொடுத்தனர். ஆங்கிலத் தளபதி பானர்மேன் தலைமையில் பெரும்படை கட்டபொம்மனை தோற்கடிக்க அனுப்பப்பட்டது. திருநெல்வேலியை அடைந்த ஆங்கிலப்படை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டு கள்ளர்பட்டி என்ற இடத்தில் பாளையக்காரர்களை தோற்கடித்தது. கட்டபொம்மனும் அவரது சகோதரரும் புதுக்கோட்டைக்குத் தப்பிச் சென்றனர். ஆனால் எதிர்பாராத விதமாக புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டைமான் கட்டபொம்மனைப் பிடித்து ஆங்கில படைத்தளபதி பானர்மேனிடம் ஒப்படைத்தார். ஆங்கில நிர்வாகம் பெயரளவில் ஒரு விசாரணையை நடத்தி கட்டபொம்மனை குற்றவாளி என அறிவித்து கி.பி.1799–ஆம் ஆண்டு அக்டோபர் 16–ஆம் நாள் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிட்டது. தன்னுயிரை துச்சமென மதித்த அப்பெருமகனின் நாட்டுப்பற்றும் வீரமும் போற்றுதலுக்குரியதாகும். பாளையக்காரர்களின் கிளர்ச்சி அடக்கப்பட்டது, ஆனால் அழிக்கப்படவில்லை.

### தென்னிந்தியப் புரட்சி (கி.பி.1800–கி.பி.1801)

#### புரட்சிக்கான காரணங்கள்

தென்னிந்திய புரட்சி மக்களிடையே இருந்த ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிரான வெறுப்பின் வெளிப்பாடாக அமைந்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி சுதேசி சாம்ராஜ்ஜியங்களின் உள்விவகாரங்களில் தலையிட்டு செயல்பட்டது, மக்களிடையேயும், ஆட்சியாளர்களிடையேயும் வெறுப்பினை ஏற்படுத்தியது. பாளையக்காரர்கள் தங்கள் கௌரவத்தை இழந்தனர். வரி வசூல் செய்வதில் ஆங்கிலேய நிர்வாகம் காட்டிய அடக்குமுறை, வெள்ளையர்களே உயர்ந்தவர்கள் என்ற மனப்பான்மை தென்னிந்திய மக்களை வெறுப்படையச் செய்தது. வெள்ளையர்கள் தங்கள் நலனை முன்வைத்து செயல்பட்டதும் பொருளாதார செழிப்பு ஒன்றையே கவனத்தில் கொண்டு செயல்பட்டதும், மக்களை வெறுப்படையச் செய்தது. கட்ட பொம்மன் தூக்கிலிடப்பட்டதும், அவரின் உறவினர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதும் தென்னிந்திய புரட்சியை தவிர்க்க முடியாததொன்றாக்கியது.

### மருது பாண்டியரும் தென்னிந்திய கூட்டமைப்பும்

சிவகங்கையை ஆட்சி செய்த முத்து வடுகநாத தேவரிடம் பணிபுரிந்த இராணுவ வீரரே மருது பாண்டியர் ஆவார். இவர் தென்னிந்திய புரட்சியின் கதாநாயகன் ஆவார். கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பிறகு அவரின் சகோதரர் ஊமைத்துரைக்கும் மற்றவர்களுக்கும் அடைக்கலம் கொடுத்தவர் இவரே ஆவார். இச்செயல் ஆங்கிலேயர்களுக்குப் பிடிக்கவில்லை. மருது பாண்டியருக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையே மோதல் தவிர்க்க முடியாத ஒன்றாகியது. ஆங்கிலத் தளபதி “அக்னிவ்” தலைமையில் பெரும்படை மருதுபாண்டியருக்கு எதிராக அனுப்பப்பட்டது. நிலைமையின் உக்கிரத்தை உணர்ந்த மருதுபாண்டியர்

ஒரு பிரகடனத்தை வெளியிட்டு இந்தியர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஒன்றிணைக்க முயன்றார். அப்பிரகடனத்தின் ஒரு நகல் திருச்சியிலிருந்த நவாப்பின் கோட்டை வாசலில் ஒட்டப்பட்டது. மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைணவ கோவில் கதவிலும் ஒட்டப்பட்டது. சாதி, சமய வேறுபாடுகளை மறந்து அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராக போராட மக்களுக்கு அழைப்புவிடுத்தார். கி.பி.1801–ஆம் ஆண்டு மே–29–ஆம் நாள் புரட்சியாளர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் போர் மூண்டது. புரட்சியாளர்கள் திண்டுக்கல், இராமநாதபுரம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டனர். அப்போது மருதுபாண்டியர் சிங்கப்புனரி காட்டில் மறைந்து கொண்டனர். துரதிஷ்டவசமாக மருதுபாண்டியர், புதுக்கோட்டை மன்னரால் கைது செய்யப்பட்டு ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டார். 1801–ஆம் ஆண்டு அக்டோபர் 24–ஆம் நாள் மருதுபாண்டியர் தூக்கிலிடப்பட்டார். ஊமைத்துரை நவம்பர்,16,1801–ஆம் ஆண்டு கழுவேற்றப்பட்டார். இவ்வாறு புரட்சி எதிர்பாரத விதமாக வெற்றியை பெற தவறியது.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. எகோஜி ________ என்பவரின் மகனாவார்.

   அ) ஷாஜிபான்சிலே ஆ) சிவாஜி இ) ஷாம்பாஜி

2. சரஸ்வதி மகால் கட்டியவர் ________ ஆவார்

   அ) விஸ்வநாத நாயக்கர் ஆ) திருமலை நாயக்கர் இ) இரண்டாம் சரபோஜி

3. பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட மன்னர்________ஆவார்.

   அ) இரண்டாம் சாஜி ஆ) சேதுபதி இ) கட்டபொம்மன்

4. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடம்________ஆகும்.

   அ) சிவகங்கை ஆ) கயத்தாறு இ) காளையார் கோவில்

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. டல்ஹெளசி ________கொள்கையின்படி தஞ்சாவூரை கைப்பற்றினார்.
2. துல்ஜாஜி________என்ற தெலுங்கு கவிஞரை ஆதாரித்தார்.
3. வீரபாண்டிய கட்டபொம்மனை அவமதித்த ஆங்கில ஆட்சியர்________ஆவார்.
4. வீரபாண்டிய கட்டபொம்மன்________ஆண்டு தூக்கிலடப்பட்டார்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. பாஸ்கர தீட்சிதர் | இராமநாதபுரத்தின் ஆங்கில ஆட்சியாளர் |
| 2. ஜாக்சன் | 1801 |
| 3. தென்னிந்திய கலகம் | ஆங்கில தளபதி |
| 4. பானர்மேன் | தஞ்சை மராத்தியர்களால் ஆதரிக்கப்பட்டவர் |

### IV) குறுகிய விடையளி.

1. இரண்டாம் ஷாஜி பற்றி குறிப்பு எழுதுக.
2. இரண்டாம் சரபோஜி பற்றி குறிப்பு வரைக.
3. பாஞ்சாலங்குறிச்சி போருக்கான காரணங்களை விவரி.

### V) விரிவான விடையளி.

1. வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றி சுருக்கமாக எழுதுக.
2. தென்னிந்திய புரட்சி பற்றி ஓர் கட்டுரை வரைக.

# வேலூர் புரட்சி – கி.பி.1806

கி.பி.1801–ஆம் ஆண்டு தோன்றிய தென்னிந்திய புரட்சி முடிவுற்றாலும், அப்புரட்சி ஏற்படுத்திய அதிர்ச்சி மக்கள் மனதில் இருந்து அழியவில்லை. சென்னை மாகாணத்தில் ஆங்கில கிழக்கிந்திய நிறுவனம் வலிமைமிக்க சக்தியாக உருவெடுத்தது. வில்லியம் பெண்டிங் பிரபு சென்னை மாகாணத்தின் ஆளுநராகவும், ஜான் கிராடக் தலைமை ராணுவ தளபதியாகவும் இருந்தனர். ஜான் கிராடக் அறிமுகப்படுத்திய ராணுவ சிர்திருத்தங்கள் வேலூர் புரட்சிக்கு வித்திட்டது.

## புரட்சிக்கான காரணங்கள்

திப்புசுல்தானின் மரணத்திற்கு பிறகு வேலூர் கோட்டையில் சிறைபடுத்தப்பட்ட திப்புசுல்தானின் உறவினர்களால் இப்புரட்சி மேற்கொள்ளப்பட்டது. இப்புரட்சிக்கு மூலக்காரணமாக விளங்கிய சிப்பாய்கள், பாளையக்காரர்களின் வழி வந்தவர்கள். தமிழ் மற்றும் கன்னட மொழி பேசும் பகுதியைச் சார்ந்தவர்கள். தங்களுடைய உணர்வுகளை பரஸ்பரம் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

இராணுவத்தில் புகுத்தப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகள், புதிய கருவிகள் மற்றும் சிப்பாய்களின் உடைகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் வீரர்களுக்கு வெறுப்பினை அளித்தது. இந்து சிப்பாய்கள் காதணிகள், நெற்றியில் சமயக் குறிகள் இடுதல் போன்றவற்றிற்கு தடை விதிக்கபட்டது. முஸ்லீம்கள் தங்களுடைய தாடி, மீசைகளை குறிப்பிட்ட அளவுதான் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இது வீரர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

தளபதி அக்னியூ என்பவரால் அறிமுகப் படுத்தப்பட்ட புதிய வகை தலைப்பாகை இந்து முஸ்லீம்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் சிப்பாய்கள் ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக வெளிப்படையாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட தலைப்பாகையை அணிய மறுத்த சிப்பாய்களுக்கு 500 முதல் 900 சாட்டையடி தண்டனையாக விதிக்கப்பட்டும் பதவியிலிருந்தும் விலக்கப்பட்டனர்.

## புரட்சியின் நிகழ்வுகள்

ஆங்கில கிழக்கிந்திய கம்பெனிக்கு எதிராக புரட்சியில் ஈடுபட வேண்டும் என்ற இரகசியத்திட்டம், திப்புவின் மைந்தரால் தூண்டப்பட்டது. திப்புவின் மகளின் திருமண நிகழ்ச்சி ஜுலை 9, 1806 – அம் ஆண்டு வேலூர் கோட்டையில் நடைபெற்றது. இந்த திருமண நிகழ்ச்சியில் சிப்பாய்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த திருமண நிகழ்ச்சியின் போது ஜுலை 10–ஆம் நாள் அதிகாலை இந்திய சிப்பாய்கள் திடீரென ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கில சிப்பாய்களையும் தாக்கி, வேலூர் கோட்டையை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். அன்று அதிகாலையில் திப்புவின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டு, திப்புவின் மகன் அரசராக அறிவிக்கப்பட்டார்.

வேலூர் கோட்டையின் வெளியில் இருந்த ஆங்கில தளபதி காட்ஸ், வேலூர் கோட்டை கைப்பற்றபட்ட செய்தியை உடனடியாக ஆற்காட்டில் இருந்த

இராணுவ முகாமிற்கு தெரிவித்தார். படைத் தளபதி கில்லஸ்பி தலைமையில் ஆற்காட்டிலிருந்து இராணுவம் உடனடியாக வேலூருக்கு விரைந்தது. வேலூர் கோட்டை மீண்டும் ஆங்கிலேயரால் மீட்கப்பட்டு ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டில் வந்தது.



வேலூர் கோட்டை

## தோல்விக்கான காரணங்கள்

வேலூர் புரட்சி தோல்வியில் முடிவடைந்தது இதற்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

புரட்சியை நடத்த முறையான தலைமை கிடையாது. கிளர்ச்சி நன்கு திட்டமிடப்படவில்லை. திப்புவின் பிள்ளைகளுக்கு போதுமான போர் பயிற்சி கிடையாது. மேலும் அவர்கள் தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை சிறையில் கழித்தனர். இராணுவ வீரர்களுக்கு இந்திய அரசர்களிடமிருந்து ஆதரவு மற்றும் உதவிகளைப் பெற முடியவில்லை.

## விளைவுகள்

வேலூர் புரட்சி தோல்வியில் முடிவடைந்தது. இருப்பினும் பிற்காலத்தில் இது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது. இந்திய வீரர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர். திப்புவின் குடும்பத்தினர் கல்கத்தாவிற்கு அழைத்து செல்லப்பட்டு ஆறு வருடங்களுக்கு மேலாக அங்கு சிறையில் அடைக்கப்பட்டனர். இந்தியர்களின் நாட்டுப்பற்று மற்றும் ஆங்கிலேயர்களுக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கையும் வெளிப்பட்டன. இப்புரட்சி தோல்வியில் முடிவுற்றது. இருப்பினும் 1857–ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய் புரட்சிக்கு முன்னோடியாக இது அமைந்தது.

## பயிற்சி

I) சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. வேலூர் சிப்பாய் புரட்சி நடைபெற்ற ஆண்டு ________ ஆகும்.
   அ) 1806 ஆ) 1807 இ) 1808
2. சிப்பாய்களை ஆதரித்தவர் ________ ஆவார்.
   அ) ஆங்கில அதிகாரிகள் ஆ) திப்புவின் குடும்பம் இ) இந்திய அரசுகள்
3. புரட்சியின் போது சென்னை மாகாண ஆளுநர் ________ ஆவார்.
   அ) வில்லியம் பெண்டிங் ஆ) காரன்வாலிஸ் இ) இராபர்ட் கிளைவ்

## II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்திய சிப்பாய்கள் ________ அணிய மறுத்ததால் புரட்சி தோன்றியது.
2. புரட்சி நடைபெற்ற போது ________என்பவர் வேலூர் கோட்டையின் வெளியில் இருந்தார்.
3. புரட்சி ________ என்பவரால் அடக்கப்பட்டது.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. திப்புவின் மகன் | கிளர்ச்சியாளர்ள் |
| 2. அக்னியூ | தலைப்பாகை |
| 3. சிப்பாய்கள் | பெண்டிங் |
| 4. சென்னை கவர்னர் | பதேக்ஹைதர் |

## IV) குறுகிய விடையளி.

1. எங்கு, எப்பொழுது புரட்சி தோன்றியது ?
2. வேலூர் சிப்பாய்கள் ஏன் புரட்சியில் ஈடுபட்டனர் ?
3. புரட்சிக்கான உடனடிக் காரணம் யாது ?
4. புரட்சியின் விளைவுகளைக் குறிப்பிடுக.

## V) விரிவான விடையளி.

1. வேலூர் புரட்சிக்கான காரணங்களை விவரி.
2. வேலூர் புரட்சியின் போக்கை விவரி. புரட்சி ஏன் தோல்வி அடைந்தது ?

# புவியியல்

## வள ஆதாரங்கள்

### வளஆதாரங்களும் அதன் வகைகளும்

நமது புவிக்கோள் மூன்று முக்கிய கூறுகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அவை பாறைக்கோளம் அல்லது நிலம், நீர்க்கோளம் அல்லது நீர் மற்றும் வளிக்கோளம் அல்லது புவியைச் சுற்றியுள்ள காற்று மண்டலம் ஆகும். இம்மூன்று கூறுகளும் உயிர்கோளத்திற்கு ஆதாரமாகத் திகழ்கின்றன. மனிதனுக்குத் தேவையான அனைத்தையும் இக்கூறுகள் அளிக்கின்றன. இக்கூறுகளில் காணப்படும் எந்த ஒரு பொருளும் மனிதனுக்குப் பயனளிப்பதாக இருப்பின் அது வளஆதாரம் என அழைக்கப்படுகிறது. இந்த வளஆதாரங்களே ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு முக்கியப்பங்கு வகிக்கின்றன. புவியின் முக்கியமான இயற்கை வள ஆதாரங்களை படம்–1 நமக்குத் தெளிவாக விளக்குகிறது.




படம் –1. இயற்கை வளஆதாரங்கள்

இந்த வளஆதாரங்கள் அவற்றின் பயன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

வளர்ச்சியின் அடிப்படையில் வளஆதாரங்களை, இயலாற்றல் வளஆதாரங்கள் என்றும் வளர்ச்சியுற்ற வளஆதாரங்கள் என்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. மக்களால் பயன்படுத்தப்பட முடியாத சூழலில் உள்ள வளஆதாரங்கள் இயலாற்றல் வளஆதாரங்கள் என அழைக்கப்படுகின்றன. சைபீரியா, அண்டார்டிக்கா போன்ற இடங்களில் காணப்படும் வளஆதாரங்களை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். மனிதர்களால் பயன்படுத்தப்படும் வளஆதாரங்களை வளர்ச்சியுற்ற வளஆதாரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நிலக்கரி, இரும்புத்தாது போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

புதுப்பித்தல் அடிப்படையில், வளஆதாரங்களை புதுப்பிக்க இயலாத அல்லது இருப்பு வளங்கள் என்றும் புதுப்பிக்கக்கூடிய அல்லது வற்றாத வளங்கள் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இன்றைய சூழலில் அழிவுற்றுக் கொண்டிருக்கும் வளஆதாரங்களைப் பாதுகாக்க, பல நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். ஏனெனில் ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாடு அந்நாட்டின் வளஆதாரங்களைச் சார்ந்தே அமைகிறது. உலகளவில் அழிந்துவரும் இத்தகைய வளஆதாரங்களைப் பற்றி விரிவாகக் காண்போம்.

#### புதுப்பிக்க இயலாத வளஆதாரங்கள்

புதுப்பிக்க இயலாத வளஆதாரங்கள் வற்றக்கூடிய

(தீர்ந்துபோகக்கூடிய) வளஆதாரங்கள் என அழைக்கப்படுகிறது. ஏனெனில் இவ்வளங்களின் இருப்பு நிர்ணயிக்கப்பட்டவை ஆகும். இயற்கையில் இவ்வளங்கள் உருவாக எடுத்துக்கொள்ளும் காலத்தைவிட வேகமாக நம்மால் அவ்வளங்கள் நுகரப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, புவியின் கனிம சுரங்கங்களிலிருந்து ஒருமுறை எடுக்கப்பட்ட கனிமவளங்கள் எடுக்கப்பட்டவையே. அவற்றை மீண்டும் நம்மால் உருவாக்கவோ அல்லது திரும்பப்பெறவோ இயலாது. நாம் இப்பொழுது அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் கனிமங்கள் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் படுகின்றன.


- உலோகக்கனிமங்கள்
- உலோகமற்ற கனிமங்கள் மற்றும்
- எரிபொருள் கனிமங்கள்

உலோகக்கனிமங்கள் என்பது உலோகத் தாதுக்கள் அடங்கிய மூலப்பொருட்கள் ஆகும். உலோகமற்ற கனிமங்கள் என்பது உலோகத் தாதுக்கள் அற்ற மூலப்பொருட்கள் ஆகும். எரிபொருள் கனிமங்கள் என்பது ஆற்றலை உருவாக்கும் கனிமங்கள் ஆகும்.

மேற்கூறிய கனிம வகைகளுள் எரிபொருள் கனிமவளம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு அந்நாட்டின் எரிபொருள் கனிமங்களே மிக முக்கியப்பங்கு வகிக்கின்றன. அவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம். தொழிற்சாலைகள், வீடுகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கு எரிபொருள் கனிமங்கள் தேவைப்படுகின்றன. நிலக்கரி, எண்ணெய், இயற்கைவாயு மற்றும் அணுசக்தி கனிமங்கள் ஆகியவை விரைவில் தீர்ந்து போகும் முக்கியமான எரிபொருள் கனிமங்கள் ஆகும்.

### நிலக்கரி

நிலக்கரி பல மில்லியன் வருடங்களாக உருவான கனிமம் ஆகும். எனவே இது 'புதை எரிபொருள்' என அழைக்கப்படுகிறது.





படம் –2 நிலக்கரி உருவாதல்

புவி அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களினால் மிகப்பெரிய பரப்புக் காடுகள் படிவுப் படுகைகளில் புதைந்து போயின. காலப்போக்கில், புவியின் வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக புதைந்து போன தாவரங்கள் நிலக்கரியாக மாற்றம் அடைந்தன (படம்–2).


உலகின் மிக முக்கியமான நிலக்கரி வயல்கள் அமெரிக்க ஐக்கிய நாடுகள் இரஷ்யா, ஜெர்மனி, ஐக்கிய அரசு போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. ஆசியாவின் முக்கிய நிலக்கரி வயல்கள் சீனா மற்றும் இந்தியாவில் உள்ளது. தமிழ்நாட்டில் உள்ள நெய்வேலியில் நிலக்கரி அதிகமாக வெட்டி எடுக்கப்படுகிறது. இங்கு லிக்னைட் அல்லது பழுப்பு நிலக்கரி அதிக அளவில் கிடைக்கிறது (படம்–3).

## உலகின் நிலக்கரி வயல்கள்




படம் 3


## உலகின் முக்கிய எண்ணெய் உற்பத்தி செய்யும் வட்டாரங்கள்




படம் 4

## எண்ணெய் மற்றும் இயற்கை வாயு

பொதுவாக எண்ணெய் கடலுக்கடியிலுள்ள படிவுப்பாறைகளான சேற்றுமண்படிவுகள் (Mudstone), மென்களிகல் (Shale) மற்றும் மணற்பாறை (Sandstone) போன்ற அடுக்குகளில் காணப்படும் (படம்.5).




படம்–5 எண்ணெய் மற்றும் இயற்கை வாயு உருவாகுதல்

புவியின் அடியில் புதைந்துள்ள தாவரம் மற்றும் சுண்ணாம்பு ஓடுள்ள விலங்குகளின் படிமங்கள் புவியின் வெப்பம் மற்றும் அழுத்தத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. இவை எண்ணெயாக மாறி பாறை இடுக்குகளிலும், பாறைத் துளைகளிலும் காணப்படுகிறது. இந்த எண்ணெய் அடுக்கிற்குமேல் லேசான ஹைட்ரோ கார்பன், இயற்கைவாயு வடிவில் காணப்படுகிறது.

எண்ணெய்ப்படிவுகள் நிலப்பகுதிகளிலும், (Onshore) கடல் பகுதிகளிலும் (Offshore) காணப்படுகின்றன. எடுத்துக்காட்டுகள்: தென்மேற்கு ஆசியாவின் நிலப்பகுதிகளில் காணப்படும் எண்ணெய் வயல்கள் மற்றும் வடகடலின் கண்டத்திட்டு




படம்–6. எண்ணெய் வயல்கள்– மும்பை ஹை

பகுதிகளில் காணப்படும் எண்ணெய் வயல்கள். (படம் 4)

இந்தியாவில் முக்கியமான எண்ணெய் வயல்கள் அஸ்ஸாம் நிலப்பகுதியில் காணப்படுகின்றன. இந்தியாவின் மிகப்பெரிய 'மும்பை ஹை' என்னும் எண்ணெய் வயல், கடற்பகுதியில் அமைந்துள்ளது (படம்.6). தமிழ்நாட்டில் காவிரி டெல்டா பகுதிகளில் எண்ணெய் வளம் கண்டறியப்பட்டுள்ளது.

## அணுசக்திக் கனிமங்கள்

யுரேனியம், தோரியம் போன்ற கனிமங்கள் அணுசக்தியை உற்பத்தி செய்யப் பயன்படுகின்றன. நமீபியா, கஜகஸ்தான் மற்றும் கனடா போன்ற நாடுகளில் யுரேனியம் அதிக அளவில் காணப்படுகிறது. இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் கேரள கடற்கரை மணற்பரப்புகளில் இல்மனைட் அதிகளவு காணப்படுகிறது. உலகிலேயே அதிகளவு (30%) அணுசக்தியை உற்பத்தி செய்யும் நாடு அமெரிக்க ஐக்கிய நாடு ஆகும். அணுசக்தி எரிபொருளை அதிகளவில் (75%) பயன்படுத்தும் நாடு பிரான்சு ஆகும்.

## இந்தியாவின் அணுசக்தி நிலையங்கள்


சென்னை, இராஜஸ்தான், காய்கா, தாராப்பூர், காக்ராபார், நரோரா ஆகிய இடங்களில் அணுமின் நிலையங்கள் உள்ளன.

## புதுப்பிக்கக்கூடிய வளஆதாரங்கள்

புதுப்பிக்கக்கூடிய வளஆதாரங்கள் அதிமாக காணப்படுவதுடன் தொடர்ந்து இயற்கையாகவே புதுப்பிக்கப்படுகிறது. இந்த வளங்களை நாம் பயன்படுத்திக்கொண்டே இருந்தாலும், அவை நமக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. எடுத்துக்காட்டு: **காற்றாற்றல்.** புதுப்பிக்கக்கூடிய வளஆதாரங்கள் இன்று மிக முக்கிய வளங்களாகக் கருதப்படுகின்றன.

## நீர் மின்சக்தி


நீர் மின்சக்தி என்பது புதுப்பிக்கக்கூடிய வளஆதாரங்களுள் மிக வளர்ச்சியடைந்த வளமாகும்.



படம் – 7 (அ) யாங்டிசி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள முப்பள்ளத்தாக்கு அணை

இது நீர் விழும் பகுதிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. உலகில் மிகப்பெரிய ஆறுகள் அதிகமாக உள்ள பகுதிகளில் நீர் மின்சக்தி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. சீனாவில் உள்ள யாங்டிசி ஆற்றின் குறுக்கே அமைந்திருக்கும் **'முப்பள்ளத்தாக்கு அணையில்'** உலகின் மிகப்பெரிய நீர் மின்சக்தி நிலையம் அமைந்துள்ளது. (படம்–7 (அ) மற்றும் 7 (ஆ))

இந்தியாவின் மிகப்பெரிய நீர் மின்சக்தி நிலையம் பக்ராநங்கல் அணையில் உள்ளது.




படம் – 7 (ஆ)
யாங்டிசி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள முப்பள்ளத்தாக்கு அணை

## சூரிய ஆற்றல்

சூரிய ஆற்றல் வீடுகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களில், நீர் சூடாக்குதல் போன்ற பல வழிகளில் பயன்படுத்தப்படுகிறது. ஒளிமின் வோல்டா மின்கலம் (Photo voltic cells) சூரிய சக்தியை சேமிப்பதற்கு தேவைப்படுகிறது. உலகில் அதிக அளவு சூரிய ஆற்றலை உற்பத்தி செய்யும் நாடு ஜெர்மனி ஆகும்.

அயனமண்டல சூழல் சூரிய ஆற்றலை மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. ஆனால் சூரிய ஆற்றலை சேகரிக்கப் பயன்படும் ஒளிமின் வோல்டா மின்கலத்தினை உற்பத்தி செய்யும் செலவு அதிகமாதலால் சூரிய ஆற்றலை இங்கு அதிக அளவு உற்பத்தி செய்ய இயலவில்லை. அயனமண்டலத்தில் இருக்கும் வளர்ந்துவரும் நாடுகளில் இச்சூழல் நிலவுகிறது.

## காற்று ஆற்றல்

காற்று வேகமாக தொடர்ந்து வீசும் பகுதிகளில் காற்றாற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு

விசைப்பொறிஉருளை (Turbine) மிகவும் பயன்படுகிறது.



படம்–8. காற்றாலைகள்–ஆரல்வாய்மொழி

ஐரோப்பா கண்டம் காற்று ஆற்றலை அதிக அளவில் பயன்படுத்துகிறது. டென்மார்க்கின் 20% மின்சாரம் காற்று ஆற்றல் மூலமாகப் பெறப்படுகிறது. இந்தியாவில் மகாராட்டிரம் மற்றும் தமிழ்நாட்டில் காற்று ஆற்றல் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழி என்னும் பகுதியில் உலகின் மிகப் பெரிய காற்றாலை நிறுவனம் உள்ளது (படம்–8).

### உயிரி ஆற்றல்

மரங்கள், பயிர்கள், வேளாண் மற்றும் விலங்குகளிலிருந்து கிடைக்கும் கழிவுப் பொருட்கள் உயிரி ஆற்றலுக்கு முக்கிய ஆதாரமாகத் திகழ்கின்றன.



படம் 9 ஆமணக்கு செடி

இவ்வனைத்து ஆதாரங்களில் மர எரிபொருளே (விறகு) வளரும் நாடுகளில் மிக முக்கியமாகத் திகழ்கிறது. சாண எரிவாயு அல்லது மீத்தேன் மாட்டுச் சாணத்திலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்பொழுது உயிரி எரிபொருள் கரும்பிலிருந்தும், ஆமணக்கு வகை தாவரங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படுகின்றன (படம்–9).

### வள ஆதாரங்களின் பாதுகாப்பு

மனிதர்களின் வாழ்வு மற்றும் முன்னேற்றம் ஆகியவை புவியின் இயற்கை வள ஆதாரங்களைச் சார்ந்து இருப்பதால், அத்தகைய வளத்தை பயன்படுத்துதல் அவசியம். மனிதர்களால் புதுப்பிக்க இயலாத வள ஆதாரங்களை மிக கவனத்துடன் கையாள வேண்டும். ஏனெனில் அவ்வளங்களைத் திருப்பப்பெற இயலாது. புதுப்பிக்கக்கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்த சிறந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அவசியமாகிறது.

மனிதர்கள் தனது வாழ்க்கைக்கு வள ஆதாரங்களையேச் சார்ந்து உள்ளனர். ஓர் இடத்தில் கிடைக்கப்பெறுகிற வள ஆதாரங்களைப் பொறுத்தே மனிதர்களின் தொழில்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இயற்கையில் காணப்படும் எந்த ஒரு பொருளும் மனிதர்களுக்கு பயனளிப்பதாக இருப்பின், அது __________ எனப்படும்.
2. புவியின் கனிமச் சுரங்கங்களிலிருந்து ஒரு முறை வெட்டி எடுக்கப்பட்டதை மீண்டும் நம்மால் __________ இயலாது.
3. ஒரு நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு __________ மிக முக்கிய பங்கு வகிக்கிறது.
4. யுரேனியம் ஒரு __________ கனிமமாகும்.
5. __________ மண்டலம் சூரிய ஆற்றலை மிக அதிக அளவில் உற்பத்தி செய்ய ஏதுவாக உள்ளது.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மனிதர்களால் பயன்படுத்தப்படும் வள ஆதாரங்கள்.

   அ) வளர்ச்சியுற்ற வளம் ஆ) இயலாற்றல்வளம் இ) போக்குவளம்

2. கனிமங்கள் வளங்கள் என்பவை.

   அ) புதுப்பிக்கக்கூடிய வளங்கள் ஆ) புதுப்பிக்க இயலாத வளங்கள் இ) உயிரியல் வளங்கள்

3. காற்று ஆற்றலை அதிகமாகப் பயன்படுத்தும் கண்டம்

   அ) ஐரோப்பா ஆ) தென் அமெரிக்கா இ) அண்டார்டிகா

4. நமது மாநிலத்தில் வெட்டியெடுக்கப்படும் நிலக்கரி.

   அ) பழுப்பு நிலக்கரி ஆ) ஆன்த்ரசைட் இ) கிராபைட்

5. இந்தியாவின் மிகப் பெரிய நீர் மின்சக்தி நிலையம் அமைந்துள்ள இடம்.

   அ) பக்ராநங்கல் ஆ) மேட்டூர் இ) தாமோதர்

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. வடகடல் | அணுசக்தி |
| 2. ஆரல்வாய் மொழி | எண்ணெய் வயல்கள் |
| 3. எண்ணெய் மற்றும் நிலக்கரி | யாங்டிசி |
| 4. ‘முப்பள்ளத்தாக்கு அணை’ | புதை எரிபொருள் |
| 5. தோரியம் | காற்றாலை |

## IV) சுருக்கமான விடை தருக.

1. குறிப்பு எழுதுக.

    அ) புதுப்பிக்க இயலாத வளங்கள்

    ஆ) இயலாற்றல் வள ஆதாரங்கள்

2. காற்றாலை பற்றி எழுதுக.

3. வளங்களை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்த வேண்டியதன் காரணம் யாது ?

## V) விரிவான விடை தருக.

1. நிலக்கரி மற்றும் எண்ணெய் உருவாதல் பற்றி விளக்குக.

2. புதுப்பிக்கக்கூடிய வள ஆதாரங்களைப் பற்றி எழுதுக.

## VI) செய்முறை பயிற்சி.

1. உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகளை உலக வரைபடத்தில் குறிக்கவும்.

2. இந்தியா மற்றும் நெதர்லாந்து நாடுகளின் காற்றாலை பற்றிய படங்களை சேகரிக்கவும்.

# வளஆதாரங்களும் பொருளாதார நடவடிக்கைகளும்

மனிதர்கள் வளஆதாரங்களை சார்ந்தே வாழ்கின்றனர். இவ்வளஆதாரங்கள் அல்லது இயற்கைவளங்கள் புவியில் சீரற்று காணப்படுகின்றது. எனவே கிடைக்கும் வளஆதாரங்களுக்கு ஏற்ப மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன.

புவியில் மனிதர்களின் தொழில்களை வெவ்வேறு பகுதிகளில் கிடைக்கும் வளஆதாரங்களே நிர்ணயிக்கின்றன. அவற்றுள் உணவு சேகரித்தல், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், சுரங்கத்தொழில், உதிரிபாகங்களை ஒன்றிணைத்தல், வியாபாரம் போன்ற பல தொழில்கள் அடங்கும். இத்தகைய தொழில்களால் மனிதர்கள் பொருளாதாரப் பயனை அடைகின்றனர். எனவே, இத்தகைய மனிதர்களின் நடவடிக்கைகள் 'பொருளாதார நடவடிக்கைகள்' என்று அழைக்கப்படுகிறது.

இத்தொழில்களை, இதன் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் முதல்நிலைத் தொழில்கள், இரண்டாம் நிலைத்தொழில்கள், மூன்றாம் நிலைத்தொழில்கள், நான்காம் நிலைத்தொழில்கள் மற்றும் ஐந்தாம் நிலைத்தொழில்கள் என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## முதல்நிலைத் தொழில்கள்

இம்முதல்நிலைத் தொழில்களில் மனிதர்கள் இயற்கை வளஆதாரங்களோடு நேரிடையாக இணைந்து செயல்படுகின்றனர். இவற்றை பழமையான தொழில் நடவடிக்கை எனலாம். உணவு சேகரித்தல், விலங்குகளை வேட்டையாடுதல், கால்நடைகளை மேய்த்தல், கனிமங்களை வெட்டியெடுத்தல், மீன்பிடித்தல், மரம்வெட்டுதல், வேளாண்மை இவையனைத்தும் முதல்நிலைத் தொழில்கள் எனவும், இத்தொழில்களில் ஈடுபடுபவர்களை 'சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Red collar workers) என்று அழைக்கின்றோம்.

## இரண்டாம்நிலைத் தொழில்கள்

மனிதர்கள் மூலப்பொருட்களை உற்பத்தி முறைகளுக்கு உட்படுத்தி அவற்றை முடிவுற்ற பொருளாக மாற்றுவதன் மூலம் மூலப்பொருள்களின் பயன்பாட்டினையும், மதிப்பினையும் பெருக்குகின்றனர். கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் சர்க்கரை, இரும்புத் தாதுவிலிருந்து கிடைக்கும் இரும்பு எஃகு போன்றவை இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இந்த உற்பத்தி செயல்கள் இரண்டாம்நிலைத் தொழில்கள் என்று அழைக்கப்படுகிறது. இரண்டாம்நிலைத் தொழில்புரியும் பணியாளர்கள் 'நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள்' (Blue Collar workers) என அழைக்கப்படுகின்றனர்.

## மூன்றாம் நிலைத் தொழில்கள்

இரண்டாம்நிலைத் தொழில்களின் வளர்ச்சியை மேம்படுத்தும் வணிகம், போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு சேவைகளை மூன்றாம் நிலைத்தொழில்கள் என அழைக்கப்படுகின்றன. தொழில்நுட்பத்தில் சிறப்பு மிக்க தொழில் நுட்ப பணியாளர்களும், வங்கிப் பணியாளர்களும் (படம் – 10)

மூன்றாம்நிலைத் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மூன்றாம்நிலைத் தொழில்களில் பணிபுரிவோரை **'வெளிர்சிவப்பு கழுத்துப்பட்டை பணியாளர்கள்'** (Pink Collar workers) என்று அழைக்கிறோம்.



படம்–10 வங்கி சேவை

## நான்காம்நிலைத் தொழில்கள்

கல்வித்துறை, (படம்–11) நீதித்துறை,



படம்–11 ஆசிரியர்கள்



படம்–12 மருத்துவர்கள்

மருத்துவம், (படம்–12) பொழுதுபோக்கு, கேளிக்கைகள், நிர்வாகம், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆகிய தனித்தன்மை கொண்ட சூழல்களில் சேவை புரிவோர் நான்காம்நிலைத் தொழில்களில் அடங்குவர். இத்துறையில் பணிபுரியும் பணியாளர்கள் **'வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்'** (White Collar Workers) என்றழைக்கப்படுவர். இத்தொழில்கள் பொதுவாக நகரங்களில் அதிகமாக காணப்படும்.

## ஐந்தாம்நிலைத் தொழில்கள்

ஆலோசனை வழங்குவோர் மற்றும் திட்டம் வகுப்போர் போன்ற உயர்நிலையில் உள்ளோர் இவ்வகைத் தொழிலில் அடங்குவர். அரசு மற்றும் தனியார் துறைகளில் உள்ள தீர்மானிக்கும் திறன் கொண்ட அறிவுரை வழங்குவோரும், சட்டபூர்வமான அதிகாரிகளும் (படம்.13) ஐந்தாம் நிலைத்தொழிகளில் அடங்குவர். இவர்கள் **'தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்'** (Gold collar workers) என அழைக்கப்படுவர். இந்நிலைத்தொழிலாளர்கள் பெருநகரங்களிலேயே அதிகமாகக் காணப்படுகின்றனர்.



படம்–13 தங்க கழுத்துப்பட்டை பணியாளர்கள்– நீதிபதிகள்

வளர்ந்து வரும் நாடுகளில் முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தொழில்களிலும், வளர்ச்சியடைந்த நாடுகளில் மூன்று, நான்கு மற்றும் ஐந்தாம்நிலைத் தொழில்களிலும் மக்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர்.

## பயிற்சி

**I) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில், முக்கியப் பொருளாதார நடவடிக்கைகளை __________ பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
2. முதல்நிலைத் தொழிலில், மக்கள் இயற்கை வளஆதாரங்களோடு __________ இணைந்து செயல்படுகின்றனர்.
3. மூலப் பொருட்களை உற்பத்தி செயல்களுக்கு உட்படுத்தி, முடிவுற்ற பொருளாக மாற்றும் செயல்முறை __________ நிலைத்தொழில்கள் என அழைக்கப்படுகிறது.
4. மூன்றாம்நிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் __________ என அழைக்கப்படுகின்றனர்.
5. __________ நாடுகளில் மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் நிலைத்தொழில்களை விட முதல் மற்றும் இரண்டாம்நிலைத் தொழில்களே அதிகம் காணப்படுகிறது.

**II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முதல் நிலைத் தொழில் __________.

   அ) மரம் வெட்டுதல் ஆ) வங்கி வேலை இ) ஆலோசனை வழங்குதல்

2. __________ தொழில் புரிவோரை ‘வெள்ளை கழுத்துப்பட்டை பணியாளர்கள்’ என அழைக்கிறோம்.

   அ) முதல்நிலை ஆ) இரண்டாம்நிலை இ) மூன்றாம்நிலை

3. தொழிற்சாலைகள் வளர்ச்சியடைய உதவிபுரியும் சேவை

   அ) மேய்த்தல் ஆ) போக்குவரத்து இ) வேட்டையாடுதல்

4. ஐந்தாம்நிலைத் தொழில் அதிகமாகக் காணப்படும் இடங்கள்

   அ) கிராமங்கள் ஆ) பள்ளிகள் இ) பெருநகரங்கள்

5. திட்டம் வகுப்போர் அடங்கிய தொழில் நிலை

   அ) முதல்நிலைத் தொழில் ஆ) ஐந்தாம்நிலைத் தொழில்

   இ) மூன்றாம்நிலைத் தொழில்

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. நீல கழுத்துப்பட்டை பணியாளர்கள் | மீன்பிடித்தல் |
| 2. பொழுதுபோக்கு | மூன்றாம் நிலை |
| 3. வணிகம் | இரண்டாம் நிலை |
| 4. முதல் நிலை | தொழில் நுட்பம் தெரிந்த மற்றும் தொழில் நுட்பம் தெரியாத |
| 5. பணியாளர்கள் | நான்காம் நிலை |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. முதல்நிலைத் தொழில்கள் யாவை ?
2. மூன்றாம்நிலைத் தொழில்கள் பற்றி சிறுகுறிப்பு வரைக.
3. ஐந்தாம்நிலைத் தொழில்கள் பற்றி எழுதுக.

## V) விரிவிாக விடையளிக்க.

1. மனிதர்களின் பொருளாதார நடவடிக்கைகளின் வகைகளைப் பற்றி விளக்குக.

## VI) செய்முறைப்பயிற்சி.

1. ஏதேனும் ஒரு முதல்நிலைத் தொழிலைத் தேர்ந்தெடுத்து அதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து எழுதவும்.
2. ஏதேனும் ஒரு தொழிற்சாலை பற்றிய படங்களை சேகரித்து அத்தொழிற்சாலையின் நடவடிக்கைகளைப் பற்றி பட்டியலிடுக.

# முதல்நிலைத் தொழில் I
# முதல்நிலைத் தொழிலின் வகைகள்

மனித நாகரிக வரலாற்றில் மிக முக்கிய அங்கமாக விளங்குவது வேளாண்மை ஆகும். ஏனென்றால், மனிதர்கள் தனக்கென ஒரு நிலையான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மேய்த்தல் மற்றும் மீன் பிடித்தல் போன்றவற்றைச் சார்ந்து இருந்தனர். இத்தகைய செயல்களை மனிதன் நேரடியாக இயற்கையைச் சார்ந்து பெற்றான். இதனை முதன்மைத் தொழில்கள் என அழைக்கலாம்.

உணவுப் பொருளை சேகரித்தல் மற்றும் வேட்டையாடுதல் போன்றவை முதன்மை தொழில்களுள் பழமையான தொழில்களாகும்.

### 1. உணவு சேகரித்தல்

மக்கள் தங்களுக்கு தேவையான உணவை இயற்கையிடமிருந்து சேகரித்தனர். பழங்கள் மற்றும் கிழங்குகளைக் காடுகளிலிருந்து சேகரித்தும், சில நேரங்களில் வேட்டையாடியும் உணவுப் பொருட்களை சேகரித்தனர். இவ்வகை செயல்கள் மற்றவருடன் தொடர்பு இல்லாத இடங்களில் வசிக்கும் மரபுவழி குடிமக்களிடம் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஆப்பிரிக்க



படம் – 14, ஜார்வாஸ்–அந்தமான் நிக்கோபார்

காடுகளில் வசிக்கும் புஷ்மென் இனத்தவர்கள், அந்தமான் நிக்கோபாரின் பழம்பெரும் மக்களான ஜார்வாஸ் (படம் – 14) மற்றும் ஒஞ்சஸ்.

### 2. வேட்டையாடுதல்

வேட்டையாடுதல் முதன்மைத்தொழிலின் ஒருவகை ஆகும். வேட்டையாடும் மக்கள் வேட்டையாடிய விலங்கினங்களின் இறைச்சி மற்றும் தோலினை பெறுகின்றனர். இவ்வகையான தொழில் இன்றும் பரவலாக பல இடங்களில் குறிப்பாகத் தொடர்பு கொள்ள முடியாத இடங்களில் தனித்து வாழும் மக்களிடையே காணப்படுகிறது. எடுத்துக்காட்டு: ஆப்பிரிக்க பிக்மிக்கள், அமேசான் வடிநிலப் பகுதியின் அமெரிண்டியன் மற்றும் கனடாவின் எஸ்கிமோஸ் (படம் – 15).



படம் – 15. எஸ்கிமோஸ்

மேய்த்தல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களுக்கு நல்ல ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

### 3. மேய்த்தல்

மேய்த்தல் முதன்மைத் தொழில்களில் ஒன்றாக விளங்குகிறது. பசுமையான, புதிய மேய்ச்சல்

நிலங்களைத் தேடி பருவ காலத்திற்கு ஏற்ப நாடோடிகளாக மந்தைகளோடு மக்கள் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இட நகர்வு செய்வர்.



படம் – 16
ஆப்பிரிக்காவின் மசாய் இனத்தவர்

வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் தீவனங்கள் விளைவிக்கப் பெரும் பண்ணைகள் (படம்–17) உள்ளன. அதனால், கால்நடைகள் இயற்கை தாவரங்களை சார்ந்து இருப்பதில்லை. இந்த பண்ணைகள் மிக அதிகமான எண்ணிக்கையிலான கால்நடைகளை வளர்க்கப் பயன்படுகின்றன.



படம்– 17. கால்நடை வளர்ப்பு பண்ணைகள்

| நாடோடிகள் | இடம் | விலங்குகள் |
|---|---|---|
| மசாய் | ஆப்பிரிக்கா – கென்யா, டான்சேனியா | கால்நடைகள் |
| படோயின் | அரேபியா | ஒட்டகம் |
| லேப்ஸ் | ஸ்காண்டிநேவியா | கலைமான் |
| டாரெக்ஸ் | ஆப்பிரிக்கா, தெ.மே.ஆசியா | ஒட்டகம் |
| கர்ட்ஸ் | மேற்கு ஆசியா | ஆடு, செம்மறி ஆடு |
| இராபரி | இந்தியா–இராஜஸ்தான் | ஒட்டகம் |

இன்றைய காலகட்டத்தில் மேய்த்தல் தொழில் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபாடு உடையதாக உள்ளது. ஆப்பிரிக்கா (படம்–16) மற்றும் மத்திய ஆசியாவில் மேய்ச்சல் தொழில் செய்பவர்கள் பருவநிலைக்கு ஏற்பவும், கிடைக்கும் மேய்ச்சல் நிலத்திற்கு ஏற்றவாறும் இடநகர்வு செய்கின்றனர்.

### 4. மீன் பிடித்தல்

மீன் பிடித்தல் ஆறுகள், ஏரிகள் மற்றும் கடற்கரைப் பகுதிகளில் நடைபெறும் முக்கியமான முதல் நிலைத் தொழிலாகும். உள்நாட்டு மீன் பிடித்தல் தொழிலானது, சிறியளவில் எளிய முறையில் நடைபெறுகிறது. இங்கு சாதாரண மீன் வலைகளே மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. உலகின்

மிகப்பெரிய டோன்லேசாப் (Donle sap) உள்நாட்டு மீன்பிடி ஏரி ஆகும். (படம்–18 மற்றும் படம்–19)




படம்–18. டோன்லே சாப்
உலகின் மிகப்பெரிய உள்நாட்டு மீன்பிடிதளம்



படம்– 19. டோன்லே சாப் ஏரி–மிதக்கும் கிராமம்

கடலில் மீன் பிடிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும். கண்டத்திட்டுப் பகுதிகளிலும், ஆழமற்ற பகுதிகளிலும் பிளாங்டன் எனப்படும் மீன் உணவு பெருமளவில் கிடைக்கிறது. தொழிற்கப்பல்கள் எனப்படும் பெருங்கப்பல்கள் மாதக்கணக்கில் மீன் பிடிப்பதற்காக கடலிலேயே செயல்படுகின்றன. உலகில் தற்போது மீன்களைப் பிடித்துப் பதப்படுத்தி டின்களில் அடைக்கும் செயல்கள் அதிகளவில் கப்பலிலேயே நடைபெறுகின்றன.

மீன்கள் கிடைக்கும் இடங்களைக் கண்டறியும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மீன்பிடித்தல் தொழில் உலகின் பல பகுதிகளில் அளவுக்கு அதிகமாகவே நடைபெற்று வருகிறது. ஜப்பான், பெரு, கனடா, வடகடல் பகுதி மற்றும் வடமேற்கு அட்லாண்டிக் கடல் ஆகிய பகுதிகள் முக்கிய மீன்பிடி தளங்களாகும். மீன் பிடி தொழில் தவிர திமிங்கிலம் மற்றும் கடல் நாய்களை வேட்டையாடுதல், முத்து குளித்தல் போன்ற தொழில்களும் கடல்களில் நடைபெறும் தொழில்களாகும்.

### 5. மரம் வெட்டுதல்

மரம் வெட்டுதல் முதல்நிலைத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழிலின் மூலம் காடுகளில் இருந்து பெறப்படும் மரங்கள் நமக்குப் பல்வேறு வழிகளில் பயன்படுகின்றன. மரமானது எரிபொருளாகவும், இருக்கைகள் செய்யவும், காகிதம் மற்றும் காகிதக் கூழ் தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.



படம்– 20. மித வெப்ப மண்டலக் காடுகளில் மரம் வெட்டும் தொழில்

மித வெப்ப மண்டலக் காடுகள், இரு வகைகளில் மிகப் பரவலாகப் பயன்படுகின்றன. இக்காடுகளில்

மென்மையான மரங்களும் மற்றும் ஒரே வகை ஊசியிலைக் காட்டு மரங்களும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இரஷ்யா, கனடா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள்(அ.ஐ.நா), அதிக மரவளம் கொண்ட நாடுகளாகத் திகழ்கின்றன. உலகில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு மிதவெப்பமண்டல காடுகளிலிருந்து பெறப்படுகின்றன (படம்– 20).

வெப்பமண்டலக் காடுகளில் விலை மதிப்புமிக்க தேக்கு மற்றும் கருங்காலி மரங்கள் காணப்படுகின்றன. ஆனால் மரம் வெட்டுதல் ஒரு முக்கியத் தொழிலாக இங்கு மேற்கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், விலையுயர்ந்த மரங்கள் பெரும்பாலும் காடுகளில் கூட்டமாகக் காணப்படாமல், ஆங்காங்கே காணப்படுவதே ஆகும்.

சுரங்கத்தொழில் மற்றும் வேளாண்மைத் தொழிலும் முதன்மைத்தொழில்களே. ஆனால் இத்தொழில்களுக்கு அதிக மனித செயற்பாடுகளும், பெருமளவில் இடமும் தேவைப்படுகின்றன. இவ்விரு தொழில்களைப் பற்றி பின்வரும் பாடங்களில் கற்போம்.

## பயிற்சி

I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மனிதன் நேரடியாக இயற்கையைச் சார்ந்து செயல்படும் தொழில்கள்________என அழைக்கப்படுகிறது.
2. ________தொழிலில், மேய்ச்சல் நிலங்களில் அதிக எண்ணிக்கையிலான விலங்குகளை மேய்ப்பர்.
3. ________மற்றும்________போன்றவை முதல்நிலைத் தொழில்களுள் பழமையான தொழில்களாகும்.
4. மித வெப்ப மண்டலக் காடுகளில்________மற்றும் காட்டு மரங்கள் காணப்படுவதால், மிகப் பரவலாகப் பயன்படுகிறது.
5. ________ல் மீன் பிடிப்பது என்பது மிகவும் சிக்கலான செயலாகும்.

II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஜாரவாஸ் எனப்படும் தொன்முதுமக்கள் காணப்படும் இடம்.
   அ) அந்தமான நிக்கோபார் ஆ) ஆப்பிரிக்கா இ) கனடா
2. கனடாவில் காணப்படும் எஸ்கிமோக்கள்
   அ) வேட்டையாடுபவர்கள் ஆ) உணவு சேகரிப்பவர்கள்
   இ) மேய்த்தல் தொழில் புரிபவர்கள்
3. மீன் உணவு________க்கு அருகாமையில் பெருமளவு கிடைக்கின்றது.
   அ) கண்டத்திட்டு ஆ) கண்டச்சரிவு இ) பெருங்கடல் குழி

4. உலகில் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் மரங்களில் மூன்றில் இரண்டு பங்கு __________ காடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

அ) மிதவெப்ப மண்டல காடுகள் ஆ) அயன மண்டல காடுகள்

இ) தூந்திரக்காடுகள்

5. பெருமளவில் நடைபெறும் முதன்மைத்தொழில்

அ) உணவுசேகரித்தல் ஆ)வேட்டையாடுதல் இ) சுரங்கத்தொழில்

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. புஷ்மென் | அயனக் காடுகள் |
| 2. ஜப்பான் | ஆப்பிரிக்கா |
| 3. தேக்கு | மீன் பிடிதலம் |
| 4. ஊசியிலைக்காடுகள் | கால்நடைஉணவு |
| 5. தீவனம் | மென்மையான மரங்கள் |

## IV) சுருக்கமான விடை தருக.

1. முதன்மைத்தொழில்களின் பெயர்களை எழுதுக.
2. 'மேய்த்தல்' என்றால் என்ன ?
3. உணவு சேகரிக்கும் தொழில் நடைபெறும் சில இடங்களையும், மக்களையும் குறிப்பிடுக.
4. உள்நாட்டு மீன்பிடித்தல் என்றால் என்ன ?
5. "அயனக்காடுகளை விட, மித வெப்ப மண்டலக்காடுகள் மரம் வெட்டும் தொழிலுக்கு பெருமளவில் பயன்படுகிறது". ஏன் ?

## V) விரிவான விடை தருக.

1. கடலில் நடைபெறும் மீன்பிடி தொழிலைப் பற்றி எழுதுக.
2. முதல்நிலைத் தொழிலின் வகைகளைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

## VI) செய்முறை பயிற்சி.

1. உலகின் நாடோடிகள், இடம் மற்றும் விலங்குகளின் தலைப்புகளைக் கொண்டு அட்டவணை ஒன்று தயாரிக்கவும்.
2. பின்வரும் தலைப்புகளில் செயல்திட்டம் செய்க.

   அ) ஆப்பிரிக்காவின் பிக்மிக்கள்

   ஆ) அந்தமானின் ஜாரவாஸ்
3. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.

   அ) டாகர் பேங்க் ஆ) வடகடல்

   இ) பெரு ஈ) ஜப்பான்

# முதல்நிலைத் தொழில் I

## சுரங்கத்தொழில்

சுரங்கத்தொழில் என்பது ஒரு முக்கியமான முதல்நிலைத் தொழிலாகும். சுரங்கத்தொழில் ஒரு நாட்டின் தொழிற்வளர்ச்சிக்கு மிகவும் ஆதரவாக உள்ளது.

சுரங்கத்தொழில் என்பது புவியிலிருந்து விலை மதிப்புமிக்க கனிமங்களையும், புவி அமைப்பியல் சார்ந்த பொருட்களையும் தோண்டியெடுக்கும் செயலாகும். புவியிலிருந்து கற்களையும், உலோகங்களையும் தோண்டியெடுக்கும் செயல் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே நடந்து வருகிறது. பழங்கால மக்கள் கனிமங்களைப் பயன்படுத்திக் கருவிகள் மற்றும், கரடு முரடான ஆயுதங்களையும் தயாரித்தனர். தற்போது, சுரங்கத்தொழில் மிகப்பெரிய அளவில் நடைபெறுகிறது. காரணம், தொழிலகங்கள் கனிமவளங்களை மிகப்பெரிய அளவில் பயன்படுத்துகின்றன.

கனிமவளங்கள் ஒரு புதுப்பிக்க முடியாத வளமாகும். எனவே, சுரங்கத் தொழில் ஒரு 'கொள்ளைத்தொழில்' என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், ஒரு முறை பயனுக்காக தோண்டி எடுக்கப்பட்ட கனிமங்களைத் திரும்ப வைக்க இயலாது என்ற காரணமே ஆகும்.

### கனிமங்களின் வகைகள்

கனிமங்களை அவை உள்ளடக்கிய தாதுக்களைக் கொண்டு உலோகக் கனிமம், உலோகமற்ற கனிமம் மற்றும் எரிபொருள் கனிமம் என வகைப்படுத்தலாம். இரும்புத்தாது ஒரு உலோகக் கனிமம். ஏனெனில், அது இரும்பு உலோகத்தைக் கொண்டுள்ளது. ஆனால் சுண்ணாம்புக்கல் போன்ற கனிமங்கள் உலோகமற்றுக் காணப்படுகின்றன. எரிபொருள் கனிமங்கள் உலோகமற்ற கனிம வகையாகும். அவை மிக முக்கியமான எரிபொருள் வளங்களாகும்.

கனிமங்கள் தூய்மையாகவோ அல்லது பாறைகளின் மற்ற பொருட்களுடன் கலந்து தாதுக்களாகவோ கிடைக்கப் பெறுகிறது. தாதுக்கள் தோண்டி எடுக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்பட்டு மதிப்புள்ள பொருள்களாகப் பிரித்தெடுக்கப்படுகிறது.

கனிமத் தாதுக்கள் பாறைகளின் வெடிப்புகளிலும், இடைமுறிவுகளிலும்

| உலோகமுள்ளவை | உலோகமற்றவை | எரிபொருள் கனிமங்கள் |
|---|---|---|
| இரும்பு | கந்தகம் | நிலக்கரி |
| செம்பு | மைக்கா | பெட்ரோலியம் |
| தங்கம் | நைட்ரேட் | இயற்கைவாயு |
| தகரம் | சுண்ணாம்புக்கல் | யுரேனியம் |
| அலுமினியம் | ஆஸ்பெஸ்டாஸ் | தோரியம் |

(Faults), இணைப்புப் பகுதிகளிலும் படிவுகளாகக் காணப்படுகின்றன. கனிமத்தாது படிவங்கள் அது அமையும் இடத்திற்கு ஏற்றாற்போல் வகைப்படுத்தப்படுகின்றன. ஆகவே, கனிம தாதுக்களின் படிவங்கள் இயற்கையில் உருவாவதற்கு ஏற்றவாறு வகைப்படுத்தப்படுகின்றன. பாறைகளினூடே குறைந்த அளவு இருப்பின் அது குறைந்த அளவு தாதுப்படுகை(veins) எனவும், அதிக அளவில் இருப்பின் பெருமளவு தாதுப்படுகை(lodes) எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. தவிர சில தாதுக்கள் அடுக்குகளாகவும் மற்றும் வண்டல்களாகவும் படியவைக்கப்படுவதாலும் வகைப்படுத்தப்படுகின்றன.

### சுரங்கத் தொழிலின் வகைகள்

கனிமங்கள் பல வழிமுறைகளின் மூலம் தோண்டி எடுக்கப்படுகின்றன. கனிமங்கள் கிடைக்கப்பெறும் இடத்தைப் பொறுத்துப் புவியின் மேற்பரப்பிலோ அல்லது அதற்கு அடுத்த பகுதியிலோ கிடைக்கும் கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுகின்றன.



படம்–21. திறந்தவெளி முறை

புவியின் மேற்பரப்பில் வெட்டி எடுக்கப்படும் முறைகள், சுரங்கத் தொழில் திறந்தவெளி முறை, பட்டைகளாக எடுத்தல் முறை மற்றும் வண்டல் பிரித்தல் முறை என வகைப்படுத்தப்படுகின்றன. இம்முறைகள் புவியின் மேற்பரப்புக்கு அருகாமையிலேயே கிடைக்கும் கனிமங்களை வெட்டியெடுக்கும் முறைகளாகும்.

திறந்தவெளி முறையில் புவியின் மேற்பரப்பிலேயே கிடைக்கும் கனிமங்கள் தோண்டி எடுக்கப்படுகிறது (படம்–21).

பட்டைகளாக எடுத்தல் முறையில், மேற்படிந்த நீள் வடிவில் மண் மற்றும் பாறைகளை அகற்றியபின் கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றன. (படம்–22)



படம்–22. பட்டைமுறை

வண்டல் பிரித்தல் முறை என்பது கனிமங்களை சலித்தோ, சுழற்றியோ,



படம்–23 வண்டல் பிரித்தெடுக்கும் முறை–தங்கம்

தெளியவைக்கப்பட்டுப் பிரித்து

எடுக்கப்படும் முறையாகும். இம்முறைகள் ஆற்று படுகைகளில் அதிக அளவில் கலந்து காணப்படும். கனிமங்களை மிதக்கும் இயந்திரங்கள் (dredge) கொண்டு பிரித்து எடுக்க இம்முறை பயன்படுகிறது (படம்–23).

குவாரியிங் எனப்படும் வெட்டியெடுத்தல் முறை சுண்ணாம்புக்கல் போன்ற கட்டடப் பொருள்களைப் புவி மேற்பரப்பிலிருந்து எடுக்கும் முறை யாகும்.

நிலத்தடி சுரங்கத்தொழில் முறையில் தாதுக்கள் புவிக்கு உட்பகுதியில் அதிக ஆழத்திலிருந்து வெட்டியெடுக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது. இம்முறை திறந்தவெளி சுரங்கத்தொழில் முறையைக் காட்டிலும் செலவு அதிகமாகும் முறையாகும். பாதுகாப்பு மற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் நிலத்தடி சுரங்கத் தொழிலில் மிக முக்கியமானதாகும் (படம்–24).



படம்–24. நிலத்தடி சுரங்கத் தொழில்

எடுத்துக்காட்டாக, நிலக்கரிச் சுரங்கங்களில் நிலத்திற்கு அடியில் இயற்கை வாயு அடிக்கடி காணப்படுவதால், தீப்பிடிக்கும் வாய்ப்புகள் உள்ளன. ஆதலால் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

துளையிடுதல் முறை மூலமாக கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகிய எரிபொருள் கனிமங்கள் துளைத்து எடுக்கப்படுகின்றன. எண்ணெய் கிணறுகளில் இருந்து துளைத்து எண்ணெய் எடுக்க எண்ணெய் ரிக்(Rigs) எனப்படும் ஒருவகை மேடையைப் பயன்படுத்துவர். துளையிட்டு எண்ணெய் எடுக்கும் எண்ணெய் வயல்கள் இருக்கும் இடங்களை, அங்கு காணப்படும் டெரிக் (derricks) எனப்படும் இயந்திரங்களினால் ஆன கோபுரம் போன்று தோற்றமளிக்கும் கட்டமைப்புகளைக் கொண்டு காணலாம் (படம்.25).



படம் 25 எண்ணெய் எடுக்கும் மேடை அமைப்பு மற்றும் கோபுர கட்டமைப்பு


## கனிமங்களின் பரவல்

### உலோகக் கனிமங்கள்

### இரும்புத் தாது

மேக்னைடட், ஹேமடைட், லிமோனைட் மற்றும் சிடரைட் ஆகியவை இரும்புத் தாதுவின் வகைகளாகும். இரும்பத்தாதுவின் வகைகள் அவை கொண்டுள்ள இரும்பின் அளவைப் பொருத்து வகைப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இரும்புத் தாது உலகில் அமெரிக்க ஐக்கிய நாடு, கனடா, ஆஸ்திரேலியா, சீனா, பிரேசில், இந்தியா மற்றும் கஜகஸ்தான் ஆகிய நாடுகளில் அதிக இடங்களில் பரவியுள்ளன.

## உலகில் இரும்பு மற்றும் செம்பு கிடைக்கப் பெறும் வட்டாரங்கள்




படம் 26

## செம்பு

இத்தாது திறந்தவெளி சுரங்கத்தொழில் முறை மூலம் எடுக்கப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள் (உட்டா) மெக்சிகோ, சாம்பியா, சிலி மற்றும் இந்தோனேஷியா ஆகிய இடங்களில் செம்பு படிவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன (படம்.26).

## பாக்ஸைட்

பாக்ஸைட் அலுமினியத்தின் தாது ஆகும். பாக்ஸைட் திறந்தவெளிச் சுரங்கமுறை மூலம் எடுக்கப்படுகிறது. ஆஸ்திரேலியா, பிரேசில், ஜமைக்கா மற்றும் கினியா ஆகிய நாடுகளில் மிகப்பரந்த பாக்ஸைட் கனிம இருப்புகள் காணப்படுகின்றன.

## தகரம்

தகரத்தின் தாது கேசிடரைட் (Cassiterite)ஆகும். இது வண்டல் பிரித்தல் முறை மூலமாக பிரித்தெடுக்கப்படுகிறது. மலேசியா, பொலிவியா, இந்தோனேஷியா, சீனா, ரஷ்யா, நைஜீரியா மற்றும் காங்கோ ஆகிய நாடுகளில் உள்ள சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகிறது.

## தங்கம்

தங்கம் ஒரு விலையுயர்ந்த உலோகம் என்பதை அறிவோம். தங்கம் பெரும்பாலும் வண்டல் பிரித்தல் முறை மூலம் பிரித்து எடுக்கப்படுகிறது. காரட் (carat) என்ற சொல் தங்கத்தின் தூய தன்மையை தெரிந்துக் கொள்ளப் பயன்படுத்தபப்டுகிறது. உலகில் தங்கம் அதிக அளவில் தென் ஆப்பிரிக்கா, கனடா, அமெரிக்க ஐக்கியநாடுகள், ஆஸ்திரேலியா மற்றும் கானா ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

## உலோகமற்ற கனிமங்கள்

உப்பு, பொட்டாசியம், நைட்ரேட், சல்பர், மைக்கா, பாறை உப்பு மற்றும் பாஸ்பேட் போன்ற கனிமங்கள் உலோகமற்றக் கனிமங்கள் ஆகும். மாணிக்கம் மற்றும் வைரம் போன்றவை உலோகமற்ற கனிமவகையைச் சார்ந்ததாகும்.

## கந்தகம்

இது நிலத்தடி சுரங்கமுறை மூலம் வெட்டியெடுக்கப்படுகிறது. இது பளீர் மஞ்சள் நிறத்தில் காணக்கிடைக்கும் கனிமமாகும். இதனை கனரக இரசாயன தொழிலகங்கள், வேதியியல் பொருள்கள் தயாரிக்க கந்தகத்தை பயன்படுத்துகின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிகோ, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் கந்தகத்தை அதிகம் உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

## மைக்கா

மைக்கா கருப்பு நிறமுடைய கனிமமாகும். இது ஒளிபுகும் தன்மை கொண்டது. இது மிக எளிதில் அடுக்குகளாகவும், பட்டைகளாகவும் பிளவுபடும் தன்மை கொண்டது. இது மின்சக்தி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், இந்தியா, நார்வே, பிரேசில் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் முக்கிய உற்பத்தி நாடுகளாகத் திகழ்கின்றன.

## ஆஸ்பெஸ்டாஸ்

இது பொதுவாகத் திறந்தவெளிச் சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. இது எளிதில் தீ பிடித்துக்கொள்ளாப் பொருள்கள்

தயாரிக்கப் பயன்படுகிறது. இது கனடா, ரஷ்யா, பிரேசில், தென் ஆப்பிரிக்கா, ரொடீஷியா, சீனா, அமெரிக்க ஐக்கிய நாடு மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் அதிக அளவு வெட்டி எடுக்கப்படுகிறது.

### எரிபொருள் கனிமங்கள்

நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு ஆகிய மூன்றும் மிக முக்கியமான எரிபொருள் கனிம வளங்கள் ஆகும். இவை உலோகமற்ற கனிமங்களின் வகையில் அடங்கும். இத்தகைய புதுப்பிக்க இயலாத வளங்களைப் பற்றி முன்பே ஒரு பாடத்தில் விரிவாகப் படித்துள்ளோம்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சுரங்கத்தொழில் ஒரு ____________ தொழில் எனவும் கருதப்படுகிறது.
2. திறந்தவெளிச் சுரங்கமுறை என்பது ____________ எனவும் அழைக்கப்படுகிறது.
3. கனிமங்கள் ஒரு புதுப்பிக்க இயலாத ____________.
4. மைக்கா ____________ தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகிறது.
5. ____________ என்பது எண்ணெய் வயல்களில் கோபுரம் போன்ற தோற்றமுடைய கட்டமைப்புகளாகும்.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வண்டல் மண் படிவுகளோடு காணப்படும் கனிமம்

   அ) தங்கம் ஆ) இரும்பு இ) நிலக்கரி

2. அலுமினியத்தின் தாது

   அ) கந்தகம் ஆ) பாக்ஸைட் இ) நிலக்கரி

3. மேக்னடைட் தாதுவை கொண்ட கனிமம்

   அ) இரும்பு ஆ) சிடரைட் இ) தங்கம்

4. இது ஒரு உலோகமற்ற கனிமமாகும்

   அ) பெட்ரோலியம் ஆ) கந்தகம் இ) தகரம்

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. எரிபொருள் | தகரம் |
| 2. மலேசியா | தங்கம் |
| 3. வண்டல் பிரித்தெடுத்தல் | கட்டடப்பொருள் |
| 4. சுண்ணாம்புக்கல் | சிலி |
| 5. செம்பு | நிலக்கரி |

## IV) சுருக்கமான விடையளிக்க.

1. கனிமங்கள் புவியில் எவ்வாறு கிடைக்கப் பெறுகின்றன ?
2. நிலத்தடி சுரங்கத் தொழில் முறை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
3. நிலக்கரியின் பல வகைகள் யாவை ?
4. எரிபொருள் கனிமங்கள் யாவை ?
5. வண்டல் பிரித்தல் முறை என்றால் என்ன ?

## V) விரிவான விடையளிக்க.

1. சுரங்கத் தொழிலின் வகைகளை விவரி.
2. உலோகக் கனிமங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

## VI) செய்முறை பயிற்சி.

1. சுரங்கத்தொழில் வகைகளின் படங்களை சேகரிக்க.
2. உலக வரைபடத்தில் இரும்புத்தாது காணப்படும் இடங்களைக் குறிப்பிடுக.
3. கனிமங்களின் பயன்களை எழுதுக.
4. எரிபொருள் கனிமங்களை எவ்வாறு பாதுகாக்கலாம் என கலந்துரையாடுக.
5. ஒரு நாள் எரிபொருள் பயன்படுத்தாத ஒரு வீடு அல்லது ஒரு தொழிற்சாலை எவ்வாறு செயல்படும் என்பது பற்றி கற்பனை செய்து விவாதிக்கவும்.

# முதல்நிலைத் தொழில்கள் II
## வேளாண்மை

பண்டைய மனித நாகரிகங்கள் பெரிய ஆற்றுச் சமவெளிகளில் வளர்ச்சியடைந்தது. அந்த நாகரிகங்கள் மேன்மேலும் வளர்ச்சியுற வேளாண்மையே மூலகாரணமாகத் திகழ்ந்தது. வேளாண்மை ஒரு முக்கியமான முதல்நிலைத் தொழில் ஆகும். இத்தொழிலில் மனிதன் இயற்கையிலிருந்து கிடைக்கும் பொருள்களைச் சேகரித்து பயன்படுத்திக் கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அவ்வியற்கையோடு ஒன்றிணைந்து பணியாற்றி உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து கொள்கிறான். வேளாண்மை எனப்படுவது, பயிர்கள் மற்றும் மரங்களை வளர்ப்பதோடு மட்டுமின்றி விலங்குகள் பராமரிப்பதையும் உள்ளடக்கியதாகும். வேளாண் நிலங்களைத் தயார்படுத்தி, விதைகள் விதைத்து, நீர் பாசனம் செய்து, உயர்ரக விதைகளைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப்பயிர்களை உற்பத்தி செய்தல், வேளாண்மைத் தொழிலில் உள்ளடங்கிய செயல் முறைகளாகும்.

| ஆற்றுச்சமவெளி | நாகரிகம் | கண்டம் |
|---|---|---|
| சிந்து | ஹரப்பா –மொகஞ்சதாரோ | ஆசியா |
| நைல் | எகிப்து | ஆப்பிரிக்கா |
| யூஃப்ரடிஸ் | மெசபட்டோமியா | ஆசியா |

வேளாண் பயிர்களை உணவுப் பயிர்கள் எனவும் பணப் பயிர்கள் எனவும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பணப் பயிர்கள் உணவு போல் நுகரப்படாமல் அவற்றை மேலும் பதப்படுத்தும் வகையில் மூலப் பொருள்களாக பயன்படுத்தப்படுகிறது. (எடுத்துக்காட்டுகளாக, இரப்பர், சின்கோனா மற்றும் பருத்தி) உணவுப் பயிர்கள் தன்னிறைவுப் பயிர்களாகவோ அல்லது வணிகப் பயிர்களாகவோ வளர்க்கப்படுகின்றன.

### வேளாண்தொழிலை நிர்ணயிக்கும் புவியியல் காரணிகள்

காலநிலை, நிலத்தோற்றம், மண்வளம், நீர்வளம் மற்றும் பணியாளர்கள் ஆகிய காரணிகள் வேளாண் தொழில்களில் வேறுபாடுகளையும், பரவலையும் நிர்ணயிக்கும் காரணிகளாக அமைகின்றன.

**1. காலநிலை**

வெப்பநிலை மற்றும் மழையின் அளவு, வேளாண்தொழிலை பாதிக்கும் காலநிலை காரணிகளாகும்.

### அ. வெப்பநிலை

6° சென்டிகிரேடுக்கு குறைவாக நிலவும் வெப்பநிலையில் மண் குளிர்ந்து உறைந்து போவதால் பெரும்பான்மையான செடிகள் அவ்வெப்பநிலையில் வளர இயலாது. வெவ்வேறு காலநிலை வட்டாரங்களில் வெவ்வேறு விதமான பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டுகளாக, நெல், அயன மண்டலத்தில் விளைவிக்கப்படும் முதன்மை பயிராகும். ஏனெனில், அதிக

வெப்பமும், அதிகளவு நீரும் நெற்பயிர் வளர தேவைப்படுகிறது. கோதுமை ஒரு மிதவெப்ப மண்டலப் பயிராகும். கோதுமை வளர குளிர்ந்த காலநிலைத் தேவைப்படுகிறது.

கடல் மட்டத்திலிருந்து நிலங்களின் உயரம் மாறுபடுவதால் உயரத்திற்கேற்ப வெப்பநிலை மாறுபாடுடையதாக உள்ளது. அதுவேளாண்தொழிலை பாதிப்புக்குள்ளாக்குகிறது. அயன மண்டலத்திலுள்ள உயர் பகுதிகளில் மிதவெப்ப மண்டல பயிராகிய காரட் (carrot) போன்ற பயிர்களை விளைவிக்கலாம்.

பயிருக்கு பயிர், வளர்ச்சிக் காலம் மாறுபடும். பருத்தி போன்ற பயிர்கள் முழுமையான வளர்ச்சி பெற 200 பனிபொழிவற்ற நாட்கள் தேவைப்படுவதால் குறைந்த வெப்பம் நிலவும் பருவ காலங்களில் விளைவிக்கப்படுகிறது.

### ஆ. மழையளவு

காற்றிலுள்ள ஈரப்பதம் அப்பகுதியில் விளையும் பயிர்வகை, பயிர் வளர்வதற்கு ஏற்ற காலம் போன்றவற்றை நிர்ணயிக்கின்றன. பருவகால மழைப்பொழிவு என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். பயிர்கள் வளர்வதற்கு அதிகமான மழைபொழிவு தேவைப்படுகிறது. ஆனால் மழைப்பொழிவு தகுந்த காலங்களில் அமையவில்லையெனில், அது பயிர்வளர்ச்சியினை வெவ்வேறு வகைகளில் பாதிப்பினை ஏற்படுத்தும். ஒவ்வொரு பயிருக்கும் அதன் வளர்ச்சியின் வெவ்வேறு கட்டங்களில் நீரின் அளவு தேவைப்படுவதால் மழைப்பொழிவுகளில் ஏற்படும் மாற்றம் பயிர்களுக்கு அவசியமான ஒன்று. ஆகையால் பருவநிலைக்கு ஏற்ற மழைப்பொழிவு முக்கியமானது என புலப்படுகிறது. எடுத்துக்காட்டாக: காப்பிக்கு அறுவடையின்போதும், முன்பும் வறண்ட நிலை தேவை. அதே பருவத்தில் சோளப்பயிர் விளைய நீர் தேவையாய் உள்ளது.

ஒரு பகுதியில் விளையும் பயிரை அங்கு பெய்யும் மழையளவே நிர்மாணிக்கிறது. நெற்பயிர் அதிகமான மழைப்பொழியும் இடங்களிலும், தினை வகைகள் வறண்ட பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது.

### பயிர் விளைவிக்கும் முறைகள்
### ஒரு பயிர் விளைவிக்கும் முறை

விளைநிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் ஒரு முறை விளைவிக்கப்பட்டால் அது ஒரு பயிர் விளைவிக்கும் முறை என அழைக்கப்படுகிறது.

### பல்பயிர் விளைவிக்கும் முறை

இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பயிர்களை ஒரே விளைநிலத்தில் ஒரே பருவகாலத்தில் விளைவித்தால், அது பல்பயிர் விளைவிக்கும் முறை என அழைக்கப்படுகிறது. எடுத்துகாட்டாக, கார்வால் இமயமலைப் பகுதியில் ஒரே விளைநிலத்தில் 12க்கும் மேற்பட்ட பல்வேறு விதமான பீன்ஸ், பருப்பு மற்றும் தினைவகை பயிர்கள் பயிர் செய்யப்பட்டு அப்பயிர்களின் அறுவடை காலக்கட்டங்களுக்கு ஏற்றவாறு அறுவடை செய்யப்படுகிறது.

### நீர்ப் பாசனம்

மழைக் குறைவாக பொழியும் இடங்களில் அல்லது மழை பொய்க்கும் இடங்களில் வேளாண்தொழில் செய்ய நீர்ப் பாசனம் தேவைப்படுகிறது.

## நீர்ப் பாசன வகைகள்

### கால்வாய் நீர்ப்பாசனம்

கால்வாய்கள் மூலம் வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சும் முறையினை கால்வாய்ப் பாசனம் என்கிறோம் (படம் –27).



படம்–27. கால்வாய் நீர்ப் பாசனம்


### தெளிப்பான் பாசனம்

வயலில் வைக்கப்பட்டிருக்கும் தெளிப்பான்கள் மூலம் வயலுக்கு நீர் தெளித்தல் முறையினை தெளிப்பான் பாசனம் என்கிறோம் (படம்–28).



படம் –28. தெளிப்பான் பாசனம்

### மைய சுழற்சி பாசனம்



படம்–29. மைய சுழற்சி பாசனம்

சுழலச்சினைக் கொண்டு வட்டப்பாதையில் நீரினைத் தெளிக்கும் முறையினை மையசுழற்சி நீர்ப்பாசனம் என்கிறோம். எனவே நாம் உயரத்திலிருந்து பார்க்கும்பொழுது பயிர்கள் வட்ட வடிவில் விளைவிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் (படம்–29).

### சொட்டு நீர்ப்பாசன முறை

சொட்டு நீர்ப்பாசன முறையில், நீர் சொட்டு சொட்டாக செடிகளின் வேருக்கு நேரடியாகவோ அல்லது அருகாமையிலோ செலுத்தப்படுகிறது(படம்–30).



படம்–30. சொட்டு நீர்ப்பாசனம்

## 2. நிலத்தோற்றங்கள்

மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகள் ஆகியவை முக்கியமான நிலத்தோற்றங்கள் ஆகும். அவற்றுள் சமமான நிலப்பரப்புடன் கூடிய வண்டல் மண் நிறைந்த சமவெளி வேளாண்தொழில் செய்ய மிகவும் ஏற்றதாகும். உலகின் சமவெளிப்பகுதிகள் மிக அதிக அளவில் பயிர் விளைவிக்கும் நிலங்களாக திகழ்கின்றன. எடுத்துக்காட்டாக, வடஇந்திய சமவெளி. இச்சமவெளி வேளாண் தொழில் செய்ய உகந்த நிலப்பரப்பாகும். மலைப் பகுதிகளில் சமபரப்புப் பகுதிகள் மிகக் குறைவாகையால், வேளாண்தொழில்

குறைவாகக் காணப்படுகிறது. ஆனால் மலைச் சரிவுகள் காப்பி மற்றும் தேயிலை பயிர்கள் வளர உகந்த இடமாகிறது. இப்பயிர் வளர நீர் வழிந்தோடும், நீர் தங்காத மலைச்சரிவு தேவையாக உள்ளது.

### 3. மண்வளம்

பயிர் வளர மண்வளம் ஒரு முக்கிய காரணியாகும். ஏனெனில் வெவ்வேறு பயிர் வளர்க்க வெவ்வேறு மண்வகைத் தேவைப்படுகிறது. வண்டல் மண் ஒரு வளமிக்க மண்ணாகும். ஏனெனில், அவை தொடர்ந்து உருவாகிக் கொண்டே இருக்கும் தன்மை கொண்டது. கரிசல் மண் மற்றும் புல்வெளி மண் போன்ற மண் வகைகள் வேளாண்மைக்குப் பரவலாகப் பயன்படும் வளமான மண் வகைகளாகும்.

வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்களின் வேளாண் தொழிலின் வகைகளைப் புவியியல் காரணிகளைத் தவிர, சமூக மற்றும் பொருளாதாரக் காரணிகளும் நிர்ணயிக்கின்றன.

### வேளாண்தொழிலின் வகைகள்

மாற்றிட வேளாண்தொழில், தன்னிறைவு வேளாண்தொழில், தீவிர வேளாண்தொழில், வணிக வேளாண்தொழில், பரந்த மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் வேளாண்தொழில் மற்றும் கலப்பு வேளாண்மை என வேளாண்மைத் தொழில் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. வேளாண் வகை என்பது ஒருங்கிணைப்புத் தன்மையையும், வேளாண்மையைக் கையாளும் முறையினையும், அங்கு விளையும் பயிரையும் பொறுத்து குறிப்பிடப்படுகின்றன.

### அ. தன்னிறைவு வேளாண்மை

இம்முறையில் விவசாயிகள் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் தேவையான அளவு பயிர்களை விளைவிப்பர். தன்னிறைவு வேளாண்மை இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை எளிய தன்னிறைவு வேளாண்மை மற்றும் தீவிர தன்னிறைவு வேளாண்மை என்பதே ஆகும்.

எளிய தன்னிறைவு வேளாண்முறை மலைவாழ் மக்களுள் சிறிய குழுமங்களால் மேற்கொள்ளப்படும் வேளாண் முறையாகும். மாற்றிட வேளாண் முறை இடப்பெயர்வு வேளாண்மை எனவும் அழைக்கப்படுகிறது. விவசாயிகள் தங்களின் ஒரு சிறிய பகுதியில் உள்ள மரங்களை வெட்டி எடுத்துவிட்டு மரங்களை எரித்து அப்பகுதிகளில் தினை வகைகள் மற்றும் கிழங்குகள் போன்ற எளிய பயிர்களை வளர்ப்பர். சில வருடங்களுக்குப் பிறகு அந்த நிலங்களை விட்டுவிட்டுக் காட்டில் மற்றொரு பகுதியை தேர்ந்தெடுத்து மேற்கூறிய அதே செய்முறையில் விவசாயம் மேற்கொள்வர்.



படம்–31. மில்பா

மாற்றிட வேளாண்தொழில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுகிறது. பிரேசிலில் ரோக்கோ எனவும், ஜூம்,

பேவார் மற்றும் போடா என இந்தியாவிலும், மில்பா (படம்–31) என மத்திய அமெரிக்காவிலும் அழைக்கப்படுகிறது.

### ஆ. தீவிர வேளாண்தொழில்

மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ள பருவமழை பெறும் ஆசியப் பகுதிகளில் இம்முறை காணப்படுகிறது. நெற்பயிரே அதிகமாக விளைவிக்கப்படும் பயிராகும். விளை நிலம் சிறியதாக இருக்கும் ஆனால் அவற்றில் விவசாயிகள் தீவிர வேளாண் சாகுபடி செய்வர். உரங்கள், அதிக மகசூல் தரும் உயர்ரக விதைகள் பயன்படுத்தியும், குடும்பத்திலுள்ளவர்களை வேளாண் பணியில் ஈடுபடுத்தியும், விளை நிலத்தை ஒருபோதும் வெற்றாக விடாமலும், தீவிர முறையில் பயிர் விளைவிப்பர். மகசூல் அதிகமாகவே இருக்கும்(படம்–32).



படம்–32. தீவிர வேளாண்தொழில்

### இ. வணிக வேளாண்தொழில்

இவ்வகை வேளாண்தொழில் பரந்த வேளாண்தொழில் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வகை வேளாண்தொழிலில் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படும்(படம்–33). இயந்திரங்களைப் பயிரிடும் முறைக்கு பயன்படுத்தியும் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. கோதுமை இம்முறையில் அதிக அளவு பயிரிடப்படும் பயிராகும். ஆனால் மகசூல் குறைவே. வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் அர்ஜென்டைனா போன்ற பகுதிகளில் இம்முறை வெகுவாகக் காணப்படுகிறது(படம்–33).



படம்–33. வணிகவேளாண்தொழில்

### ஈ. தோட்டப்பயிர்கள்

தோட்டப்பயிர்கள் அயன மண்டலப்பகுதிகளில் பெரிய நிலப்பரப்புகளில் மேற்கொள்ளப்படும் முறையாகும். அதிக முதலீடு செய்யப்பட்டு தேயிலை, காப்பி (படம்.34), இரப்பர், போன்ற பயிர்களை மட்டுமே விளைவிப்பதை கருத்தாகக் கொண்டு விளைவிக்கும் முறையாகும். இவ்வகை பயிர்கள் தொடர்ந்து பல வருடங்களுக்கு பயனளிப்பதாக உள்ளது.



படம் 34. காப்பித் தோட்டம்

தோட்டப்பயிர் வேளாண்மை இலங்கை, மலேசியா, இந்தியா

இந்தோனேஷியா மற்றும் பல நாடுகளில் காணப்படுகிறது.

### உ. கலப்புப் பண்ணை

இவ்வேளாண்முறை ஒரு சிறந்த வேளாண்முறையாகும். ஏனெனில் இதில் பயிர் விளைவித்தல் மற்றும் கால்நடை வளர்த்தல் ஆகிய இரண்டும் நடைபெறுகிறது. இவ்வகை வேளாண்மை உலகில் நன்கு வளர்ச்சியடைந்த பகுதிகளில் பின்பற்றப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவில் இத்தகைய கலப்புப் பண்ணை முறை ஒரு பொதுவான வேளாண்தொழிலாகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வேளாண்மை ஒரு__________தொழிலாகும்.
2. வேளாண் பயிர்களை, உணவுப் பயிர்கள் மற்றும்__________பயிர்கள் என இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம்.
3. __________பாசன முறையில், நீர் செடிகளின் வேருக்கு அருகாமையில் செலுத்தப்படுகிறது.
4. __________மற்றும் மழையின் அளவு வேளாண் தொழிலை பாதிக்கும் கால நிலை காரணிகளாகும்.
5. விளைநிலத்தில் ஒரே ஒரு பயிர் மட்டும் ஒரு முறை விளைவிக்கப்பட்டால் அது__________என அழைக்கப்படுகிறது.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. __________வேளாண்தொழிலுக்கு ஏற்ற இடமாகும்.
   அ) பீடபூமி　　ஆ) சமவெளி　　இ) மலைப்பகுதி
2. __________வேளாண்தொழில் வகையில் அதிக அளவு பயிர்கள் விளைவிக்கப்படுகிறது.
   அ) தன்னிறைவு　　ஆ) மாற்றிட　　இ) வணிக
3. பிரேசில் நாட்டில் இடப்பெயர்வு அல்லது மாற்றிட வேளாண்மை__________என அழைக்கப்படுகிறது.
   அ) ஜூம்　　ஆ) ரோக்கோ　　இ) தோட்டப்பயிர்
4. நெல் ஒரு__________பயிராகும்.
   அ) மிதவெப்ப மண்டல　　ஆ) பண　　இ) அயனமண்டல
5. மழை குறைவாக கிடைக்கப் பெறும் பகுதிகளில்__________அவசியம்.
   அ) நீர்ப் பாசனம்　　ஆ) கிணறுகள்　　இ) ஒரு பயிர்

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. தன்னிறைவு வேளாண்தொழில் | மலைச் சரிவுகள் |
| 2. நைல் பள்ளத்தாக்கு நாகரிகம் | மையசுழற்சி முறை |
| 3. வணிக வேளாண் தொழில் | எகிப்து |
| 4. வட்ட வடிவ நிலம் | விற்பனைக்கான பயிர் |
| 5. தேயிலை | சிறு நிலப்பகுதிகள் |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகளை எழுதுக.
2. பல்பயிர் விளைவிக்கும் முறை என்றால் என்ன ?
3. வண்டல் மண்ணின் முக்கியத்துவத்தைக் கூறுக.
4. தோட்டப்பயிர்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுகள் தருக.

## V) விரிவாக விடையளிக்க.

1. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளைப் பற்றி எழுதுக.
2. வேளாண் தொழிலின் பயிர்விளைவிக்கும் முறைகளைப் பற்றி எழுதுக.
3. நீர்ப்பாசன முறையின் வகைகளை விவரிக்க.

## VI)செய்முறைப் பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் இடத்திற்கு அருகாமையிலுள்ள வேளாண் நிலத்திற்குச் செல்லவும்.
2. வேளாண் நிலங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு இயந்திரங்களின் படங்களை சேகரிக்கவும்.

# முதல்நிலைத் தொழில் II
## பயிர்கள்

மனிதனால் பலவிதமான வேளாண்பயிர்கள் பயிரிடப்படுகின்றன. சில உணவுக்காகவும் சில இழைகளுக்காகவும் பயிரிடப்படுகின்றன. தானியங்களே மனிதனது அடிப்படை உணவாகும். மாவுச்சத்துக் கொண்ட விதைகளையுடைய தானியவகைகள் புல்வகை தாவரங்களாகும். நெல், கோதுமை, சோளம் மற்றும் திணை வகைகள், பொதுவான தானிய வகைகள் ஆகும்.

நெல் உலகில் பெரும்பான்மையான மக்களின் முக்கியமான உணவு அரிசி ஆகும். குறிப்பாக ஆசியா மற்றும் இலத்தீன் அமெரிக்கப்பகுதிகளில் உள்ள மக்கள் அரிசியை முக்கிய உணவாக கொண்டுள்ளனர். நெல் ஒரு அயன மண்டலப் பயிராகும். வண்டல்மண் பகுதிகளிலும், ஆறுகளின் டெல்டாப் பகுதிகளிலும் மிக செழிப்பாக வளரும் பயிராகும் (படம்–35). இப்பயிரின் மூல இனம் தெற்கு ஆசியப் பகுதியிலிருந்து வந்திருக்கும் என கருதப்படுகிறது. சீனாவின் யாங்டிசி ஆற்றுச்சசமவெளியில் இப்பயிரின் பயன்பாடு முதன் முதலில் தொடங்கப்பட்டது என்ற கருத்தும் நிலவுகிறது.

### நெல் வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்


நெல் வளர்வதற்கு சராசரியாக 24°செ தட்பவெப்பநிலையும், சராசரியாக 150செ.மீ. மழையளவும் தேவைப்படுகிறது. மழை போதுமான அளவு இல்லாத இடங்களில் நீர்ப்பாசன வசதி தேவைப்படுகிறது. நெல் விளைவிக்க சமமான நிலம் தேவை. ஏனெனில், அது தேங்கிய தண்ணீரில் வளர்ச்சியுறுகிறது. உயரமான நிலப்பகுதிகளில், நெல் விளைவிக்க, சரிவுகளைச் சமப்படுத்தி, தாழ்நிலங்களில் பயிரிடுவது போல் நீர் தேங்கி நிற்க படிக்கட்டு முறையைப் பயன்படுத்துகின்றனர். ஆற்றின் டெல்டாப் பகுதிகளில் நெற்பயிர் முப்போகம் விளைவிக்கப்படுகிறது. வண்டல் மண்ணில் சத்து மிகுந்துள்ளதால் நெற்பயிர் விளைவிக்க உகந்த மண்ணாக கருதப்படுகிறது. நெற்பயிர், விளைவிக்க நிலம் தயார் செய்தல், விதையிடுதல், களையெடுத்தல், அறுவடை மற்றும் பல வேலைகள் கைகளால் செய்யப்படுவதால் அதிக அளவு வேலையாட்கள் இப்பயிர் வளர்க்கத் தேவைப்படுகின்றனர்.



படம்–35 வயல்வெளி–தமிழ்நாடு

ஆசியா அதிக அளவில் நெல் உற்பத்தி செய்கிறது. 98% விவசாயிகள் ஆசியாவில் நெல் உற்பத்தியில் பங்கு பெறுகின்றனர். நெல் உற்பத்தியில் சீனா, இந்தியா, இந்தோனேஷியா மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகள் உலகில் முதல் நான்கு உற்பத்தி நாடுகளாகத் திகழ்கின்றன. (படம்–36) இந்தியாவில்

## உலகின் கோதுமை மற்றும் நெற்பயிற் உற்பத்தி செய்யும் முக்கிய வட்டாரங்கள்




படம் 36

நெற்பயிர் அனைத்து பெரிய ஆற்று சமவெளிகளிலும் பயிரிடப்படுகிறது.

### கோதுமை

கோதுமை ஒரு மிதவெப்ப மண்டலப் பயிராகும். மிதவெப்ப மண்டலப் பகுதியின் முக்கிய உணவுப்பயிராக இது கருதப்படுகிறது. உலகின் 25 % நிலப்பகுதி கோதுமை வளர்க்க பயன்படுத்தபப்டுகிறது.

### கோதுமை வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள்

கோதுமைப் பயிர் வளர ஆரம்பக் காலகட்டத்தில் மிதமான வெப்பமும், ஈரப்பதமும் தேவை. வளர்ச்சியின் பிற்பகுதியின் சூரிய வெப்பமும், உலர்ந்த நிலையும் தேவைப்படுகிறது. கோதுமைப் பயிருக்கு 15°செ லிருந்து 20°செ வரை உள்ள தட்பவெப்பநிலையே சரியான வெப்பத்தேவை ஆகும்.



படம்–37. கோதுமை வயல்வெளி

இதற்கு 50–60செ.மீ சராசரி மழை அளவு தேவைப்படுகிறது. களிமண் அல்லது வண்டல் மண் கலந்த களிமண் கோதுமை வளர உகந்த மண்ணாகும். உலகின் சிறந்தவகை கோதுமைப் பயிர்கள் மிதவெப்ப மண்டல புல் வெளிகளிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. ஏனெனில் அங்குள்ள மண்ணில் அதிக அளவு உயிர்ச் சத்து மிகுந்து காணப்படுகிறது. கோதுமை வளர்ப்புக்கு இயந்திரங்கள் தேவைப்படுகிறது. அவற்றுடன் பெரிய சமனற்ற மேல்கீழ் நிலப் பகுதிகளிலும் விளைவிக்கப்படுகிறது (படம்–37).

உலகின் மிகப் பெரிய கோதுமை விளைவிக்கும் பகுதிகள் அ.ஐ.நா, சீனா, யுக்ரேன், கனடா, அர்ஜென்டைனா, ஆஸ்திரேலியா, இந்தியா மற்றும் பாக்கிஸ்தான் ஆகும் (படம்–36). உத்திரபிரதேசம் பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் இந்தியாவில் அதிகளவு கோதுமை உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

இழைப்பயிர்கள் பருத்தி, சணல் மற்றும் ஆளிவிதைச் செடி ஆகியவை இழைப் பயிர்களாகும்.

### பருத்தி

பருத்தி அயன மற்றும் துணை அயனப் பகுதியில் மட்டுமே விளைவிக்கும் இழைப் பயிராகும்.



படம்–38. பருத்திச்செடி

பருத்தி செடியில் விதைகள் மூடிய, மிருதுவான, அடர்ந்த இழைகள் கொண்ட பந்து போன்ற அமைப்பினை கொண்டபகுதியாக விளைகிறது (படம்38). இழையிலிருந்து விதைகளைப் பிரிக்கும் முறை (Ginning) என்ற செயல் முறை இதில் பயன்படுத்தப்படுகிறது.

### பருத்தி வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலை

தட்பவெப்பநிலை 20° முதல் 30° செ இருக்கும் அயன மண்டலப்பகுதிகளில், 50°–100°செ.மீ மழை அளவு உள்ள பகுதிகளில் பருத்தி விளைகிறது. கரிசல் மண் மற்றும் வண்டல் மண் பருத்திப்பயிர் விளைய ஏற்ற மண்ணாகும். குறைவான கூலி பெற்றுக்கொள்ளும் சிறந்த தொழிலாளிகள் பருத்திப்பகுதியை செடியிலிருந்து பறிக்கத் தேவைப்படுகின்றனர். இத்தகைய செயல்கள் உலகின் சில பகுதிகளில் இயந்திரங்கள் கொண்டு செய்யப்படுகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகள், உஸ்பெகிஸ்தான், பிரேசில் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை பருத்தி உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடுகளாகும்.

இந்தியாவில் மஹாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு, கர்நாடகா, மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், பஞ்சாப், ஹரியான மற்றும் இராஜஸ்தானின் ஒரு சில பகுதிகளிலும் பருத்தி விளைவிக்கப்படுகிறது.

### சணல்

சணல் என்பது மிருதுவான, நீளமான, பளபளக்கும் தாவர இழையாகும்(படம்–39). இது கயிறு மற்றும் திடமான நூலாக மாற்றப்படுகிறது. சணற்பைகள், தரை விரிப்புகள் மற்றும் இழைகள் மற்றும் பல பொருட்கள் தயாரிக்க சணல் பயன்படுகிறது.

### சணல் வளருவதற்கு ஏற்ற சூழ்நிலை

30°செ, உள்ள அதிக வெப்பமும், 150 செ.மீ மேலான மழையளவும் சணல் வளர தேவைப்படுகிறது. வண்டல்மண் சணல் விளைவிக்க ஏற்ற மண்ணாகும். சணல் செடிகளை நீரில் ஊறவைத்து, மக்கச்செய்து இழைகளை பிரித்தெடுக்கும் செய்கைக்குத் (retting) தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.



படம்–39. நீரில் சணல் தாவரம் ஊறவைத்து மக்கச்செய்யும் முறை



சணல் பொருள்கள்

ஊறவைத்து மக்கச்செய்தல் என்பது ஒரு நுண்உயிரியல் (Microbiological) செய்முறையாகும். இம்முறையில் சணல் தாவரத்தின் மேற்பகுதியை மிருதுவாக்க 2–3 வாரங்கள் நீரில் ஊறவைத்து மக்கச்செய்த பின்னர் இழைகள் பிரித்தெடுக்கப்படுகின்றது. (படம்–39)

இந்தியாவும் வங்காளதேசமும் சணல் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடுகளாகும்.



சணல் பொருள்கள்

## கரும்பு

கரும்பு ஒரு உயரமான அயனமண்டல புல்வகைத் தாவரமாகும். இது 3.5 மீட்டர் வரை வளரக்கூடிய தாவரமாகும்(படம்–40. இது அயன மற்றும் துணை அயன மண்டலப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் வளர்க்கப்படும் பயிராகும்.



படம்–40 கரும்பு

## கரும்பு வளர்க்க ஏற்ற சூழ்நிலை

கரும்பு வளர சராசரியாக 24° செ வெப்பம் ஆண்டு முழுவதும் தேவைப்படுகிறது.130 செ.மீ மழையளவும் நல்ல வளமான மண்ணும் இப்பயிர் வளர தேவைப்படுகிறது. இப்பயிர் அறுவடை செய்யும் காலத்தில் அதிகளவு வேளாண் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.

இலத்தீன் அமெரிக்கா மற்றும் தென் மற்றும் கிழக்கு ஆசிய பகுதிகள் கரும்பினை உற்பத்தி செய்யும் முக்கியமான நாடுகளாகும். இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பிரேசில் ஆகிய நாடுகளும் கரும்பு உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## தேயிலை

தேயிலையின் இலைகள் பானம் தயாரிக்கும் அயன மண்டலச் செடியாகும். தேயிலை, வற்றாத பல வருடங்களுக்கு பயன் தரக்கூடிய செடி வகையாகும். தேயிலையைப் பறிக்கவும் புதிய இலைகள் தொடர்ந்து முளைக்கவும் தேயிலைச் செடிகள் 1.5மீ உயரத்திற்கு வெட்டிவிடப்படுகின்றன (படம்–41).



படம்–41. தேயிலைத்தோட்டம்

## தேயிலை வளர ஏற்றச் சூழ்நிலை

அயன மற்றும் துணை அயனப் பகுதிகளின் மலைகளின் சரிவுப் பகுதிகளில் தேயிலை வளர்க்கப்படுகிறது. சராசரியான 21° செ வெப்பமும், 150 செ.மீ மழையும், நல்ல மண் வளமும் தேயிலை வளரத் தேவைப்படுகிறது. அதிக பனி செடிகளை வீழ்த்தும். இப்பயிர் தொழிலாளர்கள் சார்ந்த பயிராகும். கடுமையான காற்று மற்றும் அதிக வெப்பத்தைத் தாங்கும் திறன் தேயிலைச் செடிகளுக்கு இருப்பதால்,

மலைச்சரிவுகளில் காற்று வீசும்திசையில் இது வளர்க்கப்படுகிறது.

சீனா, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் தேயிலையை அதிக உற்பத்தி செய்யும் நாடுகளாகும். தேயிலை, இந்தியாவில் அஸ்ஸாம், மேற்கு வங்காளம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் வளர்க்கப்படுகிறது.

அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தின் முன்னேற்றத்தால் வள ஆதாரங்களை மனிதன் தேவைக்காக வேளாண்பயிர்களையும் புதிய பொருளாக மாற்றியமைக்க ஆரம்பித்தான். இத்தகைய நடவடிக்கைகள் இரண்டாம்நிலைத் தொழில்கள் என அழைக்கப்படுகின்றன. இதனை பின்வரும் பாடங்களில் விரிவாகக் காண்போம்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. _________ மனிதனது அடிப்படை உணவாகும்.
2. உலகின் சிறந்த வகை _________ பயிர்கள் மித வெப்பமண்டலப் புல்வெளிகளிலிருந்து கிடைக்கிறது.
3. இந்தியாவில் மகாராஷ்டிரம், குஜராத் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் _________ உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்கள் ஆகும்.
4. நெல் ஒரு _________ மண்டலப் பயிராகும்.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

1. _________ விவசாயிகள் ஆசியாவில் நெற்பயிர் விளைவிக்கும் பணியில் பங்கு பெறுகின்றனர்.

   அ) 98% ஆ) 80% இ) 75%

2. இந்தியாவில் உத்திரபிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்கள் அதிக அளவு _________ உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

   அ) நெல் ஆ) கரும்பு இ) கோதுமை

3. தேயிலை ஒரு _________ செடியாகும்.

   அ) மிதவெப்ப மண்டல ஆ) அயன மண்டல இ) நிலநடுக்கோடு

4. பருத்தி _________ மண்ணில் அதிகமாக விளைகிறது.

   அ) கரிசல் ஆ) வண்டல் இ) சிவப்பு

5. இந்தியா மற்றும் வங்காள தேசம்__________ உற்பத்தியில் முதலிடம் வகிக்கின்றன.

அ) பருத்தி　　ஆ) சணல்　　இ) கோதுமை

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. விதை பிரிக்கும் செயல் | கோதுமை |
| 2. ஊறவைத்து மக்கச் செய்தல் | கரும்பு |
| 3. களிமண் கலந்த வண்டல் மண் | பருத்தி |
| 4. வண்டல் மண் | சணல் |
| 5. உயரமான அயனப் புல் வகை | நெல் |

## IV) சுருக்கமான விடையளிக்க.

1. கோதுமை விளைவிக்க ஏற்ற சூழ்நிலைகள் யாவை ?
2. விதை பிரிக்கும் முறை என்றால் என்ன ?
3. பருத்தியை அதிக அளவு உற்பத்தி செய்யும் நாடுகள் யாவை ?
4. ஊறவைத்து மக்கச் செய்தல் என்றால் என்ன ?
5. கரும்பு விளைவிக்கும் முக்கிய நாடுகள் யாவை ?

## V) விரிவான விடையளிக்க.

1. கரும்பு விளைவிக்க ஏற்ற சூழ்நிலை யாவை ? அதிக அளவில் கரும்பு விளைவிக்கும் நாடுகளின் பெயர்களை எழுதுக.
2. தேயிலை விளைவிக்க தேவையான சூழ்நிலைகள் யாவை ?

## VI) செய்முறைப் பயிற்சி.

1. சணலால் செய்யப்படும் பொருட்களின் பெயர்களை சேகரித்து எழுதுக.
2. உலக வரைபடத்தில் கோதுமை, நெல் மற்றும் சணல் உற்பத்தி செய்யும் நாடுகளைக் குறிக்கவும்.

## இரண்டாம்நிலைத் தொழில் I
## தொழிற்சாலைகள்

நமது புவிக்கோளம், கனிமவளங்கள் மற்றும் வேளாண்மைத்தொழில் புரிய ஏற்ற இயற்கை வளங்களைக் கொண்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இத்தகைய வளஆதாரங்களைச் சில செயல்முறைகளின் மூலம் மாற்றி அமைத்தால் மட்டுமே பயன்பாட்டுக்கு உள்ளாகிறது. இயற்கையில் மூலப்பொருள்கள் வடிவில் கிடைக்கும் வளங்களை நாம் அப்படியே உபயோகிக்கமுடியாது. அவ்வளங்கள் சில செயல்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டுப் பயன்தரும் பொருள்களாக மாற்றப்படுகிறது. இவ்வாறு இயந்திரங்களைப் பயன்படுத்தி மூலப்பொருள்கள், சில செயல்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு முடிவுற்ற பொருளாக அல்லது பயன்தரும் பொருளாக மாற்றும் இடமே தொழிற்சாலை என்றழைக்கப்படுகிறது. மூலப்பொருள்களை முடிவுற்ற பொருட்களாக மாற்றும் செயல்கள் இரண்டாம்நிலைத் தொழில் என அழைக்கப்படுகிறது. இவ்வுற்பத்தித்துறை இரண்டாம் நிலைத் தொழில்கள் என்று அழைக்கப்படுகிறது.


வாகன உற்பத்தி, இராசயனப் பொருள்கள் மற்றும் பொறியியல் தொழிற்சாலைகள், வானூர்தி தயாரிக்கும் தொழிற்சாலை, வடிப்பாலைகள், கப்பல் கட்டுதல் போன்ற தொழில்கள் இரண்டாம் நிலை தொழில்கள் ஆகும்.

உற்பத்தி தொழிற்சாலைகள் ஒரு பொருளாதாரத்தில் முக்கியமான செல்வ வளம் கொழிக்கும் பகுதி ஆகும். ஒரு நாட்டின் பொருளாதார திறன் அந்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளை வைத்தே அளவிடப்படுகிறது. வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற முதல்நிலைத் தொழில்களை ஒப்பிடும்பொழுது, உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அண்மையில்தான் தோன்றியது எனலாம். இன்றைய காலக்கட்டத்தில் தொழிற்சாலைகள் பெரும்பான்மையான சமூகங்களிலும், நாடுகளிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

பதினெட்டு மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் அதனால் உருவான தொழிற்சாலைகளினால் மேற்கத்திய நாடுகளில் மிக அதிக அளவில் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இதுவே **"தொழிற்புரட்சி"** என்றழைக்கப்பட்டது. இது உலக வரலாற்றில் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாகும். நிலக்கரி தொழிற்புரட்சியை ஏற்படுத்திய முதல் எரிபொருள் ஆகும். வேளாண்மை, சுரங்கத்தொழில் மற்றும் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட பெரும் மாற்றங்கள் உலகின் சமூக மற்றும் பொளாதார மாற்றம் ஏற்பட வழி வகுத்துள்ளது.

### தொழிற்சாலையின் அமைவிடக் காரணிகள்

தொழிற்சாலைகளை எல்லாப் பகுதிகளிலும் அமைக்க இயலாது. ஒரு தொழிற்சாலை தொடங்கப்படுவதை பல்வேறு முக்கிய அமைவிடக்காரணிகள் நிர்ணயிக்கின்றன. இவை புவியியல் காரணிகளாகவோ, மக்களின் வாழ்வியல் காரணிகளாகவோ இருக்கலாம். இக்காரணிகள் தெளிவாகப் படம்–42ல் காட்டப் பட்டுள்ளது.




படம் –42. தொழிற்சாலையின் அமைவிடக் காரணிகள்

### மூலப்பொருட்கள்

சில தொழிற்சாலைகளுக்குக் கனமான, அதிகளவு மூலப்பொருட்கள் தேவைப்படும். அத்தகைய தொழிற்சாலைகள் நேரம் மற்றும் போக்குவரத்துச் செலவைக் குறைப்பதற்காக அம்மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களின் அருகிலேயே நிறுவப்படுகிறது. இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலைகள் பெரும்பாலும் நிலக்கரி அல்லது இரும்பு கிடைக்கும் சுரங்கங்களுக் அருகிலேயே அமைக்கப்படும். எடுத்துக்காட்டாக, டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை, இராணிகன்ச், ஜாரியா மற்றும் பொக்காரோ நிலக்கரி வயல்களுக்கு அருகிலேயே அமைந்துள்ளது.

### பணியாளர்கள்

தொழிற்சாலைகள் இயங்க அதிக எண்ணிக்கையிலான குறைந்த ஊதியம் பெற்றுக் கொள்ளும் பணியாளர்கள் அல்லது மனிதசக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே தொழிற்சாலைகள் மக்கள்தொகை அதிகமாக உள்ள இடங்களில் அமைக்கப்படுகிறது. இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் அதிக எண்ணிக்கைக் கொண்ட குறைந்த ஊதியம் பெற்றுக்கொள்ளும் பணியாளர்களைக் கொண்ட நாடுகளாகும்.

பணியாளர்களைக் குறிப்பிட்ட தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்கள் எனவும் ஓரளவு தொழில் நுட்பம் தெரிந்த பணியாளர்கள் எனவும் இரு

பிரிவுகளாகப் பிரிக்கலாம். வைரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு அத்தொழில்நுட்பம் மிக்க பணியாளர்கள் தேவை. ஆனால் பொருள்களை அடுக்கிக்கட்டும் (packing) தொழிற்சாலைகளுக்கு குறிப்பிட்ட தொழில்நுட்பம் தெரிந்த பணியாளர்கள் தேவை என்ற அவசியம் இல்லை.

### எரிபொருள்

இயந்திரங்களை இயக்குவதற்கு எரிபொருள் அடிப்படைத் தேவையாகும். தொழிற்துறை, உலகின் 70% எரிபொருள் சக்தியை இயந்திரங்கள் இயக்கப் பயன்படுத்திக் கொள்கிறது. அனல் மின் சத்தி (நிலக்கரி) மற்றும் நீர்மின்சக்தி ஆகியவை தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் முக்கியமான எரிபொருள்களாகும். இவ்வெரிபொருட்கள் எளிதாகக் கிடைக்கும் இடங்களில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன.

### மூலதனம்

மூலதனம் அல்லது பணம், எந்த ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கும் தேவையான ஒன்றாகும். தொழற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து இடு பொருட்களை (INPUT) வாங்க இது தேவைப்படுகிறது.சில தொழிற்சாலைகள் இயங்க அதிக மூலதனமும், சில தொழிற்சாலைகள் இயங்க குறைவான மூலதனமும் தேவைப்படுகிறது. பெரிய தொழிற்சாலைகள் எனில், அதிக உற்பத்தித்திறன் பெருகுகையில் மூலதனமும் அதிகரிக்கிறது. எங்கு முதலீடு செய்வதற்கு மூலதனம் அதிகமாகக் கிடைக்கிறதோ, அங்கு தொழிற்சாலைகள் வளர்ச்சியடையும்.

### போக்குவரத்து

தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யத் தேவைப்படும் மூலப்பொருள்கள், அது கிடைக்கும் இடத்திலிருந்து தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து மிக முக்கியமானது ஆகும். எனவே, குறைவான செலவில் வேகமாக இயக்கப்படும் போக்குவரத்து தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படுகிறது. எனவே போக்குவரத்து வளர்ச்சி அதிகம் உள்ள பகுதிகளில் தொழிற்சாலைகள் நிறுவப்படுகிறது.

### சந்தை

உதிரிப்பாகங்களை இணைத்துப் பல பொருள்களை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகள் சந்தைக்கு அருகிலேயே நிறுவப்படுகிறது. எடுத்துக்காட்டாக வாகன உற்பத்தி தொழிற்சாலை, பால்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை எளிதில் உடையக்கூடிய நுட்பமான கண்ணாடி பொருள்களை தயாரிக்கும் தொழிற்சாலைகளும் சந்தைக்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில், அவை விரைவில் அழுகக்கூடியதும் (பால், பழம் போன்ற பொருட்கள்) உடையக்கூடிய (கண்ணாடி) பொருட்களாகும்.

ஒன்று அல்லது பல்வேறு புவியியல் காரணங்கள் மற்றும் மனித வாழ்வியல் காரணங்கள் உலகளவில் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கான காரணிகளாய் அமைகிறது. காலநிலை, நீர்வசதி போன்ற பல காரணங்களும் தொழிற்சாலை நிறுவுவதற்கான காரணிகள் ஆகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இயற்கையில் ____________ வடிவில் கிடைக்கும் வளங்களை நாம் அப்படியே உபயோகிக்க முடியாது.
2. தொழிற்சாலைகள் தொடங்கப்படுவதை ____________ மற்றும் ____________ காரணிகள் நிர்ணயிக்கின்றன.
3. கனமான மூலப்பொருள்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் ____________ கிடைக்கும் இடங்களுக்கு அருகிலேயே தொடங்கப்படுகின்றது.
4. தொழிற்துறை உலகின் ____________ எரிபொருள் சக்தியை இயந்திரங்கள் இயக்கப் பயன்படுத்திக் கொள்கிறது.
5. எளிதில் உடையக்கூடிய, நுட்பமான கண்ணாடிப் பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ____________ அருகிலேயே நிறுவப்படுகின்றன.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எளிதில் உடையக்கூடிய நுட்பமான பொருட்கள்
   அ) கண்ணாடிப் பொருள்கள் ஆ) காய்கறிகள் இ) வண்டிகள்
2. தொழிற்புரட்சியை ஏற்படுத்திய முதல் எரிபொருள் ____________ ஆகும்.
   அ) எண்ணெய் ஆ) இரும்பு இ) நிலக்கரி
3. பொதுவாக ____________ நிலக்கரி சுரங்கங்களுக்கு அருகிலேயே அமைக்கப்படும்.
   அ) அலுமினியம் தொழிற்சாலை ஆ) இரும்பு எஃகு தொழிற்சாலை
   இ) கப்பல் கட்டும் தொழிற்சாலை
4. வைரம் அறுக்கும் தொழிற்சாலைக்கு ____________ பணியாளர் தேவைப்படுகிறது.
   அ) குறிப்பிட்ட தொழில்நுட்பம் தெரிந்த ஆ) தொழில்நுட்பம் தெரியாத
   இ) ஓரளவு தொழில்நுட்பம் தெரிந்த

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. அதிகளவு பொருள் உற்பத்தி | பணியாளர்களைமையமாகக் கொண்டு |
| 2. இரும்பு எஃகு தொழிற்சாலை | சந்தையினை மையமாகக் கொண்டு |
| 3. ஜாரியா | தொழிற்புரட்சி |
| 4. பொருள்களை அடுக்கிக்கட்டும் தொழிற்சாலை | நிலக்கரிச் சுரங்கம் |
| 5. உதிரிப்பாகங்களை இணைக்கும் தொழிற்சாலை | மூலப்பொருள்கள் |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. தொழிற்சாலை என்றால் என்ன ?
2. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு ஏற்ற அடிப்படைக்காரணிகள் யாவை ?
3. இரண்டாம் நிலை தொழில்களில் சிலவற்றை குறிப்பிடுக.
4. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களின் வகைகளைக் கூறுக.

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கு மூலதனம் எங்ஙனம் முக்கிய பங்கினை அளிக்கிறது ?
2. தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு மூலதனம் ஆற்றும் முக்கியப்பங்கினை பற்றி விவரிக்க.

## VI) விரிவாக விடையளிக்க.


1. ஒரு தொழிற்சாலை நிறுவுவதற்கும் வளர்ச்சியடைய செய்வதற்கும் ஏற்ற காரணிகளைப் பற்றி விரிவாக எழுதுக.

## VII) செய்முறைப் பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் பகுதியின் அருகிலுள்ள ஏதேனும் இரண்டு தொழிற்சாலைகளின் அமைவிடக் காரணிகளைப் பட்டியலிடுக.

# இரண்டாம் நிலைத்தொழில் II
# தொழிலகங்களின் வகைகள்

முந்தைய பாடத்தில் தொழிலகங்களின் அமைவிடக் காரணிகளை படித்தறிந்தோம். பொதுவாக தொழிலகங்கள் மூலப்பொருள், அமைவிடம், உற்பத்தி அளவு, உற்பத்தி செய்யும் முறைகள், பணிகளின் தன்மை மற்றும் உடைமை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன (படம்–43).




படம்–43. தொழிலகங்களின் அமைவிடக் காரணிகள்

## 1. மூலப்பொருள்களின் அடிப்படையில் உள்ள வகைகள்

தொழிலகங்களில் பயன்படுத்தப்படும் மூலப்பொருள்களின் அடிப்படையில் தொழிலகங்களின் வகைகள் காடுகள் சார்ந்த தொழிலகம், வேளாண்மை சார்ந்த தொழிலகம் மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகம் என பிரிக்கப்பட்டு வகைப்படுத்தப் படுகின்றன.

### அ. காடுகள் சார்ந்த தொழிலகம்

இவ்வகை தொழிலகங்களுக்கு காடுகளிலிருந்து மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டுகளாக காகிதத் தொழிற்சாலை, அறைகலன் இருக்கைகள் செய்தல் (படம்–44) போன்ற தொழில்கள், இவ்வகை தொழிலகங்களில் அடங்கும்.



படம்–44. அறைகலன்கள் செய்தல்

### ஆ. வேளாண்பொருள் சார்ந்த தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் வேளாண்பொருள்களை மூலதனமாகக் கொண்டு பருத்தி மற்றும் சணல் பொருள்கள் மற்றும் சர்க்கரை போன்ற பொருள்களை உற்பத்தி செய்கின்றன.

### இ. கனிமங்கள் சார்ந்த தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்களுக்கு கனிமப் பொருள்கள் மூலப் பொருள்களாகின்றன. இரும்பு, எஃகு, சிமெண்ட், அலுமினியம் மற்றும் இரசாயனப் பொருள்கள் இவ்வகை தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும். (படம்– 45)



படம்–45 சிமெண்ட் தொழிற்சாலை

**2. அமைவிட காரணம் சார்ந்த தொழிலகங்கள்**

**அ. மூலப்பொருள் தன்மை பொறுத்து செயல்படும் தொழிலகங்கள்**

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருள்கள் கிடைக்குமிடத்திற்கு அருகிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில் சில மூலப்பொருள்கள் கனமான மூலப் பொருளாகவோ தனித்தன்மை கொண்ட மூலப்பொருளாகவோ இருக்கலாம். எடுத்துக்காட்டு: இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள், நிலக்கரி மற்றும் இதர கனமான மூலப்பொருள் கிடைக்குமிடங்களின் அருகாமையில் அமைகின்றன. சர்க்கரை தொழிற்சாலை கரும்பு விளையும் வயல்களுக்கு அருகாமையில் நிறுவப்படுகின்றன. ஏனெனில் கரும்பு அறுவடை செய்யப்பட்டு கரும்புச்சாறை சரியான நேரத்திற்குள் அதனை பதப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில் கரும்பின் இனிப்புத்தன்மை குறைய வாய்ப்புள்ளது.

**ஆ. சந்தை சார்ந்த தொழிலகங்கள்**

இவ்வகை தொழிலகங்கள் சந்தைக்கு அருகாமையிலேயே நிறுவப்படுகின்றன. ஏனெனில், பொருட்கள் அழுகும் தன்மை அல்லது கெட்டுப்போகும் தன்மை உடையதாக மாற வாய்ப்பு உள்ளது. எடுத்துக்காட்டாக: அடுமனை பொருட்களாகிய பிஸ்கட், கேக் போன்ற பொருள்கள் மற்றும் குளிரூட்டப்படாத அல்லது பதப்படுத்தப்பட்டு அடைக்கப்படாமல், சமைத்த இறைச்சிப் பொருட்களும் ஆகும்.

**இ. சிதறி காணப்படும் தொழிலகங்கள் (Foot Loose)**

இவ்வகை தொழிலகங்கள் எவ்விடத்திலும் நிறுவப்படலாம். ஏனெனில், இதன் மூலப்பொருள்கள் இயந்திரங்கள் மற்றும் அதன் பாகங்கள் ஆகும். எடுத்துக்காட்டு: கடிகாரம் தயாரிக்கும் தொழிலகங்கள்.

**3. உற்பத்தித்திறன் அளவு அடிப்படையில் உள்ள வகைகள்**

உற்பத்தித்திறன் அளவு அடிப்படையில் அதிக உற்பத்தி தொழிலகங்கள், மிதமான உற்பத்தி, சிறிய அளவு உற்பத்தி திறன் கொண்ட தொழிற்சாலைகள் உள்ளன.

**அ. பெரிய அளவில் உற்பத்தித் திறன் கொண்ட தொழிலகங்கள்**

இவ்வகை தொழிலகங்களுக்கு பெரிய அளவில் மூலதனம், கனமான



படம்–46. பெரிய அளவு உற்பத்தி தொழிற்சாலை

இயந்திரங்கள் மற்றும் அதிக அளவில் பணியாளர் எண்ணிக்கை அவசியமாகிறது. எடுத்துக்காட்டாக: இரயில் பெட்டி தொழிற்சாலை– சென்னை, டாடா இரும்பு எஃகு தொழிற்சாலை–ஜம்ஷெட்பூர், BHEL– திருச்சி, SAIL–சேலம் (படம்–46).

### ஆ) மிதமான அளவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை

இத்தகைய தொழிற்சாலை அளவில் குறைவாக காணப்படினும் மூலதனம், தொழில் நுட்பத்தையும் சார்ந்தே அமைக்கப்படுகிறது. கணினி தொழிலகங்கள், மின்னணு தொழிலகங்கள் ஆகியவை இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.(படம்–47)



படம்–47. மின்னணு தொழிலகங்கள்

### இ) சிறிய அளவு உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்

இத்தகைய தொழில் நிறுவனங்கள் சிறிய அளவு மூலதனங்களையும், குறைந்த பணியாளர்களையும் கொண்டு காணப்படுகிறது. வீட்டுப் பயன்பாட்டுப் பொருள்கள் இத்தகைய தொழிலகங்களில் உற்பத்தி செய்யப்படலாம். கைவினைப் பொருள்கள், எழுது பொருள்கள் போன்ற தயாரிப்புகள் எடுத்துக்காட்டுகளாகும் (படம்–48).



படம்–48. எழுது பொருள்கள்

### ஈ. கைத்தொழில்கள்

இவை குறைந்த மூலதனம் கொண்ட மிகச்சிறிய அளவிலான தொழிலகங்களாகும். ஒரு சிறிய குழுமமோ அல்லது குடும்பம் சார்ந்தவர்கள் இத்தகைய தொழிலகங்களை வைத்திருப்பர். கைத்தறி, பாய்பின்னுதல், மூங்கில் மற்றும் மரப்பட்டை சார்ந்த பொருள்கள் தயாரித்தல், பானைசெய்தல் ஆகிய தொழில்கள் இவற்றில் அடங்கும் (படம்.49).



படம்–49. கைத்தொழில்–பானை செய்தல்

## 4. உற்பத்தி செயல்முறைகள் சார்ந்த தொழிலகங்கள்

உற்பத்தி செயல்முறைகளைப் பொருத்து தொழிலகங்கள் கனரக தொழிற்சாலை, கனமற்ற பொருள் உற்பத்தி தொழிற்சாலை என பிரிக்கப்படுகிறது.

### அ. கனரக தொழிற்சாலை

இவ்வகை தொழிலகங்கள் அதிக கனமுள்ள மூலப்பொருள்கள் மற்றும் கனமுள்ள உற்பத்தி பொருள் தயாரிக்கும் தொழிலகங்கள் ஆகும். இவை அதிக மூலதனமும், வளகவன தொழிலகங்களும், அதிக உற்பத்தி செய்யும் தொழிலகங்களாக விளங்குகின்றன. டிஸ்கோ (TISCO) என அழைக்கப்படும் இரும்பு எஃகுத் தொழிலகங்கள், பெல் (BHEL) எனப்படும் கனரகத் தொழிலகம் மற்றும் வாகனத் தொழிலகம்இவற்றுக்கு எடுத்துக்காட்டுகளாகும் (படம்–50).



படம்–50. BHEL – திருச்சி

### ஆ. கனமற்ற தொழிலகங்கள்

இத்தகைய தொழிலகங்களில் மூலப்பொருள்களும், முடிவுற்ற உற்பத்தி பொருள்களும் அதிக கனமின்றி லேசான பொருள்களாக இருக்கும். அவை குறைந்த மூலதனத்துடன் நுகர்வோர் சார்ந்த தொழில்களாக இருக்கும். கடிகாரம் தயாரித்தல், உறைகள் தயாரிக்கும் தொழில் மற்றும் வீட்டு சாமான்கள் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

## 5. பணிகளின் தன்மை சார்ந்த தொழிலகங்கள்

பணிகளின் தன்மையைக் கொண்டு, தொழிலகங்கள் பதப்படுத்தும் தொழிலகங்கள், உற்பத்தி செய்யும் தொழிலகங்கள், பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.


### அ. பதப்படுத்தும் தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருளையோ அல்லது முடிவுற்ற பொருள்களையோச் பதப்படுத்தும் தொழிலை செய்கின்றன. தோல்பதனிடும் தொழிலகங்களில் தோலினை பதப்படுத்தி (படம்–51) தோல் பொருள்களாக மாற்றும் செயல்கள், பஞ்சிலிருந்து விதைகளைப் பிரித்தெடுக்கும் செயல்கள் மற்றும் உலோக மூலப்பொருள்களிலிருந்து உலோகத்தை உருக்கும் செயல்களும் இவ்வகை தொழில்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.



படம்–51. தோல் பதனிடும் தொழிற்சாலை

## உலகின் தொழித்துறை வட்டாரங்கள்




படம் 53

### ஆ. உற்பத்தி செய்யும் தொழிலகங்கள்

இவ்வகை தொழிலகங்கள் மூலப்பொருள்களை அல்லது முடிவுற்ற பொருள்களை உற்பத்திப் பொருள்களாக மாற்றும் பணியினைச் செய்கின்றன. எடுத்துக்காட்டாக நூலிழைகளை துணிகளாக மாற்றும் ஜவுளித் தொழிலகங்கள், இரும்பு எஃகு உருக்காலைகள், இரும்பை இயந்திரங்களாக செய்தல், மரத்தை மரப்பொருள்களாகச் செய்தல், ஆகியவற்றைக் கூறலாம்.

### இ) பாகங்களை இணைக்கும் தொழிலகங்கள்

முடிவுற்ற பொருள்களை இணைத்து புதிய பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள்என அழைக்கப்படுகின்றன. வாகன தொழிலகங்கள் மற்றும் கணினி பாகங்கள் இணைக்கும் தொழிலகங்கள் இவ்வகைத் தொழில்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும் (படம்.52).



படம்–52 . பாகங்கள் இணைக்கும் தொழிற்சாலைகள்

### 6. உடைமைத் தன்மை

உடைமைத் தன்மையைப் பொறுத்து பொதுத்துறை தொழிலகங்கள் மற்றும் தனியார்துறை தொழிலகங்கள் என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

### அ. பொதுத்துறை

இவ்வகை தொழிலகங்கள் அரசாங்கத்திற்கு சொந்தமானதாகும் BHEL மற்றும் SAIL ஆகிய தொழிலகங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### ஆ. தனியார்த் துறை

இவ்வகை தொழிலகங்கள், தனிமனிதன் சொந்தமாகவோ அல்லது ஒரு சிறு குழுமமாகவோ செயல்படும் தொழிலகங்களாகும். எடுத்துக்காட்டு. ரிலையன்ஸ்.

உற்பத்தி செய்யும் தொழிலகங்கள் பொருளாதாரத்தின் அதிக பொருள் மற்றும் நலன் தரும் துறையாகும்.

தொழிலகங்களின் வளங்கள் பொருளாதார மேம்பாட்டிற்குப் பெரும் பங்களிக்கின்றன. பொருளாதார மேம்பாடு அடைந்த நாடுகள் (படம்–53) என்பன மிக சிறப்பாக வளர்ந்த தொழில்துறைகள் காணப்படும் நாடுகளாகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. லேசான அல்லது கனமற்ற மூலப்பொருள்களைக் கொண்டு தயாரிக்கும்__________ தொழிற்சாலைகள் எங்கு வேண்டுமானாலும் நிறுவப்படலாம்.

2. வாகனத் தொழிற்சாலை ஒரு__________ தொழிற்சாலையாகும்.

3. __________ தொழிற்சாலைகள் சந்தைகளுக்கு அருகே நிறுவப்படுகின்றன.

4. கைத்தறி தொழில்கள்__________ தொழிலகங்களுக்கு எடுதுக்காட்டாகும்.

5. பதபடுத்தும் தொழில்கள் மூலப்பொருள்களை__________ பொருள்களாக மாற்றியமைக்கிறது.

### II) சரியான விடையை தேர்தெடுத்து எழுதுக.

1. தனியார் நிறுவனத்திற்கு எடுத்துக்காட்டு

அ) ரிலையன்சு ஆ) பெல்(BHEL)

இ) பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் (BSNL)

2. பெரிய அளவில் உற்பத்தித்திறன் கொண்ட தொழிலகங்களுக்கு __________ முதலீடு தேவை.

அ) அதிக ஆ) மிதமான இ) குறைவான

3. அறைகலன்கள் செய்யும் தொழிலகங்கள் __________ தொழிலகங்களுள் அடங்கும்.

அ) காடுகள் சார்ந்த ஆ) வேளண்பொருள்கள் சார்ந்த இ) கனிமங்கள் சார்ந்த

4. பருத்தி தொழிற்சாலை ஒரு__________ தொழிலாகும்.

அ) கைத்தொழில் சார்ந்த ஆ) உதிரி பாகங்களை இணைக்கும்

இ) வேளாண் பொருள் சார்ந்த

5. சர்க்கரைத் தொழிற்சாலை__________ சார்ந்த தொழிலகமாகும்.

அ) மூலப்பொருள் ஆ) சிதறிக்காணப்படும் இ) சந்தை

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. விதை பிரித்தல் முறை | இரும்பு எஃகு தொழிற்சாலை |
| 2. பதப்படுத்துதல் | கனரக தொழிற்சாலை |
| 3. உருக்குதல் | பருத்தி தொழிற்சாலை |
| 4. மூலதனம் | கைத்தறி தொழிற்சாலை |
| 5. நெசவு | தோல் தொழிற்சாலை |

## IV) சுருக்கமான விடையளிக்க.

1. அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளின் பிரிவுகளை எழுதுக.
2. உற்பத்தி அளவினை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகள் எங்கனம் வகைபடுத்தப்படுகின்றது.
3. உதிரி பாகங்களை இணைக்கும் தொழிற்சாலை என்றால் என்ன ?
4. கனமற்ற தொழிலகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
5. கைத்தொழில்களின் பண்புகளை எழுது.

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. "தொழிற்பரட்சி" பற்றி எழுதுக.
2. மூலப்பொருள்களை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளதை விவரி.

## VI) விரிவாக விடையளிக்க.

1. தொழிற்சாலைகள் எங்ஙனம் வகைப்படுத்தப்படுகின்றன ?

## VII) செய்முறை பயிற்சி.

1. நீங்கள் வசிக்கும் மாவட்டத்தில் உள்ள வெவ்வேறு வகையான ஏதேனும் பத்து தொழிற்சாலைகளைப் பட்டியலிடுக.

# மூன்றாம் நிலைத் தொழில் I
# வணிகம்

வணிகம் எனப்படுவது ஒரு நாட்டிற்குள்ளேயோ அல்லது பல நாடுகளுக்கு இடையேயோ பொருள்களை பரிமாற்றும் முறையே ஆகும். ஓரிடத்தில் இருக்கும் உபரியான பொருள்கள் மற்றும் மற்றுமொரு இடத்தில்ஏற்படும் அப்பொருளுக்கானத் தேவை ஆகியவை வணிகம் நடைபெறக் காரணமாக உள்ளது. நாடுகளிடையே காணப்படும் இயற்கை வளஆதாரங்களின் வேறுபாடுகள், அவற்றிற்கிடையே நடைபெறும் வணிகத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

உலகளவில் வணிகம் செய்யப்படும் பொருள்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### 1. முதல்நிலை உற்பத்தி பொருள்கள்

உணவுப் பொருள்கள் (பருப்பு வகைகள், பழங்கள்) மற்றும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் மூலப்பொருள்கள் (தாதுக்கள், நார்பொருள்கள்) ஆகியவை முதல்நிலை உற்பத்திப் பொருள்களாகும்.

### 2. இரண்டாம் நிலை உற்பத்திப் பொருள்கள்

இரண்டாம் நிலை உற்பத்தி பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களாகும். வணிகம் ஒரு நாட்டிற்குள்ளேயும் (உள்நாட்டு வணிகம்) பல நாடுகளுக்கிடையேயும் (பன்னாட்டு வணிகம்) நடைபெறும்.

உலகின் பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகம் ஈரிணை (Bilateral) வணிகம் எனவும், பல நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகத்தினை பன்னாட்டு (Multilateral) வணிகம் எனவும் அழைக்கலாம்,

இரு நாடுகளுக்கிடையே நடைபெறும் வணிகத்தினை இருநாட்டு வணிகம் எனவும், பல நாடுகளுக்கு இடையே நடைபெறும் வணிகத்தினை பன்னாட்டு வணிகம் எனவும் அழைக்கலாம்.

### வணிகத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

வணிகம் கீழ்கண்ட காரணிகளால் நடைபெறுகிறது.

### 1. சீரற்றுக் காணப்படும் இயற்கை வளஆதாரங்கள்

காலநிலை, நிலத்தோற்றம், மண், இயற்கைத்தாவரங்கள் மற்றும் கனிமவளங்கள் போன்றவற்றில் காணப்படும் வேறுபாடுகள் வணிகம் ஏற்படக் காரணமாகின்றது.

### 2. தொழில்துறை / பொருளாதாரத்துறை வளர்ச்சி நிலை

தொழில்மயமான நாடுகள், உற்பத்தி செய்த முடிவுப்பொருள்களை தொழில்துறை வளர்ச்சியில் குறைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றன. தொழில்துறை வளர்ச்சி குறைந்தநாடுகள், மூலப்பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்றன.

### 3. காலநிலை வேறுபாடு

காலநிலையில் ஏற்படும் வேறுபாடு வேளாண்மை வகைகளிலும், விலங்குகள் மற்றும் காட்டுப் பொருள்களிலும் வேற்றுமையை ஏற்படுத்துகிறது. இவை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பரிமாற்றம் செய்து கொள்ளப்படுகிறது. இப்பரிமாற்றம்

வெவ்வேறு காலநிலையிலுள்ள நாடுகளுக்கிடையே ஏற்படுகிறது. எடுத்துக்காட்டு: மிதவெப்பமண்டல (Temperate regions) பகுதிகள் மிருதுவான மரங்கள் மற்றும் பால்பொருள்களையும், அயனமண்டல (tropical region) பகுதிகள் கடினமான மரங்கள் மற்றும் வெப்பமண்டலப் பயிர்களையும் ஏற்றுமதி செய்கிறது.

### மக்களிடையே காணப்படும் வேறுபாடு

வெவ்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் வெவ்வேறு விதமான பொருள்களை உற்பத்தி செய்வர். ஏனெனில் ஒவ்வொரு நாடும் தங்கள் பழமையான மரபுகளுக்கு ஏற்ப பொருள்களை உற்பத்தி செய்வர். எடுத்துக்காட்டு: சீனாவில் உற்பத்தியாகும் பட்டாடைகள் மற்றும் சுவிட்சர்லாந்தில் உற்பத்தியாகும் கைகடிகாரங்கள். மக்கள் அடர்த்தி அதிகம் உள்ள நாடுகளில் அவர்களின் உள்நாட்டு நுகர்வு அதிகமாகவும், எஞ்சியபொருள்கள் குறைவாகவும் இருப்பதால் பன்னாட்டு வணிகம் குறைவாகவே இருக்கும். இருப்பினும், தொழிலாளர்கள் அதிகமாக ஈடுபட்டுத் தயாரிக்கும் பொருள்களை ஏற்றுமதி செய்வர். எடுத்துக்காட்டு: தேயிலை.

### போக்குவரத்து

வணிகத்தின் வளர்ச்சியில் போக்குவரத்து மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சாலைப்போக்குவரத்து, எண்ணெய் குழாய் போக்குவரத்து போன்றவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகள் பலதரப்பட்ட கனமான பொருள்களைத் துறைமுகங்களுக்கு எடுத்துச்சென்று பன்னாட்டு வணிகம் நடத்த ஏதுவாய் அமைகிறது.

### அரசுத் திட்டங்கள்

நாடுகளுக்கிடையே உள்ள அரசாங்க நல்லுறவுகளினால் பன்னாட்டு வணிகம் சாதகமாகிறது. பல நாடுகளுக்கிடையேயான உறவு சுமுகமாக இருப்பின், அங்கு வணிகம் அதிகமாக நடைபெறும்.

வணிகத்தை மேன்மேலும் உயர்த்துவதற்கு அண்டைநாடுகளுடன் ஒன்றிணைந்து ஒரு குழுவாக செயல்படுவதை வணிகக் கூட்டமைப்புகள் (Trading blocs) என்றழைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டு. தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பு நாடுகள் (ASEAN), ஐரோப்பிய கூட்டமைப்பு போன்றவை ஆகும்.

### பன்னாட்டு வணிகப்போக்கு

பன்னாட்டு வணிகப்போக்கு புவியியல், பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வேளாண்பொருள்கள் மற்றும் கனிமப் பொருள்களை உற்பத்தி செய்து வணிகம் செய்வதன் மூலம் பல நாடுகள் அமைவிடம் போன்ற புவியியல் நன்மையினை அடைகிறது. எனவே, சில பொருள்களின் வியாபாரப்போக்கு சில நாடுகளில் சிறப்பாக உள்ளது. மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெறப்படும் எண்ணெய், கனடா மற்றும் ஸ்வீடனிலிருந்து கிடைக்கும் காகிதம் மற்றும் காகிதக்கூழ் மற்றும் மலேசியாவிலிருந்து கிடைக்கும் இரப்பர் மற்றும் தகரம் ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

### வணிக வட்டாரங்கள்

#### 1. ஐரோப்பா

ஐரோப்பா, ஒரு மக்கள்அடர்த்தி மிகுந்த, தொழில் வளர்ச்சி மிகுந்த மற்றும் வணிக அடர்த்தி (30%) மிகுந்த பகுதியாகும். இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் அனைத்தும்

முடிவுற்றபொருள்கள் மற்றும் ஓரளவு மாற்றப்பட்ட மூலப்பொருள்களுமே ஆகும். தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள் ஐரோப்பாவின் முக்கியமான இறக்குமதிப் பொருளாகும்.

## 2. வட அமெரிக்கா

அ.ஐ.நாடும், கனடாவும் அதிக அளவு வணிகம் செய்யும் நாடுகளாகும். இந்நாடுகள் இணைந்து இயந்திரங்கள், வாகனங்கள், இராசாயனப்பொருட்கள் போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்வதோடு பலவிதமான பொருள்களை இறக்குமதியும் செய்துகொள்கின்றன.

## 3. இலத்தீன் அமெரிக்கா

இவ்வட்டாரம் கரீபியன் தீவுகள், மத்திய மற்றும் தென்அமெரிக்க நாடுகள் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாகும். இப்பகுதிகள் அனைத்தும் உணவுப்பொருள்கள் மற்றும் மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் திகழ்கின்றன.

## 4. ஆப்பிரிக்கா

ஆப்பிரிக்க நாடுகள் கனிமத் தாதுக்களையும், அயனமண்டலத்தின் மூலப்பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் நாடுகளாகவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் திகழ்கிறது.

## 5.ஆசியா

ஆசிய நாடுகள் மூலப்பொருள்களும் மற்றும் கனிம வளங்களும் அதிகமாக உள்ள நாடுகள் ஆகும். எனவே, அவற்றை ஏற்றுமதி செய்கின்றன. ஜப்பான் நாட்டைத் தவிர பிற ஆசியநாடுகள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகும்.

## 6. ஆஸ்திரேலியா

ஆஸ்திரேலியா, வேளாண்மை பொருள்கள் மற்றும் கனிமங்களை ஏற்றுமதி, செய்வதுடன் உணவுதானியங்கள், எண்ணெய் மற்றும் இயந்திரங்களை இறக்குமதியும் செய்கின்றது.

வணிகம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. ஏற்றுமதி மதிப்பிற்கும், இறக்குமதி மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடு **'வணிகச் சமநிலை'** எனப்படுகிறது. ஏற்றுமதியின் மதிப்பு, இறக்குமதியின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால் அந்நாட்டில் சாதகமான வணிக சமநிலை நிலவுகிறது எனலாம். இறக்குமதியின் மதிப்பு ஏற்றுமதியின் மதிப்பைவிட அதிகமாக இருந்தால், அந்நாட்டில் பாதகமான வணிக சமநிலை நிலவுகிறது எனலாம்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இலத்தின் அமெரிக்கா ____________ மற்றும் மூலப்பொருள்களையும் ஏற்றுமதி செய்கிறது.

2. இரப்பர் மற்றும் தகரம் அதிகம் காணப்படும் இடம் ____________ ஆகும்.

3. தொழில்துறையில் வளர்ச்சியடைந்த நாடுகள், ____________ பொருள்களைத் தொழில்துறை வளர்ச்சியடையாத நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது.

## II) பொருத்துக.

| | |
|---|---|
| 1. சீனா | மத்திய கிழக்கு நாடுகள் |
| 2. எண்ணெய் | கனிம தாதுக்கள் |
| 3. காகிதம் | பட்டு |
| 4. ஆப்பிரிக்கா | மலேசியா |
| 5. தகரம் | கனடா |

## III) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஒரு நாட்டிற்குள்ளேயே நடைபெறும் வாணிபம் ____________.

   ஆ) உள்நாட்டு வாணிபம் ஆ) பன்னாட்டு வாணிபம் இ) திறந்த வாணிபம்

2. தொழிற்சாலையின் மூலப்பொருள்கள்____________ பொருள்களாகும்.

   அ) முதல்நிலை ஆ) இரண்டாம் நிலை இ) மூன்றாம் நிலை

3. சுவிட்சர்லாந்து____________உற்பத்திக்குப் புகழ்பெற்றது.

   அ) பட்டு ஆ) கைக்கடிகாரம் இ) தேயிலை

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. ஈரிணை வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம் என்றால் என்ன ?
2. உலகளவில் வணிகம் செய்யப்படும் பொருள்களின் இரு பிரிவுகள் யாவை ?
3. வணிகம் ஏன் நடைபெறுகிறது ?

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. காலநிலை ஒரு நாட்டின் வணிகத்தை எங்ஙனம் பாதிக்கிறது ?
2. 'வணிகச் சமநிலை' பற்றி குறிப்பு வரைக.

## VI) விரிவாக விடையளிக்க.

1. வணிகத்தைப் பாதிக்கும் காரணிகள் யாவை ?
2. உலகின் முக்கிய வணிக வட்டாரங்களைப் பற்றி எழுதுக.

## VII) செய்முறைப் பயிற்சி

உலகின் ஏதேனும் ஒரு வணிகக் கூட்டமைப்பு பற்றிய செய்திகளை சேகரிக்க.

# மூன்றாம்நிலை தொழில்கள் II
# போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்புகள்

போக்குவரத்து என்பது மக்கள் மற்றும் பொருள்களின் இடப்பெயர்வு ஆகும். ஒரு வட்டாரத்திலுள்ள ஒரு நல்ல போக்குவரத்துத் தொகுதி அப்பகுதியிலுள்ள வளஆதாரங்கள் மற்றும் மனித சக்தியை எடுத்துச் செல்லவும் பரிமாறிக்கொள்ளவும் பயன்படுகிறது. அது மட்டுமன்றி, அதன் விளைவு அப்பகுதியை பொருளாதார மேம்பாடடைய உதவி புரிகிறது.

## முக்கிய போக்குவரத்து தொகுதிகளாவன:

### சாலைப்போக்குவரத்து

பொதுவாக உலகில் எல்லா இடங்களிலும் காணப்படுவது சாலைப்போக்குவரத்து ஆகும். சாலைகளின் அடர்த்தி (ஒரு நாட்டின் மொத்த பரப்பிற்கும் அந்நாட்டின் சாலைகளின் மொத்த நீளத்திற்கும் உள்ள விகிதம்) மக்கள் அடர்த்தி (ஒரு நாட்டின் மொத்த பரப்பிற்கும் அந்நாட்டின் மொத்த மக்கள் தொகைக்கும் உள்ள விகிதம்) மற்றும் ஒரு நாட்டின் பொருளாதர வளர்ச்சி நிலை ஆகியவை ஒரு நல்ல தொடர்புடையனவாக திகழ்கின்றன. சாலைப் போக்குவரத்து இணைப்பு அதிகமாக இருப்பின் பொருளாதார வளர்ச்சியும் அதிகமாக இருக்கும்.

சாலைகளை கண்டங்களுக்கு இடையேயான சாலைகள் (Trans-continental roads) தேசிய சாலைகள் மற்றும் உள்ளூர் சாலைகள் என வகைப்படுத்தலாம். கண்டங்களுக்கு இடையேயான சாலைகள் முக்கியமானவை. அவை ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு இணைக்கும் நீண்ட சாலைகள் ஆகும். டிரான்ஸ் கனடியன் நெடுஞ்சாலை, அலாஸ்கன் நெடுஞ்சாலை மற்றும் ஆஸ்திரேலிய டிரான்ஸ் நெடுஞ்சாலை ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

வாகன வேகம் மற்றும் வாகன எண்ணிக்கையின் வளர்ச்சி ஆகிய இரண்டும் அதிகரித்துக் கொண்டிருப்பதால், அது பல்வழி தேசிய நெடுஞ்சாலை வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. இவ்வகை நெடுஞ்சாலைகள் அருமையான நீண்ட சாலைகள் ஆகும். இவை பயண நேரத்தைக் குறைக்கும் வண்ணம் பாலங்கள் மற்றும் குடைவுகள் வழியாக நாடுகளிடையே அமைக்கப்பட்டு இடங்களை இணைக்கும்படியாக அமைந்துள்ளது. ஜெர்மனியில் உள்ள 'ஆட்டோபான்ஸ் சாலைகள்' முதலில் அமைக்கப்பட்ட இத்தகைய சாலைகள் ஆகும்.

> **இந்தியாவின் கிராண்ட் டிரங்க் சாலை**
>
> 2500 கி.மீ நீளமுள்ள கிராண்ட் டிரங்க் சாலை இந்தியாவின் நீளமான, முதன்மையான சாலையாகும். இந் நெடுஞ்சாலை வங்காள தேசத்திலுள்ள சோனார்கன் என்ற இடத்திலிருந்து பாகிஸ்தானிலுள்ள பெஷாவர் என்ற இடத்திற்கு வட இந்தியாவின் வழியாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தமிழ்நாடு மற்றும் கேரள கடற்கரைப் பகுதிகளிலும், மேற்கு வங்காளம், பஞ்சாப், அரியானா மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் சாலைப்போக்குவரத்து வலையமைப்பு மிக அடர்த்தியாகக் காணப்படுகிறது. இந்தியாவின்

சாலைப்போக்குவரத்து தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட சாலைகள் என பிரிக்கப்பட்டுள்ளது.

## இரயில் போக்குவரத்து

அதிகரித்து வரும் தொழிற்சாலைகளே, இரயில் போக்குவரத்தின் வளர்ச்சிக்குக் காரணமாகும். ஏனெனில், இப்போக்குவரத்து கனமான பொருட்களை நீண்ட தூரத்திற்கு, வேகமாகவும், குறைந்த செலவிலும் கொண்டு செல்வதற்குப் பயன்படும் போக்குவரத்து வசதியாகும். மிகவும் வளர்ச்சியடைந்த தொழிற்சாலைப் பகுதிகளான ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் இரயில் போக்குவரத்து வலையமைப்பு மிகவும் அடர்த்தியாக உள்ளது. ஜப்பான், இந்தியா, தென்கிழக்கு, ஆஸ்திரேலியா மற்றும் அர்ஜென்டினா கடற்கரைப் பகுதிகளில் இரயில் போக்குவரத்து வலையமைப்பு மிதமான அடர்த்தியுடன் அமைந்துள்ளது.

டிரான்ஸ் சைபீரியன் இரயில் பாதை கண்டங்களுக்கு இடையேயான ஒரு இருப்புப் பாதையாகும். இது ரஷ்யாவின் பால்டிக் கடற்கரையில் அமைந்துள்ள லெனின்கிராட் என்ற இடத்தினை, பசிபிக் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள விளாடிவாஸ்டாக் என்ற இடத்துடன இணைக்கிறது. டிரான்ஸ் கனடியன் இரயில் போக்குவரத்து கனடாவின் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைப் பகுதியினை இணைக்கிறது. டிரான்ஸ் ஆண்டியன் இருப்புபாதை பியோனஸ்ஏர்ஸ் (அர்ஜெண்டினா) பகுதியை வால்பரைசோ (சிலி) பகுதியுடன் இணைக்கிறது. டிரான்ஸ் ஆசிய இரயில் போக்குவரத்து சிங்கப்பூரினை, 26 நாடுகளின் வழியாக 18,000 கி.மீ தொலைவில் உள்ள துருக்கியின் இஸ்தான்புல் பகுதியுடன் இணைக்கிறது.

இந்தியாவின் இரயில் போக்குவரத்து அமைப்பானது, ஆசியா கண்டத்திலேயே மிகப் பெரியது, மேலும் உலகில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. கங்கைச் சமவெளியில் உள்ள உத்திரபிரதேசம், பீகார் மற்றும் மேற்குவங்காளம் ஆகிய இடங்களில் இரயில் போக்குவரத்து மிகவும் அடர்த்தியாக உள்ளது. உலகிலேயே மிக அதிகளவு வேலை வாய்ப்பினை இந்திய இரயில்போக்குவரத்து அளிக்கிறது.

இந்தியாவின் பெருநகரங்களில் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க நகரங்களிலேயே செல்லும் இரயில் பாதைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை நிலப்பகுதியின் சுரங்கவழிகளிலோ அல்லது உயரப்பகுதிகளிலோ அமைந்திருக்கும். (படம்–54)



படம்–54. எம்.ஆர்.டி.எஸ்–சென்னை

எம்.ஆர்.டி.எஸ் (M.R.T.S.) என்பது தமிழ்நாட்டில், சென்னையில் அமைக்கப்பட்டுள்ள, உயர்பகுதியில் அமைந்துள்ள இரயில் போக்குவரத்து ஆகும். தற்போது இச்சேவை 17 இரயில் நிலையங்களோடு சென்னை கடற்கரை இரயில் நிலையத்திலிருந்து வேளச்சேரி இரயில் நிலையம் வரையிலான 25 கி.மீ தூரத்திற்கு செயல்படுகிறது.

## நீர்வழிப் போக்குவரத்து

நீர்வழிப் போக்குவரத்து மலிவான போக்குவரத்து வழியாகும். அவற்றை உள்நாட்டு நீர்வழி மற்றும் கடல்வழிப் போக்குவரத்து என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

உள்நாட்டு நீர்வழிகள் வற்றாத நீருடைய ஆறுகள் போக்குவரத்துக்கேற்ற மற்றும் போக்குவரத்து செய்யக்கூடிய கால்வாய்களை உள்ளடக்கியது, உள்நாட்டு நீர்வழியாகும். மிக முக்கியமான உள்நாட்டு நீர்வழிகள், தொழில் துறையில் முன்னேறிய மேற்கு ஐரோப்பிய நாடுகள் (ரைன், ரோன், டான்யூப் மற்றும் எல்ப் ஆறுகள்) (படம்55) வடஅமெரிக்கா மற்றும் கனடாவில் (பெரிய ஏரிகள்) காணப்படுகின்றன. இவ்வுள்ளூர் நீர்வழிகள் இரயில் போக்குவரத்துடன் இணைந்து தொழில் வட்டாரங்களுக்கு அதிக அளவு பொருள்களை குறைந்த விலையில் எடுத்துச்செல்ல உதவுகிறது.



படம்–55. ரைன் – உள்நாட்டு நீர்வழி

இந்தியாவில் உள்நாட்டு நீர்வழிகள் அஸ்ஸாமிலுள்ள பிரம்மபுத்ரா ஆற்றிலும் கங்கை மற்றும் அதன் துணை ஆறுகள் பாயும் உத்திரப்பிரதேசம் மற்றும் பீகாரில் காணப்படுகிறது,

முன்பு, பக்கிங்காம் கால்வாய் தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான உள்நாட்டு நீர் வழியாய் இருந்தது. இக்கால்வாய் போக்குவரத்து நெல்லூருக்கும் மரக்காணத்திற்கும் இடையே பொருள்களை கொண்டுசெல்ல பயன்படுத்தப்பட்டது. ஆனால், இவ்வழி தற்போது மாசடைந்து வருந்தத்தக்கதாய் உள்ளது.

## கடல்வழி போக்குவரத்து

கண்டங்களுக்கிடையே பயணம் செய்வதற்கு கடல்வழிப்போக்குவரத்து முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. ஆனால், இன்றோ அது அதிக எடையுள்ள பொருள்ளை எடுத்துச்செல்வதற்கு மட்டுமே பயன்படுகிறது.

## உலகின் முக்கிய கப்பல் போக்குவரத்து வழிகள்

**வட அட்லாண்டிக் வழி:** இது மக்கள் நிறைந்த பகுதியாகிய மேற்கு ஐரோப்பிய நாடுகளையும் வட அமெரிக்காவில் கிழக்குப் பகுதிகளையும் இணைக்கும் வழியாகும்.

**நன்னம்பிக்கை முனை வழி:** இது மேற்கு மற்றும் தெற்கு ஐரோப்பிய பகுதிகளை தென்மேற்கு ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா உடன் இணைக்கும் வழியாகும்.

**பனாமா கால்வாய் வழி:** இது வட மற்றும் தென் அமெரிக்காவின் மேற்கு கடற்கரைப் பகுதிகளை அக்கண்டங்களின் கிழக்கு கடற்கரை பகுதிகளோடு இணைக்கும் வழியாகும்.

**டிரான்ஸ் பசுபிக் வழி:** இது கிழக்காசிய துறைமுகங்களை வட அமெரிக்காவின் மேற்கு கடற்கரை துறைமுகங்களோடு இணைக்கும் வழியாகும்.

## இந்தியாவின் முக்கிய துறைமுகங்கள்




படம் 56

இந்தியா, வங்காளவிரிகுடா, அரபிக்கடல் மற்றும் இந்தியப்பெருங்கடல் ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. இந்தியா 6100 கி.மீ. நீளமுள்ள நீண்ட



படம்–57.விசாகப்பட்டினம் துறைமுகம்

கடற்கரையைக்கொண்டது. கொல்கத்தா, பாரதீப், விசாகப்பட்டினம், (படம்–57), சென்னை, தூத்துக்குடி, கொச்சின், மங்களூர், கோவா, மும்பை மற்றும் காண்ட்லா ஆகியவை இந்தியாவில் உள்ள சில முக்கியத் துறைமுகங்களாகும். (படம்–56)

### வான்வழிப்போக்குவரத்து

வான்வழிப் போக்குவரது மிக வேகமான மற்றும் செலவு அதிகமானப் போக்குவரத்து ஆகும். இது பயணிகள், பொருள்கள் மற்றும் கடிதங்களை கொண்டு செல்ல பயன்பயடுகிறது. வான்வழிப்போக்குவரத்து நேரத்தை

சேமிப்பது மட்டுமல்லாமல் தொலைதூரத்திற்கு களைப்பின்றி வெகு விரைவில் சென்றடைய ஏதுவாக இருப்தால், மிகவும் புகழ்பெற்ற ஒரு சேவையாகக் கருதப்படுகிறது. இந்தியாவிலிருந்து பயணிகள் பல ஐரோப்பிய நாடுகளுக்கு இப்போக்குவரத்தின் மூலம் ஒரே நாளில் சென்றடைய முடியும்.

### குழாய் போக்குவரத்து

எண்ணெய் மற்றும் இயற்கை வாயுவை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல குழாய் போக்குவரத்து பயன்படுகிறது. எண்ணெய் குழாய் போக்குவரத்தினை எண்ணெய் தொழிற்சாலைகளே சொந்மாக வைத்துள்ளது. உலகின் எண்ணெய் வயல்களிலிருந்து கச்சா எண்ணெய், எண்ணெய் சுத்திகரிக்கும் இடத்திற்கோ அல்லது கப்பல் துறைமுகங்களுக்கோ குழாய் போக்குவரத்தின் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது.



படம் 58. டிரான்ஸ் அலாஸ்கா குழாய் போக்குவரத்து

### சில எண்ணெய் குழாய் போக்குவரத்துக்கள்

பெரிய இன்ச் லைன் (Big Inch Line) டெக்சாஸ் முதல் நியூஜெர்சி வரை செல்லும் குழாய் வழி; டாப்ஸ் (TAPS) (படம்.58) வட அமெரிக்காவின் டிரான்ஸ் அலாஸ்கா குழாய் போக்குவரத்து ; டாப் லைன்(TAP)சவுதி அரேபியாவின் கைசுமா பகுதியிலிருந்து லெபனானில் உள்ள சைடன் பகுதிவரை 1214 கி.மீ. தூரத்திற்கு அமைந்துள்ள குழாய்ப் போக்குவரத்து ஆகும்.

### தகவல் தொடர்பு

தகவல் தொடர்பு எனப்படுவது வார்த்தைகளும், செய்திகளும் ஒலிபரப்பப்படுவதாகும். தகவல் தொடர்பு எனப்படுவது இருவகைகளாகும். அவை தொலை தொடர்பு மற்றும் மக்கள் தொடர்பு ஆகும். தகவல் தொடர்பின் முதற் வளர்ச்சி 1844 – ல் கண்டுபிடிக்கப்படட்ட தந்தித் தொடர்பு ஆகும். 1875–ல் கண்டுபிடிக்கப்பட்ட தொலைபேசி தொலைத் தொடர்பில் அடுத்த முக்கிய வளர்ச்சியாகும். 1935–ல் தந்தி தொடர்பில் (TELEX) ஏற்பட்ட வளர்ச்சி செய்திகளை ஒரு இடத்தில் தட்டெழுதி தொலைவுப்பகுதிகளுக்கு அனுப்பும் போது அவை தொலை அச்சில் (Teleprinter) செய்திகளாகப் பெறப்பட்டன.

பெருமளவு மக்களுக்கு செய்திகளை எடுத்துச்செல்லும் வடிவமைக்கப்பட்ட ஊடக தொடர்பு சாதனங்கள் மக்கள் தொடர்பு சாதனங்கள் என அழைக்கப்படுகின்றன. மக்கள் தொடர்பு சாதனங்கள் இரு வகைப்படுகின்றன. அவை அச்சிடப்படும் ஊடகங்கள் (செய்தித்தாள்கள், புத்தகங்கள், வார மற்றும் மாதப் பத்திரிகைகள்) எனவும் மின்னணு ஊடகங்கள் (வானொலி, தொலைக்காட்சி, தொலைத்தொடர்பு, இணையதளம்) எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் உலக நாடுகளின் தொலைத்தொடர்பில்

தற்பொழுது செயற்கைகோள்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றன. இந்திய தேசிய செயற்கைகோள் (INSAT) அண்மையில் சில வருடங்களாக தொலைத்தொடர்பில் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு இடத்தின் போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஒரு வட்டாரத்தில் மக்களின் இடப்பெயர்வில் அதிகரிப்பையும் பொருள்களையும், எண்ணங்களையும் எளிதாகவும், துரிதமாகவும் மாற்றம் செய்ய உதவிபுரிகிறது. எனவே, அவ்வட்டாரம் வணிகம் மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைகிறது. ஆகவே, போக்குவரத்து மற்றும் தொடர்பு சாதனங்கள் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகும்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. டிரான்ஸ் சைபீரியன் கண்டங்களுக்கிடையேயான இருப்புப்பாதை ____________ என்ற இடத்தினை விளாடிவாஸ்டாக்குடன் இணைக்கிறது.
2. ____________ என்பது மிகவும் மலிவானபோக்குவரத்து சாதனமாகும்.
3. பக்கிங்காம் கால்வாய் வழியாக பொருள்கள் நெல்லூரிலிருந்து ---- அனுப்பப்பட்டன.

### II) சரியானவிடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ____________ என்பது ஒரு பெரிய துறைமுகமாகும்.
   அ)புதுச்சேரி ஆ)சென்னை இ)கடலூர்
2. குழாய் போக்குவரத்து எடுத்துச்செல்லும் பொருள்
   அ)நிலக்கரி ஆ)எண்ணெய் இ) மரம்
3. தந்தித்தொடர்பு கண்டுபிடிக்கப்பட்ட வருடம்
   அ) 1844 ஆ)1855 இ)1866

### III) பொருத்துக

| | |
|---|---|
| 1. பிரம்மபுத்திரா | வடஅமெரிக்க |
| 2. ரைன் | கண்டங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் |
| 3. அலாஸ்கா நெடுஞ்சாலை | பெரிய துறைமுகம் |
| 4. விசாகப்பட்டினம் | உள்நாட்டு நீர் போக்குவரத்து |
| 5. டாப்ஸ் | ஜெர்மனி |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. சாலகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றன ?
2. இந்திய இரயில்போக்குவரத்துப் பற்றி குறிப்பு வரைக.
3. தொலைத்தொடர்பின் பிரிவுகளை எழுதுக.

## V) ஒரு பத்தியில் விடையளிக்க.

1. உலகின் முக்கிய கப்பல் வழிகளைப்பற்றி எழுதுக.
2. உள்நாட்டு நீர்வழி பற்றி உங்களுக்கு தெரிந்ததை எழுதுக.
3. மக்கள் தொடர்பு பற்றி ஒரு குறிப்பு வரைக.

## VI) விரிவான விடை எழுதுக

1. ‘போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு வளர்ச்சி , நாடுகளி ன் வளர்ச்சிக்கு மிக முக்கியம்’ என்பதைப்பற்றி விரிவாக எழுதுக.

## VII) செய்முறைப் பயிற்சி

1. இந்திய வரைபடத்தில் இந்தியாவின் துறைமுகங்களைக் குறிக்கவும். ஒவ்வொரு துறைமுகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும்.

# மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் பரவல்

மக்கள் வேளாண்தொழிலை செய்யத் தொடங்கியபின் உருவான பொருளாதார மாறுபாடு ஏற்பட்ட காலம் முதல், மனிதர்களுக்கும் அவர்களை சார்ந்த சுற்றுப்புற சூழலுக்குமான தொடர்புகள் மாற்றியமைக்கப்பட்டன. அக்காலம் முதல் மக்கள் தொகை வளர்ச்சியடைய தொடங்கின.

## மக்கள் தொகை வளர்ச்சி

உலக மக்கள் தொகை 1650 ஆம் ஆண்டு சுமார் 500 மில்லியனை எட்டியது. அப்பொழுது முதல் மக்கள்தொகை அதிகமாக வளர்ச்சியடைய தொடங்கியது. உலக மக்கள்தொகை முதன்முதலில் 1804ஆம் ஆண்டு ஒரு மில்லியனை எட்டியது. 1927ஆம் ஆண்டு இரண்டு பில்லியனாக123 ஆண்டுகளுக்குப் பிறகு அதிகரித்தது. 1950ஆம் ஆண்டு முதல் மக்கள்தொகை வளர்ச்சித் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வந்துள்ளது.

1804 ஆம் ஆண்டு முதல் ஏற்பட்ட மிக வேகமான உலக மக்கள்தொகையின் வளர்ச்சியினை கீழ்வரும் அட்டவணை –1ல் காணலாம்.

அட்டவணை –1 அதிகரித்துவரும் மக்கள் தொகை

| வருடம் | உலக மக்கள்தொகை (பில்லியன்கள்) | அடுத்த பில்லியன் மக்கள்தொகை அதிகரிக்க எடுத்துக் கொண்ட காலம் |
|---|---|---|
| 1804 | 1 | |
| 1927 | 2 | 123 |
| 1960 | 3 | 33 |
| 1974 | 4 | 14 |
| 1987 | 5 | 13 |
| 1999 | 6 | 12 |
| 2011 | 7 | 12 |

தொழில்த்துறை மற்றும் வேளாண்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி பொருளாதாரத்தின் வளர்ச்சியினை மேம்படுத்தியது. மருத்துவநலம், உடல்நலம், வெள்ளத்தடுப்பு, தீ விபத்துகளிலிருந்து பாதுகாப்பு போன்றவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் இயற்கையில் ஏற்படும் மக்களின் இழப்பைக் கட்டுப்படுத்தியது. எனவே, இறப்புகள் குறைந்து பிறப்புகள் அதிகமாக ஆரம்பித்தன. பிறப்பு மற்றும் இறப்பு விகிதத்தினைப்பற்றி நாம் கற்போம்.

மக்கள் தொகை வளர்ச்சி அல்லது இயற்கையாக ஏற்படும் மக்கள் தொகை அதிகரிப்பானது பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதத்தினை பொறுத்தே அமையும். பிறப்பு விகிதம் என்பது

மொத்த மக்கள் தொகையில் 1000 மக்களுக்கு ஒரு ஆண்டில் பிறக்கும் மக்களின் எண்ணிக்கையாகும். இறப்பு விகிதம் என்பது மொத்த மக்கள் தொகையில் 1000 மக்கள் தொகையில் ஒரு ஆண்டில் ஏற்படும் இறப்பின் எண்ணிக்கை ஆகும்.

பிறப்பு விகிதத்திற்கும் இறப்பு விகிதத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் என அழைக்கப்படுகிறது. இது சதவிகிதத்தில் குறிப்பிடப்படுகிறது.

பிறப்பு மற்றும் இறப்பு விகிதத்தில் ஏற்பட்ட மாற்ற நிலை மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளது. பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் ஆகிய இரண்டுமே அதிமாக இருப்பின், மக்கள் தொகை அதிக அளவில் வளர்ச்சியடையாது,

இறப்பு விகிதத்தினைவிட பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பின் மக்கள் தொகை அதிகரிக்கும்.

பிறப்பு விகிதம் குறைவாகவும், இறப்பு விகிதம் அதிகமாவும் இருப்பின், மக்கள் தொகை குறையும்.

வெவ்வேறு நாடுகள் மக்கள்தொகை மாற்றத்தில் வெவ்வேறு நிலையில் உள்ளது. தற்பொழுது, உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது. வளர்ந்துவரும் நாடுகளின், இறப்பு விகிதம் குறைவாகவும், பிறப்பு விகிதம் அதிகமாகவும் இருப்பதால், அதிக மக்கள்தொகை காணப்படுகிறது. எனவே, அந்நாடுகள்வளர்ந்துவரும் மக்கள்தொகையை கட்டுப்படுத்த பிறப்பு விகிதத்தினைக் கட்டுப்படுத்தும் முயற்சியினை மேற்கொண்டு வருகிறது.

| நாடுகள் | ஒரு ஆண்டில் குறைந்து வரும் மக்கள் தொகை (%) |
|---|---|
| உக்ரைன் | 0.8 |
| இரஷ்யா | 0.6 |
| ஜெர்மனி | 0.2 |
| ஜப்பான் | 0 |
| இத்தாலி | 0 |

இன்று, உலகில் சில நாடுகளில் பிறப்புகளைவிட இறப்புகள் அதிகமாகவும் அல்லது பிறப்புகள் மற்றும் இறப்புகள் சமமாக இருப்பதாலும், மக்கள்தொகை வளர்ச்சி சுழியமாகவோ அல்லது மக்கள்தொகை வளர்ச்சியில் எதிர்மறை நிலையிலோ உள்ளது. (அட்டவணை–2)

### மக்கள் தொகை பரவல் மற்றும் அடர்த்தி

புவியில், மக்கள் பரவிக் காணப்படும் நிலையினையே மக்கள்தொகை பரவல் என்கிறோம். உலகில், மக்கள் தொகை பரவல் ஒரே சீராக காணப்படுவதில்லை. புவியில் 90% மக்கள், 10 % நிலப்பரப்பிலே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அடர்த்தி எனப்படும் ஒரு பரப்பில் உள்ள மக்களின் சராசரி எண்ணிக்கையை அளவிடுவது ஆகும். ஒரு சதுர கிலோமீட்டருக்குள் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை அடத்தி எனப்படுகிறது. இதனை, ஒரு நாட்டின் மக்களின் எண்ணிக்கையை, அந்நாட்டின் பரப்பளவினால் வகுத்து கணக்கிடுவதன் மூலம் அறியலாம்.

மொனாகோ எனப்படும் மிகச் சிறிய நாட்டின் மக்கள் அடர்த்தி , ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 16,779 மக்கள் ஆகும். மொனாகோ மிகச்சிறிய நாடாக (1 . 95

சதுர கி.மீ) இருப்பினும், அதன் மக்கள் அடர்த்தி மிகவும் அதிகமாகும். மக்கள்தொகை அடர்த்தி மிக அதிக உள்ள நாடு வங்காள தேசமாகும். இங்கு 1 சதுர கிலோ மீட்டருக்கு 1,069 மக்கள் வாழ்கின்றனர். உலகில் மக்கள் அடர்த்தி மிகக் குறைவாக உள்ள நாடு மங்கோலியா ஆகும். இங்கு சதுர கிலோ மீட்டருக்கு 1.7 மக்கள் வாழ்கின்றனர். ஆஸ்திரேலியா 1 சதுர கிலோ மீட்டருக்கு 2.9 மக்களைக்கொண்டு இரண்டாம் நிலையில் உள்ளது.

### மக்கள் தொகை பரவல் மற்றும் அடர்த்தியினை பாதிக்கும் காரணிகள்

மக்கள்தொகை பரவல் மற்றும் அடர்த்தியினை பல்வேறு இயற்கை மற்றும் மனித காரணிகள் நிர்ணயிக்கின்றன. அட்டவணை–3

| இயற்கை அமைப்புக் காரணிகள் | அதிக அடர்த்தி | குறைந்த அடர்த்தி |
|---|---|---|
| **அ. இயற்கைக்காரணிகள்** | | |
| I. புவித்தோற்றம் (நிலப்பரப்பின் வடிவம் மற்றும் உயரம்) | சமமான நிலப்பரப்பு: எடுத்துக்காட்டு : இந்தியாவின் கங்கைச் சமவெளி | மலைகளைப்போன்ற உயரமான நிலத்தோற்றம் எடுத்துக்காட்டு: இமயமலை |
| II. காலநிலை | பயிர்கள் வளர்வதற்கு போதுமான மழையளவு மற்றும் வெப்பம் நிலவும் காலநிலை, மக்கள் அடர்த்தி அதிகமாக இருப்பதற்கு ஏதுவாக உள்ளது. எடுத்துக்காட்டு: இந்தியா | தீவிரமான காலநிலை பகுதிகளில் (மிக அதிக வெப்பம் மற்றும் அதிக குளிர்) நெருக்கமற்று காணப்படும். எடுத்துக்காட்டு சகாரா பாலைவனம். |
| III. வள ஆதாரங்கள் | வளங்கள் அதிகமாக உள்ள இடங்களில் (நிலக்கரி, எண்ணெய், மரம், மீன்பிடித்தல்) மக்கள் அடர்த்தி அதிகமாகக் காணப்படும் | வளங்கள் குறைவான பகுதிகளில், மக்கள் நெருக்கமற்று காணப்படுகின்றனர். எடுத்துக்காட்டு: ஆப்பிரிக்காவில் உள்ள சாஹேல் பகுதி. |
| **ஆ.மனித காரணிகள்** | | |
| I. அரசியல் | நிலையான அரசாங்கம் உள்ள நாடுகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக உள்ளது. எடுத்துக்காட்டு: சிங்கப்பூர் | நிலையற்ற அரசாங்கம் நடைபெறும் நாடுகளிலிருந்து மக்கள் இடநகர்வு செய்வதால் அடர்த்தி குறைவாக இருக்கும். எடுத்துக்காட்டு: ஆப்கானிஸ்தான் |

| | | |
|---|---|---|
| II. சமுதாயம் | தங்கள் பாதுகாப்பிற்காக மக்கள் குழுக்களாக நெருக்கமாக வாழ விரும்புவர். எடுத்துக்காட்டு: அமெரிக்க ஐக்கிய நாடுகள் | மக்களுள் சில கூட்டங்கள் தனித்துவாழ விரும்புவர். எடுத்துக்காட்டு: ஸ்காந்து நேவியர்கள் |
| III. பொருளாதாரம் | நல்ல வேலைவாய்ப்புகள் உள்ள இடங்களில் குறிப்பாக பொருளாதாரம் அதிகமாக வளர்ச்சி அடைந்துள்ள(டோக்கியோ), மற்றும் குறைவாக வளர்ச்சி அடைதுள்ள (மும்பை) நாடுகளிலுள்ள நகரங்களில் மக்கள் அடர்த்தி அதிகமாகக் காணப்படும். | குறைவாக வேலைவாய்ப்பு உள்ள பகுதிகளில் மக்கள் அடர்த்தி குறைவாகக் காணப்படும். எடுத்துக்காட்டு: அமேசான் மழைக்காட்டுப்பகுதிகள் |

பல்வேறு நாடுகளில் காணப்படும் மக்கள் பரவல் மற்றும் மக்கள் அடர்த்தியினை அட்டவணை–4 விளக்குகிறது.

அட்டவணை–4 மக்கள் பரவல் மற்றும் அடர்த்தி (கண்டங்கள்)

| கண்டம் | மக்கள் தொகை (மில்லியன்) | உலக மக்கள் தொகை(%) | அடர்த்தி |
|---|---|---|---|
| ஆசியா | 3800 | 60 | 203 |
| ஆப்பிரிக்கா | 840 | 12 | 65 |
| ஐரோப்பா | 710 | 11 | 134 |
| வடஅமெரிக்கா | 514 | 08 | 32 |
| தென்அமெரிக்கா | 371 | 5.3 | 73 |
| ஆஸ்திரேலியா | 21 | 0.3 | 6.4 |

கீழ்வரும் அட்டவணை–5 ல் கொடுக்கப்பட்டுள்ள நாடுகளின் பட்டியலிலிருந்து மக்கள்தொகை அதிகமாக உள்ள நாடுகளில் மக்கள் அடர்த்தி அதிகமாக இருக்காது என்பதை உணர்க.

| நாடுகள் | மக்கள் தொகை | உலக மக்கள் தொகை(%) | அடர்த்தி (சதுர கிலோ மீட்டரில் வாழும் மக்கள் தொகை) |
|---|---|---|---|
| சீனக்குடியரசு | 13,38,890,000 | 19.5 | 139 |
| இந்தியா | 11,83,770,000 | 17.3 | 360 |
| அ.ஐ.நாடுகள் | 3,09,842,000 | 4.5 | 32 |
| இந்தோனேசியா | 2,31,369,500 | 3.4 | 121 |
| பிரேசில் | 1,93,262,000 | 2.8 | 23 |
| பாகிஸ்தான் | 1,70,124,000 | 2.5 | 211 |
| வங்காளதேசம் | 1,62,221,000 | 2.4 | 1069 |
| இரஷ்யா | 1,41,927,297 | 2.1 | 8 |
| நைஜீரியா | 1,54,729,000 | 2.3 | 168 |
| ஜப்பான் | 1,27,530,000 | 1.9 | 337 |

அதிக மக்கள் அடர்த்தி உள்ள பகுதிகளில் மக்கள் நெருக்கம் அதிகமாகக் காணப்படும் நிலப்பரப்பில் ஏற்படும் அதிக மக்கள் அழுத்தம் ஏற்படுத்தும் தாக்கத்தை பின்வரும் பாடத்தில் காண்போம்.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மக்கள்தொகை வளர்ச்சி__________ வருடம் முதல் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.
2. ஒரு ஆண்டில் மொத்த மக்கள் தொகையில் __________ மக்களுக்கு பிறக்கும் மக்களின் எண்ணிக்கை பிறப்பு விகிதம் ஆகும்.
3. உலக மக்கள் தொகை__________ ஆம் ஆண்டில் 6 பில்லியனை எட்டியது.
4. மக்கள்தொகை பரவல் மற்றும் அடர்த்தியினை பல்வேறு __________ மற்றும் மனித காரணிகள் நிர்ணயிக்கின்றன.
5. ஒரு நாட்டின் மக்களின் எண்ணிக்கையை அந்நாட்டின் __________ ஆல் வகுக்கக் கிடைப்பது மக்கள் அடர்த்தியாகும்.

### II) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இறப்பு விகிதத்தினைவிட பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பின், மக்கள்தொகை __________.

அ) அதிகரிக்கும்    ஆ) குறைவாக இருக்கும்    இ) சீராக இருக்கும்

2. புவியில் சுமார் 90 % மக்கள் ___________ சதவீதம் நிலப்பரப்பிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அ) 10 ஆ) 20 இ) 25

3. மக்கள்தொகை அடர்த்தி அதிகமாக காணப்படும் நாடு.

அ) சீனா ஆ) மெக்ஸிகோ இ)வங்காளதேசம்

4. ___________ காலநிலை காணப்படும் பகுதிகளில் மக்கள்தொகை பரவலாக காணப்படும்.

அ) சாதகமாக ஆ)தீவிர இ)குளிர்ந்த

5. ___________ போன்ற நிலையான அரசுள்ள நாடுகளில் மக்கள் தொகை அடர்த்தி அதிகமாக இருக்கும்.

அ)ஆப்கானிஸ்தான் ஆ)எகிப்து இ) சிகப்பு

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. 1804 | குறைந்த மக்கள்தொகை அடர்த்தி |
| 2. மொனாகோ | குறைவான மக்கள் அடர்த்தி |
| 3. குறைந்த பிறப்பு விகிதம் | அதிக இறப்பு விகிதம் 1 பில்லியன் மக்கள் தொகை |
| 4. ஆஸ்திரேலியா | மக்கள்தொகை குறைவு |
| 5. ஜெர்மனி | அதிக மக்கள்தொகை அடர்த்தி |

## IV) சுருக்கமான விடை தருக.

1. குறிப்பு எழுதுக : அ) பிறப்பு விகிதம்

ஆ) இறப்பு விகிதம்

இ) மக்கள் அடர்த்தி

2. காலநிலை காரணிகள் எவ்வாறு மக்கள்தொகை பரவலை பாதிக்கின்றது.

## V) விரிவான விடையளி.

1. உலக மக்கள்தொகை வளர்ச்சியைப் பற் றி விரிவாக எழுதுக

2. மக்கள் அடர்த்தியை பாதிக்கும் மனித காரணிகள் யாவை ? விளக்குக.

## VI) செய்முறை பயிற்சி.

1. நில வரை பட புத்தகத்திலிருந்து (Atlas) தமிழ்நாட்டின் மக்கள் அடர்தியை உற்றுநோக்கி, நில வரை படத்தில் குறிக்கவும்.

2. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்புப் பற்றி ஐந்து முக்கிய விவரங்களை பட்டியலிடுக.

# மக்கள்தொகையும் வளஆதாரங்களும்

மக்கள்தொகை அதிகரித்தக்கொண்டே வருவதால், வளஆதாரங்களின் அடிப்படை, மக்களுக்கு தேவையானவற்றை அளிப்பது என்பது போராட்டமாகவே இருந்து வருகிறது. வளஆதாரங்களின் பரவலும் மக்கள்தொகையும் பொருத்தமற்றதாகவே உள்ளது (படம்.59).




படம்–59.

உணவு சேகரிப்பவர்– வேட்டையாடுபவர்களின் உற்பத்தி மிகக் குறைந்த அளவு அடர்த்தியுள்ள மக்களுக்கு போதுமான அளவு ஆதரவாக இருந்தது. வேளாண்தொழில் வளர்ச்சி அடைய, மக்கள்தொகை பெருக்கமும் அதிக வளர்ச்சியை அடைந்தது.

பெருகிவரும் மக்கள்தொகை கிடைக்கப்பெறுகிற வளங்கள், நிலம் மற்றும் நீர்வளத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. ஒவ்வொரு வருடமும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால், அம்மக்கள்தொகைக்கேற்ப பேணக்கூடிய வகையில் இயற்கை வளஆதாரங்கள் வளராமல் அவ்வண்ணமே இருக்கின்றன.

வளருகின்ற நாடுகள் அதிக மற்றும் வளருகின்ற மக்கள் தொகையால் குறைந்த, வட்டார சூழ்நிலையில் அமைந்துள்ள குறைந்த அளவு வளங்களின் மீது அழுத்தம் ஏற்படுத்துகின்றன. இத்தகைய நாடுகள் மிகுந்த போராட்டத்துடன், உணவு, நன்னீர், மரங்கள் மற்றும் எரிபொருள் போன்ற வளருகின்ற தேவைகளை சந்திப்பதற்காக இனிமையான சுற்றுச்சூழலை மாற்றி அமைக்கின்றன.(படம்–60)



படம்–60. வளர்ந்துவரும் தேவைகள்

பொதுவாக வளர்ந்துவிட்ட நாடுகளிடம் புவியின் வளங்கள் இருப்பதுடன் அதிக அளவும்அவற்றை பயன்படுத்துகின்றன. இத்தகைய நாடுகள் வளருகின்ற நாடுகளை காட்டிலும் தனது மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு வேண்டி புவியின் வளஆதாரங்களின் மீதும், சுற்றுச்சூழலின் மீதும் அதிக அழுத்தம் தருகின்றன. எனவே அதிக மற்றும் வளர்ந்துவரும் மக்கட்தொகை குறைந்த அளவு வளஆதாரங்கள் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. வளங்களின் அதிக அளவு சுரண்டலின் விளைவு நீர்பற்றாக்குறை, காடுகளின்

அழிவு, பாலைவனமாதல், உணவு பற்றாக்குறை, கனிமங்கள் தீர்ந்துபோதல் மற்றும் மாசு ஏற்படுதல் ஆகும்.

### நன்னீர்

கடந்த நூற்றாண்டில் நீரின் உபயோகத்தின் அளவு மக்கள்தொகை வளர்ச்சியை விட இரட்டிப்பு ஆகும் உலகின் பகுதிகளில் பல நீர்த்தேவை ஏற்கனவே நீர் அளிப்பை மிஞ்சி உள்ளது. உலகில் 0.03% நன்னீர் மட்டுமே கிடைக்கப்பெறுகிறது. வளர்ந்துவரும் மக்கள்தொகை அதிக அளவு நீரை சுரண்டுவதால் புவியின் மேற்பரப்பு நீர் மாசுபடுத்தப்படுவதுமின்றி புவியின் நிலத்தடி நீரும் மாசடைகிறது. தொழிலகங்களால் நீர் மாசுபடுகிறது. வளரும் நாடுகளில் 95% கழிவு நீர் ஆறுகளில் சேர்க்கப்படுகிறது. நீர் வளத்தின் மீதான அழுத்தம் தீவிரப்படுத்தப்படுவதால் அதனை பயன்படுத்துவோர் அதிக மனஅழுத்தத்தையும், சச்சரவுகளையும் உடையவர் ஆகின்றனர். கி.பி 2025ம் ஆண்டு 5 பில்லியன் மக்கள் தீவிர நீர் பற்றாக்குறைக்கு ஆட்படுவர்.

இந்தியா 20% மக்கள் தொகையை கொண்டிருக்கிறது. ஆனால் 4% நீரே இந்தியாவில் கிடைக்கப் பெறுகிறது.

### உணவு அளித்தல் மற்றும் கிடைக்கப்பெற்ற நிலம்

வளர்ந்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு அளித்தலும் இருத்தல் அவசியம். ஆப்பிரிக்கா ஆசியா ஆகிய நாடுகளில் கிராம மக்கள் தொகை 1950 ஆண்டு முதல் 1985 ஆண்டுகளுக்குள் இரட்டிப்பானது. அதனால் அதற்கிணையாக கிடைக்கப் பெற்ற நிலத்தின் அளவு குறைவாக உள்ளது.

நடைமுறையிலுள்ள பயிரிடும் நிலங்கள் குறைக்கப்பட்டுவிடுகிறது. காரணம் அருகாமையிலுள்ள நகரங்களில் ஏற்படும் நெருக்கமும் மாற்றமுமே ஆகும். நிலங்களின் பற்றாக்குறை களைய மக்கள் காடுகளை பயிரிடுவதற்காக அழிக்கின்றனர்.

### காடுகளின் அழிவு

உலகின் 80% இயற்கை காடுகள் மரங்களுக்காகவும், வேளாண் தொழிலின் பயன்பாட்டிற்காகவும் மற்றும் மேய்ச்சல் நில உபயோகத்திற்காகவும் அழிக்கப்படுகின்றன. வறட்சி, மண் அரிப்பு, வெள்ளம் மற்றும் வெப்பமயமாதல் ஆகியவை காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளாகும்.

### பாலைவனமாதல்

மூன்றில் ஒரு பகுதி (35%)பாலைவனமாக புவியில் மாறுமென அச்சுறத்தப்பட்டுள்ளது. ஆதலால் பாலைவனமாதல் 110 நாடுகளில் வாழ்கின்ற பெரும்பாலான மக்களை பாதிக்கின்றது. பாலைவனமாதல் வறண்ட பகுதிகளில் ஏற்படுகிறது மற்றும் பாலைவனமாதலை மாற்றியமைக்க இயலாது.

### கனிமங்கள்

உலகில் கனிமங்களின் தேவை அதிகரிப்பதால் கனிமங்கள் மிக அதிக ஆழத்திற்கு அடியிலிருந்து தோண்டி எடுக்கப்படுகிறது. இச்செயல் நிலத்தடி மாசுபடுத்துவது மட்டுமின்றி நீர்மட்ட அளவினையும் குறைத்து விடுகிறது.

### எரிபொருள்

உலகின் 80 % வணிகபயன்பாட்டு ஆற்றல் புதுப்பிக்க முடியாத நிலக்கரி, எண்ணெய் மற்றும் இயற்கை வாயு போன்ற புதை எரிபொருள்களிலிருந்து கிடைக்கப் பெறுகிறது. புதை

எரிபொருள்களின் பயன்பாடு 1900 ஆண்டிலிருந்து 2000 ஆண்டுகட்டு ஒரு முறை இரட்டிப்பாகி கொண்டேவருகிறது. இப்புதை எரிபொருள்களின் இருப்பும் குறைந்துவிட்டது.

## நிலம் பாழடைதல்

மனித நடவடிக்கைகளினால் நிலம் பல வகைகளில் பாழடைந்துவிட்டது. நிலம், நீர் மற்றும் காற்று ஆகிய இயற்கை பகுதிகள் அதிக அளவு பாழடைந்த இடமாக உள்ளன. அதிகமான அளவு காடுகளின் அழிவினால் நிலச்சரிவும், மண் அரிப்பு, மண்ணின் தரக் குறைவு, அதிக நீர்தேங்குதல், நீர்ப்பாசனப் பகுதிகளில் உப்பு படிதல், சுரங்கங்களில் முறைகேடற்ற சுரங்கமுறைகள், குவாரிங், சாலை போடுதல் மற்றும் உபயோகமற்ற பொருள்களையும் குப்பைகளையும் கொட்டுதல் போன்ற செயல்களால் நிலம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

## தொலை நுண்ணுணர்வு நுட்பங்களும் வளஆதாரங்களும்

மக்கள் தொகை வளர்ச்சி அதிகரிப்பதால், மனிதர்கள் கூடுதலாக கனிம மற்றும் நிலத்தடி நீர், இருப்புகளையும் காண வழி தேடுகின்றனர். மனித நலம் மேம்பட உலகில் கிடைக்கும் இத்தகைய குறைந்து வரும் வளஆதாரங்கள் ஒருங்கிணைந்து, திட்டமிட்டு பகிர்ந்து கொள்ளும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இதற்கு தேவை, வளங்களில் பரவல்களையும் அவற்றின் இருப்புகளின் அளவுகளையும் பற்றி புரிதல் என்பது ஆகும்.

உலக போர்களுக்குப் பிறகு விண்வெளி நுட்ப வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி உலகின் வளஆதாரங்களைப்பற்றி அறிந்து கொள்ள வழிவகுத்துள்ளது. முதல் செயற்கை கோள் ஸ்புட்னிக்–1 என்பது சோவியத் யூனியனால் 1951 ம் ஆண்டு முதலில் செலுத்தப்பட்ட செயற்கை கோளாகும். அதனை அடுத்து மற்ற நாடுகளும் பல்வேறு பயன்பாட்டிற்காக விண்வெளிக்குச் செயற்கை கோள்களை செலுத்தியவண்ணம் உள்ளன. புவியை ஆராய, தகவல்களுக்காக, வானிலை அறிய மற்றும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள என பலவகையான செயற்கைகோள்கள் அனுப்பப்படுகின்றன.

புவி பற்றிய ஆராய்ச்சிகளும் அல்லது தொலை நுண்ணுணர்வு தொகுதிகள் வளஆதாரங்களைக் காணவும், மேலாண்மைக்காகவும் பயன்படுகின்றன. தொலை நுண்ணுணர்வு செயற்கை கோள்கள் இயற்கை வளஆய்வுகளிலும், சுற்றுச்சூழல் கண்காணிப்பிலும் மேலாண்மை பயன்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாட்டின் லாண்ட் சாட், பிரான்சின் ஸ்பாட், கொரியாவின் கிட்சாட் மற்றும் சீனாவின் யாங்கான் ஆகிய செயற்கைக் கோள்கள் தொலை நுண்ணுணர்வு செயற்கை கோள்களில் முக்கியமானதாகும்.

இந்தியாவின் முதல் தொலை நுண்ணுணர்வு செயற்கைக் கோளாகிய IRS-1A எனப்படும் செயற்கைக்கோள் 1988–ம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து, IRS-1B, 1C, 1D, P3, P5, P6 கார்டோசாட் (CARTOSAT) மற்றும் ரிசோர்ஸ்சாட் (RESOURCE SAT) ஆகியவை செலுத்தப்பட்டுள்ளன.

தொலை நுண்ணுணர்வு புள்ளிவிவரங்கள் மதிப்புள்ள பயனுள்ள தகவல்களைத் தருகிறது. புவி அமைப்பியல், மண்வளம், இயற்கை தாவரங்களின், பரப்பு நீர்நிலைகள், கனிமங்கள் ஆகிய நில வளத்தினை பற்றிய தகவல்களை தருகிறது. இத்தகைய தகவல்கள் பேணத்தகுந்த எதிர்காலத்திற்கு திட்டமிட பயன்பாடு உடையதாக அமைகிறது.

## பயிற்சி

### I) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ___________ மக்கள் தொகை கிடைக்கப்பெறும் வளங்களை நிலம் மற்றும் நீர் வளத்தில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.
2. கி.பி. 2025ம் ஆண்டு ___________ பில்லியன் மக்கள் தீவிர நீர்பற்றாக்குறைக்கு ஆட்படுவர்.
3. ___________, 110 நாடுகளில் வாழ்கின்ற பெரும்பான்மையான மக்களை பாதிக்கின்றது.
4. வளரும் நாடுகளில் 95% கழிவு நீர் ___________ ல் சேர்க்கப் படுகிறது.
5. இந்தியா விண்முதல் செயற்கோள் IRS-1A ___________ ஆம் ஆண்டு விண்ணில் செலுத்தப்பட்டது.

### II) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. உலகின் நன்நீரின் அளவு

   அ) 30% ஆ) .03% இ) 3%

2. வறட்சி, அரிப்பு மற்றும் வெப்பமயமாதல் ஏற்படக்காரணம்

   அ) காடுகளின் அழிவு ஆ) காடு வளர்ப்பு இ) வேட்டையாடுதல்

3. சோவியத் யூனியனால் முதன் முதலில் செலுத்தப்பட்ட செயற்கைக் கோள்

   அ) ஸ்புட்னிக் I ஆ) ஸ்புட்னிக் II இ) கிட் சாட்

4. இந்தியா 20% மக்கள்தொகையை கொண்டிருக்கிறது. ஆனால் கிடைக்கப் பெறுகின்ற நீரின் அளவு.

   அ) 5% ஆ) 4% இ) 2%

5. நீர் மட்டம் ___________ செயல் அதிகரிப்பதால் குறைகிறது.

   அ) சுரங்கத் தொழில் ஆ) வேட்டையாடுதல் இ) மீன்பிடித்தல்

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. வேளாண் வளர்ச்சி | வறண்ட பகுதி |
| 2. பாலைவனமாதல் | பிரான்சு |
| 3. வணிக பயன்பாட்டு ஆற்றல் | மனித வளர்ச்சி |
| 4. லாண்ட்சாட் | நிலக்கரி, எண்ணெய் |
| 5. ஸ்பாட் | அமெரிக்க ஐக்கிய நாடுகள் |

## IV) சுருக்கமாக விடையளிக்க.

1. வள ஆதாரங்களை அதிக அளவு சுரண்டுவதால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.
2. அதிக மக்கள் பெருக்கத்தால் நீர் வள ஆதாரங்களில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை எழுதுக.
3. வளரும் நாடுகளில் மக்கள்பெருக்கத்தினால் ஏற்படும் கேடுகளை எழுதுக.
4. உலக வள ஆதாரங்களை ஆராயும் செயற்கைக் கோள்களின் பெயர்களை எழுதுக.

## V) விரிவான விடையளிக்க.

1. வளருகின்ற மற்றும் வளர்ந்த நாடுகளின் வளப்பயன்பாடுகளை எழுதுக.
2. 'மக்கள் தொகை பெருக்கம் குறைந்த நிலப்பகுதியில் அதிக அழுத்தத்தை ஏற்படுத்துகிறது' – விளக்குக.
3. தொலை நுண்ணுணர்வுகள் எவ்வாறு வள ஆதாரங்களை மேலாண்மை செய்ய பயனுடையதாக உள்ளன ?

## VI) செய்முறை பயிற்சி.

1. பாலைவனமாதலால் அச்சுறுத்தப்படும் பகுதிகளை உலகவரைபடத்தில் குறிக்கவும்.
2. காடுகளின் அழிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை உலக வரைபடத்தில் குறிக்கவும்.

# குடிமையியல்

## தேசிய ஒருமைப்பாடு

### இந்தியா பல இனங்களின் அருங்காட்சியகம்

பாரதம் என்று அழைக்கப்படும் இந்தியா, ஒரு மிகப் பெரிய நாடாகும். பல மதங்களின் பிறப்பிடமாக இந்தியா திகழ்கிறது.

ஆரம்ப காலத்தில் ஆரியர்கள் இந்தியாவில் குடியேறினர். அவர்களை தொடர்ந்து பாரசீகர்கள், கிரேக்கர்கள், குஷாணர்கள், ஹூணர்கள், அரேபியர்கள், மங்கோலியர்கள், மொகலாயர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்து தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டி, பல புதிய இனங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தனர். எனவே இந்தியா "பல இனங்களின் அருங்காட்சியகமாக" தோற்றமளிக்கிறது.

> இந்தியா மனித இனங்களின் அருங்காட்சியகம்.

### கலாச்சார ஒற்றுமை

இந்திய கலாச்சாரம் உலகில் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. கலாச்சாரம் என்பது பண்பட்ட சமுதாயத்தின் வெளிப்பாடாகும். இது தனிமனிதன் மற்றும் சமுதாயத்தில் அவனின் செயல்பாடாகக் கருதப்படுகிறது. இது மொழி, இனம், இலக்கியம், சமயம், தத்துவம், பழக்க வழக்கங்கள் போன்றவைகள் மூலமாக வெளிப்படுகிறது. இந்தியா பல கலாச்சாரங்களின் ஒன்றிணைப்பு மூலம் கலாச்சார ஒற்றுமையைப் பெற்றுத் திகழ்கிறது. இது பன்முக பண்பாட்டு சமுதாயத்தை உருவாக்குகிறது.

### மொழிகள்

மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். இந்தியா விடுதலை பெற்றதும் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் வாழும் பெரும்பான்மையான மக்கள், பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்தியாவில் சுமார் 845 மொழிகள் பேசப்படுகின்றன. இவற்றுள் 22 மொழிகள் அரசியலமைப்பு சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தேவநாகிரி வடிவிலான இந்தி எழுத்து இந்தியாவின் தேசிய மொழியாக உள்ளது. ஆங்கிலம் அலுவலக இணைப்பு மொழியாக உள்ளது.

### இலக்கியம்

இந்தியா இலக்கியங்களின் கருவூலமாகத் திகழ்கிறது. வேதங்கள், இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, விவிலியம், குரான் மற்றும் திருக்குறள் போன்றவை இந்தியர்களிடையே புகழ்பெற்றுள்ளன.

தமிழில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க் கணக்கு, ஐம்பெரும் காப்பியங்கள், பெரிய புராணம், நளவெண்பா, கலிங்கத்துப்பரணி, தேவாரம், நாலாயிரத்திவ்ய பிரபந்தம் போன்றவை தமிழில் சிறப்புமிக்க இலக்கியங்களாகும். இவை வரலாற்று நிகழ்வுகளை விவரிப்பதோடு மட்டுமல்லாமல் தமிழ் மொழிக்கும் அழகு சேர்க்கின்றன.

சமஸ்கிருத மொழியில் வால்மீகியின் இராமாயாணம்,

காளிதாசரின் மேகதூதம் மற்றும் சாகுந்தலம், இலக்கியத்துறையில் புகழ்பெற்றவைகளாகும். இந்தியர்கள் மொழி, சமயம், சாதி வேறுபாடுகளின்றி இலக்கிய வளத்தினை நுகர்ந்து இன்புறுகின்றனர். இவை இந்திய ஒருமைப்பாட்டை வளர்ப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன.

## விழாக்கள்

இந்தியா பல்வேறு விழாக்களுக்கு புகழ்பெற்ற நாடாக விளங்குகிறது. தீபாவளி, ராமநவமி, கிருஷ்ண–ஜெயந்தி, துர்காபூஜா (நவராத்திரி) மற்றும் மகரசங்கராந்தி (பொங்கல்) ஆகிய இந்து விழாக்கள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. அதேபோல் மிலாது–நபி, பக்ரீத் மற்றும் இரமலான் போன்ற இசுலாமிய விழாக்களும், புனித வெள்ளி, ஈஸ்டர் மற்றும் கிறிஸ்துமஸ் போன்ற விழாக்கள் கிறித்துவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. சீக்கியர்கள் குருநானக் ஜெயந்தியையும், புத்தர்கள்(பௌத்தர்கள்) புத்த பூர்ணிமாவையும், சமணர்கள் மகாவீரர்–ஜெயந்தியையும் கொண்டாடி வருகின்றனர். ஆங்கிலப் புத்தாண்டை அனைவரும் சமய வேறுபாடு கருதாமல் கொண்டாடி மகிழ்கின்றனர்.



தீபாவளி



கிறிஸ்துமஸ்



ரம்ஜான்

சமய விழாக்கள் மக்களிடையே சகோதரத்துவத்தையும், நட்பையும், சமய சகிப்புத்தன்மையையும் வளர்த்து வருகிறது.

## பழக்க வழக்கங்களும், பாரம்பரியமும்

உலக மக்கள் வியக்கும் வகையில் இந்தியாவின் பழக்க வழக்கங்களும், பாரம்பரியமும் வளர்ந்துள்ளன. நமது பாரம்பரியத்தின் வெளிப்பாடாக விருந்தோம்பல், ஈகை, அண்டை, அயலாருடன் நல்லுறவு, சகோதரத்துவம், அன்பு, தர்மம், சகிப்புத்தன்மை, மனித நேயம், அமைதி, ஆன்மீக உணர்வுகள் மற்றும் பெரியோர்களுக்கு மதிப்பளித்தல் ஆகியவை அமைந்துள்ளன. இந்தியர்களிடையே வளர்ந்துள்ள இந்த நற்பழக்கங்கள் வேற்றுமையை மறந்து ஒற்றுமையாக வாழ வழிவகுக்கின்றன.

## உணவும், உடையும்

தென்னிந்திய மக்கள் அரிசியை உணவாக பயன்படுத்துகிறார்கள், ஆனால் வட இந்திய மக்கள் கோதுமை மற்றும் பருப்பை உணவாகப் பயன்படுத்துகின்றனர். இந்தியாவில் காலநிலை இடத்திற்கிடம் மாறுபட்டுள்ளது. அதற்கேற்ப மக்களின் உடைகளும் வேறுப்பட்டுள்ளன. காலநிலைக்கு ஏற்ப மக்கள் கம்பளி, பருத்தி, செயற்கையிழைகள், தோல் மற்றும் பட்டினால் நெய்யப்பட்ட ஆடைகள் உடுத்தி மகிழ்கின்றனர். உணவு, உடைகளில் மக்கள் வேறுபட்ட போதிலும் பண்பாட்டு நிலையில் அவர்கள் உறுதியுடன் சிறப்புற்று விளங்குகிறார்கள்.

இந்திய நாடு பல்வேறு படையெடுப்புகளுக்கு உட்பட்டபோதிலும் இந்தியப் பண்பாடு பெரும் மாற்றம் இல்லாமல் இன்றும் விளங்குகிறது.

## கலை, கட்டடக்கலை

இந்தியா, ஓவியங்கள் மற்றும் சிற்பக் கலையில் புகழ் பெற்று விளங்கி வருகிறது. அஜந்தா மற்றும் எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை. காந்தாரக்கலை இந்தியாவின் சிற்பக் கலையின் பெருமையை பறைசாற்றுகின்றது. காசி, பத்ரிநாத், கேதார்நாத், ஹரித்துவார் மற்றும் பூரி கோவில், புகழ்பெற்ற முஸ்லிம் தர்காக்கள், கிறித்துவ திருச்சபைகள், சாஞ்சி ஸ்தூபி, மவுண்ட் அபுவில் உள்ள சமணர் கோவில், சரவணபெலகோலா போன்றவை சிறந்த வழிபாட்டுத் தலங்களாகவும் மற்றும் இந்திய கட்டடக்கலைக்கு தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகவும் விளங்குகின்றன.

தென்னிந்தியாவில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில், தஞ்சாவூர்– பிரகதீஸ்வரர் ஆலயம், மகாபலிபுரத்திலுள்ள குடைவரைக் கோவில்கள், காஞ்சிபுரத்தில் உள்ள கைலாசநாதர் கோவில் மற்றும்



பிரகதீஸ்வரர் கோவில்



சாந்தோம் திருச்சபை

வைகுண்ட பெருமாள் கோவில், திருவண்ணாமலையிலுள்ள அருணாச்சலேஸ்வரர் ஆலயம், வேலூர் மற்றும் சிதம்பரத்தில் உள்ள கோவில்கள், சாந்தோம் திருச்சபை போன்றவை கலை, கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## இசை மற்றும் நாட்டியம்

கர்நாடகம் மற்றும் இந்துஸ்தானி இசைப்பாணி இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்டவை. இவை பலராலும் விரும்பப்பட்டு.

கற்கப்படுகின்றன. பரதநாட்டியம், குச்சிப்புடி, கதக், மணிப்புரி மற்றும் ஒடிசி போன்றவை இந்தியாவில் புகழ்பெற்ற நாட்டியங்களாகும். இந்திய இசை மற்றும் நாட்டியம் இந்தியாவில் ஒருமை பாட்டை உருவாக்குவதில் பெரும் பங்காற்றி வருகின்றன.

## வேற்றுமையில் ஒற்றுமை

மொழி, உணவு, பழக்கவழக்கங்கள், உடை, மதம், கொள்கை, சமயம் போன்றவற்றால் இந்திய மக்கள் வேறுபடுகின்றனர். பல்வேறு சூழ்நிலைகளில் வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய வேறுபாடுகளைக்கிடையில் அனைவரும் ஒரே பெயரால் “இந்தியர்கள்” என்று அழைக்கப்படுகின்றனர்.

## தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகள்

பல்வேறு வேறுபாடுகள் இருப்பினும் அனைவரும் இந்தியர்கள் என்றழைக்கப் படுகிறார்கள். இந்தியர் என்ற உணர்வுடன் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இது தேசிய ஒருமைப்பாட்டை வளர்க் கின்றது. இது தவிர வேறு சில காரணிகளும் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன. அவைகள்,

## இந்தியாவின் புவியியல் தன்மைகளும் அதன் பாதுகாப்பும்.

- பண்பாட்டுப் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டு ஒற்றுமை
- சமய சகிப்புத்தன்மை
- இந்திய அரசியலமைப்பின் சமய சார்பற்றத்தன்மை
- தேசிய சின்னங்கள், தேசிய கொடி, தேசிய கீதம்
- மக்களாட்சி கொள்கைகளான இறையாண்மை, சமய சார்பின்மை, சமதர்மம் போன்றவை. தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.
- நவம்பர் 19–ஆம் நாளை ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைபிடித்து வருவதும், தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுகிறது.

**நவம்பர் 19, தேசிய ஒருமைப்பாட்டு தினம்.**

## தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கும் காரணிகள்

இந்தியா வேற்றுமையில் ஒற்றுமைக்கு புகழ்பெற்றதாகும். இருப்பினும் பல்வேறு காரணிகள் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கின்றன. அவை வகுப்புவாதம், மொழிவாதம், சாதிபாகுபாடு, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், வட்டார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவைகள் ஆகும்.

## வகுப்பு வாதம்

வகுப்பு வாதம் என்பது, தான் சார்ந்துள்ள வகுப்பை முதன்மைப்படுத்துவது, சில சமயங்களில் நாட்டைவிட முக்கியமானதாக கருதுவது ஆகும். வகுப்பு வாதம் என்பது ஒரு சமூகம் மற்ற சமூகத்தினருக்கு எதிராக மேற்கொள்ளும் சுயநல தீவிரப் போக்காகும். இந்த உணர்வு வகுப்புவாத கலவரங்களுக்கு வழிவகுக்கின்றன. எனவே இந்தியக் குடிமக்கள் சமயசகிப்பு உணர்வையும் அனைவரும் ஒன்று என்ற உணர்வையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## மொழிவாதம்

கி.பி.1956–ஆம் ஆண்டு மொழி அடிப்படையில் இந்தியா பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. பொதுவாக மக்கள் தங்கள் தாய் மொழியை அதிகமாக நேசிக்கின்றனர். சில சமயங்களில் பிற மொழிகளிடத்தில்

குறுகிய மனப்பான்மை கொண்டு வெறுக்கின்றனர். எனவே பிற மொழிகளை மதித்து பிற மொழி பேசும் மக்களிடையே ஒன்றிணைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

## சாதி பாகுபாட்டு முறை

சாதி பாகுபாட்டு முறை என்பது சொந்த சாதியை உயர்வானதாகக் கருதுவதாகும். இந்திய சமூக அமைப்பு, சாதி முறையை அடிப்படையாகக் கொண்டது. சாதி முறை சமூக மதிப் பீட்டினையும், சமூக பிரிவினையும் ஏற்படுத்தி சமுதாயத்ததில் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமூக ஒற்றுமையை சீர் குலைக்கின்றன. பிறப்பால் அனைவரும் சமம். சாதிய முறை மக்கள் மனதில் உயர்வு மனப்பான்மையும், தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்துகின்றன. உயர் வகுப்பைச் சார்ந்த மக்கள் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த மக்களிடம் தொடர்பு கொள்ளவோ, கலந்து கொள்ளவோ தயக்கம் காட்டுகின்றனர். இந்த உணர்வு மக்களாட்சி அமைதியாக செயல்படவும் தேசிய ஒற்றுமை வளரவும் தடையாக உள்ளது.

## பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது சமுதாயத்தில் உள்ள மக்களிடையே செல்வத்தை சமமாக பங்கீடு செய்ய இயலாமையாகும். இது மக்கள் தொகை, கல்வியறிவின்மை, போதுமான இயற்கை வளமின்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் ஏழை, பணக்காரர்களிடையே காணப்படுகின்றது. இந்த ஏற்றத்தாழ்வு தேசிய ஒற்றுமை மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்கின்றது.

## வட்டார ஏற்றத்தாழ்வுகள்

வட்டார ஏற்றத்தாழ்வு என்பது பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையே காணப்படும் சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை குறிப்பதாகும். இந்தியாவில் பலதரப்பட்ட புவியியில் அமைப்புகள் காணப்படுகின்றன. நாட்டின் ஒரு பகுதி நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது, ஆனால் மற்றொரு பகுதி நன்கு வளரமுடியவில்லை. எனவே வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், குறைவான வாழ்க்கைத்தரம், குறைவான தனிநபர் வருமானம் போன்றவை வட்டார ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணமாக அமைகிறது, இந்த வட்டார ஏற்றத்தாழ்வுகள் தேசிய ஒருமைபாட்டை பாதிக்கின்றது.

சமுதாயத்தில் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் இருந்த போதிலும் தேசிய ஒருமைப்பாட்டை அடைய மக்கள் சகிப்புத்தன்மை மற்றும் அனைவரும் ஒன்று என்ற உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொழி மற்றும் சமயம் இந்த வளர்ச்சிப் பாதையில் தடைக்கல்லாக இருக்கக்கூடாது. மாறக படிகட்டுகளாக இருக்க வேண்டும். இந்திய மக்களாகிய நாம் பழங்கால பெருமைகளை நினைவு கூர்ந்து, அதை உலக நாடுகளின் பார்வையில் மீண்டும் நிலைநாட்ட, இந்தியாவை தன்னிகரற்ற நாடாக விளங்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாம் ஒற்றுமையாக வாழ்ந்து தேசிய ஒருமைப்பாட்டினைக் காக்க வேண்டும்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட மொழிகளின் எண்ணிக்கை__________. ஆகும்.

   அ) 15 ஆ) 18 இ) 22

2. இந்தியாவின் தேசிய மொழி __________ அகும்.

   அ) ஆங்கிலம் ஆ) தமிழ் இ) இந்தி

3. இந்தியாவில் மாநிலங்கள் __________ அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளன.

   அ) மொழி ஆ) இலக்கியம் இ) பண்பாடு

4. தேசிய ஒருமைப்பாட்டு தினமாக கடைபிடிக்கப்படும் நாள் __________ ஆகும்.

   அ) 14, நவம்பர் ஆ) 19, நவம்பர் இ) 1, நவம்பர்

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியா__________எனவும் அழைக்கப்படுகிறது.
2. குகைக்கோவில்கள்__________ல் காணப்படுகின்றன.
3. இந்திய சமூக அமைப்பு __________ ஐ அடிப்படையாகக் கொண்டது.
4. புத்தர்கள்__________விழாவைக் கொண்டாடுகின்றனர்.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1) காளிதாசர் | சமணர் கோவில் |
| 2) விவிலியம் | புனித நூல் |
| 3) அபுமலை | அமிர்தசரஸ் |
| 4) பொற்கோவில் | மேகதூதம் |

### IV) குறுகிய விடையளி.

1. "பண்பாடு" வரையறு.
2. இந்துக்களின் சில திருவிழாக்களைக் குறிப்பிடுக.
3. தென்னிந்திய கோவில்களில் சிலவற்றின் பெயரைக் குறிப்பிடுக.
4. தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகள் யாவை ?

### V) விரிவான விடையளி.

1. இந்தியா "வேற்றுமையில் ஒற்றுமை" உள்ள நாடு என்பதை–விளக்குக.
2. இந்திய தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் காரணிகளை விளக்குக.

# சமூக– பொருளாதாரப் பிரச்சனைகள்

## சமூகப் பிரச்சனைகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற நாள் முதல் பல்வேறு சமூக பிரச்சனைகளை சந்தித்து வருகிறது. அவைகளில் முக்கியமானவை எழுத்தறிவின்மை, குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான அநீதி போன்றவைகளாகும்.

## எழுத்தறிவின்மை

எழுதவோ, படிக்கவோ இயலாத நிலை–எழுத்தறிவின்மை எனப்படும். எழுத்தறிவின்மை மக்களை அறியாமைக்கு அழைத்துச் செல்கிறது. எழுத்தறிவு அளவு மற்றும் கல்வி வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியை நிர்ணயம் செய்யும் காரணிகளாகும். எழுத்தறிவின்மை இந்தியாவின் தலையாய பிரச்சனையாக உள்ளது. எழுத்தறிவின்மையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபடுவதோடு மட்டுமல்லாது, அரசியல் மற்றும் சமூக பொருளாதார பிரச்சனைகளையும் உருவாக்குகிறது. எழுத்தறிவின்மையால் அரசாங்கம் அளிக்கும் பல்வேறு நலத்திட்டங்களை கூட அறிய முடியாமல் போகிறது. எழுத்தறிவின்மை குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகளை, பெண் சிசுக் கொலை மற்றும் மக்கள் தொகை பெருக்கத்திற்கு காரணமாக அமைகிறது.எனவே எழுத்தறிவின்மை நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடைக்கல்லாக அமைகிறது.

## எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள்

இந்திய அரசியல் அமைப்பு, மக்களுக்கு கல்வி அளிப்பதை அடிப்படை உரிமையாக உத்தரவாதம் செய்கிறது. 1948–1949–ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு தாய் மொழி மூலம் கல்வி கற்பது எழுத்தறிவு அளவினை உயர்த்தும் எனக் கூறியுள்ளது.

1968–ஆம் ஆண்டு கல்விக் கொள்கை நாடு முழுவதும் ஒரேமாதிரியான கல்வி முறையை (10+2+3) அறிமுகப்படுத்தி உள்ளது.

1986–ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை, ஆரம்பக் கல்வியை கட்டாயமாக்கியது. மேலும் முறைசாராக் கல்வி முறையை அறிமுகப்படுத்தி, மாணவர்கள் சீராக கல்வி பயில வழிவகுத்தது. 1992–ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கொள்கை “கரும் பலகைத்திட்டம்” மூலம் பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வழிவகை செய்தது. 1991–ஆம் ஆண்டு பேராசிரியர் தாவே அறிமுகப்படுத்திய குறைந்தபட்ச கற்றல் அளவு (MLL) மூலம் ஆரம்பப் பள்ளிக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது.

தேசிய எழுத்தறிவு குழு, வயது வந்தோர் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தது. அனைவருக்கும் கல்வி இயக்க (SSA) திட்டத்தின் மூலம் ஆரம்பக் கல்வியை உலகளாவிய அளவில் மேம்படுத்த சமுதாயத்தின் ஒத்துழைப்போடு முயற்சிகள் எடுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

## எழுத்தறிவின்மையை ஒழிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

பள்ளிக்கு செல்லக்கூடிய வயதில், அனைத்து குழந்தைகளும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். சர்வ சிக்ஷா

**இந்தியாவில் எழுத்தறிவு அளவு (%) (1951–2001)**

| கணக்கெடுப்பு வருடம் | மக்கள் % | ஆண் % | பெண்% | ஆண்–பெண் எழுத்தறிவு இடைவெளி |
|---|---|---|---|---|
| 1951 | 18.33 | 27.16 | 8.86 | 18.30 |
| 1961 | 28.30 | 40.40 | 15.35 | 25.05 |
| 1971 | 34.45 | 45.96 | 21.97 | 23.98 |
| 1981 | 43.57 | 56.38 | 29.76 | 26.62 |
| 1991 | 52.21 | 64.13 | 39.29 | 24.84 |
| 2001 | 65.38 | 78.85 | 54.16 | 21.70 |

ஆதாரம்: மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கை

அபியான் திட்டத்தின்படி, அனைத்து குழந்தைகளுக்கும் 2010–ஆம் ஆண்டிற்குள் ஆரம்பக் கல்வி வழங்கப்பட வேண்டும். ஆண்–பெண் எழுத்தறிவு மற்றும் சமூக இடைவெளி குறைக்கப்பட வேண்டும். மேலும் மக்கள் தொகை 300–க்கு மேல் உள்ள ஊர்களில் ஆரம்ப பாடசாலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. தமிழக அரசு "அனைவருக்கும் கல்வி" வழங்கும் நோக்கோடு கொண்டுவரப்பட்டுள்ள அனைவருக்கும் கல்வி என்ற திட்டம் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.

2001–கணக்கெடுப்பின்படி, தமிழகத்தில் எழுத்தறிவு சதவிகிதம் 73.5 ஆகும். ஆண்கள் சதவிகிதம் 82.4, பெண்கள் சதவிகிதம் 64.4.

ஐக்கிய நாடுகள் சபை 1990–ஆம் ஆண்டினை பன்னாட்டு எழுத்தறிவு வருடமாகவும், செப்டம்பர் 8–ஆம் தேதியை உலக எழுத்தறிவு தினமாகவும் அறிவித்துள்ளது.

### குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள்

தொழிற்சாலைகளில் பணிபுரியும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் குழந்தைத் தொழிலாளர்கள் ஆவார்கள். உலகிலேயே இந்தியாவில்தான் அதிக குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இந்தியாவில் 1991–ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 11.29 மில்லியன் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். இது இந்திய மக்கள் தொகையில் 1.34 சதவிகிதமாகும்.

### குழந்தைத் தொழிலாளர் உருவாகக் காரணங்கள்

இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர் பிரச்சனை என்பது ஒரு சமூகப் பிரச்சனை. குழந்தைகளுக்கு முறையான உணவு, உடை, கல்வி, இருப்பிடம் போன்றவைகள் கிடைக்காததால் குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகிறார்கள். ஆரம்ப காலத்தில் இவர்கள் கடைகள், உணவகங்கள் மற்றும் தொழிற்கூடங்களில் சிறு சிறு பணிகளை செய்து வருகின்றனர். இது வறுமை, கல்வியறிவின்மை போன்றவை தோன்ற வழி வகுக்கிறது.

### குழந்தை த் தொழிலாளர்கள் முறை ஒழிக்கப்பட அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்

1949–ஆம் ஆண்டு குழந்தைகள் பணி சட்டத்தின்படி, குழந்தைகள் பணிபுரிய 14 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்றும், பின்னர் இது 17 வயதாகவும் உயர்த்தப்பட்டது. 1951–ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி, 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் தோட்டத் தொழிலில் அமர்த்தப்படுவது தடை செய்யப்பட்டது.

1986–ஆம் ஆண்டு குழந்தை தொழிலாளர் சட்டத்தின்படி தொழிற் சாலைகளிலும், சுரங்கங்களிலும் பணிபுரிய 14 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும் என கூறப்பட்டது. 1987–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் கொள்கையின்படி குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட்டது. குழந்தை பணியாளர்களுக்கென பிரத்தியேக பள்ளிகள் உருவாக்கப்பட்டு, தொழில் சார்ந்த வகுப்புகள் துவக்கப்பட்டன.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் 1976–ஆம் ஆண்டு கொத்தடிமை தொழிலாளர் முறையை ஒழிக்க சட்டம் கொண்டு வரப்பட்டது.

### பெண்களுக்கு எதிரான அநீதி

இந்திய நாட்டின் மக்கள் தொகையில், பெண்கள் சரிபாதியாக இருந்தபோதிலும், சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்படுவதில்லை.

### பெண்களுக்கு எதிரான அநீதிகள்

ஆண் ஆதிக்கம், உடன் கட்டை ஏறும் வழக்கம், விதவை முறை, பெண் சிசுக் கொலை, வரதட்சனை முறை, முறையான கல்வி மறுப்பு போன்றவைகள் பெண்களுக்கு எதிரான அநீதிகளாகும்.

### பெண்களின் நிலை உயர அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

1829–ஆம் ஆண்டு சட்டத்தின்படி உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப் பட்டது. 1856–ஆம் ஆண்டு விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது. டாக்டர்.முத்துலட்சுமி அம்மையாரின் முயற்சியினால், 1929–ஆம் ஆண்டு சாரதா சட்டம் இயற்றப்பட்டு குழந்தைத் திருமணம் தடை செய்யப்பட்டது.

1956–ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்தில், பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கும் சம பங்கு உண்டு எனக் கூறப்பட்டுள்ளது. 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வரதட்சனை தடை சட்டத்தின்படி, வரதட்சனை கேட்பது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1976–ஆம் ஆண்டின் சம ஊதிய சட்டத்தில், சம பணிக்கு சம ஊதியம் ஆண்களுக்கு நிகராக பெண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க பயிற்சி அளித்து நல்வாழ்வு வாழ அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. (STEP)

தொட்டில் குழந்தை திட்டம் (1992) பெண் குழந்தைகளை சிசு கொலையில் இருந்து பாதுகாக்கிறது. மேலும் தமிழ்நாடு முழுவதும் அனைத்து பெண்கள் காவல் நிலையங்களை உருவாக்கி, பெண்களின் உரிமைகளை தமிழக அரசு பாதுகாத்து வருகிறது.

1978–ஆம் ஆண்டை ஐ.நா. சபை உலக பெண்கள் ஆண்டாக அறிவித்துள்ளது.

## பொருளாதாரப் பிரச்சனைகள்

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகும், பல்வேறு பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர் கொண்டு வருகிறது. அவற்றுள் ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு மற்றும் மக்கள் தொகை பெருக்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

## வறுமை

உலக வங்கியின் கூற்றுப்படி, வறுமை என்பது "குறைந்தபட்ச வாழ்வு நிலையை அடைய இயலாத நிலைமை" ஆகும். வறுமை ஒரு சமூகப் பிரச்சனை ஆகும். சமுதாயத்தில் ஒரு பிரிவினர் உணவு, உடை, இருப்பிடம் இன்றி அவதிப்பட்டு வருகின்றனர். மற்றொரு பிரிவினர் பொருளாதார வளத்தில் உள்ளனர். இந்திய சமுதாயம் ஏழை, பணக்காரர் என்று இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் 1/3 வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளனர். வறுமையினால் உடல் நலக் கேடும், மக்களின் திறமையும் பாதிக்கப் படுகின்றன. இதனால், நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் தேக்கம் அடைகிறது.

## வறுமைக்கான காரணங்கள்

மக்கள்தொகைப் பெருக்கம், மக்களின் குறைவான வருமானம், விலைவாசி உயர்வு மக்களிடையே நிலவி வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் எழுத்தறிவின்மையும் வறுமைக்கான காரணங்களாகும்.

## வறுமையை ஒழிக்க வழிமுறைகள்

அரசாங்கம், வறுமையை ஒழிக்க, வறுமை ஒழிப்புத் திட்டத்தினை (PAP) அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் வறுமையை ஒழிக்க பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி வருகிறது.

முதலாவதாக ஐந்தாண்டு (1951–1956) திட்டத்தின்படி விவசாயத்திற்கு முக்கியத்துவம் அளித்து, உணவுப் பிரச்சனையை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (1969–1974) மூலம் மக்களின் வாழ்நிலையை உயர்த்தவும், பொருட்களின் விலையை குறைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐந்தாவது ஐந்தாண்டு (1974–1979) திட்டத்தின்படி, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஏழாவது ஐந்தாண்டுத் (1985–1990) திட்டத்தின்படி உணவு உற்பத்தியில் சுய சார்பு நிலையை உருவாக்கி, வறுமையை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பத்தாவது ஐந்தாண்டு திட்டத்தின்படி, மக்களின் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

இந்திய அரசாங்கம் ஜவஹர் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின் மூலம் வேலையில்லாதோருக்கு வேலை வாய்ப்பை வழங்கி, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட 20 அம்ச திட்டத்தின்படி கிராமப்புறத்தில் வறுமையை ஒழித்து சமுதாயத்தின் அடிதட்டு மக்களை பொருளாதாரத்திலும், சமுதாயத்திலும் உயர்த்தி சமூக நீதி கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

## வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது பணிபுரிய விருப்பமும், உடல்

தகுதியும் இருந்தும், வேலை கிடைக்காமல் இருப்பதைக் குறிக்கும். இது இந்தியாவை பாதிக்கும் பிரச்சனைகளில் ஒன்றாகும்.

### வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான காரணங்கள்

விவசாய நாடான இந்தியாவில், விவசாயம் சார்ந்த வேலை வாய்ப்புகள் குறைந்த அளவிலேயே உள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால், விவசாயத்திற்கான மனித சக்தி வெகுவாக குறைந்துள்ளது. மக்கள் தொகை பெருக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

### வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

இந்திய அரசாங்கம் தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின்படி (NREP) (1980) மக்களுக்கு அதிகபட்ச வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகுத்தது. 1983–ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கிராமப்புற வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (RLEG) வருடத்திற்கு குறைந்தபட்சம் 100 நாட்களுக்கு, நிலமற்ற குடும்பங்களில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு வழங்க வழிவகுத்தது. 1979ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த கிராமபுற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டத்தின்படி, இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கி சுய வேலை வாய்ப்பிற்கு வழி வகுத்தது. 1989–ஆம் ஆண்டு அரசு கொண்டு வந்த ஜவஹர் ரோஜ்கர் யோஜனா (JRY) என்ற திட்டம் கிராமப்புற மக்களுக்கு கிராம பஞ்சாயத்தின் மூலம் நிதி உதவி வழங்கி அவர்களின் நல்வாழ்விற்கு வகை செய்தது.

### விலைவாசி உயர்வு

அத்தியாவசிய பொருள்களின் உற்பத்தி மற்றும் தேவை, அப்பொருளின் விலையை நிர்ணயம் செய்கிறது. உற்பத்தி குறைவாகவும், தேவை அதிகமாகவும் இருந்தால் விலை உயர்வு ஏற்படுகிறது.

### விலை உயர்வுக்கான காரணங்கள்

மக்கள் தொகை பெருக்கமும், பொருள்களின் உற்பத்தி குறைவாக இருப்பதும், விலை உயர்வுக்கு காரணங்களாகும். பருவமழை தவறுவதால் விவசாயப் பொருள்களின் பற்றாக்குறை ஏற்படுகிறது. மேலும் உணவுப் பதுக்கலும் மற்றும் கள்ள வியாபாரம் செய்வதும் விலை உயர்வுக்கு காரணங்களாகும்.

### விலை உயர்வை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

அரசாங்கம், பொது விநியோக முறையின் (PDS) மூலம் மக்களுக்குத் தேவையான பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. பொருட்களை பதுக்குபவர்களுக்கு எதிராகவும், கள்ள வியாபாரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. கூட்டுறவு பண்டகசாலை மூலமாகவும் மக்களுக்கு அத்தியாவாசிய பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### மக்கள் தொகை

எதிர்பாராத விதமாக ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சியே மக்கள் தொகை பெருக்கம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள மிகப் பெரிய பிரச்சனை மக்கள்

தொகை பெருக்கம் ஆகும். உலக நாடுகளில் மக்கள் தொகை அடிப்படையில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2.4 சதவிகித நிலப்பரப்பளவை கொண்டுள்ளது. இந்தியா, உலக மக்கள் தொகையில் 16.84 சதவிகிதத்தை பெற்றுள்ளது.

2001–ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்திய மக்கள் தொகை 102,70,15,247 ஆகும்.

### மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள்

மக்களின் பிறப்பு விகிதம் அதிகமாகவும், இறப்பு விகிதம் குறைந்துள்ளது. மருத்துவம், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் இறப்பு விகிதம் குறைவாக உள்ளது. நாட்டில் தொற்றுநோய் மற்றும் கொள்ளை நோய் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டன. மேலும் சிசு மரணம் அதிக அளவில் குறைந்துள்ளதாலும், ஏழை மக்கள் தங்களுக்கு அதிக குழந்தைகள் பிறந்தால், அதிக வருமானம் கிடைக்கும் என்று எண்ணுவதாலும், ஆண்குழந்தை கட்டாயம் வேண்டும் என்று கருதுவதாலும் மக்கள் தொகை பெருக்கம் ஏற்படுகிறது.

### விளைவுகள்

மக்கள் தொகை பெருக்கம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வெகுவாக பாதிக்கிறது. இது வறுமை, விலை ஏற்றம், வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பல்வேறு சமுதாயப் பிரச்சனைகளை உருவாக்குகிறது. மக்கள் தொகை பெருக்கம், சுற்றுச் சூழல் பாதிப்பையும், சுகாதார சீர்கேட்டையும் உருவாக்குகிறது.

ஆண்டுதோறும் ஜூலை, 11–ஆம் நாள் உலக மக்கள் தொகை நாளாக பின்பற்றப்படுகிறது.

### மக்கள் தொகையை கட்டுப்படுத்த அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள்

அரசாங்கம் மக்கள் தொகையை கட்டுப்படுத்த, குடும்ப கட்டுப்பாட்டு முறையை மக்களிடையே பரப்பி வருகிறது. பெண் கல்வியை ஊக்குவித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. பலதார முறை மற்றும் பால்ய விவாகத்தை தடை செய்து சட்டபூர்வ நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இரு குழந்தைகளைப் பெற்று, சிறு குடும்ப வாழ்வு நடத்துபவர்களுக்கு, அரசு ஊக்கத் தொகை வழங்கி ஆதரிக்கிறது. மேலும், திருமணம், பிறப்பு மற்றும் இறப்பு ஆகியவற்றை முறையாக பதிவு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

இந்திய மக்கள் கடந்த காலத்தை சிறப்பாக பெற்றிருந்த போதிலும், தெரிந்தோ, தெரியாமலோ பல்வேறு சமூக – பொருளாதார பிரச்சனைகளுக்கு ஆளாகி உள்ளனர். இதனால் ஒரு பகுதியினர் சொல்லொண்ணாத் துயரில் ஆட்பட்டுள்ளனர். இந்தியா சுதந்திரம் பெற்ற பின் அரசாங்கத்தின் முயற்சியினால், மக்கள் சமூக, பொருளாதார பின்னடைவில் இருந்து மேன்மையுற்றிருக்கிறார்கள். நாட்டில் உள்ள அனைத்து பிரச்சனைகளும் முறையாக தீர்க்கப்பட வேண்டுமெனில், மக்கள் அனைவருக்கும் முறையான கல்வி கிடைக்க வழிவகை செய்திட வேண்டும்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. தேசிய கல்விக் கொள்கை __________ ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
   அ) 1968 ஆ) 1986 இ) 1996
2. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கு__________ஆகும்.
   அ) தொழில் துறை ஆ) தொழில் நுட்பம் இ) விவசாயம்
3. உலக எழுத்தறிவு தினம்__________ஆகும்.
   அ) செப்டம்பர்–8 ஆ) அக்டோபர்–2 இ) ஜூலை–15
4. 1829–ஆம் ஆண்டின் சட்டம்__________ஐ ஒழித்தது.
   அ) சிசு மரணம் ஆ) குழந்தைத் திருமணம் இ) சதி

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பல்கலைக்கழக மான்யக்குழு__________ மொழியை பயிற்று மொழியாக்க விரும்பியது.
2. 1990–ஐ உலக எழுத்தறிவு வருடமாக__________அறிவித்தது.
3. 1986–ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர் சட்டம் குாந்தைகளை__________மற்றும்__________இல் பணியமர்த்த தடைவிதித்தது.
4. விதவை மறுமணச் சட்டம்__________ஆண்டு இயற்றப்பட்டது.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. சாரதா திட்டம் | 1992 |
| 2. சம ஊதியச் சட்டம் | 1976 |
| 3. கரும்பலகை திட்டம் | திருமதி. இந்திராகாந்தி |
| 4. "20 அம்ச திட்டம்" | 1929 |

### IV) குறுகிய விடையளி.

1. எழுத்தறிவின்மை என்றால் என்ன ?
2. பெண்கள் முன்னேற்றத்திற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் சிலவற்றைக் கூறுக.
3. "வறுமை" விளக்கம் தருக.
4. வேலையில்லா திண்டாட்டத்தினைப் போக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

### V) விரிவான விடையளி.

1. சுதந்திரத்திற்குப்பின், நாடு எதிர்கொண்டுள்ள சமூக பிரச்சனைகளை விவரி.
2. மக்கள் தொகை பெருக்கத்திற்கான காரணங்கள் யாவை ? அதனைக் கட்டுப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை விவரி.

# மனித உரிமைகளும் ஐக்கிய நாடுகள் சபையும்

சமுதாயத்தில் மனிதன் சுமூகமாக வாழத் தேவையான நிலையை உரிமை என அழைக்கிறோம். இது இல்லையென்றால், அவனால் நலமுடன் வாழ முடியாது. மனித உரிமைகள் மனிதனால் இயற்கையாக பெறப்பட்டவை ஆகும்.

பேரறிஞர் பொசாங்கோ கூற்றின்படி, "உரிமைகள் என்பன சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அரசால் நடைமுறை படுத்தப்படுவதாகும்". மனித உரிமைகள் மனிதர்களின் முழு ஆளுமைத் திறமையை வெளிப்படுத்தி, அவனை முழு வளர்ச்சி அடையச் செய்கிறது. சமூக பொருளாதார உரிமைகளும் மனித உரிமைகள் என அறியப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு மனித உரிமைகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு நடடிக்கைகளை எடுத்துவருகிறது.

> ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் 24–ஆம் நாள் ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது.

## ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பிரகடனம்–1948

1945–ஆம் ஆண்டு அக்டோபர் 24–ஆம் நாள் ஐக்கிய நாடுகளின் சபை தோற்றுவிக்கப்பட்டது. இதன் முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று மனித உரிமைகளை பாதுகாப்பதும், அதனை மதிப்புறச் செய்வதும் ஆகும்.

ஐ.நா. சபையின் ஆலோசனையின் பேரில், மனித உரிமைகளை உருவாக்க, மனித உரிமைகள் குழு அமைக்கப்பட்டது. இக்குழு மனித உரிமைகள் மசோதாவை தயாரித்து வழங்கியது. இம்மசோதா, ஐக்கிய நாடுகள் பொது சபையில் 1948–ஆம் ஆண்டு டிசம்பர் 10–ம் நாள் நிறைவேற்றப்பட்டது. இதுவே "அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்" என்று அழைக்கப்படுகிறது.

> ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

அனைதுலக மனித உரிமைகள் பிரகடனம், மக்களிடையே சமத்துவத்தை உறுதி செய்கிறது. இப்பிரகடனம் 30 சரத்துக்களைக் கொண்டது. இது இரு பகுதிகளாக பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

1. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்.

2. பொருளாதாரம், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்.

## வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்

வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் நவீன ஜனநாயகத்தோடு நெருங்கிய தொடர்பு உடையவைகளாகும்.

அவ்வுரிமைகளாவன:

மக்களின் வாழ்வு, சுதந்திரம் மற்றும் அவர்களின் பாதுகாப்பு உரிமைகள்.

அடிமை முறை மற்றும் சித்தரவதையில் இருந்து விடுதலை.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாகக் கருதப்படுதல்.

சொத்துரிமை

அரசியலில் ஈடுபடும் உரிமைகள்

திருமணம் செய்து கொள்ளும் உரிமை.

அனைத்து குழந்தைகளுக்கும் சமூக பாதுகாப்பு அளிக்கும் உரிமை.

தாய்சேய் நலனில் பிரத்தியேக கவனம் செலுத்தும் உரிமை, போன்றவைகள் ஆகும்.

### சமூக–பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள்

ஐ.நா சபை கீழ்க்கண்ட சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகளை வழங்கியுள்ளது.

அவைகளாவன:

வேலை செய்யும் உரிமை.

சமமான வேலைக்கு சமமான ஊதியம் பெறும் உரிமை.

தொழிற்சங்கத்தை உருவாக்கவும் அல்லது அதில் சேரவும் உரிமை.

தேவையான வாழ்க்கைத் தரத்தினை பெறும் உரிமை.

கல்வியறிவு பெறும் உரிமை.

பண்பாட்டுக் களத்தில் சுதந்திமாக பங்கேற்கும் உரிமை போன்றவை களாகும்.

### மனித உரிமைகள் பாதுகாப்பு

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், அனைத்து நாடுகளுக்கும் ஏற்புடையதாகும். 1966–ம் ஆண்டு ஐ.நா.சபை மனித உரிமைகளை பாதுகாக்க இரு ஒப்பந்தங்களை உருவாக்கியது. அவைகள்,

1. அனைத்துலக பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள் ஒப்பந்தம்.

2. அனைத்துலக வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்.

ஐ.நாவின் உறுப்பு நாடுகள் இவ்வுரிமைகளின் பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்க கடமைப்பட்டுள்ளன. இவ்வாறு ஐ.நா. சபை உலக அளவில் மனித உரிமை பாதுகாப்பில் முக்கிய பங்கினை ஆற்றி வருகிறது.

1993–ஆம் ஆண்டு வியன்னாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் வெளியிடப்பட்ட, தனது பிரகடனத்தில் (வியன்னா பிரகடனம்) மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேன்மையடையச் செய்வதும் பன்னாட்டு சமூகத்தின் சட்டப்பூர்வமான நோக்கமாக இருக்க வேண்டும் எனக் கூறியது. இதன்படி இந்திய அரசாங்கம் 1993–ஆம் ஆண்டு ஒரு சட்டம் இயற்றி, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தை டெல்லியில் கி.பி.1993ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. இவ்வாணையத்தின் நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்பாடு அடையச் செய்வதும் ஆகும்.

### தேசிய மனித உரிமைகள் ஆணையம்

1993–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இவ்வாணையம் தலைவர் ஒருவரையும், நான்கு உறுப்பினர்களையும் கொண்டது.

இவ்வாணையத்தின் தலைவர் பொதுவாக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்றத்தின் தலைமை நிதிபதியாக இருப்பார்.

ஆணையத்தின் ஒரு உறுப்பினர் உச்ச நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும் மீதமுள்ள இரு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயல் அனுபவமிக்கவராக இருக்க வேண்டும். இவர்களை

குடியரசுத்தலைவர் நியமனம் செய்கிறார்.

### அமைப்பு

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் புது டில்லி ஆகும். குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படும் மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் குடியரசுத் தலைவரின் ஆணையின் பேரில் பணி நீக்கம் செய்யப்படலாம். ஆணையத்தின் தலைவர் இப்பதவியில் 5 ஆண்டுகளோ அல்லது 70 வயது வரையிலோ இப்பதவியில் பணியாற்றலாம். மற்ற உறுப்பினர்கள் 5 ஆண்டுகள் பதவி வகிக்கலாம். குடியரசுத் தலைவர் விரும்பினால் இவர்களை மீண்டும் 5 ஆண்டுகட்கு மறுநியமனம் செய்யலாம்.

### ஆணையத்தின் பணிகள்

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் முக்கிய நோக்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதும், மேம்படுத்துவதும் ஆகும். மனித உரிமைகள் சம்பந்தமாக ஆய்வுகள் நடத்தி, அது சம்பந்தமான கல்வியறிவினை மக்களிடையே பரப்புவது, இதன் முக்கியப் பணியாகும். ஊடகங்கள் மூலமாகவும், கருத்தரங்கம் மூலமாகவும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஆணையம் ஏற்படுத்துகிறது. மனித உரிமைகள் மீறப்படும் போது பாதிக்கப்பட்டவர்கள் மனு செய்தாலோ அல்லது ஆணையம் தானகவே முன்வந்து பாதிக்கப்பட்டவர்களை விசாரித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கும்.

தேசிய மனித உரிமைகள் ஆணையம் கீழ்க்கண்டவற்றிற்கு முன்னுரிமை வழங்கி பணியாற்றுகிறது. மக்களின் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளுக்கு எதிராக கொண்டுவரப்படும் சட்டத்தினை ஆய்வு செய்யவும், காவல் துறையினரின் வன்முறை மற்றும் கற்பழிப்பு போன்றவற்றை அகற்றுவது சம்பந்தமாகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் குறைகளை களைவதற்கும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னுரிமை வழங்குகிறது.

### அதிகாரங்கள்

தேசிய மனித உரிமைகள் ஆணையம் வாழ்வியல் நீதிமன்றத்திற்குரிய அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருக்கிறது. அரசிற்கு ஆண்டு தோறும் தனது அறிக்கையை இவ்வாணையம் அனுப்புகிறது. அரசாங்கம் இவ்வறிக்கையினை பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும் தாக்கல் செய்து, இதனடிப்படையில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன அல்லது எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதை தெரிவிக்கும். இவ்வாறு தேசிய மனித உரிமைகள் ஆணையம் மக்களின் உரிமைகளை காக்க அரசியலமைப்பு காட்டிய நெறிமுறைகளின் படி செயல்பட்டுவருகிறது.

தற்போது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் யார் ?

### மாநில மனித உரிமைகள் ஆணையம்

தமிழ்நாட்டில் 1997–ஆம் ஆண்டு ஏப்ரல் 17–ஆம் நாள் மாநில மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது.

### அமைப்பு

மாநில மனித உரிமைகள் ஆணையம் ஒரு தலைவரையும், நான்கு

உறுப்பினர்களையும் உள்ளடக்கியது. ஆணையத்தின் தலைவர்–மாநில உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதியாவார். ஆணையத்தின் ஒரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாநில உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகவும், மற்றொரு உறுப்பினர் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியாகவும், எஞ்சிய இரண்டு உறுப்பினர்கள் மனித உரிமைகள் சார்ந்த செயலனுபவம் மிக்கவர்களாகவும் இருக்க வேண்டும். ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை மாநில முதலமைச்சர், மாநில உள்துறை அமைச்சர், சட்டமன்ற தலைவர், சட்டமன்ற எதிர்கட்சி தலைவர் ஆகியோரைக் கொண்ட குழுவின் பரிந்துரையின் பேரில் மாநில ஆளுநர் நியமனம் செய்கிறார். ஆணையத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக, செயலர், செயல்படுகிறார். தமிழகத்தில் இவ்வாணையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இந்திய அரசியலமைப்பில் பகுதி II, பகுதி III–ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும் போது இவ்வாணையம் விசாரணைசெய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் அளிக்கும்.

> தற்பொழுது தமிழத்தின் மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் யார்?

மாநில ஆணையத்தின் உறுப்பினர்கள் 70 வயது வரையோ அல்லது 5 ஆண்டுகளோ பணியாற்றலாம். ஆணையத்தின் உறுப்பினர்கள் முறை தவறி செயல்பட்டால், மாநில ஆளுநர் அவர்களை பணிநீக்கம் செய்யலாம்.

### பணிகள்

மாநில மனித உரிமைகள் ஆணையம் ஆண்டு தோறும் அரசாங்கத்திற்கு தனது அறிக்கையை அனுப்புகிறது. இவ்வறிக்கையில் தாம் செய்து முடித்த பணிகள் பற்றியும், அரசாங்கம் மனித உரிமைகளை காக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கும். அரசாங்கம் இவ்வறிக்கையினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யும்.

### மாவட்ட மனித உரிமைகள் நீதிமன்றங்கள்

மனித உரிமைகளை காக்க மாவட்ட அளவில் நீதிமன்றங்களை–மாநில அரசாங்கம் உருவாக்கி உள்ளது. மாவட்ட அளவில் நடைபெறும் மனித உரிமைகள் மீறல்களை இந்நீதிமன்றம் விசாரணை செய்யும். இந்நீதிமன்றத்தில் நீதிபதியாக ஏழு ஆண்டுகள் வழக்கறிஞராக பணியாற்றியவர் அல்லது அரசு வழக்கறிஞர் நியமிக்கப்படுகிறார். இந்நீதிமன்றங்கள் விரைவாக மனித உரிமைகள் மீறல்களை விசாரணை செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வகை செய்கிறது.

### பெண்கள் உரிமைகள்

இந்திய அரசு சுதந்திரம் பெற்ற பிறகு பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்ற பெண்களின் தரத்தை உயர்த்த பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது.

1856–ஆம் ஆண்டு இந்து விதவை மறுமணம் சட்டம் சட்டபூர்வமாகக்கப்பட்டது.

1955–ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டத்தின்படி பெண்களின் திருமண வயதை 21–ஆக நிர்ணயம் செய்துள்ளது.

1956–ஆம் ஆண்டு இந்து வாரிசு சட்டத்தின்படி தாய் தந்தையரின்

சொத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டது.

1961–ஆம் ஆண்டு வரதட்சணை தடைச் சட்டத்தின்படி வரதட்சணை வேண்டி பெண்களை கொடுமைப்படுத்துவது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகக் கருத வழி செய்தது.

தமிழக அரசு இந்து திருமண சட்டத்தில் 1967–ஆம் ஆண்டில் ஒரு திருத்தம் கொண்டு வந்து சுயமரியாதை திருமணங்களை சட்டபூர்வ திருமணங்களாக அங்கிகரித்துள்ளது.

1997–ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை கேலி செய்வதை தடுக்கச் சட்டம் இயற்றியுள்ளது. மேலும் 1999 ஆம் ஆண்டு தமிழக அரசு பெண்களை அநாகரிகமாக சித்தரித்து சுவரொட்டிகள் வெளியிடுவதை தடைசெய்துள்ளது.

இவ்வாறு பெண்களின் நலனைக் காக்க மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு சட்டங்களை நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

### பெண் தொழிலாளர் நலச்சட்டம்

பணிபுரியும் பெண்களின் நலன் காக்க இந்திய அரசாங்கம் பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது. 1948–ஆம் ஆண்டு தொழிற்கூட சட்டம், 1951–ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் சட்டம், 1952–ல் சுரங்கச் சட்டம் ஆகியவைகள் ஆண், பெண் வேறுபாடின்றி சமஊதியம் வழங்க வழிவகை செய்தது. 1961–ஆம் ஆண்டு பெண்களின் உடல் நலம் காக்க பேறுகால பயன் சட்டம் இயற்றப்பட்டு, பேறு காலத்தில் பெண்களுக்கு முறையான ஊதியம் வழங்க வழிவகை செய்யப்பட்டது.

மார்ச் 8–ஆம் நாள் சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பெண்கள் உரிமையை உறுதி செய்ய 1995–ஆம் ஆண்டு சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் உலக பெண்கள் ஒன்று கூடி, "பெண்கள் உரிமைகள், மனித உரிமைகளே, மனித உரிமைகள் பெண்கள் உரிமைகளே" என முழக்கமிட்டனர்.

ஐ.நா. சபை 1978–ஆம் ஆண்டை சர்வதேச பெண்கள் ஆண்டாக அறிவித்தது.

### பெண்களின் அமைப்புகள்

பெண்களின் நலன் காக்க இந்திய பெண்கள் சங்கம், ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் பெண்ணுரிமை இயக்கம் ஆகியவைகள் போரரடி வருகின்றன. இவைத் தவிர அரசுசாரா தன்னார்வ அமைப்புகளான அரிமா சங்கம், ரோட்டரி சங்கம், இன்னர்வீல் சங்கம் போன்றவைகளும் பெண்களின் நலனைக் காக்க பாடுபட்டு வருகின்றன.

### குழந்தைகள் உரிமைகள்

குழந்தைகளின் நலன் காக்க இந்திய அரசியலமைப்பு கீழ்க்கண்ட சட்டங்களை இயற்றியுள்ளது.

பிரிவு 39(E)ன் படி இந்திய அரசியலமைப்பு குழந்தைகள் சுதந்திரமாகவும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வகை செய்கிறது. பிரிவு 45–ன் படி அரசாங்கம் எல்லா குழந்தைகளுக்கும் 14–வயது வரை கட்டாய இலவசக் கல்வி வழங்கிட வழி வகை செய்துள்ளது. பிரிவு 24ன்படி குழந்தை தொழிலாளர் முறை தடை செய்யப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான அநீதி சட்டம் 1986–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு இளம்சிறார்கள் முறையாக

பாதுகாக்கப்படவும் அவர்கள் திருந்தி வாழவும் வழி செய்துள்ளது.

ஐ.நா. சபை 1979–ஆம் ஆண்டை சர்வதேச குழந்தைகள் ஆண்டாக அறிவித்துள்ளது.

இவ்வாறு குழந்தைகள் நலம் காக்க பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சனைகள் இன்றும் புரையோடிய புண்ணாகவே உள்ளது. தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள் மற்றும் பத்திரிக்கைகள் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையினை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கம் முயன்று வருகிறது. பணிக்கு அனுப்பாதே! பள்ளிக்கு அனுப்பு! என்று அரசு கூறி வருகிறது.

ஒளிமயமான உலகினை உருவாக்க மனிதனோட பிறந்த அவனது உரிமைகள் காக்கப்பட வேண்டும். மக்களும் அரசாங்கமும் இணைந்து செயல்பட்டால் நாளைய உலகம் ஒளிமயமானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## பயிற்சி

### I) சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ___________ மனித உரிமைகள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

   அ) டிசம்பர் 10 ஆ) டிசம்பர் 14 இ) டிசம்பர் 20

2. தேசிய மனித உரிமைகள் ஆணையம் ___________ ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

   அ) 1990 ஆ) 1993 இ) 1998

3. மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் ___________ ஆண்டுகள்.

   அ) 6 ஆ) 10 இ) 5

4. கி.பி.1995–ஆம் ஆண்டு உலகப் பெண்கள் ___________ என்ற இடத்தில் கூடினர்.

   அ) பெய்ஜிங் ஆ) நியூயார்க் இ) டில்லி

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம்___________ உள்ளது.
2. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களை___________ மட்டுமே நீக்க முடியும்.
3. சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடப்படும் நாள்___________ ஆகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| தேசிய மனித உரிமைகள் ஆணையம் | 1997 |
| மாநில மனித உரிமைகள் ஆணையம் | 1945 |
| ஐக்கிய நாடுகள் சபை | 1955 |
| வாழ்வியல் உரிமை பாதுகாப்புச்சட்டம் | 1993 |

## IV) குறுகிய விடையளி.

1. மனித உரிமைகள் என்றால் என்ன ?
2. மனித உரிமைகள் மீறலை தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?
3. வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளை கூறுக.
4. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை அகற்ற நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களை கூறுக.

## V) விரிவான விடையளி.

1. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குக.
2. மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் அதிகாரங்களையும் பணிகளையும் விளக்குக.

# சாலைப் பாதுகாப்பு – சட்டங்களும் வரைமுறைகளும்

இந்தியா உலகிலேயே அதிகமான போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது நாடாகும். மூன்று மில்லியன் கி.மீ. நீளமுள்ள சாலையில், 60 சதவீதம் தார் சாலைகளாக உள்ளது. இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு சாலைகளின் பங்கு குறிப்பிடத்தக்கவை. ஆனால் சாலைகளைப் பயன்படுத்துபவர்களுக்கு முறையான வசதிகள் தகுந்த அளவு கிடைக்கப் பெறவில்லை. இதுவே சாலை விபத்துக்கள் ஏற்படவும், உயிரிழப்புகள் ஏற்படவும் காரணமாக இருக்கின்றது. நவீன காலத்தில் சாலை விபத்துக்களினால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகமாகவே உள்ளன.

### சாலைப்பாதுகாப்பின் முக்கியத்துவம்

ஒவ்வொரு மனிதரும் சாலை பாதுகாப்புப் பற்றியும் சட்டதிட்டங்கள் பற்றியும் அறிந்திருக்கவேண்டும். விபத்துக்கள் வீடு முதல் பொழுதுபோக்கு இடம் வரை எங்குவேண்டுமனாலும் நிகழலாம். ஆனால் பெரும்பாலான விபத்துக்கள் தவிர்க்கக் கூடியவைகளே. விபத்தில் உட்படுபவர்களுக்கு பல வகைகளை பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் ஒரு சிலரின்வாழ்க்கையே முடங்கிவிடுகிறது.

> சாலைபோக்குவரத்து உதவிக்கு தொலைபேசியின் மூலம் 103–ஐ தொடர்புகொள்ளலாம்.

### விபத்து ஏற்பட முக்கியக் காரணிகள்
### தனிப்பட்ட காரணங்கள்

வயது முதிர்வு. சோர்வு, உடல் நலக்குறைபாடு, வாகனம் ஓட்டுதலில் போதிய பயிற்சியின்மை மற்றும் மனநிலை குறைபாடுகள்.

### சுற்றுச்சூழல் காரணிகள்

தட்பவெப்பநிலை, இயந்திரக்கோளாறு, ஓட்டுநரின் கவனக்குறைவு போன்றவைகள் விபத்து ஏற்பட முக்கியக்காரணிகளாகும்.

### இந்தியாவில் சாலைவிதிகள் (போக்குவரத்து)

1989 ஆம் ஆண்டு ஜீலை 1 ஆம் தேதி, இந்தியாவில்கொண்டுவரப்பட்ட சாலைப் போக்குவரத்துச் சட்டம் வாகன ஓட்டுநர்களுக்கு ஒரு அடிப்படை வழிகாட்டியாக அமைந்துள்ளது. வாகன ஓட்டுநர் வாகனத்தை முந்திச் செல்லுதல் பற்றியும், போக்குவரத்து விதிகள் பற்றியும், வேக அளவு பற்றியும், தன்னோடு எடுத்துச்செல்ல வேண்டிய ஆவணங்கள்பற்றியும் சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சாலைப்பாதுகாப்பின் முக்கிய விதிகள் இடப்புறம் செல்லல்

வாகன ஓட்டு நர்கள் சாலையின் இடப்புறத்திலேயே வாகனங்களைச் செலுத்துதல் வேண்டும்.

### வண்டியினை முந்துதல்

முன் செல்லும் வண்டியினை வாகன ஓட்டுநர்கள் முந்திச்செல்வதை கூடுமானவரை தவிர்க்கவேண்டும்.

### குறுக்குச் சாலகளில் கவனம்



வாகன ஓட்டுநர் குறுக்குச் சாலை அல்லது பாதசாரிகள் கடக்கும் இடங்களில் வண்டியின் வேகத்தைக் குறைத்துச் செல்லல் வேண்டும்.




### அவசர ஊர்திகளுக்கு வழிவிடல்

தீயணைப்பு வாகனம், அவசர ஊர்தி மற்றும் நோயாளர் வண்டி போன்றவைகளுக்கு வாகன ஓட்டுநர்கள் தடையின்றி வழிவிடல் அவசியமாகும்.

### 'U' திருப்பம்

வாகன ஓட்டுநர்கள் 'U' திருப்பம் இல்லாத இடங்களில் தங்களது வாகனங்களை திருப்பக் கூடாது. அனுமதிக்கப்பட்டுள்ள



இடங்களில்தான் வாகனங்களைத் திருப்பவேண்டும்.

### வாகன ஓட்டுநர்களின் சைகைகள்

தங்கள் வாகனத்தை மெதுவாக ஓட்டும்போது, அதற்குரிய சைகையை ஓட்டுநர் காட்டவேண்டும். மேலும், இடப்புறமாகவோ அல்லது வலப்புறமாகவோ வாகனத்தைத் திருப்பும் முன் சைகை காட்டவேண்டும். தமது வாகனத்தை நிறுத்தும் முன் அதற்குரிய சைகையை காட்டவேண்டும்.

**திசைக்காட்டல்** வாகன ஓட்டுநர்கள் 'U' திருப்பம் செய்யும் முன்பும் அல்லது இடப்புறமோ அல்லது வலப்புறமோ திருப்பும் முன் வாகனத்தில் உள்ள அதற்குரிய ஒளிவிளக்கினை எரியச்செய்யவேண்டும்.

**ஒருவழிப்பாதை** வானக ஓட்டுநர் ஒரு வழிப்பாதை என்று அறிவிக்கப்பட்ட இடத்தில் அவர் செல்வதற்கோ அல்லது வருவதற்கோ மட்டுமே பயன்படுத்த வேண்டும்.



**செல்வழியன்று** (NO ENTRY) செல்வழியன்று என்று அறிவிக்கப்பட்ட ஓரிடத்தினுள் உள்ளே வருதலோ. போதலோ, நுழைதலோ கூடாது.



நெடுஞ்சாலைகள் வண்டிகளுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பாதையில்தான் வண்டியை செலுத்தவேண்டும். வழித்தடம் மாறும் முன் முறையான சைகையைக் காட்டி வாகனத்தைச் செலுத்தவேண்டும். எக்காரணம் கொண்டும் மஞ்சள் கோட்டினை தாண்டிச்செல்லக் கூடாது.

### அமைதி மண்டலம் (NO HORN)

வாகன ஓட்டுநர் தேவையில்லாமல் தொடர்ந்து வாகனத்திலுள்ள ஒலிப்பானை பயன்படுத்துதல் கூடாது. அமைதி இடம் என்று அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் ஒலிப்பானை ஒலிக்கச்செய்தல் கூடாது. தனது வாகனத்தில் இயந்திரக்கோளாறு



இருந்தாலோ அல்லது வாகனத்தை இயக்கும்பொழுது அதிக சத்தம் வரும் என்று தெரிந்தாலோ வாகனம் எடுப்பதைத் தவிர்க்கவேண்டும்.

### இடைவெளி காத்தல்

வாகன ஓட்டுநர் தனக்கு முன் செல்லும் வாகனத்திற்கும், தனது வாகனத்திற்கும் குறிப்பிட்ட அளவு இடைவெளியிருக்குமாறு சென்றால், வண்டிகள் மோதிக்கொள்ளும் விபத்தினைத் தவிர்க்கலாம்.

### ஓட்டுநர் வைத்திருக்கவேண்டிய ஆவணங்கள்

வாகன ஓட்டுநர்கள் எப்பொழுதும் தன்னுடைய ஓட்டுநர் உரிமம், வண்டியின் பதிவுச் சான்றிதழ், வாகனவரி கட்டியதற்கான ரசீது, வாகனத்திற்கான காப்பீட்டுச் சான்றிதழ் மேலும் அனுமதி மற்றும் தகுதிச் சான்றிதழ்களையும் தன்னோடு வைத்துக்காள்ளவேண்டும். அரசின் மோட்டார் வாகனத்துறை அலுவலர்கள் கேட்கும் போது இவற்றினை வாகன ஓட்டுநர்கள் காண்பிக்கவேண்டும்.


சாலை பாதுகாப்புக் குழு 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தால் சாலைப் பாதுகாப்புக்குழு அமைக்கப்பட்டது. இதன் முக்கியப் பணி சாலைப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுப்பதும், சாலை விபத்துக்களைக் குறைப்பதுமாகும். இக்குழு தேசிய சாலை பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கியது.

### சைகைகள்
### சாலை சைகைகள்

சாலைகளில் உள்ள சைகைகள் போக்குவரத்தைச் சீர் செய்யவும், பாதசாரிகளை பாதுகாக்கவும் பயன்படுகிறது. இந்திய சாலை மகாசபையின் கூற்றுப்படி சாலைகளிலுள்ள சைகைகள் அறிவிப்புகளாகக் கருதப்படவேண்டும். சாலை சைகைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. 1. உத்திரவு சைகைகள் 2. எச்சரிக்கைச் சைகைகள் 3. தகவல் சின்னங்கள்.

### போக்குவரத்துச் சைசைகள்

குறுக்குச் சாலையிலுள்ள போக்குவரத்து ஒளிவிளக்கு மற்றும் நிறுத்தல் விளக்குகள் எப்பொழுது பாதசாரிகள் சாலையினைக் கடக்கலாம்



என்பதை தெரிவிக்கிறது. சாலையில் செல்லும் வண்டிகளையும் கட்டுப் படுத்துகிறது. போக்குவரத்து ஒளி

விளக்குகள் உலகளாவிய நிற அடையாளத்தைக் கொண்டுள்ளது.

சிவப்பு விளக்கு எரிந்தால்– 'நில்' செல்லாதே என்றும்,

ஆரஞ்சு விளக்கு எரிந்தால்– சாலையைக் ('கவனி') கடக்க தயாராக இரு என்றும்,

பச்சை விளக்கு எரிந்தால்–'செல்' என்றும் அறிவிக்கின்றது,

## போக்குவரத்துக் காவலர் சைகைகள்

கை சைகைகள் வாகன ஓட்டுநர்கள் மற்றும் போக்குவரத்துக் காவல் துறையினர் தங்களது கைகளைப் பயன்படுத்தி போக்குவரத்தினை முறைப்படுத்துதல், போக்குவரத்தினை சீர்செய்யவும் போன்றவற்றை மேற்கொள்கின்றனர்.













சாலைப்பாதுகாப்பு நாட்டின் முக்கியமான ஒரு பிரச்சினையாக உள்ளது. அரசு தெரிவிக்கும் புள்ளிவிவரத்தின்படி ஆண்டு ஒன்றுக்கு 1.1 இலட்சம் மக்கள் விபத்தினால் உயிர் இழக்கின்றனர் என்பது அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

### சாலைவிபத்திற்கான காரணங்கள்
### போக்குவரத்து விதிமீறல்

நவீன காலத்தில் வேகமாக குறித்த இலக்கினை அடையவேண்டும் என்ற எண்ணத்தில் செல்வது விபத்திற்கான முக்கியக் காரணமாகும்.

### குறுகிய சாலை

போக்குரத்து சாலைகள் மிகக் குறுகலாக இருப்பதால் பாதசாரிகளும் வாகனங்களும் குறுகிய இடைவெளிகளில் செல்வதால், விபத்துக்குள்ளாகிறார்கள்.

### போக்குவரத்து நெரிசல்

நகரங்களில் வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மேலும் கனரக வாகனங்கள் அதிகமாகச் செல்வதால் விபத்துக்கள் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடுகிறது. கனரக வாகங்களுக்கு தனிப்பாதையும், அதற்கென குறிப்பிட்ட நேரமும் ஒதுக்கப்பட்டால் விபத்துக்கள் குறையும்.

### குடிபோதையில் வாகனம் ஓட்டுதல்

குடிபோதையில் வாகனம் ஓட்டுவதால் வாகன ஓட்டுநர்கள் ஓட்டும் திறமையை இழப்பதோடு மட்டுமல்லாமல், முடிவு எடுக்கும் திறனையும் இழந்து விடுகிறார்கள். இது விபத்துக்கு முக்கிய காரணமாகும்.

### சாலை பாதுகாப்பிற்கு உதவும் முக்கியக் குறிப்புகள்

1) வண்டி ஓட்டும் போது கைப்பேசியைப் பயன்படுத்துதல் கூடாது.

2)நான்கு சக்கர வாகனத்தை ஓட்டும்பொழுது வார்ப்பட்டை (Belt) அணியவேண்டும்.

3) மது (போதையில்) அருந்திவிட்டு வாகனத்தை இயக்கக்கூடாது.

4)வேகக்கட்டுப்பாட்டை பின்பற்ற வேண்டும்.

5) பாதசாரிகள் கவனமுடன் நடைபாதையில் செல்ல வேண்டும்.

6)இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அவசியம் அணிய வேண்டும்.

7) பாதசாரிகள் மஞ்சள் கோடுகள் போடப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே சாலையைக் கடக்கவேண்டும்,



8) வாகன ஓட்டுநர்கள் போக்குவரத்து சைகைகளை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

9)அவசர ஊர்திகளுக்கு வாகன ஓட்டுநர்கள், அவ்வாகனங்களை முந்திச்செல்ல வழிவிடல் வேண்டும்.

10)வாகனங்களை அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே நிறுத்தவேண்டும்.

11) நடைபாதையில் கடைகள் நடத்தப்படுவதை தவிர்க்கவேண்டும்.

12) 18 வயதிற்கு உட்பட்டவர்கள் இரண்டு சக்கர வாகனத்தையோ

அல்லது நான்கு சக்கர வாகனத்தையோ ஓட்டுதல் கூடாது என்ற விதிமுறைகளபின்பற்ற வேண்டும்.

## சாலை பாதுகாப்பு வாரம்

ஆண்டுதோறும் ஜனவரி முதல் வாரம் சாலை பாதுகாப்பு வாரமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இது பள்ளி, கல்லூரி மாணவர்கள், வாகன ஓட்டுநர்கள், பாதசாரிகள், ஆகியவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. 2008 –2009 ஆம் ஆண்டு 55 இலட்சம் ரூபாய் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வுக்காக அரசு செலவிட் டுள்ளது.

**“எச்சரிக்கையாக வாகனம் ஓட்டுங்கள்**

**இலக்கை உயிருடன் அடையுங்கள்”**

என்ற பொன்மொழி அரசால் வலியுறுத்தப்படுகிறது. மேலும், அரசு வாகன ஓட்டுநர்களுக்கு விபத்துக்களை தவிர்க்கும் முறைகள் பற்றி கருத்துப்பட்டறையும், கருத்தரங்குகளும் அரசால் நடத்தப்பட்டுவருகிறது. இது பெருமளவில் விபத்துக்களைக் குறைக்க பயனுள்ளதாக அமைந்துள்ளது.

சாலைப் பாதுகாப்பு நாட்டின் உயிர்நாடியாகும். அரசாங்கம் மக்களிடையே சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு உருவாக்கவேண்டும். அரசு பேருந்து ஓட்டுநர்கள், பிற வாகன ஓட்டுநர்கள் , மாணவர்கள் மற்றும் பாதசாரிகளுக்கு கருத்தரங்குகளை நடத்தி போக்குவரத்து விதிகளையும், அதனை பின்பற்றும் முறைகளையும் விளக்க வேண்டும். பொதுவாக, மக்கள் சாலை விதிகளை முறையாகப் பின்பற்றினால் விலைமதிப்பு மிக்க ஆயிரக்கணக்கான உயிர்களை பாதுகாக்க முடியும்.

தமிழ்நாட்டில் 2005 முதல் 2009 வரை நடைபெற்ற சாலை விபத்துக்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | இறப்பு | | படுகாயம் | | சிறுகாயம் | | காய மில்லை | மொத்த விபத்துகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | NA | NPK | NA | NPI | NA | NPI | | |
| 2005 | 8844 | 9760 | 5214 | 7815 | 34669 | 54152 | 5151 | 53878 |
| 2006 | 10055 | 11009 | 4630 | 6833 | 36262 | 5708 | 4198 | 55145 |
| 2007 | 11034 | 12036 | 4498 | 6873 | 39494 | 64226 | 4114 | 59140 |
| 2008 | 11813 | 12784 | 4426 | 6696 | 39193 | 63555 | 4977 | 60409 |
| 2009 | 12727 | 13746 | 4448 | 6721 | 39676 | 36783 | 3943 | 60794 |

NA – விபத்துக்களின் எண்ணிக்கை, NPK- இறந்தோர்களின் எண்ணிக்கை
NPI- காயமுற்றோரின் எண்ணிக்கை

ஆதாரம் காவல்துறை இயக்குநர் – சென்னை

அவசர ஆம்புலென்ஸ் உதவிக்கு 108 – ஐ அழைக்கவும்

"நான் சாலைவிதிகளைக் கடைபிடிப்பேன் என்று உறுதியளிக்கிறேன்."

என்ற உறுதிமொழியை ஏற்று செயல்பட்டால் மனித உயிர்காக்கப்படும்.

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சாலைப்போக்குவரத்தின் சட்டதிட்டங்கள் அமுலுக்கு வந்த ஆண்டு________ .

   அ) 1989   ஆ) 1990   இ)1988

2. பாதசாரிகள் சாலையினை ________ என்ற இடத்தில் கடக்கலாம்

   அ) எங்குவேண்டுமானாலும்   ஆ) சைகை விளக்கு அருகில்
   இ) வரி கோடிட்ட இடம்

3. ஆண்டுதோறும்_________மாதத்தின் முதல் வாரம் சாலைப்பாதுகாப்பு வாரமாக கடைபிடிக்கப்படுகிறது

   அ) டிசம்பர்   ஆ) ஜனவரி   இ) மார்ச்

4. அவசர ஆம்புலென்ஸ் உதவிக்கு ___________என்ற எண்ணை தொடர்பு கொள்ளவும்.

   அ) 108   ஆ)103   இ) 1033

### II) கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. வாகன ஓட்டுநர்கள் வாகனத்தை _________பக்கமாக ஓட்டவேண்டும்.
2. சாலைப்பாதுகாப்புக் குழு ________ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
3. போக்குவரத்து ஒளிவிளக்கில் ________ நிறம் பாதசாரிகளை நிற்கச் சொல்கிறது
4. சாலை சைகைகள் _________ பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

### III) பொருத்துக.

| | |
|---|---|
| ஆரஞ்சு நிறம் | நடைபாதை |
| பாதசாரிகள் | தொலைபேசி |
| தகவல் சின்னம் | போக்குவரத்துக் காவலர் |
| கை சைகை | கடக்கத் தயார்நிலை |

## IV) குறுகிய விடையளி.

1. சாலைப்பாதுகாப்பின் முக்கியத்துவம் என்ன ?
2. போக்குவரத்து ஒளிவிளக்கினை வரைந்து, விளக்குக.
3. சாலைப்பாதுகாப்பிற்கான ஒரு சில குறிப்புகளைத் தருக.
4. வாகன ஓட்டுநர்கள் தன்னோடு வைத்திருக்கவேண்டிய ஆவணங்கள் யாவை ?

## V) விரிவான விடையளி.

1. சாலை பாதுகாப்பிற்கான முக்கிய விதிகளை விளக்குக.
2. சாலைவிபத்துக்கான காரணங்களை விவரி.

# பொருளாதாரம்

## பணம், சேமிப்பு மற்றும் முதலீடு

### கற்கும் திறன்

பணம் கண்டுபிடிக்கப்பட்டதின் முக்கியத்துவத்தை அறிதல்

பணத்தின் தேவையைப் பற்றிக் கற்றல்

சேமிப்பு மற்றும் முதலீடு பற்றி புரிந்து கொள்ளல்

இப்பாடப் பகுதியில் இடையீட்டுக் கருவி பற்றி படிக்க இருக்கிறோம்

இடையீட்டுக் கருவி என்றால் என்னவென்று உனக்குத் தெரியுமா ?

பணம் தான் இடையீட்டுக் கருவியாக செயல்படுகிறது.

பண்டைய காலத்தில் முதன் முறையாக ஒரு பொருளுக்கு மாற்றாக இன்னொருப் பொருளைப் பெற்றுக் கொண்டார்கள். இதனை பண்டமாற்று முறை என்பர்கள். இம்முறையில் நேரடியாக ஒருவருக்கொருவர் பொருள்களை மாற்றிக் கொள்வார்கள். இவ்வகை வணிக முறையில் அவர்கள் பணத்தை இடையீட்டுக் கருவியாக பயன்படுத்தவில்லை. இதுவே பணத்தை இடையீட்டுக் கருவியாக கண்டுபிடிக்க உதவியது. பணத்தை இடையீட்டுக் கருவியாக பயன்படுத்தும் முறை உலகம் முழுவதிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பொருளாதார பேராசிரியர் வாக்கர் கூறுவது என்னவெனில் பணம் மட்டுமே பணத்தின் தேவையை சந்திக்கும்.

இலதீன் மொழில் பணத்திற்கு மானட்டா என்பது பெயராகும். மானட்டா



இந்திய ரூபாயின் புதிய இலச்சினை

என்பது உரோமனிய பெண் கடவுள் ஜினடோவின் மறுப்பெயர் ஆகும். பணத்தின் ஆங்கில வார்த்தை மானட்டாவிலிருந்து மருவியாகும்.

மக்கள் பணத்தை இடையீட்டுக் கருவியாக பயன்படுத்துவதை ஏற்றுக் கொண்டார்கள். அரசாங்கம் இதனை அங்கீகரித்துள்ளது.

### பணத்தின் மதிப்பீடு

பணத்தின் மதிப்பீடு என்பது மக்களின் நுகர்வுத்திறனை அடிப்படையாக கொண்டுள்ளது. ஆனால் மக்களின் நுகர்வுத் திறன் என்பது பொருளின் விலையைச் சார்ந்துள்ளது.

### பணத்தின் இயற்கைத் தன்மை

பணத்தின் இயற்கைத் தன்மையில் இது ஒரு இடையீட்டுக் கருவியாக செயல்படுகிறதே தவிர, இறுதி





இந்திய ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள்

நிலையாக இருப்பதில்லை என்பதை அறியலாம்.

ஒருவன் அவனுக்குத் தேவையான பொருட்களை, திருப்தி தரும் வகையில் இன்றைய பொருளாதார முறைப்படி பணத்தைக் கொண்டு வாங்குகிறான். பணம் என்பது ஒருவனது தேவையை அவன் விரும்பியப்படி பெற்றுக்கொள்ள உதவுகிறது. இதன் மூலம் பணம் ஒரு கருவி அன்றி இறுதி நிலை இல்லை என்பத அறியலாம்.

## பணத்தின் செயல்பாடு

தற்போதைய நவீன பொருளாதார முறையில் பணம் ஒரு இடையீட்டுக் கருவியாக செயல்படுவது உண்மையே பணத்தின் முக்கிய செயல்பாடுகள் என்னவென்றால்,

பணம் ஒரு

இடையீட்டுக் கருவி

மதிப்பின் அளவுகோல்

மதிப்பின் நிலைகளன்

எதிர்கால செலுத்துகை

## இடையீட்டுக் கருவி

பணத்தின் முக்கிய செயல்பாடுகளில் ஒன்று இது ஒரு இடையீட்டுக் கருவியாக பயன்படுத்துவதுதான். எல்லா வகையான பெருட்களையும் வாங்குவதற்கு பணம் ஒரு இடையீட்டுக் கருவியாக அனைத்துத்தரப்பு மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகிற.

## மதிப்பின் அளவுகோல்

ஒரு பொருளின் மதிப்பை அளவீடு செய்வதற்கும் பணம் பயன்படுகிறது. பொருட்களின் விலையை பணத்தைக் கொண்டே அளவிடுகிறார்கள். துணியின் நீளத்தையும், பொருள்களின் எடையையும் அளவிட அதற்கு ஏற்ற அளவுகோள்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதுபோல பொருட்களின் மதிப்பை அளவிட பணம் பயன்படுகிறது. பணம் என்பது பொருளாதார கணக்கீடுகளை எளிமைப்படுத்துகிறது.

## மதிப்பின் நிலைக்களன்

ஒருவரின் சொத்துக்களை பணமாக சேமித்து வைப்பது எளிது. சேமித்து வைத்த பணத்தை மற்ற சொத்துக்களாகவோ, நிலமாகவோ, தங்கமாகவோ மாற்றவும் இயலும்.

## எதிர்கால செலுத்துகை

பணம் ஒரு எதிர்கால செலுத்துகையாகவும் பயன்படுகிறது. நவீன யுகத்தில் பணத்தை உடனடியாக செலுத்தாமல் எதிர்காலத்தில் செலுத்தும்படியான வாய்ப்பும் உள்ளது. ஆனால் முதலில் பொருட்களை வாங்கிக்கொண்ட பிறகு தேவையான பணத்தை செலுத்தும் முறையினால் பல நேரங்களில் வியாபாரம் பாதிப்புக்கு உள்ளாகிறது.


## பணத்தின் பொருளாதார முக்கியத்தும்

இன்றைய பொருளாதார முறையில் பணத்தைக் கொடுத்து பொருட்களைப் பெற்றுக்கெள்ளும் முறை முந்தைய பண்டமாற்று முறைலிருந்து முற்றிலும் வேறுபட்டது.

நுகர்வு, உற்பத்தி, பறிமாற்றம், விநியோகம் மற்றும் பொது நிதியியல் போன்ற பலதரப்பட்ட பொருளாதார செயல்பாடுகளில் பணத்தின் பங்களிப்பு முக்கிய இடத்தை வகிக்கிறது.

## பணத்தின் முக்கியத்துவம்

இன்றைய பொருளாதாரத்தில் பணத்தின் பங்களிப்புப் பற்றி நீங்கள் நன்கு அறிவிர்கள்.



பணம் என்பது மனிதனின் கண்டு பிடிப்புகளில் மிக முக்கியமானதாகும். நவீன பொருளாதார முறை பணம் என்பதில்லாமல் எளிதாக செயல்படுவது மிகவும் கடினமான ஒன்றாகும். உண்மையில் பணத்தட்டுப்பாடு இருக்கும் பொழுதுதான் பணத்தேவையின் முக்கியத்துவத்தை நாம் முழுமையாக உணரமுடியும்.



பணம் என்பது காசுகள், ரூபாய்கள் நோட்டுகள், காசோலை, செலுத்து சீட்டு, கடன் அட்டை முதலியவை இணைந்த ஒன்றாகும்.

## சேமிப்பு மற்றும் முதலீடு

நம்முடைய பணத்தில் செலவழிக்கப்படாமல் இருக்கும் ஒரு பகுதியே சேமிப்பு எனப்படும்.

முதலீடு என்பது அதிக உற்பத்திக்கான பொருள்களின் சேர்ப்பு ஆகும்.

அதிக உற்பத்திக்கான உபகரணங்கள், இயந்திரங்கள், கட்டடங்கள், மூலப்பொருட்கள், தேய்மானத்தினால் மாற்றப்படும் பொருள்கள் என அனைத்தும் முதலீட்டில் அடங்கும்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு சேமிப்பு போன்ற மூலதன ஆக்கம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். சேமிப்பும், முதலீடும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையது ஆகும். இவையிரண்டும் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையான, மிக முக்கியமான, தீர்மானிக்கப்பட்ட மூலதனமாக செயல்படுகிறது.

சேமிப்பும், முதலீடும் இருதரப்பட்ட மனிதர்களின் கரங்களில் உள்ளன. சேமிப்பு என்பது நுகர்வோர் கரங்களிலும், முதலீடு என்பது தொழிலதிபர்கள் கரங்களிலும் உள்ளன. அவர்களின் சேமிப்பு மற்றும் முதலீடு பற்றிய நோக்கமும் வித்தியாசமானது.

**செய்முறை**

பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் நாணய உருவங்களை வரைக.

______________________

______________________

______________________

______________________

## பயிற்சி

### I) சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது.

1. பணம் மட்டுமே பணத்தின் தேவையை சந்திக்கும் என்று கூறியவர்__________.

அ) இரவுத்தர் ஆ) வாக்கர் இ) இராபர்ட்சன்

2. பணத்தின் மதிப்பீடு என்பது

அ) நுகர்வுத் திறனை அடிப்படையாகக் கொண்டது

ஆ) தேவையை அடிப்படையாகக் கொண்டது

இ) அளிப்பை அடிப்படையாகக் கொண்டது

3. __________ ஒரு எதிர்கால செலுத்துகையாகக் கொண்டது.

அ) காசோலை ஆ) பணம் இ) கடன் அட்டை

4. __________ என்பது பொருட்களின் மதிப்பை அளவிடவும் பொருளாதாரக் கணக்கீடுகளை எளிமை படுத்துவதும் ஆகும்.

அ) இடையீட்டுக் கருவி ஆ) மதிப்பின் அளவுகோல்

இ) மதிப்பின் நிலைக்களன்

5. பணத்தில் செலவழிக்கப்படாமல் இருக்கும் ஒரு பகுதியே __________ ஆகும்.

அ) சேமிப்பு ஆ) பகிர்வு இ) நுகர்வு

### II) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. __________ என்பது மனிதனின் கண்டபிடிப்புகளில் மிக முக்கியமானதாகும்.

2. இலத்தீன் மொழியில் பணத்திற்கு __________ என்ற பெயராகும்.

3. பணத்தின் முக்கிய செயல்பாடு என்னவென்றால் பணம் ஒரு __________ செயல்படுவதாகும்.

4. ஒருவரின்___________ பணமாக சேமிப்பது எளிது.

5. ___________ என்பது மூலதன ஆக்கத்திற்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாகும்.

## III) பொருத்துக.

| | |
|---|---|
| 1. மானிடா | ஒரு பொருளுக்கு மாற்றாக இன்னொரு பொருளை பெறுவது |
| 2. மதிப்பின் நிலைகளன் | அடிப்படைக் கண்டுபிடிப்பு பணம் |
| 3. சேமிப்பு | பணம் |
| 4. பணம் | பணத்தின் பணிகள் |
| 5. பண்ட மாற்று முறை | பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிகோலுகிறது. |

## IV) சிறு குறிப்பு வரைக.

1. பேராசிரியர் வாக்கரின் பணத்திற்கான இலக்கணத்தை எழுதுக.
2. பணத்தின் முக்கியத்துவத்தை எழுதுக.
3. பண்டமாற்று முறை–சிறு குறிப்பு வரைக.
4. எதிர்கால செலுத்திகை என்றால் என்ன ?
5. சேமிப்பு மற்றும் முதலீடு குறித்து எழுதுக.

## V) விரிவான விடையளி.

1. பணத்தின் பணிகளை விவரி.
2. பணத்தின் முக்கியத்துவத்தை விவரி.
3. சேமிப்பு மற்றும் முதலீடு குறித்து விரிவான விடையளி.